www.padippakam.com

# கோவிந்தன்

கே. டானியல்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கோவிந்தன்

சி. சிவநாதன்

**கே. டானியல்**

**அலைகள் வெளியீட்டகம்**
36, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

படிப்பகம்

www.padippakam.com

## நூலின் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கோவிந்தன் |
| நூலாசிரியர் | : | கே. டானியல் |
| முதல் பதிப்பு | : | ஜூலை, 1995 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியிட்டோர் | : | அலைகள் வெளியீட்டகம்<br>36, தெற்குச் சிவன் கோயில் தெரு,<br>கோடம்பாக்கம், சென்னை-600 024. |
| முகப்போவியம் | : | விஸ்வம் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 208 |
| விலை | : | ரூ. 35-00 |
| அச்சிட்டோர் | : | அலைகள் அச்சகம்<br>36, தெற்குச் சிவன் கோயில் தெரு,<br>கோடம்பாக்கம், சென்னை-600 024. |

www.padippakam.com

# முன்னுரை

எனது இலக்கியக்கோட்பாட்டினை வாசகர்கள் நன்கறிவர். நூலுருவம் பெற்ற எனது படைப்புகளில் ''கோவிந்தன்'' என்ற இந்த நாவல் ஐந்தாவதாகும். ஏறக்குறைய அறுபது ஆண்டுகால யாழ்ப்பாணப் பிரதேசத்து வாழ்க்கையின் பொது அம்சங்கள் சிலவற்றை இந்த நாவல் அறிய வைக்கிறது.

கிராமப் பகுதிகளை அப்படியே காண வைத்து, அதைக் குலைக்காமல், நலங்காமல் நகரவும் வைத்து, அந்த நகர்வுகளுக்கேற்றதான கதை ஒன்றினையும் கண்டடைந்து,சாமுத்திரிகா இலட்சணங்களும் பொருந்திய தலைவன், தலைவியையும், ''வில்லன்'', ''வில்லி''களையும், நடுநிலையாளர்களையும் உலாவவிட்டு, அந்தப் படைப்புக்குட்பட்ட கதாமாந்தர்கள் பாரம்பரிய சம்பிரதாய உறவு முறைகளை மீறி விடாமல் பக்குவமாகப் பாதுகாத்து சுபம் சொல்லி முடிக்கும் 'சோலி சுறட்டற்ற' இலக்கியக்காரனாக என்னால் இருக்க முடியவில்லை.

கோவிந்தனில் கிராமப்புறங்களைப் பார்ப்பதுடன் கிராமப்புறங்களின் இயல்பான பேச்சுக்களையும் வாசகர்கள் கேட்பார்கள். அத்துடன்,

படிப்பகம்

www.padippakam.com


சாதியால்—மதத்தால், வேறு பல சிக்கல்களால் முரண்பட்டு பிளவுபட்டு நிற்கும் சாதாரண மக்கள் உலக வியாபகமான வர்க்க ஐக்கியத்துள் தங்களையும் அறியாமலே இணைத்து வழிநடக்கும் வரலாற்று உண்மையினையும் காண்பார்கள்.

இந்த நாவலைப் படிக்கும்போது வழமைக்கும் அதிகமாகச் சிலர் முகம் சுளித்துக் கொள்வார்கள் என்பதும், பெருவாரியான கிராமப்புற மக்களும், பின்தங்கியவர்களும், பின் தள்ளப்பட்டவர்களும் தங்கள் வாழ்க்கையினைத் தாங்களே காண்பது போன்ற உணர்வினைப் பெறுவார்களென்பதும் எனக்குத் தெரியும்.

தூரத்தேயிருந்து மனதால் மேலோட்டமாகக் கிராமத்தைப் பார்த்து, பேச்சுவாக்கில் அறிந்தவைகளையும், ஊகிப்பவைகளையும் வைத்துக் கொண்டு புனைந்த கதைகளையும், நாடோடிப் பாடல்களைத் தேடிப்பிடித்து, தேடியவற்றுள் காமரசம் சொட்டும் பகுதிகளை மட்டும் தெரிவு செய்து தரப்பட்ட நாடோடிப் பாடல் திரட்டுக்களையுந்தான் கிராமிய இலக்கியங்கள் என்று தமிழ் வாசகர்கள் கண்டிருக்கின்றனர். இந்த மட்டங்களில் நின்றுகொண்டேதான் இவைகளுக்கான விமர்சனங்களும் தரப்பட்டுள்ளன. இதனால் கிராமிய இலக்கியங்கள் எனப்பட்டவை கிராமப்புற வாசகர்களாலேயே விரும்பப்படாதவை ஆகியிருந்தன.

நாட்டின் பெரும்பான்மையினர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இந்த மக்கள் அன்றாடம் சந்திப்பவைகள், சமூக அமைப்பு; சமூக அமைப்பு முறையினால் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பளுக்களைத் தூக்கி வீச அவர்

www.padippakam.com


களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், கிராமிய இயல்புகளோடு ஒட்டிய போராட்டங்கள்; அப்போராட்டங்கள் ஒரு தனி மனிதனுக்கு மேலாக அல்லாமல் அவன் உள்ளடங்கி நிற்கும் வர்க்கத்திற்கெதிராகப் பரிணமித்து வருதல் ஆகிய உண்மைகள் புறக்கணிக்கப்பட்டுப் படைக்கப்படும் எந்த இலக்கியமும் உண்மையான கிராமிய இலக்கியம் ஆகிவிட முடியாது.

எமது நாட்டில் இதுவரை வெளியான சிருட்டி இலக்கியங்களுள் விரல்விட்டு எண்ணக் கூடிய சில, கிராமப்புற மக்களின் வாழ்வினைப் பிரதிபலித்துள்ளன. அவ்வப்போது அவைகள் கிராமப்புற மக்களால் பெரிதும் வரவேற்கப் பட்டும் உள்ளன அந்த வேளைகளில் மௌனம் சாதித்த மெத்தப்படித்தவர்கள் சிலர் இப்போது அந்தச் சிருட்டிகள் மீளாய்வு செய்யப்படவேண்டுமென்று குரல் வைக்கின்றனர். இப்போது குந்தக் குரல் எழுவதற்கான காரணங்கள் என்ன? இந்தக் குரலை வைப்பவர்கள் திடுதிப்பென்று கிராமங்களில் குதித்து, அங்கு செவ்வனே காலூன்றி நின்று, கிராமங்களையும், கிராமிய மக்களையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் படித்திருக்கவேண்டும். அல்லது கிராமப்புற மக்களைத் தங்கள் விருப்பப்படியெல்லாம் பிரித்து வைத்து, வேண்டிய போதெல்லாம் அவர்களை 'ஆடாய்க் கட்டித் தோலாயுரித்து' அவர்களில் குருதி, தசை, நீர், நிணம் ஆகியவைகளைச் சுவைத்துப் பெரு வாழ்வு கண்டு மடிந்து போய்விட்டவர்களின் மண்டை ஓடுகளைத் தேடி எடுத்து விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்தி, அவர்களின் அந்த அசுர வாழ்க்கை நடப்புக்கான காரண, காரியங்களைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அப்படி எதுவும்

படிப்பகம்

www.padippakam.com


நடந்திருப்பதாகத் தெரியவில்லை. பதிலுக்கு இந்தக் குரலை எழுப்புபவர்கள் கிராமப்புற மக்களை விட்டுத் தூரத்தூரப் போவதையே காணக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் இப்போது நேருக்கு நேராகவே கோவிந்தனுக்கு மேலாக ஒரு போர் தொடுப்பர் என்பது தெரிந்ததே.

நலிந்தவர்களின் வாழ்க்கையோ, அந்த நலிவிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளோ இதுவரை தமிழ் இலக்கியத்தில் நவீனகால வரலாற்று அந்தஸ்தினைப் பெற்றதில்லை. ஆனால்; கோவிந்தனைப் படிக்கும் மக்கள் அந்த அந்தஸ்தினை இதற்குத் தருவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்த நாவலில் வரும் கதாபாத்திரங்களோடு பாத்திரங்களாக இரண்டு நாய்களை வாசகர்கள் பார்ப்பார்கள். அவைகளின் நடவடிக்கைகளைக் கூர்மையாக அவதானிப்பவர்கள் உலக வியாபகமாகிவிட்ட வர்க்கம் சார்ந்த ஒரு உண்மையினை இந்த இரண்டு ஜீவன்களும் வெளிப்படுததி, மனதைத் தொடும் மானிட அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டதைக் காண்பார்கள்.

''உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அந்த உயிரினங்களில் உயர்ந்ததான மனித இனத்தோடு சேர்ந்தாப்போல வளர்ச்சி அடைந்து வந்த ஒன்றே ஒன்று காதல் மட்டுந்தான். அதனால் ''காதல் இல்லாத இலக்கியங்கள்—முதன்மைப் படுத்தாத படைப்புக்கள்— மனித நாகரீகத்தை வளப்படுத்தத் தகுதியற்ற முண்டங்கள்'' என்ற விதத்தில் இந்தக் காதலுக்கு தெய்வீக

படிப்பகம்

www.padippakam.com



அந்தஸ்துக் கொடுப்பது மரபாகிவிட்டது. இந்த நாவலில் இந்த மரபு மீறப்படுகிறது. இந்தக் காதல் என்ற 'இது' மனிதனின் வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்ப நீண்டும் நெளிந்தும். வளைந்தும், கூனியும், குறுகியும் வரக்கூடிய ஒன்றே அன்றி, அதற்குமேல் அந்த 'இது'வுக்கு எந்தவித தனி அந்தஸ்தும் இருந்ததில்லை; இருக்கப் போவது மில்லை என்பதனை இந்த நாவலைப் படிக்கும்போது தங்களைச் சூழ உள்ள இயல்பான நடைமுறைகளோடு வாசகர்கள் இதனை ஒப்பிட்டுப்பார்த்தால் ஒப்புக்கொள்வர்.

இந்த நாவலுக்குள்ளே இருப்பவை நான் அறிந்தவை. பார்த்தவை, அனுபவித்தவைகளே! இதைப் படிக்கும் வாசகர்களாலும் இவைகள் அறியப்பட்டவை; பார்க்கப்பட்டவை, அனுபவிக்கப்பட்டவைகளாகவே இருக்கும் என்பது நிச்சயம். இவைகளை எனது இலக்கிய ஆளுகைக் குட்படுத்தி மக்களுக்குத் தந்ததில் எனக்கு எந்த விதச் சிரமமுமிருக்கவில்லை.

பேனாவைக் கையில் வைத்துக்கொண்டு அந்தப் பேனாவுக்குத் தீனி போட சமூகத்தை மேலாக நோட்டமிட்டு தசை உணர்வுகளைப் பேனா வசப்படுத்தி எழுதுவது ஒருவகை.

சமூகத்தில் நடமாடும்போது தற்செயலாக அகப்படும் ஒரு சம்பவத்தை, வெறிமாடொன் றைப் பிடிப்பது போன்று பாய்ந்து பிடித்து ஒரு கைக்குள் அடக்கிக்கொண்டு, கால்களை இடறி நிலத்தைத் தடவி பக்கத்தே கிடக்கும் கயிற்றினை எடுத்து அந்த வெறிமாட்டினைக் கட்டிப்போடு வது போன்ற விதத்தில் கையிலிருக்கும் கதையும் கதைப் பின்னலும் மனதிலிருந்து கலைந்து போய்

www.padippakam.com



விடுமோ என்ற ஏக்கத்தில் பேனாவை அவசரத்துடனும், ஆவேசத்துடனும் நகர்த்திச் செல்வது இன்னொரு வகை.

சமூகத்தோடு சேர்ந்து மக்களின் இன்பதுன்பங்களில் பங்கெடுத்து, அவர்களைப் படித்து, அவர்களிடமிருந்து படித்தவைகளை இலக்கிய ஆளுகைக்குட்படுத்தித் தங்கள் சுமைகளைத் தாங்களாகவே எடுத்தெறியும் போதத்தை அவர்களுக்கு அளித்து இயல்பான முறையில் அவர்களை நகர்த்திச் செல்ல நிதானமாகப் பேனாவை ஓடவிடல் வேறொரு வகை.

இந்த மூன்று வகைகளுக்கு உட்பட்டவர்களே விமர்சகர்களுமாவார்கள்.

''நாங்கள் விருப்பு வெறுப்புக்கு உட்படாதவர்கள்; நடுநிலையாளர்கள்'' என்று விமர்சகர்கள் கூறுவதெல்லாம் வெறும் பொய்யானவை. அரசியலிலோ இலக்கியத்திலோ, வேறெந்த விவகாரங்களிலோ நடுநிலைமை என்பது ஒன்றில்லை. நீதி, அநீதி என்ற இரண்டு புள்ளிகள் ஒன்றோடொன்று முட்டி நெருங்கிக்கொண்டு நிற்கின்றன. இடையே மூனறாவது ஒரு புள்ளிக்கு இடமேயில்லை. இதனால் கோவிந்தனை விமர்சிக்கப் புகுபவர்கள் ஏதாவது ஒரு பக்கத்தில் நின்று தங்களை வெளிப்படுத்தியே ஆகவேண்டும் (அல்லது இனங்காட்டிக் கொள்ள மனது இடந்தராதபட்சத்தில்) ஒதுங்கிவிட வேண்டும்.

**கே. டானியல்**

www.padippakam.com

# கோவிந்தன்

## 1

மூன்று லொறிகள் நிறைந்த தட்டு முட்டுச் சாமான்கள்— வீட்டுத் தளபாடங்கள், கறவைப் பசு, கன்றுக்குட்டி ஆகியவைகளுடன் சண்முகம் பிள்ளை தனது பிறந்த மண்ணுக்கு வந்துசேர்ந்து விட்டார்.

இதற்கு முன் பலதடவைகள், தான் பிறந்து, தவழ்ந்து, மண்ணளைந்து மண்தின்று விளை யாடிய இந்தப் பூமியில் கால் வைத்து மீண்டும் சென்று விட்டது போலல்லாமல் இப்போது நிரந்தரமாகவே அவர் வந்திருக்கிறார். இதனால் அவரின் மனதுக்குள் ஒருவிதமான கிழுகிழுப்புத் தோன்றியது.

காலையிலிருந்து நடுப்பகல் தாண்டும்வரை ஐயாவின் வரவுக்காகவே காத்திருந்து அலுத்துப் போய் விட்ட நன்னியனும், அவன் மனைவி கண்ணியும், அவர்களின் பிள்ளைகள் குட்டிகள் என்ற பெரும் பரிவாரமும் அந்த மாந்தோப்பு

படிப்பகம்

www.padippakam.com



வளவில் அங்குமிங்குமாக நின்று வீட்டின் பெருங்கேற்று வரை சண வேளைக்குள் வந்து குவிந்து விட்டனர். அந்தக் கூட்டத்திற்குப் பின்னால் நின்று நன்னியனின் பொன்னிப் பொட்டைச்சி உறுமி, உறுமிக் குரல் வைத்துக் குரல் வைத்து ஆரவாரித்துக் கொண்டிருந்தது.

''எப்பிடி நன்னியன் பெண்டில் சுகமே?'' என்று குசலம் விசாரித்துக் கொண்டே சண்முகம்பிள்ளையின் மனைவி சீதேவி அம்மாள் லொறிகளுக்கு நடுவாக வந்த கப்பல் காரில் இருந்து பக்குவமாக இறங்கி வந்தாள். சீதேவி அம்மாளைத் தொடர்ந்து காரின் பின் சீற்றிலி ருந்து வெளியே பாய்ந்த பென்னம் பெரிய நாயைக் கண்ட தும் சூழநின்ற எல்லோரும் சணவேளை திகைத்துப் போய் விட்டனர்.

வெளியே அங்குமிங்குமாக ஓடிக்குரல் வைத்துக் கொண்டிருந்த பொன்னிப் பொட்டைச்சியை நோக்கி அடக்கமாக உறுமிக்கொண்டே தாவ முற்பட்ட தனது கோவிந்தனை ஒரு தடவை முறைத்துப் பார்த்து ''கோவிந்தா'' என்று சண்முகம்பிள்ளை குரல்வைத்த போது கோவிந்தன் அவர் காலடிவரை அசைந்து வந்து அவருக்கு விசுவாசம் தெரிவித்துக் கொண்டு குழைந்தது.

சண்முகம்பிள்ளை முதல் முதலாக, வந்திருந்தோருக்கு கோவிந்தனைத்தான் அறிமுகப்படுத்தி வைத்தார். 'கோவிந்தன்' என்ற அவரின் குரலில் தொனித்த கருத்தைப் புரிந்து கொண்ட கோவிந்தன் அவருக்குப் பக்கமாகவே நிமிர்ந்து நின்று பொன்னிப் பொட்டைச்சியை நோக்கிப் பார்வையை வீசியும், வாலைத் தாழ்த்தி ஆட்டி அசைத்து எஜமானனுக்கு விசுவாசம் தெரிவித்துக் கொண்டும் சமாளித்துக்கொண்டது.

நன்னியனின் திருக்கூட்டம் கோவிந்தனையே பீதியுட னும், வெருட்சியுடனும் பார்த்துக் கொண்டிருந்தது.

www.padippakam.com



அப்படி ஒரு உயரம் பருமனில் ஒரு ஜீவனை அவர்கள் இதற்கு முன் பார்த்ததில்லை.

''எடி, எங்கடை கிடாயைக் காட்டிலும் பெரிசெடி, கிட்டப் போகாதையுங்கோடி'' என்று நன்னியனின் நடுவிலாள் மெதுவாகக் குரல் காட்டி தனது மூன்று சகோதரிகளையும் எச்சரிக்கை செய்தாள்.

''அக்காள், அதின்ரை காலுகளின்ரை மொத்தத்தைப் பார்த்தியே எங்கடை நாம்பன்ரை காலுகளைப் போலை கிடக்கு'' என்று நன்னியனின் நாலாங்கால் பொடியன் தனது ஆச்சரியத்தை மெதுவாக வெளிப்படுத்திக் கொண்டான்.

கார்வரை சென்ற சண்முகம்பிள்ளை அதற்குள்ளிருந்த சங்கிலி ஒன்றை எடுத்து வந்து கோபிந்தனின் கழுத்துப்பட்டியில் இணைத்துக் கொண்டு அதை நடத்தி வந்து வீட்டின் பக்கத்தோடிருந்த முருக்கந்தடியில் சங்கிலியை மாறி எடுத்துப் பிணைத்துவிட்டார்.

''நன்னியன், எங்கை உன்ரை ஆக்கள்? ஒருத்தனையும் காணேல்லை, ஆக்களுக்குச் சொல்லி வைக்கேல்லைப் போலை கிடக்கு!''

என்று சண்முகப்பிள்ளை குரல் வைத்தபோது, நன்னியன், ''எல்லாரும் காலமை துவக்கம் நிண்டவங்கள், இப்பான் கலைஞ்சு போறாங்கள். இப்ப ஆக்களைக் கொண்டு வாறன்'' என்று கூறிக்கொண்டே வெளியே போனான்.

''நன்னியன் பெண்டில் வீடெல்லாம் துப்புரவு பண்ணி வைச்சிருக்கிறியே?'' என்று கேட்டுக் கொண்டே சீதேவி அம்மாள் நால்சார் வீட்டின் முன் கதவைத் தாண்டிக் கொண்டு உள்ளே வந்தாள். நன்னியன் பெண்டில் கண்ணியும் அவளின் மூத்த பெட்டைகள் இரண்டும்

www.padippakam.com



அவளுக் குப் பின்னால் வர, அதைத்தொடர்ந்து சண்முகம் பிள்ளை காலடி எடுத்து வைக்க அந்த நால்சார் வீடு களை கட்டத் தொடங்கி விட்டது.

சற்று வேளைக்குப்பின் நன்னியன் நான்கைந்து பேர் களுடன் வந்து சேர்ந்தான்.

மாந்தோப்பு வளவுக்குள் ஆரவாரம் தொடங்கி விட்டது.

பொழுது கருகுவதற்கிடையில் லொறிகளின் சாமான் யாவும் இறக்கப்பட்டுவிட்டன. அவைகள் வீட்டின் பக்க மாக நின்ற முது மாமர நிழல் பரப்பில் நிறைத்துக் கொண்டு கிடந்தன.

படிப்பகம்

www.padippakam.com

# 2

சண்முகம்பிள்ளை கடைசியாக இந்த வீட்டுக்கு வந்துபோன காலத்தை உத்தேசப்படி கணக்கிட்டால் சுமார் பத்தாண்டுக்கு முன்பின்னாகப் பார்க்கலாம். அது ஒரு குளிர்காலம்.

மலாயாவில் உத்தியோகம் பார்த்து, அங்கேயுள்ள மலாய்காரி ஒருத்தியை கட்டிக்கொண்டு பிள்ளை, குட்டி என்ற எந்த வழித்தோன்றலுமின்றி— அலுப்புமின்றி இராச வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த இவரின் தந்தை படுக்கையில் விழவே, அவரின் கடைசிகால வேண்டுகோள்படி அவர் மனைவியானவள் அவரின் பிறந்த மண்ணில் அவரைத் தகனம் செய்ய எடுத்து வந்த போது தான்; அந்த அந்திமக்கிரிகையைச் செய்து வைக்கச் சண்முகம் பிள்ளை வந்திருந்தார். வெறுமனே வந்து போனார் என்று மட்டும் சொன்னால் சரியாகாது. 'ஆசைத்தந்தை யாருக்குச் சுடுகாடுவரை கொள்ளிக்குடம்சுமந்து, கொள்ளியும் வைத்துத் திரும்பினார்' என்றால் தான், அவர் வந்ததும் போனதும் பூரணத்துவம் பெறும்.

படிப்பகம்

www.padippakam.com



சண்முகம்பிள்ளையின் முப்பாட்டனுக்குச் சண்முகம் பிள்ளையின் பூட்டன் ஒரே ஒரு மகன். சண்முகம்பிள்ளை யின் பூட்டனுக்குச் சண்முகம்பிள்ளையின் பேரன் ஒரே ஒரு மகன்.

சண்முகம்பிள்ளையின் தந்தைக்குச் சண்முகம்பிள்ளை ஒரே ஒரு மகன்.

இப்படி ஐந்து சந்ததியில் வந்த ஒற்றையான ஆண் வழிப் பிறப்புக்களின் மரபில் சண்முகம்பிள்ளைக்கும் இருபது ஆண்டுகளுக்கு முன் ஒருவன் பிறந்திருந்தான். ஆனால் பத்தாவது வயதிலேயே அவன் செத்துப்போய் விட்டான்.

இப்போதோ சண்முகம்பிள்ளைக்கு வயது ஐம்பதுக்கு மேல். மரபுப்படியும், வயதுப்படியும் இனி ஒரு வாரிசு கிடைக்குமென்ற நம்பிக்கை அவருக்குமில்லை, அவர் மனைவிக்குமில்லை. இதனால், சண்முகம்பிள்ளையின் சந்ததியில் அவரே தான் கடைசி மனிதனும் ஆகி விட்டார்.

சண்முகம்பிள்ளையின் முன் சந்ததிச் சொத்துக் களுடன் அவரின் பூட்டன் காசிப்பிள்ளை உடையாராக இருந்தும், அவரின் பேரன் வேலுப்பிள்ளை மணியக் காரனாக இருந்தும் வெள்ளைக்காரத் துரைமார்களின் நட்புறவுகளினால் ஊரையே கட்டியாண்டு சம்பாதித்துக் கொண்ட சம்பாத்தியங்களின் பெரும் பகுதிகளை சண்முகம்பிள்ளையின் அப்பனான அருணாசலம்பிள்ளை ராசபோக கேளிக்கைகளிலும். 'ஊர்மேய்ச்சல்களிலும்' கரைத்துக்கொண்டிருந்த காலத்தில் தான் சண்முகம் பிள்ளையின் தாயான அழகம்மா நாச்சியாரை அவர் கடிமணம் செய்து கொண்டார். ஆனாலும், அவளுடன் நீண்ட கால இல்லறம் நடத்த அவருக்கு முடியாமல் போய் விட்டது.

www.padippakam.com



அவளை அவர் சிறைப்பிடித்து வந்து கடிமணம் செய்து கொண்ட எட்டாவது மாதக் கடைக்கூற்றில் அவள் சண்முகம்பிள்ளையைப் பெற்றெடுத்துவிட்டாள். தன் மனைவி எட்டாவது மாதத்தில் பிரசவித்துவிட்டது அவர் மனதுக்கு நிம்மதியைத் தரவில்லை. குழந்தை வெள்ளை வெளேரென இருந்தது. தனது நிறத்தோடு அதை அவர் ஒப்பிட்டுப் பார்த்தார்.

''பிள்ளையிலை நீல நரம்புகள் ஓடுது, போகப்போக உரிச்சுப் படைச்சு தேப்பன்ரை நிறத்துக்கு வரும்'' என்று மருத்துவம் பார்த்த நீண்டகால அனுபவக்காரி கோவிச்சிக்கிழவி சொன்னாள்.

''எடி வள்ளி, நீ சொன்ன மாதிரி நடக்காட்டி உன்ரை அள்ளுகொண்டையை வெட்டிப் போடுவன் கண்டியோ?'' என்ற அருணாசலம் பிள்ளையின் கோபத்தை-

''நயினார், இருந்து பாக்க, துடக்குக் கழிவுக்கிடையில் அது உரிச்சுப்படைச்சு நயினாரைப் போல வராட்டிப் பாக்க!'' என்று சபதமெடுத்து அவரை வள்ளி அடக்கி விட்டாள்.

அருணாசலம்பிள்ளைக்கு வள்ளிக்கிழவியின் சபதத்தில் நம்பிக்கை பிறந்ததோ இல்லையோ ஆனால், நெஞ்சை நிமிர்த்தி அவரால் நடக்கமுடியவில்லை. பலர் பலவிதமாகக் குசுகுசுத்துக் கொண்டவைகள் அவருக்குக் காற்றுவாக்கில் வந்து சேர்ந்து கொண்டேயிருந்தன. ஆனாலும், வள்ளிக்கிழவியின் சபதம் அவரை இழுத்து வைத்துக் கொண்டிருந்தது. அவள் வைத்த கெடு துடக்குக் கழிவுவரைதான்.

அருணாசலம்பிள்ளை அழகம்மா நாச்சியாரைச் சிறைப்பிடித்துவந்த கதை ஒரு பெருங்கதை.

அருணாசலம் பிள்ளைக்கு படிப்பு நன்றாக வர வில்லை மிகவும் சிரமப்பட்டு இருபத்தி இரண்டாவது

படிப்பகம்

www.padippakam.com



வயதில் அவர் எட்டாவது வகுப்பை முடித்துக் கொண்டு விட்டார். ஐந்து மைல்களுக்கு அப்பால் இருந்த கல்லூரி ஒன்றிற்கு அவர் நிதம் போய் வருவதற்கு ஒரு வில்லு வண்டியையே தந்தையானவர் நிரந்தரமாக அமர்த்தி யிருந்தார். அந்த ஒற்றை வில்லுவண்டியை இழுத்துச் செல்லும் சந்தனக்கழுத்தான் வீட்டை விட்டு வீதிக்கு வந்துவிட்டால் அதன் சதங்கை நாதத்திற்குச் செவி கொடுத்துத் திரும்பிப் பார்க்காதவர்கள் இருப்பதில்லை.

அதை நாகன் ஓட்டிச் செல்வான். நாகன் வண்டியை செலுத்தும் போதெல்லாம் அவன் நடந்தே செல்ல வேண்டும். ஐந்து மைல் தூரத்தை அவன் நடந்துதான் வண்டியை நடத்திச் செல்லவேண்டும். அவன் ஏறி வண்டி யில் இருந்து செலுத்த முடியாது. அந்த உரிமை அவனுக்கு இல்லைதான். ஆயினும், அருணாசலம் நயினாரின் சகல காரியங்களிலும் இரகசியமான சகல பங்கும் அவனுக்கு இருந்தது.

அருணாசலம் நயினாரின் பத்தாவது வயதிலிருந்து, அவரின் இருபத்திரெண்டாவது வயதுவரை— நீண்ட பன்னிரெண்டு வருடகாலமாக நாகன் அவருக்கு அடிமை, ஆலோசகன், தோழன் உட்படச் சகலதுமாகவே இருக்கி றான்.

அவர் ஏழாவது முடித்துவிட்டு எட்டாவதுக்கு வந்த முதல் நாள் பாடசாலை முடிந்து நாகன் அவரை வண்டி யில் ஏற்றித் திரும்பியபோது, வெள்ளை மெழுகு சீலைப் புதிய கூடாரம் அடித்த ஒற்றைத் திருக்கல் வண்டி ஒன்று பாடசாலை வாயிலில் நின்றது. செங்காரி நாம்பன் ஒன்று இணைக்கப்பட்டிருந்தது. அந்த வண்டியை நாகனோ, அருணாசலம் நயினாரோ இதற்கு முன் ஒருநாளும் கண்ட தில்லை.

''நாகன் என்ன திருக்கல் ஒண்டு புதிசா நிக்குது?''

''ஓமாக்கும்; எனக்கும் தெரியேலையாக்கும்?''

''எப்பன் பொறு ஆற்றை எண்டு பாப்பம்!''

www.padippakam.com



''இண்டைக்கு வருசத் துவக்கமாக்கும், ஆரண்டாலும் புதிசாச் சேர்ந்திருப்பினமாக்கும்?''

''அது தெரியுதடா, ஆரெண்டு பாப்பம். இப்ப என்ன அவசரம், பாத்துக்கொண்டு போவம்.''

''அதுக்கென்னவாக்கும், பாத்திண்டுப் போவம்!''

சற்றுவேளை அந்த வண்டிக்கு உரித்தான புது மாணவனைப் பார்த்துவிடுவதற்காக இவர்கள் காத்திருந்தனர்.

சற்று வேளைக்குப் பின்—

பாடசாலை வாயிலால் அன்னம் போல ஒருத்தி வந்தாள்.

வெண் நிறத்தில் நீண்ட பாவாடைச் சட்டை, அதற்கு மேல் பச்சை நிறத் துண்டுத் தாவணி, இறுகப்பின்னி, நடு முதுகால் ஓடி தொடை மட்டத்திற்குக் கீழாகத் தொங்கிய ஜடை.

வீதி ஓரமாகக் குந்தி இருந்த வண்டிச் சாரதி எழுந்தோடி வந்து வண்டிக்குள் போடப்பட்டிருந்த மெத்தையைச் சரிசெய்து அவளின் புத்தகக் கட்டை வாங்கி உள்ளே வைத்துவிட்டு முன்பக்கம் வந்து ஏற்காலைத் தாங்கிப் பிடிக்கவே அவள் மெதுவாக ஏறிக்கொண்டாள்.

வண்டி நகர்ந்தது

சாரதி நாணையக் கயிற்றை இலேசாக வளைய விட்டுக் கொண்டே வண்டியை நகரவிட்டான். வண்டி இவர்களை விலத்திக்கொண்டே முன்சென்றது.

அருணாசலம்பிள்ளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''சின்ன நயினார் போகவோ?'' என்ற குரல். நாகனின் கேள்விக்கு ''ஓமோம்'' என்று மட்டும் அவர் மொட்டையாகப் பதில் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



வண்டிகள் ஊர்ந்து கொண்டே இருந்தன.

அங்குமிங்குமாக வேறு வண்டிகளும் வந்து கொண்டிருந்தன. மாணவ மாணவிகள் அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டிருந்தனர். சற்று வேளைக்குள் மாணவ நடமாட்டங்கள் குறைந்து போயின.

செங்காரி சற்றுத் தூரம் முன்னே போய்க்கொண்டிருந்தது.

''நயினார், செங்காரி எட்டிப் போகுதாக்கும் சந்தனக் கழுத்தானை எட்டன் நெருங்கி விடவாக்கும்'' என்று நாகன் கேட்டான்.

''கொஞ்சம் நெருக்கிவிடு, விலத்திப் போடாதை! பின்னாலைதான் விடு.''

நயினாரின் நோக்கத்தை நாகன் புரிந்துகொண்டான். அது எங்கே போகிறது என்பதை அறியத்தான் அவர் விரும்புகிறார்.

செங்காரியின் மணி ஓசையை மெதுவாகச் சந்தனக் கழுத்தானின் சதங்கை நாதம் மெதுவாக மெதுவாக மேவியது.

குடிமனையைத் தாண்டி,

வயல் வெளியைத் தாண்டி,

உப்புத்தரவைத் தாண்டி,

மறுபடியும் குடிமனைக்கு வரும்வரை நாகனோ, சின்ன நயினாரோ எதுவும் பேசவில்லை.

படக்கென்று செங்காரி ஒரு ஒழுங்கைக்குள் மடங்கித் திரும்பிக் கொண்டது.

''செங்காரி வேலக்கைப் பிள்ளையார் கோவிலடிக்கை போகுதாக்கும்.''

''பின்னாலை போகட்டுக்கு விடு.''

www.padippakam.com



''நாங்கள் சிந்தாமணிப்பிள்ளையார் கோயிலடி யாலை போறனாங்களாக்கும்.''

''அது எனக்குத் தெரியும் நீ விடு.''

''ஓமாக்கும்!''

இப்போது நாகனுக்குப் பயம் வந்துவிட்டது. இப்படி ஒரு வேண்டாத காரியத்தைச் செய்ய அவன் மனம் கூசி விட்டது. ஏதாவது தொல்லைகள் வந்து சேர்ந்துவிடுமோ என்று அவன் மனம் கேட்டுக்கொண்டது.

பாதிரி கோவிலைத் தாண்டி,

வேலைக்கைப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை வளைவைத் தாண்டி—

ஒரு கல்றோட்டுச் சந்திப்பில் செங்காரி வந்தபோது, ஒரு சங்கடப் படலைக்குள்ளிருந்து, ''அக்கா வந்திட்டா, அக்கா கைவியளமாப் புதுப்பள்ளிக்குப் போட்டு வந்திட்டா'' என்று நான்கைந்து சிறுவர் சிறுமியர்களின் குரல் கேட்க, சங்கடப் படலையைத் திறந்து கொண்டு நடுவயதைத் தாண்டிய ஒரு பெண் வந்தாள்.

செங்காரி நின்று விட்டது.

''சின்னட்டியன், கவனம், பிள்ளையைப் பக்குவமா இறங்க விடு!'' இப்படி அந்த நடுவயதுப் பெண் சொல்ல வும், வண்டிக்குள்ளிருந்த சின்னப் பெண் குதித்து இறங்க வும் சரியாக இருந்தது.

நாகன் அப்போதுதான் தனது வண்டியைச் செங்கா ரிக்கு முன்னே விட்டான்.

கல்றோட்டின் முனைக்கல் ஒன்றில் சந்தனக் கழுத் தான் இலேசாக இடரவே அதன் சதங்கை நாதம் கலீரிட்டது.

நடுவயதுக்காரி திடுக்குற்றுக்கொண்டு அப்போது தான் அந்த வண்டியைக் கவனித்தாள். அவளுக்கு மனது ஒரு மாதிரியாக இருந்திருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



உள்ளே இருந்த சின்ன நயினாரை அவள் கண்டிருக்க வேண்டும்.

அருவருப்பாக முகத்தைத் திருப்பிக்கொண்டே அந்தச் சின்னப் பெண்ணை அணைத்துக்கொண்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

''சின்னட்டியன், வண்டிலை உள்ளுக்கு விட்டிட்டு உடனே போயிடாதை நிண்டுகொள் வாறன்'' என்ற அந்த நடுவயதுப் பெண்ணின் குரல் உள்ளேயிருந்து கேட்டது.

வண்டியில் தட்டியைத் திறந்து வண்டியை உள்ளே விட்டு செங்காரியை அவிழ்த்துக் கட்டி, வைக்கோல் போரிலிருந்து வைக்கோலை எடுத்து உதறிப் போட்டுக் கொண்டிருக்கும் போது அம்மாள் வந்தாள்.

''சின்னட்டியன், ஆற்றை வண்டிலடா பின்னாலை வந்தது?''

''எனக்குச் சரியாத் தெரியேல்லையாக்கும் நயினாத்தி! சுதுமலை வேலுப்பிள்ளை மணியகார நயினாற்றை வில்லு வண்டில் போலைதான் தெரியுதாக்கும், உள்ளுக் கிருந்தவற்றை முகத்தைக் கவனிக்கேலாமல் போச்சு. வண்டிலை விட்டுக் கொண்டு வந்தவன் நளக்கந்தற்றை மூத்தவன் போலை கிடந்தது. நாச்சியாற்றை பள்ளிக் குடத்திலை நின்று தான் வில்லுவண்டி வெளிக்கிட்டு தாக்கும்!''

''அவன் மணியகாறன்ரை மோனெண்டாப் போலை பிள்ளையின்ரை வண்டிலுக்குப் பின்னாலை வரேலுமே? எங்களைப் போடுதடியெண்டு நினைச்சுப் போட்டான் போலை கிடக்கு! நீயும் பேசாமல் வந்திட்டாய் என்ன?''

''நான் என்னெண்டாக்கும் வரப்பிடாதெண்டு சொல்லுறது? எனக்கென்னவாக்கும் உரிமை கிடக்கு?''

www.padippakam.com



"உனக்கொரு உரிமையுமில்லையோ? நீ எங்கடை வீட்டுப்பள்ளன்; எங்கடை வீட்டு நாயங்களைக் கதைக்க உனக்கு அதிகாரங் கிடக்கு; எங்கடை பிள்ளைக்கு ஏதும் மரியாதை கேடு நடந்தா உனக்கும் மரியாதை கேடுதான்; பேந்தொருக்கா வா பொழுது படேக்கை, ஐயா உடுப் பிட்டிக்குப் போட்டார். அவரெட்டைக் கேட்டுப்பாப்பம்! எங்கடை வீட்டுப் பள்ளனுக்கில்லாத அதிகாரம் வேறை ஆருக்கெண்டு! அவன் மணியகாறன்ரை மோன் எண்டா அவன்ரை மட்டிலை!"

சின்னட்டியானுக்கு ஒன்றுமே பேசமுடியவில்லை. செல்லம்மா நாச்சியாரின் வழமையான பேச்சு இப்படித்தான் என்பது அவனுக்குப் பழகிப் போன ஒன்றுதான். ஆயினும், இன்று தனக்கு அவள் தந்த உரிமை அதிகாரத்தை அவன் பெரிதாகத் தான் நினைத்திருக்க வேண்டும். நாச்சியார் தன்னிடம் வைத்திருக்கும் பெருமதிப்பை யெல்லாம் இந்த அதிகார உரிமை தருதல் மூலம் வெளியே காட்டிவிட்ட பெருங்குணத்திற்கு முன்னால் அவன் தலை குனிந்து போனான்.

செல்லம்மா நாச்சியார் உள்ளே போய்விட்டாள். போகும்போது முகத்தில் கோபக்கனலால் துளிர்த்து வந்த முகத்து வியர்வையை முந்தானையால் துடைத்துவிட்டுக் கொண்டே போனாள்.

இந்த முந்தானைத் துடைப்பைப் பற்றிச் சின்னட்டி நான் நன்கு அறிந்து வைத்திருந்தான். யாருடனாவது வர்மம் பாராட்டும் சமயங்களிலெல்லாம் அவள் இப்படித் தான் செய்து கொள்வாள். கணவன் முதலித்தம்பியரிடம் சண்டை போட்டுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அவள் இப்படி முந்தானையை பாவிப்பதானால் அது மிகப் பாரதூரமான சண்டையாகத் தான் முடிந்திருக்கிறது. கணவன் தானாக வந்து சரணடைந்து, நடந்து விட்டவை களுக்கு மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கும் வரை பத்து

www.padippakam.com



நாட்களானாலும் அன்னந்தண்ணி இன்றி மரக்கட்டை போலக் கிடந்துவிடுவாள். ஒரு வார்த்தைகூட யாருடனும் வாய்திறந்து பேசமாட்டாள். குளிக்காள்; முழுகாள்; நித்திரை போகாள்; ஓங்கிய கொட்டாவிகளை விட்டு விட்டு நெட்டுயிர்த்துக் கொண்டேயிருப்பாள்.

பிறருடன் ஏதாவது அடங்காக்கோபம் வந்து முன் தானையைப் பாவித்து விட்டாளானால் காத்திருந்து கருவறுக்கும் விதத்தில் அமசடக்காக எதையாவது செய்து தீர்த்தே விடுவாள். ஒரு விதத்தில் நினைத்து சாதிக்கப் பட்ட பின்னர் தான் அவள் கணவனுடன் சேர்ந்து துயில் கொள்வாள்.

செல்லம்மா நாச்சியாரின் குணத்தை நன்கு தெரிந்து கொண்ட சின்னட்டியனுக்கு இப்போது மனது மிகவும் பட படத்தது.

செல்லம்மா நாச்சியாரின் மூன்றாவது மகள் அழகம் மாள் நாச்சியார்.

அழகம்மா நாச்சியாருக்கு முன்னதாக அவளுக்கு இரண்டு பெண்கள். மூத்தவளை அவளின் அடிகொடி யைச் சேர்ந்த உடுப்பிட்டியிலும், இரண்டாமவளை அடி கொடிக்கு உட்பட்ட பண்டாரக்குளத்தடியிலும் கட்டிக் கொடுத்துவிட்டாள்.

அழகம்மாள் நாச்சியார் பண்டாரக்குளத்தடி அக்கா ளுடன் இருந்து அங்கு பட்டணத்துப் பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுவிட்டு தனது எட்டாவது வகுப்பை முடித்துக்கொண்டு ஒன்பதாவதுக்காக வீட்டோடு வந்து, இன்றுதான் முதல் முதலாக வட்டுக்கோட்டை உயர் கல்வி நிலையத்திற்கு வந்திருக்கிறாள். அவள் வந்ததும் வராததுமாக அவளைத் தொட்டு இப்படி ஒரு பெருங் கரைச்சல் வந்துவிடப் போவதாகவே சின்னட்டியன் கருதினான்.

www.padippakam.com



செல்லம்மா நாச்சியார் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டுவிட்டாள்.

ஒரு வண்டிலை இன்னொரு வண்டில் தொடர்ந்து வந்தது, அவனைப் பொறுத்தவரை முந்தானைச் சீலையால் முகத்தைத் துடைக்கும் அளவுக்குப் பெரிதாக ஆகிவிடக்கூடிய ஒன்றல்ல, என்று தான் இன்னும் அவன் நினைக்கிறான். ஆயினும் நாச்சியார் தந்த அதிகார உரிமை அவனை என்னவோ செய்து கொண்டிருந்தது.

இரவு ஏழுமணியளவில் சின்னட்டியன் செல்லம்மா நாச்சியார் வீட்டுக்குப் போயிருந்தான்.

சங்கடப்படலையைத் திறந்து கொண்டு அவன் உள்ளே போனபோது நால்சார் வீட்டின் முன் கதவில் வெளிப்புறமாகப் போடப்பட்டிருந்த கிடுகு மண்டபத்துக்குள் முதலித் தம்பி நயினார் சாய்மனைக் கட்டிலில் சரிந்து கொண்டு சிமிலி லாம்பு வெளிச்சத்தில் ஒரு ஏட்டுறுதிக் கட்டொன்றினைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

நாய் குரல் வைத்து சின்னட்டியனின் வரவுக்காகக் கட்டியம் கூறியது.

''ஆரது சின்னட்டியனே? உப்பிடி உதிலை மணல்லை இரு நல்ல வெள்ளை மணல் நான் இப்ப தான் உருப்பிட்டியாலை வாறன் உதிலை தாவடிச் சந்திக்குக்கிட்ட வந்தாப் போலை பெரிய திருக்கலின்ரை வளையக்கட்டு கழண்டு போச்சு. ஒரு மாதிரியாக் கோவிய கணவதியன் கொண்டு வந்து சேத்துப் போட்டான். நாளைக்கு கொல்ல நாராயணி யெட்டையும் வளையம் கட்டப் போக்காட்டவேணும், அது கிடக்கட்டுக்கு. இஞ்சை வந்தோன்னை அம்மா ஏதோ சொன்னா? என்ன நடந்தது சொல்லு கேப்பம்!''

''அவனை என்ன கேக்கிறது? நான் சொல்லுறன், பிள்ளை பள்ளிக்குப் போட்டு வரேக்கை உவன் சுதுமலை மணியகாறன்ரை மோனாம், அவன் பிள்ளையின்ரை

www.padippakam.com



வண்டிலுக்குப் பின்னாலை வந்திருக்கிறான். வந்தவன் றோட்டாலை வந்தாப் பரவாயில்லை. அவன் போற றோட்டுச் சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி. அவன் ஏன் எங்கடை ஒழுங்கைக்காலை எங்கடை வீடுவரை வருவான்? அவனுக்கு இஞ்சை என்ன வேலை? அவன் தூமைக்குப் பிள்ளைக்குப் பின்னாலை என்ன வேலை? அவன்ரை தேப்பன் மணியகாறனென்டா அது அவன்ரை பாட்டிலை! முதலிப்பிள்ளை அடிகொடி என்ன போடு தடியே, கேக்கிறன்?''

உள்ளே இருந்து கிடுகுச் சவக்கண்டிக்குள் வந்த செல்லம்மா நாச்சியார் சின்னட்டியனைப் பேசவிடாது பேசி முடித்தாள்.

''ஓமப்பா, நீர் கொஞ்சம் பொறுமன், சின்னட்டி யனைச் சொல்ல விடுமன், அவன் சொல்லட்டுக்கன்.''

முதலித்தம்பியர் செல்லம்மா நாச்சியாரைச் சற்றுச் சாந்தப்படுத்துவதற்காக மெதுவாகக் கூறினார். அவர் நினைத்ததற்கு மாறாக நாச்சியார் ஆவேசப்பட்டாள்.

''இதென்ன கோடே நடத்தப் பாக்கிறியள்? நான் நடந்ததைச் சொல்லுறன். பிறகென்ன அவன்தான் சொல்ல வேணுமெங்கிறது? என்ன சின்னட்டியன் இப்பிடித்தானை நடந்தது?''

''ஓமாக்கும், நாச்சியார் சொல்வது சரிதானாக்கும்? எப்பனும் பிசகில்லையாக்கும்!''

சின்னட்டியன் தனது ஒப்புதலைத் தெரிவித்துக் கொண்டான்.

''நான் ஒரு கதைக்குக் கேக்கிறன், எங்கடை வண்டிலுக்குத்தானை றோட்டும், ஒழுங்கையளும் சொந்தம்? முதலித் தம்பி பரம்பரைக்கெண்டு எழுத்துக்கணக்கிலை கிடக்கே. ஆரெண்டாலும் வருவான், போவான். அந்த நாங்கள் நிற்பாட்டேலுமோ?''

www.padippakam.com



முதலித்தம்பி நயினார் பேசி முடிக்குமுன் செல்லம்மா நாச்சியார் பேசத் தொடங்கிவிட்டார்.

''அவன் சுதுமலையான்! அவனுக்குப் போற வழி இதில்லை! அதாலைதான் இப்ப ஐஞ்சாறு வருசமாய்ப் போய் வாறவனாம்! இண்டைக்கெண்டு அவன் வேலக்கை ஒழுங்கைக்கே ஏன் வருவான்? எப்பெண்டா லும் ஒரு நாளைக் கெண்டாலும் இதாலை அவன்ரை வண்டில் போகேல்லை; சொல்லிப்போட்டன் நான்! அந்தத் தூமையின்ரை வண்டில் வேலக்கை ஒழுங்கைக்கை வரப்படாது! சின்னட்டியன் அநத வண்டில்காரன் நளவனெண்டு நீ சொன்னனியல்லே? நீ அந்த நளவனெட் டைச் சொல்லு! ஐயாவும் அம்மாவும் சொன்னவை தேவையில்லாத காரியம் பாக்க வரவேண்டாமெண்டு சொன்னவையெண்டு சொல்லு! நீ எங்கடை வீட்டுப் பள்ளன். உரிமையோட சொல்லு, அதுக்குக் கேக்காட்டிப் பிறகு பாப்பம்!''

பேசிமுடித்ததும் செல்லம்மா நாச்சியார் உள்ளே போய் விட்டார்.

முதலித்தம்பி நயினாருக்கு எதுவும் பேச முடிய வில்லை; அவர் தலையைத் தொங்கப் போட்டுக்கொண் டார்.

சற்று வேளைக்குப்பின் ''அப்ப நான் போகவாக்கும்'' என்று சின்னட்டியன் நயினாரை விடைகேட்டான்.

நயினார் குரலைத் தாழ்த்திக்கொண்டே—

''சின்னட்டியன், அவள் பாவி சொல்லுறதும் சரி தான். எண்டாலும் கெட்டித் தனமாய்க் காரியத்தை ஒப்பேத்த வேணும்! நீ கெட்டிக்காரன், ஒருக்காச் சுது மலைப்பக்கம் போய், அந்த நளப்பொடியன் ஆரெண்டு விசாரிச்சு அவனெட்டைச் சாடையாக் கதைச்சுப்பார்.

கோ—2

www.padippakam.com



முதல்லை சாந்தமாக் கதைச்சுப் பார். சரிவராட்டி கொஞ்சம் பயப்பிடித்திப்பார் சரிவரும்! மணியகாற னோடை பழைய கோவங்களும் கிடக்குது. அந்தப் பழைய பகை வராமல் கதைக்க வேணும் சின்னட்டியன். பிள்ளை பள்ளிக்கூடத்துக்குப் போறத்தை நாளைக்கு நிப்பாட்டுவம். நீ நாளைக்கிடையிலை ஒரு மாதிரிப் பேசி முடிச்சுப்போடு, பாப்பம் உன்ரை கெட்டித்தனத்தை. நிண்டுகொள் வாறன்!''

என்று பேசி முடித்ததும் நயினார் உள்ளே போனார், போனவர் ஒரு போத்தில் சீல் சாராயத்துடன் வந்து சேர்ந்தார்.

''சின்னட்டியன், இந்தா, இது சீமைச்சாராயம்! அந்த நளப்பொடியனுக்கு முன்னாலைதான் உடைக்கவேணும், கண்டியோ!''

இதற்குப் பின் பேச்செதுவும் நீளவில்லை. சின்னட்டியன் சாராயப் போத்தலை இடுப்புக்குள் செருகிக் கொண்டே போய்விட்டான்.

ஃ ஃ ஃ

சின்னட்டியனுக்கு இப்போது மனசு நிறைந்து விட்ட பெருமை. முதலித்தம்பி நயினார் குடும்பத்தால் தனக்குக் கிடைத்த உரிமை அதிகாரம் ஒரு புறம்! முதலித் தம்பி நயினாரே நேராகத் தன்னிடம் சீமையானைத்தந்து தனக்குத் தந்த கௌரவம் மறுபுறம். உடனடியாகவே இந்தக் காரியத்தை இரவோடிரவாக முடித்துவிடவே அவன் மனங் கொண்டுவிட்டான்.

வேலக்கைப் பிள்ளையார் கோயிலடியிலிருந்து மணியக்காரன் வீடு வெகுதூரமில்லை. இரண்டு மூன்று மைல்களுக்கு மேல் வராது. அதிலிருந்து நளவகடவை அரை மைலுக்குள் தான் வரும். மொத்தமாகப் பார்த்தால் இரண்டரை மைல்களுக்குள்ளேதான்.

www.padippakam.com



முதலித்தம்பி வீட்டிலிருந்து அவன் புறப்பட்டபோது மணி எட்டுக்குமேல் இருக்காது.

பின் நிலவு அப்போதுதான் உதயமாகியது.

நிலவு நெற்றிக்கு நேரே உயர்வதற்கிடையில் அவன் சுதுமலை நளவகடவைக்கு வந்துவிட்டான். அங்கு அவன் விசாரித்தபோது அவனில் முன்னைய ஊகம் சரியாகவே இருந்தது. அந்த ஆசாமி கந்தனின் மூத்த மகன் நாகன் தான்.

தாவடிச் சுடலைக்குப் பின்புறமான பனங்கூடலைத் தாண்டிப் போனால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெளி கொண்டிருப்பது மணியகாரன் வீட்டுக்குப் பரவணி பரவணியாகச் சொந்தமான புகையிலைத் தோட்டந் தான். அதன் நட்டுக்கு நடுவே பத்தோ பதினைந்தோ உயர்ந்து வளர்ந்த தென்னந் தோப்புத்திடல் ஒன்று இருக்கிறது. அந்தத் திடலில்தான் கந்தனின் குடிசை. கந்தனின் வீட்டைச் சுற்றி வர மூன்று குடிசைகள் இருக் கின்றன.

அவைகளில் ஒன்று நாகனுடையது.

அவன் குடித்தனக்காரன்.

மனைவி இத்தினியோடு அவன் வீட்டில் ஆறு ஜீவன் கள். அவன் தந்தை கந்தன் சில நாட்களுக்கு முன் செத்துப் போனான்.

இப்போது அந்தத் தென்னந்திடலுக்கு உத்தியோகப் பற்றற்ற அதிபதி அவன் தான்.

சின்னட்டியன் அந்தச் சிறிய தென்னந்தீவுக்குள் கால் வைத்தபோது, நான்கு வீட்டிலிருந்தும் பத்து நாய் களுக்கு மேலாகச் சீறிப் பாய்ந்து குரல் வைத்தன.

''ஆரது தோட்டத்துக்கை?'' என்று கேட்டுக் கொண்டே நாகன் தோட்டப் பெருவரம்புகளுக்கு வந்தான்.

www.padippakam.com



''ஏன் நாகண்ணை அது நான்தான்'' என்று குரல் வைத்துக்கொண்டே சின்னட்டியன் நாகனுக்குப் பக்கமாக வந்து விட்டான்.

நிலவொளியில் பக்கவாட்டுக்குச் சரிந்து அவனை அனுமானிக்க நாகன் முயன்றபோது—

''அது நான்தான் சின்னட்டியன், நாகண்ணை! நவாலிச் சின்னட்டியன்'' என்று மறுபடியும் சற்று விபரமாகச் சின்னட்டியன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''நவாலிச் சின்னட்டியனெண்டால் எனக்கு விளங் கேல்லை. நவாலி எண்டால்?'' என்று மேலும் ஒரு கேள்வியை நாகன் கேட்டான்.

''வேலக்கைப் பிள்ளையார் கோயிலடிக்கு அங்காலை தேவறட்டுப் பள்ள கடவைக்கை வண்டில் சின்னட்டியன் எண்டால் தெ...''

சின்னட்டியன் பேசி முடிக்குமுன் நாகன் அவனை இனங்கண்டு கொண்டான்.

''டெ, நீயே? அப்போதை அந்தப் பொடிச்சியை வண் டில்லை கொண்டு வந்தது நீயே? வா; வா என்ன சங்கதி? இப்பிடி வா!'' என்று சொல்லிக் கொண்டே நாகன் குடிசைக்குள் வந்து விட்டான்.

நாகனைத் தொடர்ந்து சின்னட்டியனும் குடிசைக் குள் வந்துவிட்டான்.

குடிசைக்குள் ஒரு மூலையில் அடுப்பும் நெருப்புமாக இருந்தது. நாகனின் மனைவி அவைகளோடு போராடிக் கொண்டிருந்தாள். அங்குமிங்குமாக நான்கைந்து ஜீவன் கள் அரை உறக்கத்தில் கிடந்து மூச்சு விட்டுக் கொண்டி ருந்தன.

www.padippakam.com



"ஆரப்பா வந்தது?' என்று நாகன் பெண்டில் கேட்டாள்.

"அது தேவறட்டுப் பள்ளகடவைக்கை இருக்கிற ஆள்" என்று மனைவிக்குப் பதில் சொல்லிக் கொண்டே நாகன் சின்னட்டியனை ஒட்டுத் திண்ணையில் இருக்கும் படி காட்டினான்.

ஒட்டுக்குந்தில் இருந்த சின்னட்டியன் இடுப்பிலிருந்த சீமையானை எடுத்து முன்னே வைத்துவிட்டு சற்று வேளை பேசாமல் இருந்தான்.

நாகனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அந்தச் சீமையானையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். சின்னட்டியன் இப்போது முதலித்தம்பி நயினார் சொன்னபடி செய்ய வேண்டும். நாகனுக்கு முன்னாலேயே சீமையானின் சீலை உடைக்க வேண்டும். முன்னே இருந்த கைவிளக்கை எடுத்து அதன் வாய்ப்புறத்தே வைக்கப் பட்டிருந்த லாகிரி மெழுகின் சீலை உடைக்க உருக்கி வெளியே வழியவிட்டுவிட்டு இடப் பெருவிரலை அதன் புறோப்புக்கு மேல் குத்தி வைத்து மறுகரத்தால் பெரு விரலைக் குத்தினான். ஒருவித நாதத்தைக் கிளப்பிக் கொண்டே புறோப்பு உள்ளே விழுந்தது. நாகனிடமிருந்து ஒரு பனை ஈர்க்கினைப் பெற்று சிறு வளையமாக மடக்கி அதை உள்ளே செலுத்தி, உள்ளே மிதந்த புறோப்பில் இலேசாகக் கௌவ வைத்து மேலே இழுத்தான். மறுபடியும் ஒரு நாதம் இசைத்துக் கொண்டே அந்தப் புறோப்பு வெளியே பாய்ந்து வந்தது.

"என்ன சின்னட்டி எனக்கொண்டும் விளங்கேல்லை!" என்று நாகன் மொட்டையாகக் கேட்டான்.

"எல்லாம் சொல்லுறன் நாகன்னை. ஏதனம் ஒண்டு தா?" என்று நாகன் கேட்டபோது குந்து மூலையோடு கவிழ்க்கப்பட்டிருந்த சிரட்டை ஒன்றினை நாகன் எடுத்துக் கொடுத்தான்.

www.padippakam.com



அது நன்றாகச் செருகப்பட்டிருந்தது. அதில்தென்னங் கள்ளு வாசனையும், ஈரமும் இருந்தது. சற்று வேளைக்கு முன்புதான் அதில் நாகன் கள் அருந்தியிருக்க வேண்டும்.

சிரட்டையை கையால் சுத்தம் செய்து சின்னட்டியன் சாராயத்தினை அதற்குள் ஊற்றியபோது அதன் வாசனை கம்மென்று மேல் கிளம்பியது அதை அவன் நாகனிடம் நீட்டினான். கண்களை மூடி, நெற்றியைச் சுருக்கிக் கொண்டே நாகன் சிரட்டையைக் காலி செய்துவிட்டான். சின்னட்டியனும் சிரட்டையின் பாதிவரை ஊற்றிக் குடித்து விட்டான்.

நாகனின் மனைவி கஞ்சி வடித்துவிட்டு திருகுவலைப் பிடியை எடுத்து வைத்துக் கொண்டு தேங்காய் ஒன்றை உடைத்து அண்ணாக்காக இளநீரைக் குடிக்க முற்பட்ட போது அரைத தூக்கத்தில் கிடந்த நாகனின் நடுவிலான் ''ஆத்தை, எனக்கு இளனீ தாணை'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து தாய்க்குப் பக்கத்தே வந்துவிட்டான்.

''இனி வந்த காரியத்தைச் சொல்லன் சின்னட்டி!'' என்று நாகன் கேட்டான்.

''அப்பிடிப் பெரிசாய் ஒண்டுமில்லை அண்ணை, அப்போதை உங்கடை திருக்கல் எங்கடை ஒழுங்கையிக்கை வந்ததைப் பற்றித்தான் கேட்க எண்டு வந்தனான்!''

''ஏன் சின்னட்டி, உங்கடை ஒழுங்கைக்கிளாலை எங்கடை வண்டியில் வரப்பிடாது போலை கிடக்கு! அப்பிடிச சட்டத்திலை எழுதிக்கிழுதிக் கிடக்குமாப் போலை கிடக்கு உன்ரை கதை. சின்ன நயினார்ப் பொடியனுக்கு அந்தப் பொட்டைக்குப் பின்னாலை வர விருப்பமாக் கிடந்தது. நான் விட்டன், அதுக்கென்ன இப்ப?''

''அதுக் கொண்டுமில்லை அண்ணை! அதிலை பிழையில்லைதான். எண்டாலும்...?''

www.padippakam.com



''என்ன எண்டாலும்?''

''அது அவைக்கு விருப்பமில்லை!''

''அவைக்கு விருப்பமில்லாட்டா சின்ன நயினாரை அலை கட்டி அவுக்கேலுமே?''

''குமர்ப் பிள்ளையைப் பள்ளிக்கு விடுகிறவை யோசிப்பினந்தானே!''

நாகனின் மனைவி தேங்காய்த் துருவலை விட்டு விட்டு, ''குமர்ப் பிள்ளையளுக்குப் பிறகாலை உங்கடை வண்டில் ஏன் போவான்? நான் கேக்கிறன்!'' என்று பேச்சில் குறுக்கிட்டாள்.

''இஞ்சேர், நீ பேசாமல் இருக்கோணும் கண்டியோ? இஞ்சை சின்னட்டி, நான் சொல்லுறன் சின்ன நயினார் பொடியன் பொட்டையிலை கண்ணைப் போட்டிட்டுது! அவை வெட்டைச் சொல்லி அதை ஒருமாதிரியாய் ஒப்பேத்தப்பார். அவையும் தங்கடை தூரத்துச் சொந்தக்காறர் எண்டு நயினார்ப் பொடியனும் சொன்னது.''

''உதென்னண்ணை மோட்டுக்கதை கதைக்கிறியள்! குழந்தைப்பிள்ளை விளையாட்டுக் கலியாணம் போலை!''

''இப்பார் சொன்னது, உடனை செய்வமெண்டு, பேச்சுக்காலீலை வைச்சுக் கொண்டு பின்னடிக்குப் பாப்பம்! ஏன் உங்கினைக்கை பெரிய வீடு வளிய சானைக்கூறை போட்டு வைச்சுருக்கினம் அதைப் போலை!''

சின்னட்டியனுக்கு நிலைமை நன்றாக விளங்கி விட்டது. இதிலிருந்து விடுப்பட்டுக் கொள்ள அவனுக்கு வழி தெரியவில்லை.

முதலித்தம்பி நயினார் கூறிய பயமுறுத்தல் முறையைக் கையாள அவன் நினைத்தான். ஆனாலும், அதற்கான சரியான துணிவு அவனுக்குப் பிறக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



செல்லம்மா நாச்சியார் தந்த அதிகார உருத்தைப் பாவிக்க வேண்டும் போல நினைப்பு வந்தது. அதுவும் தலை யெடுக்கவில்லை.

''என்ன சின்னட்டி, கனயோசினை?'' என்று நாகன் அவனின் மௌனத்தைக் கலைக்க முயன்றான்.

பதிலுக்குச் சின்னட்டியன் சீமையானைச் சிரட்டைக் குள் ஊற்றி அவனுக்கு கொடுத்தான்.

''எல்லாத்தையும் இன்னுமொருக்கா யோசிச்சுப் பாரண்ணை, நான் எல்லாத்துக்கும் நாளைக்கொருக்கா வாறன்'' என்று கூறிக் கொண்டே சின்னட்டியன் வெளியே வந்து விட்டான்.

மிகுதிச் சீமையான் அப்படியே வைத்த இடத்தில் இருந்தது.

பெருவரம்பு வரை வந்து அவனை வழி அனுப்பிய போது நாகன் இப்படிக் கூறினான்:

''சின்னட்டி, நயினார்ப் பொடியன் இதுக்கு முந்தியும் கன பொடிச்சிகளோட மினக்கெட்டிருக்கிறான். எண்டா லும் இந்தப் பொடிச்சியைப் பிடிச்சது போலை ஆரையும் அவனுக்குப் பிடிக்கேல்லை. பொடிச்சியை விழுங்கிக் கக்கிப் போட்டான் கட்டினா உவளைத்தான் கட்டி றேண்டு எனக்குச் சொல்லியும் போட்டான். ஒரு கொஞ்ச நேரத்துக்குள்ளை ஆள் இப்பிடிச் சுருண்டு போகுமெண்டு நான் நினைச்சிருக்கேல்லை!''

சின்னட்டியனின் காதுகளுக்குள் வழியனுப்பி வைக் கும் போது நாகன் கூறியவை இன்னும் கேட்டுக் கொண்டே இருந்தன. நாகனின் வார்த்தைகளிலிருந்து சின்ன நயினார் அருணாசலம்பிள்ளை எந்த அளவுக்கு அழகம்மா நாச்சியாரின் மேல் மையல் கொண்டிருக் கிறான் என்பதைப் புரிய வைத்தது என்பது உண்மையா யினும் இந்த ஒருதலைக் காதல் எந்த விளைவுகளை ஏற்ப

www.padippakam.com



டுத்தப் போகிறது என்பதை அவனை உணர வைக்க வில்லை.

நாகன் வீட்டில் ஒரு தடவை தான் சின்னட்டியன் சீமை யானை அருந்தியிருந்தான். அதுவும் முன்னெச்சரிக்கை யாக அளவாகவே அருந்தியிருந்தான். அதனால் அவன் நிதானமாகவே வந்து சேர்ந்து விட்டான். முதலித்தம்பி நயினார் வீட்டிற்கு முன்னால் அவன் வந்தபோது நிலா நடுவானத்திற்குச் சற்றுப் பதிவாகவே நின்றது.

சங்கடப் படலைக்குள் நின்று அவன் நயினாரை அழைத்தான்.

சின்னட்டியனின் உடன் வரவை நயினார் எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் அவர் நித்திரை போகவில்லை. அவர் சங்கடப்படலையைத் திறந்து கொண்டு விரைவில் வெளியே வந்து விட்டார்.

சின்னட்டியனுக்கு எதையும் ஒளித்துவிட முடிய வில்லை. அப்படியான பழக்கமும் அவனுக்கில்லை.

சின்னட்டியனின் வாய்முறைப்பாட்டைக் கேட்கும் போது நயினார் அடிக்கடி ஆத்திரப்பட்டுக் கொண்டார்.

''ஆத்திரப்படுறதிலை ஒண்டு மில்லையாக்கும், நயினார் சின்ன நாச்சியாரைக் கொஞ்ச நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போறத்தை நிப்பாட்டினா என்ன வாக்கும்'' என்ற சின்னட்டியனின் ஆலோசனை சரியாகப் பட்டதோ என்னவோ அவர் பதட்டமில்லாமல் பேசினார்.

''சின்னட்டி யோசிப்பம், நீ நாளைக்கும் ஒருக்கா நாகனெட்டைப் போட்டு வா, பிறகு பாப்பம்'' என்றுகூறி நயினார் சங்கடப் படலையைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்.

''சின்னட்டியன் ஏன் இந்த நேரத்திலை வந்தான்? என்னவாம் அவன்?'' என்ற கேள்வியை செல்லம்மா நாச்சி

www.padippakam.com



யார் கேட்டதற்கு ''அப்பிடி ஒண்டுமில்லை. ஐஞ்சாறு நாளைக்குப் பிள்ளையைக் கொலிஜ்சுக்குப் போகாமல் நிர்பாட்டினா என்ன எண்டு சொல்லிப் போட்டுப் போறான்'' என்று மட்டும் சொன்னார்.

''ஏன்? ஏன் அப்பிடிச் சொன்னவன்? அந்தத் தூமைக்குப் பயந்தோ?'' என்று அவள் இரைந்தாள். இதற்கு மேல் அவளை அதிகம் பேச அவர் விடவில்லை. எப்படியோ ஒரு மாதிரி அடக்கி விட்டார்.

ஃ ஃ ஃ

வழமைபோல் சந்தனக் கழுத்தான் வில்லுவண்டியை இழுத்துவர, நாகன் நடந்து கொண்டே சாரத்தியம் செய்ய, உள்ளே சின்ன நயினார் அருணாசலம்பிள்ளை கொலுவிருந்தார்.

இன்று அவரின் அலங்காரம் சற்று மாற்றமாக இருந்தது.

வாசனைத் திரவிய வாசனை கம, கமவென்று வீசியது.

முதல் நாள் இரவு சின்னட்டியன் வந்துபோன விவரத்தை நாகன் சாங்கோபாங்கமாக விவரித்துக் கொண்டும் தான் வைத்த கலியாணப் பேச்சு வார்த்தையைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டும் வந்தான்.

ஒரே ஒருநாள் நடவடிக்கையுடனேயே விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்து விடும் என்று சின்ன நயினார் எதிர் பார்க்கவில்லை; அவருக்கு இந்த நிகழ்ச்சிக்ள் சற்று மகிழ்ச்சியையே தந்தன.

சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடிக்கு வந்தபோது வண்டியைச் சற்று நிறுத்தும்படி நாகனிடம் அவர் கூறினார்.

www.padippakam.com



வேலக்கைப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை வந்து சந்திக்கும் இடம் பக்கத்தேதான் இருக்கின்றது. அந்த அன்ன நடைக்காரி வந்து போய்விட்டாளா என்பதை அவர் அவதானிக்க வேண்டும். அன்னை நடைக்காரியின் வண்டி வந்து போனதற்கான சுவடுகள் எப்படித் தெரியப் போகிறது?

சற்று வேளைக்குப் பின் சந்தனக்கழுத்தான் சதங்கை நாதத்தைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டு விட்டது.

பாடசாலையடிக்கு வண்டி வந்து சேர்ந்ததும் சின்ன நயினாரின் பார்வையெல்லாம் அன்ன நடைக்காரியின் வண்டியையே தேடி அலைந்தது.

ஒரு நாளாயிற்று; இரண்டு நாட்கள் ஆயிற்று மூன்றாம் நாளும் வந்துபோய் ஒரு வாரமும் முடிந்து விட்டது. அந்த அன்ன நடைக்காரியின் வண்டி வரவே யில்லை.

ஏமாற்றத்தினால் சின்ன நயினார் வாடிப்போனார்.

படிப்பாவது; மண்ணாங்கட்டியாவது!

மறுநாள் வருவதாகச் சொல்லிப்போன சின்னட்டி யனும் இதுவரை நாகனிடம் வரவில்லை.

மறுவாரத் தொடக்க நாள்.

சந்தனக் கழுத்தானின் சதங்கை நாதம் வேலக்கை ஒழுங்கையில் ஒலித்துச் சென்றது. சந்தனக் கழுத்தான் முதலித்தம்பி நயினாரின் சங்கடப் படலைக்குள் வந்த போது, சற்று நாதத்தைச் சோரவிட்டு மீண்டும் பேரொலி வைத்துச் சென்றது. அந்தச் சதங்கை நாதம் செல்லம்மா நாச்சியாரை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. அவள் சங்கடப்படலையைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். சதங்கை நாதம் வந்த திக்கை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தத் திசையில் காறி உமிழ்ந்தாள். முந்தா

www.padippakam.com



னையை எடுத்து முகத்தில் அரும்பிய வியர்வை அரும்பு களைத் துடைத்துவிட்டு படக்கெனச் சங்கடப்படலையை அடித்து சார்த்திக் கொண்டு போய்விட்டாள்.

செல்லம்மா நாச்சியார் வெளியே வந்ததும், காறி உமிழ்ந்ததும், முன்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டதும் வண்டிக்குள் இருந்த அருணாசலம்பிள்ளை சின்ன நயினாருக்கு நன்றாகத் தெரிந்தது. அவர் நெஞ்சுக் குள்ளே மழுங்கலான ஒரு ஆயுதம் ஊடுருவிச் சென்றது போன்ற ஒரு உணர்வு சணத்தில் தோன்றி மறைந்தது.

''நாகன் காரியம் பிளைபோலை கிடக்கெடா!'' என்று அவர் மெதுவாகக் கூறினார்.

''அதொண்டும் பிசகாதாக்கும் நயினார்! நாம் பேசா மல் இருக்க'' என்று எதையோ எண்ணிக்கொண்டு நாகன் சொன்னான். செல்லம்மா நாச்சியார் வந்ததும் போன தும் அவனுக்குத் தெரியாது.

அம்மன்கோவில் வீதியை வண்டி தாண்டிக்கொண்டி ருந்தபோது சின்ன நயினார் கூறினார்.

''நாகன், நீ சின்னட்டியனை இண்டைக்கொருக்காப் போய்ச் சந்திச்சுப் போட்டுவா; முடிவைக் கெதியாய் அறிய வேணும், அவள் என்னைப் பார்த்துக் காறித் துப்பிப் போட்டாள்!''

''என்னவாக்கும் காறித்துப்பியோ! ஆர் அந்த நாச்சி யாராக்குமோ? அப்பிடியோ பாப்பம், பாப்பம், பாப்ப மாக்கும்!''

நாகனின் குரல் சபதத்தொனியில் மேலோங்கியது.

சூட்டோடு சூடாக அவன் அன்று இரவு சின்னட்டி யனிடம் போயிருந்தான். அவன் தேவறட்டு பள்ளகுறிச்சிக் குப்போயிருந்தபோது மணி பத்தாகி விட்டது. சின்னட் டியன் வீட்டை அவன் இலகுவில் தேடிப்பிடித்து

www.padippakam.com



விட்டான். சின்னட்டியன் என்ற பேரைக் கேட்டதும் பலர் அவனுடன் வழிகாட்டி வந்து சின்னட்டியனிடம் விட்டுச் சென்றனர். சின்னட்டியனுக்குப் பள்ளகுறிச்சியில் இருந்த மதிப்பைப் பார்த்தபொழுது நாகனுக்குச் சற்றுப் பயமாக இருந்தது.

சின்னட்டியன் அவனை வரவேற்று உபசரித்தான். எடுத்த எடுப்பிலேயே பேச்சும் தொடங்கி விட்டது.

''வந்த விஷயம் என்னண்ணை!'' என்று சின்னட்டியனின் மொட்டையான கேள்வி நாகனுக்கு திருப்தியான தாக இல்லை. ஏனெனில், சின்னட்டியனாகவே முந்திய விட்ட குறையிலிருந்து பேச்சைத் தொடங்க வேண்டு மென்று இவன் எதிர்பார்த்தான்.

''அந்த விஷயத்தைத்தான் கதைக்க வந்தனான் சின்னட்டியர், அவை என்ன சொல்லினம்?''

''அந்தப் பிஞ்சுப் பெட்டையின்ரை படிப்பை சின்ன நயினார் கெடுத்துப் போட்டார். அது இனி எப்பனும் சரிப்பட்டு வராதெண்டுதான் நான் நினைக்கிறன். இந்தச் சின்ன வயசுக்குள்ளை சின்ன நயினாருக்குப் பூச்சிக்கடி யெண்டால் எல்லாரும் அதுக்கு ஓமாமே!''

''உப்பிடிக் கதைக்கப்படாது!''

''நீதி நியாயத்தை வேறை எப்பிடிக் கதைக்கிறது?''

''தூக்கி எறிஞ்சு கதைக்கப்பிடாது!''

''சின்ன நயினாரும் மற்றவையைப் போடுதடியாக நினைக்சப்பிடாது!''

''வீடு தேடி வந்திட்டன் எண்டத்துக்காக உப்பிடிக் கதைக்கிறது சரியில்லைக் கண்டியோ! மணியகாரனைப் பத்தி உங்களுக்கு நல்லாத் தெரியாது!''

''அவன் மணியகாறனெண்டா அவரென்ன அவை யின்றை காதுக்கையே பூந்திடுவார். அவையுங் குறைஞ்

www.padippakam.com



சாக்களில்லைக் கண்டியோ. அவை முதலியாரவை பெரிய அடிகொடியுள்ளவை! சேனாதிராசா கட்டினது முதலித் தம்பி நயினாற்றை மூத்த மோளை எண்டது தெரியா தாக்கும்!''

''சேனாதிராசா எண்டால் என்ன கொம்பே? மணிய காறன் நயினார் ஒரு சொல்லுச் சொன்னா வெள்ளைக் காறர் பட்டாளமாய் வந்து நிப்பினம்!''

''உடை விடெண்ணை! அது ஊருக்குத் தெரிஞ்ச கதை! மணியகாறண்வை வெள்ளைக்காறருக்கு நக்கக்குடுத்தா யென்ன விட்டுவேணடினா என்ன! அது அவையோடை; சும்மா எல்லாரோடையும் சேட்டை விடேலாது!''

''என்ன உள்ளுக்கை ஆரோ கதவ்ளிப்படுகினம்; ஆரது?'' என்று கேட்டுக்கொண்டே சின்னட்டியன் பெண்டில் பெரிய கறுப்பி வந்தாள். அவளுக்குப் பின்னால் சின்னட்டியனின் மகன் சுப்பிறனும் வந்தான். இறவுக்கச் சந்தைக்குப் போனவர்கள் இப்போதுதான் வருகிறார்கள்! ஆனாலும் உள்ளே நடக்கும் சம்பாஷணையைப் பெரிய கறுப்பி சற்று வேளை நின்று அவதானித்துவிட்டே வந்தாள். கணவன் சின்னட்டியனதும், மற்றவனதும் சம்பாஷணையிலிருந்து அவள் ஒரளவுக்கு விஷயத்தைப் புரிநதுவிட்டாள்.

மனைவி பெரிய கறுப்பி இப்படித் திடீரென்று வந்து விட்டது சின்னட்டியனுக்கு என்னவோ போல இருந்தது. கண்டபடிக்கெல்லாம் ஊர்க் காரியங்களுக்குத் தலைப் போடுவதைப் பற்றி அவள் அவனிடம் அடிக்கடி குறை பட்டுக் கொண்டிருக்கிறாள். அதுவும் நயினார்மார் வீட்டுக் காரியங்களில் தலையிடுவதென்றால் அது அவளுக்கு அடியோடு பிடிக்காத ஒன்று.

''ஒரு கதை வழியுமில்லை யெடி யாத்தை. நீ உன்ரைப் பாட்டிலை இரு; இது சுதுமலை நாகண்ணை,

www.padippakam.com



என்னெட்டை ஒரு அலுவலாக வந்திருக்கு. வா நாகண்ணை வெளியிலை போவம்; இவள் பாவி இனி வந்திட்டாள். ஆனவாயிலை பேசவிடாள்'' என்று சினந்துகொண்டே சின்னட்டியன் எழுந்தான்.

''ஓ, ஓ எல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் வந்தனான். நயினார் வீட்டு ஒம்மந்த சம்மந்தங்களிலை ரெண்டு பேரும் பெரிய கவலைப் படுகிறியள்! ஏமே உங்கடை பிள்ளை குட்டியளுக்குச் சம்மந்தம் செய்யப் போறதுபோலை! ரெண்டு பேரும் நயினார் நயினாத்தி யளுக்காக உயிரை விடுகிறனெண்டு நிக்கிறியள்! நாந் தெரியாமக் கேக்கிறன் அவைக்காக நீங்கள் ஏன் வில்லங் கப்படுவான்? ஒருக்கா ரெண்டு பேரும் சொல்லுங்கோ பாப்பம்'' என்று பெரிய கறுப்பி நின்ற நிலையிலேயே றாங்கியாகக் கேட்டாள்.

நாகன் தலைகவிழ்ந்து கொண்டான்.

சின்னட்டியனுக்குப் பொத்துக்கொண்டு கோபம் வந்துவிட்டது. பிறத்தியாள் ஒருவனுக்கு முன்னால் தன்னை மதியாமல் அவள் தன்னை அவமானப்படுத்துவ தாக அவன் எண்ணினான்

''எடி, நீ பேசாதையடி, பொத்தெடி வாயை; எனக் குப் புத்தி சொல்ல வந்திட்டா வேசையார்! பல்லுக் கொட்டிக் போடுவன் கண்டியோ'' என்று அவன் கத்தி விட்டான்.

''உள்ளதைச் சொன்னால் உடம்பு நோகுது போலை கிடக்கு. ஊரு நயினார் மாற்றை காரியங்களை தலைப் போட்டுத் தலைப்போட்டுத்தானே என்ரை குடி அறுந்து போச்சு! பேந்தும் பேந்தும் என்ரை கழுத்துக் கயிற்றை அறுக்கிறத்துக்குத்தான் அடுக்கு நடக்குது! நயினாத்திக்கு வண்டில் விடப்போனா விட்டுப் போட்டு வர்றது

www.padippakam.com



அவைக்கு முட்டுக்கப்புச் சாத்தப்போகச் சொல்லிக்கிடக் கோண்டு கேக்கிறேன்? அந்த நாச்சியாற்றை தலைப் பிள்ளை நாச்சியாற்றை காரியத்தாலை வந்த வில்லங்கம் ஐந்து வருஷத்துக்கு மேலையாச்சு இண்டைக்கும் தீரேல்லை! பண்டாரக் குளத்தடிக் கோவியர் பன் சின்னட்டியனை எண்டைக்கெண்டாலும் கொல்லாமல் விடுறேல்லை எண்டு இன்னும் சபதம் போட்டுக் கொண்டு திரியிறாங்க இவன் பாவிக்கு இன்னும் அறிவு வரேல்லை! ஆனை தன்ரை தும்பிக்கையாலை தன்ரை தலையிலை மண்ணைப் போடிறது போலை...''

என்று பெரியகூறுப்பி தொடர்ந்து தன் பாட்டில் பேசிக்கொண்டே சந்தையிலிருந்து கொண்டு வந்த மீனை வெட்டுவதற்காகக் கத்தியையும் சட்டிகளையும் எடுத்துக் கொண்டு குடத்தடிப்பக்கம் வந்துவிட்டாள். சுப்பிறன் போத்தில் விளக்கைத் தாய்க்குப் பின்னால் பிடித்துக் கொண்டே வந்து விட்டான்.

சின்னட்டியனும் நாகனும், துரவுக்குப் பக்கத்தே இருந்த தென்னங்கன்றடிக்கு வந்துவிட்டனர்.

''சின்னட்டியர், ஒரு பக்கத்திலை பாத்தா அக்கை சொல்லுறதும் சரிபோலை கிடக்கு, உவைக்காக நீ ஏன் வில்லங்கத்துக்கு போவான்! நீ ஒண்டுக்கும் வராதை; அவர் சின்ன நயினார் பொட்டையிலை கண்ணைப் போட்டிட்டார். இனி அவன் விடான், எப்பிடி எண்டாலும் அவன் அந்தப் பொம்பிளையை எடுக்காமல் விடான். நானும் வில்லங்கத்துக்கை மாட்ட மாட்டன். ஏதோ அவை பட்டிழுத்துப் பாக்கட்டுக்கு, அப்ப நான் வாறன்!'' என்று சொல்லிவிட்டு நாகன் திரும்பி விட்டான்.

ஃ ஃ ஃ

www.padippakam.com



பத்து நாட்கள் போய்விட்டன.

சின்னநயினாரின் சந்தனக்கழுத்தானை நாகன் வேலக்கை ஒழுங்கைக்குக் கொண்டு வருவதில்லை. வழமைப்படி அது பழைய பாதையிலேயே போய் வந்தது.

செல்லம்மா நாச்சியாருக்கு மனக்கொதிப்பு ஒரு மாதிரி அடங்கி வந்துவிட்டது. முதலித்தம்பி நயினார் நிம்மதியாக மூச்சுவிடத் தொடங்கி விட்டார். முதலித் தம்பி நயினார் நிம்மதியாக மூச்சுவிடத் தொடங்கிய போதுதான் அருணாசலம் நயினாரின் தந்தை வேலுப் பிள்ளை மணியக்காரன் தன் இறுதி மூச்சை விட்டு விட்டார்.

வேலுப்பிள்ளை மணியக்காரனின் மரண வைபவம் மிகவும் சிறப்பாகவே நடந்து முடிந்தது.

அருணாசலம் நயினார் தனது இருபதாவது வயதில் தந்தையை இழந்துவிட்டார்.

அந்த இழவு வீட்டுக்கு விடுபட்டுப்போன உரிமைக் காக கோவியக் கணபதியன், முதலித்தம்பி நயினார் வீட்டுச் சங்கடப்படலைக்குள் நின்று வேலுப்பிள்ளை மணியக்காரனின் மரணச் செய்தியைக் குரவை வைத்து அறிவித்து விட்டுச் சென்றான்.

என்னதான் பகைமைகள் இருந்தாலும் வீட்டு வாயி லில் நின்று இழவு சொல்லிக் கோவியன் குரவை வைத்து விட்டானானால் அந்த இழவு வீட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டும்; முதலித்தம்பியர் மனைவி செல்லம்மா நாச்சியாரையும் அழைத்துக் கொண்டு இழவு வீட்டிற்குப் போய்வந்தார். ஆனாலும், சபைசந்தி, கஞ்சிதண்ணி, வாய்நனைப்பு என்ற வரையில் எதுவும் இல்லை!

கோ—3

படிப்பகம்

www.padippakam.com



மணியக்காரனின் மறைவு வரை மைனராக இருந்த அருணாசலம் பிள்ளை இப்போது திடீரெனக் கடுக்கண்டு விட்டார்.

குடும்பத்தின் ஒரே வாரிசு; நிலபுலம், பொருள் பண்டம், அடிமை, குடிமை சகலத்தையுமே அவர் கட்டி ஆளவேண்டும்! இது இலேசுப்பட்ட ஒன்றல்ல. தந்தையின் மணியக்கார ஆதிக்கத்துடன் தொடர்பாகிக் கொண்டவர்களை விட்டுவிடுவதோ, அல்லது பெரு நிலப் பரப்புகளைத் தரிசாக விட்டுவிடுவதோ அன்றி குத்தகைக் காரர் ஒருவருக்கு நீந்தகமாக்கித் தப்பித்துக் கொள்வதோ அல்லது பெரிய மனிதர்களுக்கே உரித்தாக வந்துவிட்ட சகலத்திற்கும் சகல விதங்களிலும் பயன்படுத்தி வெற்றி காணும் திருக்கூட்டங்களை விட்டுவிடுவதோ, வேண்டிய போது வேண்டிய இன்பங்களை அனுபவிக்கும் உப ஊற்றுக்களை அடைத்து விடுவதோ இவை இலேசான காரியங்களுமல்ல, அத்துடன் பேரனாலும், தந்தையாலும் ஆளப்பட்ட அடிமை குடிமை உட்பட்ட சகல வரிசைகளையும், சமீபத்தில் ஊருக்கே அதிசயமாகத் தந்தையினால் கட்டி முடிக்கப்பட்ட நால்சார் மாளிகையும் அதற்கு உட்பட்ட சகலத்தையும் பராமரிக்க முடியாதே என்ற நிர்ப்பந்தமான நினைப்போ அவருக்கு எழுவதற்கு எந்தவிதமான நியாயங்களும் இருக்கவில்லை.

இருக்கும் கல்வியை வைத்துக்கொண்டு, குறுக்கு வழி கௌரவத்துக்குத் தன்னும் ஒரு உத்தியோகத்தைப் பெற்று விட அவர் நினைக்கவில்லை. சிலர் அதை உடனடியாக நிறைவேற்றவும் துடித்தனர். ஆயினும், அதை அவர் ஆழமாக நினைக்க முடியாத அளவுக்கு உடனடியான நடைமுறை நிர்வாக வேலைகள் தடுத்து விட்டன. சுட்டுப் போட்டாலும் வர முடியாத மேற்படிப்பை நிர்ப்பந்தப் படுத்தி புகுத்துவிக்க முயன்ற தந்தை இல்லை. அதனால் வட்டுக்கோட்டைக் கல்லூரிக்கான சந்தனக் கழுத்தான் சவாரி நின்றுவிட்டது. ஆனால், அந்த அன்னநடைக்

www.padippakam.com



காரியைப் பற்றிய நினைப்பு மட்டும் போக மறுத்து நின்று கொண்டது.

சுதுமலை அம்மன் கோவிலின் கொடியேற்றத் திருவிழா முதலாவது காளாஞ்சிக்காரன் அவர்.

குறைந்தது மூன்று மைல் சுற்று வட்டத்தில் தலைச்சன் பிரசை அவர்.

ஊரின் தேச வழமைக்குட்பட்ட நடைமுறைகளைக் கண்காணித்து முடிவு கூறுபவர் அவர்.

இவைகள் யாவும் அவருக்கு வழிவழி வந்தவை. ஆனால், இப்போது புதிதாக ஒரு அம்சம் கூட்டப்பட்டிருக்கிறது. நல்லவைகளை விட கெட்டவைகளும் அவர் ஆணைப்படியே!

இத்தனையும் வந்துவிட்ட போதும் நாகன் அவரின் அந்தரங்க நண்பனே!

பாடசாலைக் காலத்திலிருந்து இன்றுவரை அவன் அவரின் நண்பன்தான்; விசுவாசமான அடிமைதான்!

அதேபோன்று நாகனுக்கும் அவர் அந்தரங்கமான நண்பன்தான்; விசுவாசத்திற்குரிய எஜமான்தான்!

ஒவ்வொரு நாளும் அதிகாலையோடு ''நயினார், நாகனாக்கும்!'' என்று வரவு சொல்லிக்கொண்டே வந்து விடுவான்.

''நாகன் நீயே?'' என்னும் வார்த்தையைத்தான் அவர் தினசரி முதல் வார்த்தையாக வைத்துக்கொள்வார் இல்லாவிட்டால் அவருக்கு விடிவதில்லை.

ஃ ஃ ஃ

வேலுப்பிள்ளை மணியக்காரனின் ஆண்டுத் திவசம் கழிந்து விட்டது.

www.padippakam.com



இந்த ஒரு வருட காலத்துள் சின்ன நயினார் அருணாசலம்பிள்ளை முற்றும் நிறைவு கொண்ட பெரிய நயினார் ஆகிவிட்டார். வேலுப்பிள்ளை மணியக்காரனின் மகன் என்பதை விட அருணாசலம்பிள்ளை நயினாரின் தகப்பன் வேலுப்பிள்ளை மணியக்காரன் என்ற அளவுக்கு அருணாசலம்பிள்ளை பிரசித்தமாகி விட்டார். உடல் உருவ அமைப்பு, மன அமைப்பு எல்லாவற்றிலும் அவர் உறுதிப்பட்டு விட்டார். சதா சுகபோகங்கள்; சதா சண்டைகள், சண்டித்தனங்கள், அதிகார மிரட்டல்கள், சாணக்கியங்கள் என்ற வகைகளுக்கெல்லாம் அவர் நன்கு முற்றிவிட்டார்.

''ஏனாக்கும்! இனி நீங்கள் கட்டினாத்தான் நல்லதாக்கும்!'' என்று ஒரு நாள் நாகன் கதைகளோடு சேர்த்தாப் போலக் கேட்டான்.

''நாகன், நான் முந்தி ஒருக்காச் சபதம் போட்டனான், கட்டினா அவளைத்தான்; இல்லாட்டிப் பிறகு பாப்பம்!'' என்று வெட்டொன்றாக அருணாசலம் சொல்லிவிட்டார்.

''அப்பிடியெண்டால் எடுத்த சபதத்தை முடிக்கவாக்கும்!'' என்று நாகன் அவரை உற்சாகப்படுத்தினான்.

அதற்குப் பின் நாகனும், அவரும் இரண்டொரு நாள் மந்திர ஆலோசனை நடத்தினர். அந்த மந்திர ஆலோசனையில் மடத்தடி செவிட்டு ஐயரை அனுப்பி பெண் கேட்பதாக முடிவாயிற்று.

செவிட்டு ஐயருக்கும் கோவிய மாப்பாணியனுக்கும் பெரும் சினேகிதமென்றும், கோவிய மாப்பாணியனுக்கும் முதலித் தம்பியரின் மூத்த மருமகன் சேனாதிராசாவுக்கும் சண்டித்தன முறைகளில் ஒட்டு உறவென்றும் நாகன் அறிந்து வைத்திருந்தான்.

அருணாசலத்தார் செவிட்டு ஐயரை வீட்டுக்கழைத்த போது நாகனும் கூட நின்றான். ஐயர் எப்பிடியும்

www.padippakam.com


காரியத்தை முடித்து வைப்பதாக உறுதி கூறிவிட்டுச் சென்றார். ஆனாலும், காரியம் கைகூடவில்லை.

மாப்பாணி சேனாதிராசாவை அணுகியதும், சேனாதிராசா மாமிக்காரி செல்லம்மா நாச்சியாருடன் பேசியதும், செல்லம்மா நாச்சியார் ''உந்தத் தூமைக்குக் குடுக்கிற குமரை ஒரு சாயக்கார வண்ணானுக்குக் கட்டிக் கொடுப்பன்'' என்று சொல்லி அனுப்பியதும் வெளியே வந்து விட்டது.

இதற்கு மேல்......

ஒரு நாள்......

பட்டப் பகலில்......

சிந்தாமணிப் பிள்ளையார் சந்திப்பில்......

அப்போதுதான் அழகம்மா நாச்சியாரைப் பாட சாலைக்குப் போவதற்காக ஏற்றிக்கொண்டு செங்காரி யனின் மணியோசை நாதம் இசைக்க சின்னட்டியன வந்துகொண்டிருந்தான்.

வேலக்கை ஒழுங்கை முகரிக்கு வண்டி வந்தபோது குறுக்கே வந்த இரண்டு வண்டிகள் சின்னட்டியனின் வண்டியை இடைமறித்தன. இரு வண்டிகளிலுமிருந்து குதித்தோடி வந்த பலர் சண வேளைக்குள் சின்னட்டி யனின் வண்டிக்குள் இருந்த அழகம்மாளை அலாக்காகத் தூக்கி எடுத்தனர்.

அழகம்மாள் வீறிட்டுக் கத்தினாள்.

சின்னட்டியன் திகைத்துப் போய்விட்டான்.

இதை அவன் எதிர்பார்க்கவில்லை.

அழகம்மாள் மறு வண்டிக்குள் தூக்கிப் போடப் பட்டாள். ஒரு வண்டி அவளோடு காற்று வேகத்தில் பறந்தது.

மறு வண்டி!

www.padippakam.com



அதற்குள் மூவர் ஏறினர்.

சந்தனக் கழுத்தானைப் பிடித்துக் கொண்டு நாகன் குதித்தேறியபோது?

அவன் கால் ஏற்காலில் இருந்து சறுகிப் போக...

நாகன் அலமலக்காக வீழ்ந்து விட்டான்.

சண வேளைதான்!

தனது வண்டிக்குள் இருந்து கொடுவாக் கத்தியை இழுத்தெடுத்து ஓங்கிக்கொண்டே சின்னட்டியன் வந்து விட்டான்.

உள்ளே தாவி ஏறிய மூவரில் ஒருத்தன் சந்தனக் கழுத்தானின் நாணயக் கயிற்றைச் சின்னட்டியன் கையிலிருந்து இழுத்தெடுத்துக் கொண்டான்.

சந்தனக் கழுத்தான் குதிரைப் பாய்ச்சலில் ஓடியது; பாய்ந்தது.

நாகன் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுவதற்கிடையில்,

சின்னட்டியனின் வீசி வந்த கத்தி!

மின்னல் போல!

அது நாகனின் கழுத்தை வாங்கிவிட்டது!

சத்தமில்லை.

சலனமில்லை.

வெட்டப்பட்ட கழுத்து முனையிலிருந்து சீறித் தாவிய இரத்தம் சின்னட்டியனின் நெஞ்சிலிருந்து இடுப்பு வரை தோய்ந்துவிட்டது.

இரத்தம் தோய்ந்த உடலோடும், ஓங்கிய கத்தியோடும் சந்தனக் கழுத்தான் சதங்கை நாதத்திற்குப் பின்னால் சின்னட்டியன் ஓடினான்.

www.padippakam.com



சந்தனக்கழுத்தானின் சதங்கை நாதவோசை வெகு தூரம் போய்விட்டது.

சற்றுவேளைக்குள் சின்னட்டியன் கத்தியை சாவதான மாகக் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு திரும்பி வந்தான். அவன் தலைமயிர் குலைந்து தொங்கியது.

சற்றுத் தொலைவில் படலைகளுக்குள் அங்குமிங்கு மாகப் பலர் நின்றனர்.

செங்காரியன் வண்டியை இழுத்து வேலிக்கரையோடு மூண்ட வைத்துக்கொண்டு நின்றது.

நாகனின் உடல் துடிப்புகள் முன்னமேயே நின்று போய் விட்டது.

நாகனின் நீண்ட தலைமயிரைச் சுற்றிப் பிடித்து எடுத்தான் சின்னட்டியன்.

தலை கையோடு வந்தது.

எதை நினைத்துக்கொண்டானோ!

இரத்த வெள்ளத்தோடு வெட்டுண்ட பக்கவாட்டில் இடத்துக்கிடம் சரியாகத் தலையைப் பொருத்தினான், போய் விட்டான்.

செல்லம்மா நாச்சியாரினால் வழங்கப்பட்ட நயினார் வீட்டு அதிகார உருத்தைச் சின்னட்டியன் சரியான நேரத்தில் பயன்படுத்தி விட்டான்.

ஃ ஃ ஃ

செல்லம்மா நாச்சியார் அவன் கையில் கொடுத்த அதிகார உருத்துக்கு விசுவாசமாகச் சின்னட்டியனும் நடந்து கொண்டு விட்டான்.

ஃ ஃ ஃ

www.padippakam.com



அருணாசலம்பிள்ளை எதிர்பார்த்துக் காத்திருந்ததைப் போல வண்டிகள் இரண்டும் அழகம்மாளோடு வந்து சேர்ந்து விட்டன.

மயக்கமாகக் கிடந்த அழகம்மாளைத் தானாகவே அழைத்து தூக்கி எடுத்துக்கொண்டு அவர் உள்ளே போய் விட்டார்.

படைகள், பரிவாரங்கள் வெற்றிக் களிப்புடன் அங்குமிங்குமாக ஆடிக்கொண்டு சற்று முன்னதாக நடந்து விட்ட வீரப்பிரதாப நிகழ்ச்சிகளைப் பற்றி பெருமிதத்துடன் பேசத் தொடங்கி விட்டனர். ஒரு பெண்ணை வழிமறித்துப் பலாத்காரமாகத் தூக்கி வந்து விட்டோமே என்பதற்காக அவர்களில் யாரும் அச்சப்படவில்லை.

அருணாசலம்பிள்ளையின் செல்வாக்கை மிஞ்சிக் கொண்டு யாருக்கு என்ன செய்ய முடியும்? தூக்கிவரப் பட்டவள் இனி அந்த வீட்டவள்தான்; அவளை எங்கேயாவது மறைவிடத்திற்குக் கொண்டு போகவேண்டும் என்ற யோசனையைத் தொடக்கத்திலிருந்து இதுவரை யாரும் கூறவில்லை.

நாகனின் வண்டியில் வந்து சேர்ந்தவர்கள் நாகனை பற்றிக்கூட இதுவரை எண்ணவில்லை. அப்போது அது அவர்களுக்குச் சின்ன விஷயம். ஓரிருவர் மனத்துக்குள் நாகனைப் பற்றி எண்ணினராயினும், அவன் எப்படியும் ஓடியாவது வந்து சேர்ந்துவிடுவான் என்ற நினைப்போ என்னவோ அவனைப் பற்றிய பேச்சையே யாரும் எடுக்கவில்லை.

சற்று வேளைக்குள் ஒரு பெண்ணின் கூக்குரல் கிழக்குப் பக்கத்திலிருந்து கேட்டது.

நாகன் பெண்டில் இத்தினி புலம்பிக்கதறிக் கொண்டே ஓடிவந்தாள். நிலத்தில் விழுந்தாள்; புரண்டாள்; கூக்குரல் இட்டாள்.

www.padippakam.com



அருணாசலம்பிள்ளை உள்ளே இருந்து ஓடிவந்தார்.

வெளியே கூடியிருந்தவர்கள் திகைத்துப் போயினர்.

ஏதோ நடக்கக்கூடாதது நடந்து விட்டதாக அவர்கள் புரிந்து கொண்டனர்.

இத்தினியைத் தொடர்ந்து அவர்களின் மூத்தவள் நடுவிலாள் ''ஐயோ, அப்பு, அப்பு'' என்று கதறிக்கொண்டே தாயின் பக்கத்தே விழுந்து புரண்டனர்.

அந்தச் சின்னஞ்சிறுசுகளின் பரிதாபக் கூக்குரல்கள் எல்லோரையும் சணவேளை உருக்கிப்போய் விட்டது.

''இத்தினி, என்னெடி? என்னடியது?'' என்று மட்டும் தான் அருணாசலத்தார் கேட்டார்.

நாகன் கூட்டத்தோடு வராதது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சென்ற முருகேசனை ''எங்கேயடா நாகன்?'' என்று அதட்டினார்.

''நாகன் வண்டிலாலை தவறி விழுந்திட்டானாக்கும். அவன் வந்திடுவான் எண்டு நாங்கள் வந்திட்டமாக்கும்!''

முருகேசன் கூறிய பதிலைக் கேட்டதும்தான் அருணாசலத்தார் திடுக்கிட்டார். ஆனாலும், ''அவன் பிடிபட்டுப் போனான்'' என்ற மட்டில்தான் அவரால் ஊகிக்க முடிந்தது. ஆனால், அப்போது அங்கு வந்துசேர்ந்த நான்கைந்து பேர்கள் சொன்ன தகவல் அவரைத் திடுக்குற வைத்து விட்டது.

''டேய் முருகேசுக் கோவியா, என்ரா நாயே அவனை விட்டிட்டு வந்தனீ?'' என்று அவர் பலமாகக் கத்திக்கொண்டே முருகேசனை நோக்கிப் பாய்ந்தார். அதற்கிடையில் எல்லோரும் அவரைப் பிடித்து நிறுத்தி விட்டனர்.

www.padippakam.com



நாகனின் பெறுமதியை அருணாசலத்தார் ஒருவரால் தான் புரிந்து கொள்ள முடியும். ஏனையோருக்கெல்லாம் நாகன் வெறும் நளக்குடி மகன்தான்! ஆனால், அருணா சலத்தாருக்கோ?

ஃ ஃ ஃ

நாகனின் கட்டைக்கு மேலான மரண விசாரணை தொடங்க மறுநாட் காலைவரை ஆகிவிட்டது.

எரிக்கும் வெய்யிலிலே நாகனின் துண்டிக்கப்பட்ட கட்டை மல்லாக்காக ஒரு நாள் பகல் முழுக்கக் கிடந்தது.

பட்டணத்துப் போலீஸ் நிலையத்திற்கு முறைப்படி விதானையார்தான தகவல் கொடுக்க வேண்டும். முதல் நாள் காரை தீவுக்குப் போயிருந்த விதானையார் குலதுங் கம்பிள்ளை அன்று மாலைதான் வந்து சேர்ந்தார். அவர் வந்து பார்த்தபோது நாகனின் கட்டை இரண்டு கிடுகுகளி னால் மூடப்பட்டிருந்தது. பக்கத்து வீட்டுக்காரரர் கணபதிப்பிள்ளையர் வெய்யில் வேக்காட்டில் வெதும்பும் அக்கட்டையைப் பார்த்து மனம் பொறுக்க மாட்டாமல் தான் தன் வீட்டுக் கிடுகுகள் இரண்டினால் அதை மூடி விட்டிருந்தார்.

பகலோடு வந்து அந்தக் கட்டையின் மேல் புரண்டு கதறி அழுது புலம்பிக் கூத்தாடிய நாகன் மனைவி இத்தி னியை அவளின் சொந்தக்காரரர்கள் இழுத்துச் சென்று விட்டனர்

இத்தினி போகும்போது தெருக்கரை மண்ணை அள்ளி திட்டிக்கொண்டு கூறினாளே ஒரு வார்த்தை!

''இந்த முதலி பெண்டில் தேவடியாள், தன்ரை பள் புருசனைக்கொண்டு வெட்டிப் போட்டிட்டாளே! உந்த வேசை நல்லாயிருப்பாளா?'' என்று திட்டியதன் மூலம் செல்லம்மா நாச்சியார் மேல் ஒரு பெரும் சுமையைச் சுமத்தி விட்டே போனாள்.

www.padippakam.com



இரவு வந்தபோது விதானையார் ஒரு சிமிலி லாம்பைப் பிரேதத்தின் பக்கத்தே வைத்து, நாகனின் உறவினர்கள் இருவரை வரவழைத்துக் காவலாக வைத்து விட்டுப் போய் விட்டார்.

மறுநாள் நடுப்பகல் வரையில்தான் பட்டணத்தி லிருந்து இரு பொலீசார் வந்தனர்.

சாட்சியம் கொடுக்க யாரும் வரவில்லை.

அதற்குப் பின் வீதிக்கரையிலேயே பிரேத பரிசோ தனையும் சிறிய அளவில் ஆகிவிட்டது. நாகனின் கட்டையை அவனின் உறவினர்கள் எடுத்துச் சென்று விட்டனர்.

நாகனின் தென்னங்கூடல் பட்டியில் கூடியிருந்த உற வினர்கள் அவனின் பிரேதத்தை தாவடிச் சுடலைக்குள் கட்டையில் வைத்துச் சுடவேண்டுமென்று குசு, குசு வென்று பேசிக்கொண்டனர்.

''இது வழக்கமில்லா வழக்கமடா தம்பியவை, நயினா ரவை சம்மதிக்காயினம்!'' என்று வயதான ஒரு கிழவன் சொன்னான்.

ஊருக்குப் பெரிய மனிதர் அருணாசலத்தார். அவர் சொல்லுக்கு மாறாக யாருமே போகமாட்டார்கள். அவருக்குப் பெண்பிள்ளை தூக்குவதற்காகப் போன இடத்தில்தான் நாகன் கொல்லப்பட்டான். ஆகையினால் நயினார் கட்டாயம் சம்மதிப்பார் என்ற அடிப்படையில் எல்லோரும் யோசித்தனர். அதைவிடவும் அருணாசலத் தாருக்கும் நாகனுக்கும் இருந்த உறவு நகமும் சதையும் போன்றது என்பதையும் எல்லோரும் தெரிந்து கொண்டி ருந்தனர்.

நாகனின் அடுத்த சகோதரன் உட்பட ஐந்தாறு பேர் கள் இது பற்றிப் பேச அருணாசலம் வீட்டுக்குப் போயிருந்

www.padippakam.com



தனர். அப்போது அங்கே அருணாசலத்தார் இரண்டு பொலிசாருடன் அளவளாவிக் கொண்டிருந்தார்.

''நயினார் நாங்கள் நயினாரோடை பேசவாக்கும்!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே நாகனின் தம்பி செல்லப்பன் தலையை நீட்டினான்.

அருணாசலத்தார் வெளியே வந்தார்.

''என்ன கனபேர் வந்திருக்கிறியள் பொடியள்; கோவிய மாரிமுத்தனெட்டை எல்லாஞ் சொல்லிவிட்டிருக் கிறன். சிலவுகளைப் பற்றி ஒண்டும் யோசியாதையுங்கோ, அவனெட்டைக் கேளுங்கோ நான் சொன்னதெண்டு! பொலிசுக்காறர் வந்திருக்கினம்; சின்னட்டியனைப் பிடிக் கிற அலுவல் பாக்க வேணும், போங்கோ. போய் எல்லாத்தையும் ஒப்பேத்துங்கோ! நாளைக்கு அம்மன் கொடியேறுது, இண்டைக்கே எல்லாத்தையும் முடிச்சுப் போடுங்கோ!'' என்று கூறிக் கொண்டே அருணாசலத்தார் உள்ளே போக முயன்றார்.

''அதுதானாக்கும் ஒரு விஷயம் கதைக்கவந்தனாங் கள்'' என்று வந்தவர்களில் வயதான வயித்தியன் இழுத் தான்.

''அதெல்லாம் எனக்குத்தெரியும் வைத்தியன்! சின்னட் டியனை ரெண்டு நாளைக்கிடையிலை பிடிக்கிற வேலையை நான் பாப்பன். நாகனுக்காக உதைச் செய்யட்டா நான் என்ன மனிசன்!''

''நயினார் அது செய்யுமெண்டு எங்களுக்குத் தெரியு மாக்கும்! எங்கடை பொடியளெல்லாம் சேந்து அண்ணை யின்ரை சவத்தைச் சுடவேணுமெண்டு சொல்றாங்கள். அதுதான்...''

நாகனின் தம்பி இழுத்தாப்போல நோக்கத்தைப் பிரச வித்து விட்டான்.

www.padippakam.com



''என்ன செல்லப்பன், உதெல்லாம் எடுத்தாப்போல உடனை செய்யக் கூடிய காரியமே? நான் தனிய நினைச்சுச் செய்யக் கூடிய வேலையே? அறிவில்லாமல் மோட்டு யோசினை யோசிக்கிறியள்!''

படக்கென்று நயினார் பதில் சொல்லிவிட்டார்.

''நயினார் ஓமெண்டால் மற்றவை மறுக்காயினமாக் கும்!''

சீனியன் நயினாருக்குப் பொடி வைத்துப் பேசினான்.

''சீனியன் நீ விஷயம் தெரிஞ்சனீ! சரி நான் ஓமெண் டிட்டன் எண்டு வைச்சுக் கொள். மற்ற நயினாரவையும் என்ரை சொல்லுக்குக் கட்டுப் பட்டினம் எண்டு வைச்சுக் கொள். ஊருக்கை இருக்கிற கொல்லன், தச்சன், கரை யான், ஏன் கனக்கவேண்டாம் கோவியன் ஓமாமே! உதெல்லாம் பேந்தொரு காரியத்திலை பாப்பம்! இப்ப நாகன்ரை காரியத்தை ஒப்பேத்துங்கோ!''

இப்படிக் கூறிக்கொண்டே அருணாசலத்தார் உள்ளே போய்விட்டார்.

நின்றவர்கள் எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு மௌனமாகவே திரும்பி விட்டனர்.

வரும்போது இடைவழியில் சீனியன் சொன்னான் ''அவர் சொல்லுறதும் சரிபோலைதான் கிடக்கு!'' என்று.

''இஞ்சைபார் சீனியண்ணையின்ரை கதையை! அண்ணையைத் தன்ரை உயிரெண்டு சொன்னவர், இப்பிடிச் சொல்லி எங்களைச் சமாளிக்கப் பாக்கிறார். நீ சரியெண்டு சொல்லுறாய் என்ன?'' என்று செல்லப்பன் சற்றுக் கோபமாகப் பேசினான்.

''தம்பி டேய்! வழக்குக் கணக்கெல்லாம் கிடக்கு. அதை யோசிக்காம இப்பிடிப் பேசிறதே? முதல்லை சின்னட்டியனைத் தூக்குக்கனுப்பிற காரியத்தைப் பாக்க வேணு மெண்டதை யோசிச்செல்லோ கதைக்கவேணும்!''

www.padippakam.com



வைத்தியின் இந்தப் பேச்சோடு மற்றவர்களின் பேச்சுக்கள் நின்று போய்விட்டன.

பொழுதுபடுவதற்கிடையில் நாகனின் கட்டை தாவடிச்சுடலையின் ஒதுக்குப்புறத்தில் புதைக்கப்பட்டு விட்டது.

ஃ ஃ ஃ

அருணாசலத்தாருக்குப் பெண்பிள்ளை தூக்கப் போன இடத்தில்தான் நாகன் கொலை செய்யப் பட்டான்... என்ற செய்திதான் ஊருக்குள்ளே பரவி இருந்ததே தவிர, பொலிஸ் பதிவில் அப்படியாக எந்தவித எழுத்து க்கணக்கும் இல்லை.

முதல் நாளைக்கு முதல் நாள் தனது வண்டியும், மாடும் களவு போய் விட்டதான அருணாசலத்தாரின் முறைப்பாடு மட்டும் விதானையாரின் கொப்பியில் நாகன் சாகடிக்கப்பட்டதற்கு முதல் நாளே புதியப்பட்டிருப்ப தாக பொலிசிலும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

யாரோ இனந்தெரியாதவர்களால் அழகம்மா நாச்சி யார் தூக்கிச் செல்லப்பட்டாள் என்பதும், நாகனைச் சின்னட்டியன் என்பவன் வழிமறித்து வெட்டி வீழ்த்தி விட்டு வண்டியை யாவில் வண்ணாங்குளத்துக்குள் தள்ளி விட்டதாகவும், இரண்டு பகுதிகளா ் குறிப் ுகள் மட்டும் பொலிஸ் கொப்பியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நான்கைந்து நாட்களுக்கிடையில் சின்னட்டியனைப் பொலிசார் தேடிப் பிடித்துவிட்டனர், என்பதான தகவல் ஊருக்குள் பரவியது.

முதலித்தம்பியரோ அன்றி செல்லம்மா நாச்சியாரோ சின்னட்டியனுக்காக பெருமளவு காரியங்களில் இறங்கிய தாக யாரும் சொல்லிக் கொள்ளவில்லை. மகள் அழகம்மாவை ஏற்றிச் சென்றபோது நடந்த அசம்பா

www.padippakam.com



விதத்தில்தான் சின்னட்டியன் நாகனின் கொலையோடு சம்பந்தப்பட்டதாக புகார்கள் ஏதும் முறைப்படி பொலிசில் பதிவாகவுமில்லை.

ஏதோ ஐந்தோ பத்தோ நாட்கள்தான் இவைகள் பற்றிய பேச்சுக்களும் தொட்டதும் விட்டதுமாக இருந்தது. இறுதியில் பேச்சுக்கள் யாவுமே முற்றாக விடுபட்டுப் போயிற்று.

மறியல் வீட்டிலிருந்து ஒருநாள் சின்னட்டியனின் பெண்டில் பெரியகறுப்பிக்கு மறியல் வீட்டுக்குள் சின்னட்டியன் இறந்துபோய்விட்டதாகவும், அவனின் பிரேதத்தை வந்து எடுத்துச் செல்லும்படியும் தகவல் வந்தது.

பெரியகறுப்பி ஆங்கிலத்தில் வந்த தகவலை எடுத்துக் கொண்டு முதலித்தம்பியர் வீட்டுக்கு ஓடினாள். முதலித்தம்பியர்தான் அத்தகவலைப் படித்துச் சொன்னார்.

இரண்டு நாட்களுக்குமுன் தேதியிட்ட அறிவிப்பு அது. கறுப்பி என்பவளைத் தேடி அலைந்துவிட்டு அன்று தான் வந்திருக்கிறது.

ராசாங்க மரியாதையோடு அது புதைக்கப்பட்டிருக்கும் என்பதையும் சேர்த்துத்தான் முதலித்தம்பியர் கூறினார்!

அவ்வளவுதான்!

பெரியகறுப்பியாவது, சின்னட்டியனின் பிரேதத்தைத்தன்னும் பெறுவதாவது!

நாகனினதும் சின்னட்டியனதும் உயிர்கள் வெறும் அற்பமானவை!

ஃ ஃ ஃ

www.padippakam.com



அழகம்மா நாச்சியாரைச் சிறை கொண்ட நாளைக் கணக்கிடும் போதுதான் ஒன்பதுமாதம் என்ற கணக்குச் சரியானதாகும். ஆனால், அருணாசலம் பிள்ளையின் சரியான கணக்குப்படி பார்த்தால் இந்த ஒன்பதிலும் பத்து நாட்கள் தள்ளுபடியானவை.

ஃ ஃ ஃ

தனது கணக்குப்படி கழிவு பத்து நாட்களையும் கழித்துப் பார்த்துக்கொண்ட அருணாசலம் நயினாருக்கு மருத்துவிச்சிக் கிழவியின் வாக்குறுதியில் நம்பிக்கை இருக்கவில்லை.

துடக்குக் கழிவு வந்துபோக அவருக்கு நாட்களெல் லாம் யுகங்களாக இருந்தன.

அந்த முப்பத்தி ஒரு யுகங்களும் கழிந்துபோயின. மருத்துவிச்சிக் கிழவியால் கற்பிக்கப்பட்ட மாற்றங்கள் எதுவும் பச்சைக் குழந்தை சண்முகம் பிள்ளைக்கு ஏற்படவில்லை.

தன்மான உணர்ச்சி அருணாசலம் பிள்ளையைக் குத்திக் குதறிக் கொண்டிருந்தது.

படை பட்டாளம் பரிவாரங்கள், எடுபிடிகள் எதை யுமே தலைநிமிர்ந்து பார்க்கும் தெம்பினை அவர் இழந்து விட்டார். ஒப்புக்குத் தன்னும் மனைவி அழகம்மா நாச்சியாரைப் பார்க்க அவர் கண்கள் மறுத்தன.

ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் அழகம்மா பிஞ்சிலே பழுத்துவிட்ட பழமாக இருக்கலாம் என்ற சந்தேகம். ஆனால், அருணாசலம் நயினாருக்கோ அவள் எச்சில் படுத்தப்பட்ட அசிங்கமான பண்டம்தான் என்ற ஐயந் திரிபற்ற முடிவு!

அவர் தலை வெளியில் தெரிவதில்லை!

www.padippakam.com



காலையிலிருந்து மாலைவரை குடித்துக் குடித்து வீட்டுக்குள் சுருண்டு கொள்வார்.

யாரும் அவரைப் பார்க்க முடிவதில்லை!

விடிவதும் இருட்டுவதும் அவருக்குத் தெரிவதில்லை!

மனிதக் குரல்கள் அவர் காதுகளுக்குக் கேட்ப தில்லை. ஒருநாள் அவரைக் காணவில்லை!

எங்கே போனார் என்பது யாருக்கும் தெரியாது.

அவரின் தாயானவள் வெதும்பி, வெதும்பிச் செத்துக் கொண்டிருந்தாள்.

அழகம்மா நாச்சியார் எப்படியிருக்கிறாள் என்பது மருத்துவிச்சிக் கிழவிக்கு மட்டுந்தான் வெளிச்சம்!

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று மாதங்கள் கழிந்து ஆறாவதுக்கும் வந்துவிட்டது.

''ஆற்றிலோ குளத்திலோ அவர் தன் உயிரை மாய்த் திருக்கவேண்டும்'' என்று அபிப்பிராயம் இன்னொரு பக்கமாகவும், ''மாமன் முதலித்தம்பி நயினார் அவனை எப்படியோ தீர்த்துக் கட்டிவிட்டார்'' என்ற அபிப் பிராயம் இன்னொரு பக்கமாகவுந்தான் ஊருக்குள் இருந்தன. ஆனால், மனைவியானவளுக்கு அவர் உயிருக்கு எதுவும் நடந்து விடவில்லை என்பது தெளி வாகத் தெரிந்தது. ஏனெனில், அவர் காணாமல் போன போது வீட்டுக்குள் இருந்த தங்க நகைகளும், பணத்தில் பெரும் பகுதியும் இல்லாமல் போயிருந்தன. இதைப் பற்றி அவள் மூச்சும் விடவில்லை. அவரின் தாய்க்காரி தான் அவர் போன சில நாட்களில் செத்துப் போய் விட்டாளே! வீட்டு ரகசியத்தைச் சொல்ல வேறு யார் இருக்கிறார்கள்?

ஃ ஃ ஃ



படிப்பகம்

www.padippakam.com



சண்முகம்பிள்ளைக்கு வயது இரண்டாகி இருந்த போது ஒருநாள் அழகம்மா நாச்சியாரை குலதுங்கம் விதானையார் பார்க்க வந்தார்.

அவர் ஒரு கடிதத்தை அவளிடம் படிக்கக் கொடுத் திருந்தார். சிங்கப்பூரிலிருந்து அவரின் நண்பன் ஒருவன் அக்கடிதத்தை எழுதியிருந்தான். ஆங்கிலத்தில் எழுதி யிருந்தான்.

அழகம்மா அதைப் படித்தாள்.

அருணாசலம்பிள்ளை சிங்கப்பூரில் இருப்பதாகவும், யாழ்ப்பாணத்தில் தனது மனைவி பிள்ளை வயிற்றோடு தூக்குப் போட்டுச் செத்துவிட்டபின் இருந்த சொத்துக் களைக் கொண்டுவந்து அங்கே ஒரு வர்த்தக முதலீடு செய்திருப்பதாகவும், அங்கே ஒரு மலாய்க்காரியை வைத் துக் கொண்டிருப்பதாகவும், விரைவில் முறைப்படி கலியாணம் செய்ய யோசித்திருப்பதாகவும் அக்கடிதத் தில் அவன் எழுதியிருந்தான்.

அழகம்மா நாச்சியார் அமைதியாக அதைப் படித்தார்.

அவளுக்கு மாறுபட்ட எந்த உணர்ச்சியும் வரவில்லை.

அவள் நிலையைப்பார்த்து விதானையார் ஆச்சரியப் படவில்லை.

அவள் சிறையெடுக்கப்பட்டது, நாகனின் கழுத்துச் சீவப்பட்டது, சின்னட்டியன் மறியற்சாலையில் கொல்லப் பட்டது எல்லாந்தான் அவருக்குத் தெரியுமே! அத்தோடு அழகம்மாள் ஒன்பது மாதத்தில் பிரசவித்துவிட்டது தெரிந்ததாயினும் அதற்கான காரண காரியங்களைத் தெரிந்து கொள்வதற்கான எந்தக் கண்டுபிடிப்பையும் தவிர!

சின்ன வயசிலேயே இப்படி ஆகிவிட்ட அழகம்மாளை நினைத்தபோது அவருக்கு தாங்கமுடியாத கவலை வந்து

www.padippakam.com



விட்டதாகச் சொல்லமுடியாது. ஆயினும், அவள் மாமனார் வேலுப்பிள்ளை மணியக்காரனின் குடும்பத்தில் இப்படி ஒரு விழுக்காடான நிலைக்கு வந்து விட்டதை எண்ணியபோதுதான் அவர் நெஞ்சுக்கு வருத்தமாக இருந்தது.

அழகம்மாள் தன் கணவன் நடந்து கொண்ட விதத்திற்காக ஆத்திரப் பட்டிருந்தால்- அல்லது தனக்கு இப்படி ஒரு நிலை வந்துவிட்டது என்று ஏங்கி விம்மியிருந்தால் கூட நாலு வார்த்தைகள் கூறி தேற்றி, அனுதாபத்தைக் காட்டிக்கொண்டு செத்துப்போன மணியக்காரனுக்கு விசுவாசம் காட்டியிருப்பார். ஆனால், அழகம்மாதான் அப்படி எதையும் செய்து கொள்ளவில்லையே!

சற்று வேளைக்குப் பின் விதானையார் புறப்பட்டு விட்டார்.

திருக்கல் வண்டியை வழக்கப்படி அவராகத்தான் ஓட்டி வந்தார். இது ஊரில் பெரிய மனிதர்களின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதல்லவாயினும் தனது காரியங்களுக்குத் தானாகவே அவர் வண்டி ஓட்டுவதைச் சபதமாக ஏற்றுக் கொண்டவர். இந்த விஷயத்தில் மட்டுமல்ல எந்த விஷயத்திலுமே அவர் அப்படித்தான். மனதுக்குள் ஒன்றை முடிவு செய்து விட்டால் அது முடிவானதுதான். விதானையார் உத்தியோகம் கிடைத்த இந்தக் குறுகிய காலத்தில் இப்படி ஒரு பிடிவாதம் அவருக்கு வந்தது ஆச்சரியமே!

அருணாசலம்பிள்ளை காணாமல் போய்விட்ட இந்த இரண்டு வருட இடைவெளியில் ஓரிரு தடவைகள்தான் அவர் இங்கு வந்து போனார். அந்தத் தடவைகளிலெல்லாம் அழகம்மாள் அவருடன் அதிகம் முகம் கொடுத்துப் பேசவில்லை. அதற்கு அவளின் தந்தையான முதலித் தம்பியர் குடும்பத்துடன் அவர் தொடர்ந்து வைத்துக் கொண்டு வந்த பகைதான் காரணம் என்று கூடக் கொள்ளலாம்.

www.padippakam.com



குலதுங்கம் விதானையாருக்கு எது சரியென்று படுகிறதோ அது முதலித்தம்பியருக்கு மட்டுமல்ல முதலித்தம்பியரின் வழியிலுள்ள உருத்தினர் சகலருக்குமே பிழையானதாகத்தான் இருக்கும்.

முதலித்தம்பியரும், முதலித்தம்பியர் குடும்பத்திற்கு யார் யார், எதிரிகளோ அவர்களெல்லாருமே விதானையாருக்கு வேண்டியவர்களாகி விடுவர்.

வெறும் குலதுங்கத்திற்கு விதானை நியமிப்புக் கிடைப்பதற்காக கூட்டத்திலிருந்து முளைத்த வினைதான், மாவடி மற்றாங்கிறில் செல்லத்துரையரின் விவகாரத்தைத் தொட்டு, சேனாதிராசாவின் மரணம்வரை வளர்ந்து மூளாய்க் கிறிஸ்தவ கோவில் உதயம் வரை ஓடி கடைசியாக நாகனின் கழுத்து வெட்டில் தொட்டு சின்னட்டியனின் மறியல்சாலை மரணம் வரை வியாபித்து விளைந்ததென்று கூறலாம். இவைகளில் கடைசிச் சம்பவத்தைத் தவிர ஏனையவைகளில் விதானையாராக வந்த சட்டப்பூர்வமான இக்கட்டுகளில் நின்று அவரை காப்பாற்றி வைத்தவர் வேலுப்பிள்ளை மணியக்காரன்தான்.

அந்த வேலுப்பிள்ளை மணியக்காரனுக்காக விதானையார் எதை வேண்டுமானாலும் செய்யச் சித்தமாக இருந்தார். ஆனால், மணியக்காரனின் வீட்டுக்குள் இருப்பவரோ முதலித்தம்பியர் பெற்றெடுத்த மகள்!

விதானையாரின் திருக்கல் தன்பாட்டுக்கு ஆடி அசைந்து போய்க் கொண்டிருந்தது.

இது சண்முகம்பிள்ளை பிறந்து விட்ட பெருங்கதை. தனது உதயத்தில் சிறு சுருக்கத்தைத் தன்னும் சண்முகம்பிள்ளை மனதோடு வைத்திருக்கவில்லை. பிறந்த வீட்டுக்குள் தன்னை ஓரிரு தடவைகள் அருவருப்போடு பார்த்துக் கொண்ட அந்தத் தந்தையானவரை அறிவு வந்தபோது நால்சார் வீட்டில் நடக்கூடத்துள் தொங்கிய இரண்

www.padippakam.com



டொரு வெள்ளைக்காரர்களுடன் சேர்ந்தெடுத்த படங்களில் மட்டுந்தான் தாயானவள் அடையாளங் காட்டினாள். அவ்வளவுதான். சாகுந்தறுவாயில் தனது சிங்கப்பூர் மனைவியுடன் அந்த நால்சார் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோதுங்கூட தந்தையை அவர் உயிருடன் கண்டதில்லை. மூன்றுகால் பந்தலில் வைத்து அரப்பெண்ணெய் வைத்தபோதும் நடுக்கூடத்தில் கிடத்தி வாய்க்கரிசி போட்டபோதும், சுடலைக்குள் வாய்க்கரிசி போட்ட. போதுப்தான் கண்டார். அவ்வளவுதான்.

படிப்பகம்

www.padippakam.com

# 3

முப்பதே முப்பது நாட்களுக்கிடையில் அந்த மாந்தோப்பு நால்சார் வீடு புதுமையாக்கப்பட்டு விட்டது.

கப்பல்கார் விடுவதற்கு ஒரு கராஜ்.

காலைக்கடன்களை முடிப்பதற்கு நவீனமான ஒரு மலசல கூடம்.

எட்டு—நான்கு அளவில் பளிங்குத் தொட்டியுடன் கூடிய ஒரு குளியல் அறை.

இராஜபாளையம் கோவிந்தனுக்காக மாமரக் குளு குளுப்புக்குள் ஒரு சின்னஞ்சிறிய வீடு.

தன்னந்தனியாக லொறி ஒன்றில் கொண்டு வரப்பட்ட பெருஞ்சாதிப் கேப்பைமாடும் கன்றுக் குட்டியும் விசாலமாக உலாவி வர ஒரு கொட்டகை.

இவைகள் புதிதாகக் கட்டப்பட்டும் முன்பு சுண்ணாம்புக் கலவையினால் கட்டப்பட்டதனால் அரித்தும் உளுத்தும் போயிருந்த பகுதிகள் தட்டி எடுக்கப்பட்டு சாந்துக்கலவை பூசப்பட்டு அதற்கு மேல் வண்ண நிறக் கலவைகள்;

படிப்பகம்

www.padippakam.com



நால்சார் வீட்டின் நடுமுற்றம் சீனத்துக் கோபுரம் போல வரவேற்பு மண்டப மான்னக் கட்டும் பார்ப்போர் அதிசயிக்கும் வண்ணம் நால்சார் வீடு புதுமை பெற்று விட்டது.

சாமி அறையின் திருத்த வேலைகளை ஐயா, அம்மா வின் மனம் போலவே செய்ய விட்டுவிட்டார்.

சாமி அறையைப் புதிதாக அமைப்பதற்கு அம்மாள் செவிட்டு ஐயனின் மகனை அழைத்து ஆலோசித்தாள். அம்மாவின் சாதகத்தை துருவி ஆராய்ந்த சின்ன ஐயர் ஒரு புதினத்தையும் சொல்லி, சாமி அறையை தென்புறத் தொங்கலுக்கு மாற்றும்படியும் கூறிவிட்டார். சின்ன ஐயர் சொன்ன புதினத்தை வாங்கிக்கொண்ட அம்மா ளுக்கு புத்திரபாக்கிய நம்பிக்கை வேர்விடத் தொடங்கி விட்டது. இதனால், ஐயரின் ஆலோசனைப்படி ஆரம்ப கால சாமியறையை மாற்றி விட்டு தென்புறத்தொங்கல் அறையை அவள் மனம்வைத்தே சிறப்பாக்கி விட்டாள்.

கூலிக்குடி நன்னியனின் மனைவி கண்ணி நாற்பத் தொன்பதாவது வயதில் பதின்மூன்றாவது பிள்ளை வயிற் றோடு உலாவி வருவதைப் பார்த்து அவளைவிடத் தாம் இரண்டு வயது இளையவள் என்று கணக்கிட்டுக் கணக் கிட்டுக்கொண்டே அம்மாள் சாமி அறையை அலங்கார மாகக் கட்டி முடித்துவிட்டாள். போதாக்குறைக்கு உத்தி யோகத்திலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டபோது நடந்த சேவை நலம் பாராட்டு விழாவில் ஐயாவுக்கு மிகவும் நண்பனான கீழ் அதிகாரி ஒருவன் "ஐயா அவர்களின் சேவையைத் தொடர்ந்து இந்த நாட்டிற்குச் செய்துவர ஒரு வழித்தோன்றல் இல்லையே என்று நாம் இன்னும் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. காலம் இன்னும் கடந்துவிடவில்லை.

அந்தக் காலத்தில் ஐம்பது வயது வரும்போதுதான் கல்யாண வயதுவந்துவிட்டது என்று சொல்வார்களாம்

www.padippakam.com



உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்கொள்வோம். உலகிற்கெல்லாம் நாயகனாக விளங்கும் யேசு பிறப்பெடுத்த போது அவரின் தந்தையின் வயதைக்கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். ஐயா பிறந்த மண்ணை மிதிக்கப் போகிறார். அங்கே வாழப்போகிறார். புதிய சூழ்நிலையில் அந்தப் புண்ணிய பூமி அந்தப் பாக்கியத்தை அவருக்கு அளிக்குமென்று நாம் நம்பலாம்.'' இப்படிப் பேசியும் தீர்த்திருந்தானே!

மாந்தோப்பு நால்சார் வீடு புதிதாகக் கட்டப்பட்டதோடு ஐயாவின் நாளந்த நிகழ்ச்சிகள் இப்படித்தான் அமைந்தன.

அதிகாலையுடன் பள்ளி எழுச்சி.

கையிலே இரட்டைக்குழல் துப்பாக்கியை தாங்கிக் கொண்டு ராஜபாளையம் கோவிந்தன் முன்செல்ல மாந்தோப்பு எல்லையைத் தாண்டி பரவைக் குளத்தையும் தாண்டுதல்.

ஒரே ஒரு தோட்டாவையேனும் செலவு செய்து குறைந்த பட்சம் குருட்டுக் கொக்கைத்தானும் வேட்டையாடுதல்.

பரவைக் குளத்துக்கப்பால் உள்ள ஈச்சங்காட்டுக்குள் காலைக் கடனை முடித்துக்கொள்ளல்.

மாந்தோப்பின் எல்லைவரை சுற்றிவரும் இராஜபாளையம் கோவிந்தனைப் பின்தொடர்ந்து எல்லைக் காவல் செய்து கோவிந்தனை ஏவி பற்றைக்குள் உடும்பு வேட்டை பார்த்தல்; அகப்படும் வேட்டைப் பொருட்களை அம்மாளுக்கு முன்னால் விட்டெறிதல்.

கோவிந்தனைக் குளிப்பாட்டுதல்.

பின்வளவு ஆண்பனை !சீவல்கார பைரவனைக் கொண்டு சேர்வையாக்கிய ஒரு பனைக்கள்ளைப் பச்சைப் பிளாவில் இருமுறை நிறைத்துச் சுவைத்து அருந்துதல்.

www.padippakam.com



கோவிந்தனுக்குக் காலை உணவு ஊட்டல். அவனுக்கான வீட்டுக்குள் சிறைவைத்தல்.

ஸ்நானம் செய்தல்.

காலை உணவு உட்கொள்ளல்.

தினப்பத்திரிகை படித்தல்.

மறுபடியும் கோவிந்தனைச் சிறைமீட்டல்.

கோவிந்தன் கப்பல்காரில் பாய்ந்தேற காரை எடுத்துக் கொண்டு சந்தைவரை போய்வருதல்; வந்ததும் சாய்மனையில் வீழ்ந்து பொய்யுறக்கம் செய்தல்.

வெளி நாட்டுக் குடி வகைகளில் அளவாக எடுத்தல்.

மறுபடியும் கோவிந்தனுக்கு உணவூட்டுதல்; சிறை வைத்தல்.

மதிய போஜனம் அருந்துதல்.

பகல் பள்ளி கொள்ளல்.

சரியாக நான்கு மணிக்கு எழுதல்.

தயாராகக் காத்திருக்கும் தேனீர் அருந்துதல்.

வெள்ளிப்பூண் போட்ட சிங்கபபூர் உலாத்தடியை சுழற்றிக்கொண்டு உலாப் போதல்.

பென்சன்காரர்கள் கூடும் அம்மன் கோவில் வெளி மண்டப மணல்பரப்பில் வேண்டியவர்களுடன் பேசுதல்— உறவாடுதல்—அரசியல் பேசுதல்.

சுமார் ஆறரைமணிவரை தம் வயதொத்தவர்கள் சிலருடன் வீடு திரும்புதல்.

வருபவர்களை உட்கார வைத்து உபசரித்து கடுதாசிக் கூட்டம் போடுதல். இடையே ஒரு தடவை வெளி நாட்டானை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

ஒன்பது மணி அடித்ததும் அவர்களை வழியனுப்புதல், அவனைச் சிறை மீட்டுச் சுதந்திரமளித்தல்.

படிப்பகம்

www.padippakam.com



தன்னளவுக்கு மறுபடியும் மதுவருந்துதல்.

மட்டான இராப்போஜனம் உட்கொள்ளல்.

படுக்கைக்குப் போதல்.

இல்லற நினைவுகளுக்கு உடம்பு சரிப்பட்டுவரின் நினைத்தல்—செயல்படுதல்—மெய்மறந்து தூங்குதல்.

மறுபடியும் அதிகாலையுடன் பள்ளி எழுச்சி முறை வந்துவிடும்.

வாரத்தில் ஒரே ஒரு நாள்—வெள்ளிக் கிழமை இந்த நிகழ்ச்சிகளில் குடும்ப சமேதரரான ஆலய வழிபாடு ஒன்று சேர்ந்துகொள்ளும். பதிலுக்கு வழமையான மச்சமாமிசம் தவிர்க்கப்படும். அவ்வளவுதான்.

மனைவி சீதேவி அம்மாளுடன் அவர் நாளொன்றுக்குப் பத்து வார்த்தைகள் கூடப் பேசுகிறாரோ இல்லையோ என்பது யாருக்குமே தெரியாது. ஆனால் இராஜ பாளையம் கோவிந்தனுடன் அவர் நிறையப் பேசிக்கொள்வதுதான் எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததாகும்.

இராஜபாளையம் இனத்தைச் சேர்ந்த நாய்களை நாடெங்கும் கணக்கெடுத்தால் அவைகள் சில நூறுக்குள் தான் அடங்கும். அதிலும் சுத்தமாக வேறுக் கலப்பற்றவைகளாகத் தேர்ந்தெடுப்பின் அவைகள் சில பத்துகளுக்குத் தான் அடங்கும். நாய் வளர்ப்புக்காரர்களிடமிருந்து இந்த இன நாய்களுக்கு பல இலக்கணங்கள் சொல்லப்படுகின்றன. இந்த நாய் இனத்தைப் பற்றிச் சண்முகம் பிள்ளையிடம் விசாரித்தால் அவர் மணிக்கணக்காகவே அது பற்றி விளக்கிக்கொண்டே போவார்.

''ஜமுனைப்பாரி'' என்ற ஆட்டின் இனத்திற்கு அதன் மாவெள்ளை நிறமும், உயரக்கழுத்தும், நீண்ட அகன்ற

www.padippakam.com



செவிகளும், அகன்ற கண்களும், இருப்பதைப் போன்று இந்த இராஜபாளையம் நாய் இனத்திற்கும் குறிப்பான இலக்கணங்கள் பல உண்டு. அதன் கருவெள்ளை நிறத்தில் செம்புள்ளிகள் ஏற்படுதல் ஒன்றே அதன் அன்னையான வள் சோரம்போய்விட்டாள் என்றும், கருநீலப் புள்ளிகள், அல்லது ஆரங்கள் ஏற்பட்டால் தந்தைவழிச் சோரம் என்றும் கணக்கெடுத்துவிடலாம். பெண்கள் சொண்டு களுக்குச் சாயம் தீட்டும் விதத்தில் அகன்று தடித்துக் கீழிறங்கிய கீழ் உதட்டுக்கறுப்பும், உச்சந்தலைவரை உயர்ந்து நடுப்பகுதியிலிருந்து முளைத்துக் கீழ் நோக்கித் தொங்கிநிற்கும் காதுச் சோணைகளும், நீண்டு உயர்ந்து நரம்புகள் புடைத்த கழுத்தும், தோலோடு படிந்து பட்டுப் போலிருக்கும் ரோமமும், நீர் தேங்கிப்போய் நிற்பது போன்றிருக்கும் அகன்ற கண்களும், நீண்டு நிலமட்டத் தைத் தொட்டுநிற்கும் வாலும், குரங்கு உடல் அமைப்பும், ஒட்டியவயிற்றுக்கு மிஞ்சிய தலை அமைப்பும், மிகத்தடித்த குரலும், மூன்றடிக்குக் குறையாத உயரமும், மூன்றரை யடிக்குக் குறையாத நீளமும் இத்தியாதி இலட்சணங் களுடன் கலப்பற்ற கருவெள்ளை நிறமும் இருந்துவிட்டால் அதுவே சுத்தமான இராஜபாளையம். மேலும் சண்முகம் பிள்ளை பேசிக்கொண்டே போவார்.

இந்த இராஜபாளையம் நாயின் குணங்களைப்பற்றி நாய் வளர்ப்பு அனுபவமுள்ளவர்களும் வர்ணிக்கின்றனர்.

"இது வலுச்சண்டைக்குப் போவதில்லை. தனக்கு எளியாரிடம், பெலங்குறைந்தவர்களிடம் மோதுவதில்லை. கண்டபடிக்கெல்லாம் உடல் வியவஸ்தைகளுக்கு ஆட்படுவ தில்லை இரண்டு நாய்கள் சண்டை செய்தால் இளைத்த நாய் பக்கமே இது சேர்ந்து கொள்ளும். அனாவசியமாக யாரிடமும் குழைந்து கொள்வதில்லை. யாரிடமாவது தனியான அதிவிசுவாசம் வைப்பதில்லை."

www.padippakam.com



இந்த இராஜபாளையம் கோவிந்தன் இரண்டாண்டு களுக்கு முன் அவர் மலை நாட்டில் கடைசியாக வேலை பார்த்த காலத்தில் இந்திய வம்சாவழித் தோட்டத்துரை ஒருவர் சண்முகம்பிள்ளைக்கு அன்பளிப்புச் செய்திருந் தார். அதற்குக் 'கோவிந்தன்' என்ற பெயர் சூட்டியிருந் தார். தமிழ்ப் பாஷையிலேயே பழக்கியுமிருந்தார்.

www.padippakam.com

# 4

சண்முகம்பிள்ளை ஊருக்கு வந்து சேர்ந்து விட்டதிலிருந்து ஊரின் நடைமுறைகள் யாவையும் புதிது, புதிதாகவே கற்கவேண்டியிருந்தது. நீண்ட முப்பது ஆண்டுகாலமாகத் தொடர்ச்சியாக நாட்டின் தென்புறக் கிழக்குப்புறங்களிலேயே காலத்தைக் கழித்துவிட்ட அவருக்கு ஊரைப்பற்றிய பழக்கவழக்கங்கள் யாவும் விடுபட்டுப் போய்விட்டன. அவர் விரும்பியிருந்தால் ஊரிலேயே அதிகார பதவி ஒன்றில் தொடர்ந்து இருந்திருக்கலாம். ஆனால், அவருக்கு அந்த விருப்பம் வரவில்லை. இதற்கான காரணங்கள் பல. அவைகளில் ஒன்று மிகவும் பிரதானமாகும். சின்ன வயசிலிருந்து செவிப்புலனுக்கூடாகப் புகுந்து மனதோடு ஒட்டிப் போய்விட்ட அந்த அசிங்கம் என்னதான் உயர் பதவியை வகித்த போதும் விட்டுப் போய்விட்டதாக இல்லை. இப்போதோ அந்த அசிங்கம் பதவி ஓய்வுடன் சேர்ந்தாற்போல் ஓய்ந்து போயும் விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



தொடர்பற்றுப் போய்விட்ட சொத்துச்சுகங்களை ஆராய்ந்து பிடித்து அவைகளைத் தன் ஆதிக்கத்திற்குட் படுத்த அவர் பலரை ஆலோசிக்க வேண்டியதாயிற்று.

அவருக்கு எட்டாவது வயது நடந்து கொண்டிருந்த போது தாயான அழகம்மா நாச்சியார் செத்துப் போனாள். அந்தவேளை கொழும்புத் துறைமுகத்தில் பெரும்பதவி வகித்த இவரின் தூரத்து உறவுக்காரர் ஒருவர் இவரைக் கொழும்புக்கே எடுத்துச் சென்றுவிட்டார். அங்கிருந்துதான் சண்முகம்பிள்ளை படித்தார். உத்தியோகம் பெற்றார். அத்தோடு கொழும்பு உறவினர் தனது சொந்தத்திற்குள் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சொத்துச் சுதந்திரம் அதிகமற்ற சீதேவி அம்மாளைக் கல்யாணம் செய்தும் வைத்துவிட்டார். இதனால் பிறந்த மண்ணாகிய சுதுமலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டே இருந்தது.

சண்முகம்பிள்ளைக்குத் தான் ஊரில் இருந்த எட்டாவது வயதுவரை அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்த குலதுங்கம் விதானையாரின் நினைவு வந்துவிட்டது. தனது பேரன் மணியக்காரனுக்குச் சொந்தமான நிலபுலங்களுக்கான உறுதிகள் கையில் இருந்தன. ஆயினும், அவைகளுக்கான எல்லைகள் குறிப்புகள் எதையுமே கண்டடைய முடியவில்லை. எனவே, எதற்கும் குலதுங்கம் விதானையாரை இவர் சந்திக்க வேண்டியதாயிற்று.

குலதுங்கம் விதானையாரிடம் இவர் சென்றிருந்த போது முற்றத்துப் பலா மர நிழலில் வெதும்பி, வெளிறிய நீண்ட உருவம் சாய்மனையில் படுத்து ஆஸ்மா நோயுடன் போராடிக்கொண்டிருந்தது. அந்த உருவத்தின் நெற்றிப் பள்ளத்தைப் பார்த்தவுடன் சண்முகம்பிள்ளை அவரை இனங்கண்டு கொண்டார்.

www.padippakam.com



சண்முகம்பிள்ளையைக் கண்டதும் அந்த உருவம் சற்று நிமிர்ந்து பார்த்து விடுவதற்கிடையில் பலமான இழுப்பு வந்துவிட்டது.

இழுப்புச் சற்று ஓய்ந்துபோக நிமிடங்கள் பல ஆகி விட்டன.

சண்முகம் பிள்ளைக்குச் சகிக்கவில்லை. அவர் அந்தக் கிழ மனிதனுக்காக மிகவும் அனுதாபப்பட்டார்.

சற்று வேளைக்குள் உள்ளே இருந்து ஒரு கிழவி வந்தாள். அவள் ஆறுமாத இருப்பில் தோல்சுருங்கிய அம்பலவி மாம்பழம் போலச் சூம்பிப் போயிருந்தாள். ஆனாலும் அவள் மிகப் புனிதமாக இருந்தாள். வெற்றிலைச் சாயத்தால் அவள் சொண்டுகள் சிவந்து போயிருந்தன. சின்னவயதில் அவள் மிகவும் அழகியாக இருந்திருக்க வேண்டும்.

தாவணிச் சேலையால் அவள் உடம்பைப் போர்த்திருந்தாள்.

''ஆர்மோனை உதிலை நிக்கிறது? ஐயாவெட்டையே வந்தனீர்? எப்பன் பொறும்! நாசமாப் போன மப்பு மந்தாரம் வந்து மனிசனை கொல்லுது. மனிசன் கொஞ்சம் ஆறட்டுக்கு' என்று கூறிவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

சண்முகம்பிள்ளைக்கு மனது ஒருவிதமாக இருந்தது. அந்த வயோதிகப் பெண் தன்னை உபசரிக்காததின் மூலம் தன்னை அவமானப்படுத்திவிட்டதான உணர்வு தான் அப்படி இருந்தது. ஆனாலும் அது அவருக்கு வெறுப்பைத் தரவில்லை.

விதானையார் குலதுங்கம்பிள்ளை இளைத்துக் களைத்துச் சற்று வேளை அமைதிக்குப்பின் கண்களைத் திறந்து சண்முகம்பிள்ளையை நோக்கினார். சண்முகம்

www.padippakam.com



பிள்ளையை அவர் அடையாளம் கண்டுகொள்ள முயன்று பார்த்தார். பின்பு அவர் பேசத்தொடங்கி விட்டார்,

''நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்? ஏன் வந்தீர்?'' என்ற வார்த்தைகளை ஆங்கிலத்தில் பேசினார். பொக்கு வாயால் அந்தச் சொற்களை அறுத்து உறுத்து பேசுவதற்கு என்னதான் அவர் முயன்றும் அது சரியாக அமையவில்லை.

சண்முகம்பிள்ளைக்கு அவர் பேசியது புரியக்கூடியதாக இருந்தது. அவர் தன்னை ஆங்கிலத்திலேயே அறிமுகப்படுத்திக் கொண்டார். தனது அப்பனான அருணாசலம் பிள்ளையை அறிமுகப் படுத்துவதற்குப் பதில் பேரனான மணியக்காரனையே தொட்டு அறிமுகப் படுத்திக் கொண்டார்.

பேரன் வேலுப்பிள்ளை மணியக்காரனின் பேரைச் சொன்னவுடனேயே குலதுங்கம் விதானையார் சாய் மனையிலிருந்து எழுந்து சண்முகம் பிள்ளைக்கு மரியாதை செய்வதற்காக முயன்று முயன்று பார்த்தார். அது அவருக்கு முடியவில்லை. நிலைமையை உணர்ந்து கொண்ட சண்முகம் பிள்ளைக்கு உள்ளமெல்லாம் குளிர்ந்தது. மெதுவாக விதானையாருக்குப் பக்கமாக நகர்ந்து அவரின் அவதியைத் தணித்துவிட அவர் முற்பட்டபோது விதானையார் எழுந்தே விட்டார். சுருங்கிப் போன சிவந்த உடலின் நரம்புகள் நீண்டு புடைக்க எழுந்த அவர், ''எடி அப்பா, இஞ்சை எடுத்துவா கதிரையை'' என்று மட்டுந்தான் பேசினார். இதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. நிற்கவும் முடியவில்லை. நடுக்கமாக இருந்தது.

சண்முகம்பிள்ளை உரிமையோடு அவரை அணைத்து ஈச்சாரில் சரிய வைத்துவிட்டார்.

சுளகு போன்று பிரம்பினால் நெய்தெடுக்கப்பட்ட இலேசான கதிரை ஒன்றினை மெதுவாகக் தூக்கி வந்து

www.padippakam.com



சண்முகம்பிள்ளைக்குப் பக்கத்தேபோட்டுவிட்டு விதானை யாரின் மனைவியானவள் முந்தாணையை சற்று சரித்து உடம்பை மூடிக் கொண்டே உள்ளே போய்விட்டாள்

சண்முகம் பிள்ளைக்கு உடனடியாக ஒன்றும் பேச வரவில்லை. அவர் பேசாமலே கதிரையில் இருந்தார்.

''நீர் பென்சனிலை வந்திருக்கிறீர் என்று கேள்விப் பட்டேன். என்னாலை உம்மை வந்து பார்க்க முடிய வில்லை. என் காலம் போய்விட்டது. வீட்டைவிட்டு வெளியிலை வரமுடியவில்லை. உம்முடைய தந்தையின் கிருத்தியத்துக்கு வந்தபோதுதான் ஒருக்காப் பாத்தன். அதுவும் பத்து வருஷத்நுக்குமேல் இருக்கும். சுகமெல் லாம் எப்படி?'' என்று விதானையார் பேசிக்கொண்டே போனார். இப்போது அவரின் ஆங்கிலப் பேச்சில் நிதானம் இருந்தது.

சண்முகமபிள்ளை பதிலுக்குப் பேசுவதற்கிடையில் பாழாய்ப் போன இழுப்பு விதானையாருக்கு வந்து விட்டது. அவர் அந்த நோயுடன் எப்படிப் போராடு கிறார் என்பதை சண்முகம்பிள்ளை நன்றாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அந்த நோய் அவரைப் பிழிந் தெடுத்தது. அவருக்காகச் சண்முகம்பிள்ளை மிகவும் பரிதாபப்பட்டார். ''இப்படி ஒரு நோய் இன்னும் ஏன் உலகில் இருக்கிறது?'' என்று அவர் அந்த நோயைச் சபித்தார்.

இழுப்பு ஓய்ந்து போக, மறுபடியும் அசதியாகி விட்டார்.

சண்முகம்பிள்ளை தலையை அங்குமிங்குமாகத் திரும்பி சுற்றுப்புறங்களை நோட்டமிட்டார்.

பழைய மோஸ்தரில்தான் வீடு அமைந்திருந்தது. கிழக்குப்புறமாக சிலிப்பர்கட்டை குற்றி நடப்பட்டு வட்டவடிவமாக இருந்தது. அதற்குள் கிணறு இருக்க



படிப்பகம்

www.padippakam.com



வேண்டும்! வட்ட வடிவமான அந்த அடைப்புக்குப் பக்கமாக ஓலையால் வேயப்பட்ட சிறு மண்டபம் ஒன்று இருந்தது. அந்த மண்டபத்தை திரண்ட துவாளிப்புக் களுடன் நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. மண்டபத் திற்கு நடுவே மைப்பூச்சுக்கள் பொருக்காகக் கிளம்பிய வில்லு வண்டி ஒன்றும், வேறு சில மரத் தளவாடங்களும் இருந்தன. ஒரு மூலைக்குள் மட்டையுரிக்கப்படாத தேங்காய் குவியல் ஒன்று இருந்தது. பக்கவாட்டில் வய தாகிய நரையன் காளை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதன் முன்னால் சிறிய தனிக் கல்லில் பொழியப்பட்ட கல் தொட்டி ஒன்று தெரிந்தது.

வட்ட வடிவமான அடைப்பின் மறுபுறத்தில் தேங்காய் நாற்றுக்கள் ஈரிலையில் கும்பலாக நின்றன. மண்டபத்தின் தாழ்வாரத்தோடு பழைய கலப்பை ஒன்று சார்த்தி வைக்கப்பட்டிருந்தது. அது பல காலமாக அப்படியே இருப்பிலேயே இருப்பதற்கான அறிகுறிகளாக அதன் மேனியெல்லாம் வெடிப்புப் பிளவுகள் வாய்களைத் திறந்து கொண்டிருந்தன. மறுபுறமாகப் பார்வையை வீசிய போது குத்தி வைக்கப்பட்ட அலவாங்கின் முனை யில் குற்றியபடி செத்தில் தேங்காய் ஒன்று கொலு வீற்றி ருந்தது. அதை அடுத்து நீண்ட தூரத்திற்குப் புல் தரை தெரிந்தது. அந்தப் புல் தரைப் பக்கமாக இரண்டு செம்மறியாடுகள் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று மிகவும் கிழடு தட்டியது. அதன் கொம்புகள் செவி யின் கீழ்ப்புறமாக வளைந்து முன்னோக்கிப் புடைத்து நின்றன.

பொய் மயக்கம் கலைய விதானையார் நெஞ்சுப் பொறியைச் சற்று விலக்கிக் கொண்டு நிமிர்ந்துவிட்டார்.

மறுபடியும் பேச்சுத் தொடர்ந்தது.

விதானையார் கண்களில் நீர் வடிந்தது.

www.padippakam.com



நெற்றிப் பள்ளத்தை ஒரு தடவை தடவிவிட்டுக் கொண்டு அவர் அந்தப் பாவணையில் போர்வையை இழுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''விதானையார், ஏன் அழுகிறியள்?''

இப்படி சண்முகம்பிள்ளை தமிழில் கேட்டார்.

''ஒண்டுமில்லைத்தம்பி, மணியக்காரனை நினைச்சன். அழுது போட்டன்'' என்று விதானையார் மறுபடியும் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

இடைவெளி அதிகம் நீளவில்லை.

சண்முகம்பிள்ளை நேராகவே விஷயத்திற்கு வந்து விட்டார்.

கையிலிருந்த உறுதிக் கட்டுகள சிலவற்றைப் பிரித்து வைத்துக் கொண்டே அவர் பேசத் தொடங்கிவிட்டார். அந்த உறுதிகளுக்கான காணி பூமிகள் எங்கெங்கே இருக்கின்றன என்ற கேள்வியும், அதற்கு விதானையார் சொன்ன பதில்களுமாகத்தான் பேச்சுக்கள் இருந்தன.

உறுதிகளைப் பற்றிய காணிகளின் விபரங்களைச் சரியாக சொல்லக் கூடாத அளவுக்கு வாக்கு மாறிய வேளையிலுங்கூட முடிந்தவரை விதானையார் சரியான விபரங்களையே கொடுக்க முயன்றார்.

மூன்று மைல்களுக்கு அப்பால் தரகன்புலம் என்ற ஒரு காணி பற்றிய குறிப்பை விதானையார் கூறியபோது சண்முகம்பிள்ளைக்குத் திடுக்காட்டமாக இருந்தது. அந்தப் பனங்காணியில் இப்போது இருபதுக்கு மேற்பட்ட பள்ளர்கள் குடியிருப்பதாகவும், ஒவ்வொருவனும் தனக்குத் தனக்கென்று வேலிகள் போட்டுக் கொண்டிருப்பதாகவும், சிலர் அவைகளைச் சீதனங்களாகக் கொடுத்திருப்பதாகவும், சிலர் தங்கள் இச்சைப்படி ஒழுங்கைகள் விட்டு எல்லைகள் போட்டு பல காலம் ஆகிவிட்டதென்றும் விதானையார் கொடுத்த தகவல்கள் அவரைத் திடுக்குற வைத்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



மாணிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் பின் பக்கமாகவும், வடக்குப் பக்கமாகவும் உள்ள காணிகள் வெள்ளப் பிடிப்புக் காணிகளாக இருந்தமையால் பலர் அவைகளை நிரப்பித் தனக்குத் தனக்கென கல்லாலான வீடுகளையே அமைத்துக் கொண்டிருப்பதாகவும், விதானையார் கூறியபோது சண்முகம்பிள்ளைக்கு ஆத்திர மாகவும் வந்தது.

எருக்கலம்பிட்டித் துரும்பகுளத்திற்கும், கும்புக் குளத்திற்கும் இடையே கிடந்த தரவை நிலத்தை முள்ளியைச் சேர்ந்த பள்ளரும், பக்கத்தே உள்ள கோவியரும் வரம்பு கட்டிக் கமஞ் செய்து வருவதாகவும் தெரிகிறது.

நீண்ட நேர இடைவெளிக்குப் பின் விதானையாருக்கு மறுபடியும் இழுப்பு வந்துவிட்டது.

அப்போது விதானையாரின் மனைவியானவள் வந்தாள். ''தம்பி அவர் சுகமில்லாத மனிசன், நீர் போட்டு ஆறுதலாய் வாருமன்'' என்று அவர் சண்முகம் பிள்ளையிடம் பேசினாள்.

''ஓமோம், நான் போட்டுப் பிறகு வாறன்'' என்று கூறிக் கொண்டே சண்முகம் பிள்ளை எழுந்துவிட்டார்.

சண்முகம்பிள்ளை விதானையார் வீட்டை விட்டு வெளியேறிய போது மணி பத்துக்கு மேலாகிவிட்டது.

சண்முகம்பிள்ளை வெளியேறி பதினைந்து நிமிட வேளைக்குள் விதானையார் கண் விழித்தார்.

சண்முகம்பிள்ளையைக் காணவில்லை.

''அவரைப் போக்காட்டிப் போட்டியே?'' என்று அவர் மனைவியை ஒரு மாதிரிப் பார்வையுடன் கேட்டார்.

''ஓமோம், உமக்கும் நல்ல சுகமில்லை. பின்னை அவனைப் போக்காட்டிப் போட்டன்!''

www.padippakam.com



இப்படித்தான் அவக்மெகனப் பதில் சொன்னாள்.

''என்னடி அவனோ, அவர் ஆரெண்டு தெரியுமோடி உனக்கு?''

விதானையார் குரல் உயர்த்திப் பேசினார்.

''ஆரெண்டா என்ன? வருத்தக்காரனை சும்மா அலட்டிக் கொண்டிருந்தால் போக்காட்டாமல் என்ன செய்யிறது?'' அவளும் குரலை உயர்த்தியே பதில் சொன்னாள்.

விதானையாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. மனைவியானவளை உதைக்க வேண்டும் போலப் படவே அவர் அவசரமாக எழுந்தார். முடியவில்லை. முயன்று முயன்று பார்த்தார். கால்களை ஒரு அடி தன்னும் நகர்த்த முடியவில்லை. ஆத்திரப்பட்ட அவர் ''எடி அவர் மணியக்காரன்ரை பேரனெடி, அருணாசலத் தின்ரை மோனடி!'' என்று கத்தினார்.

''ஓ, ஓ, அந்த அழகம்மா நாச்சியாற்றை வம்புப் பொடியன் என்ன?''

இவ்வளவுதான் அவள் பேசியது. விதானையார் பாய்ந்தோடி வந்து அவள் கன்னத்தில் அடித்து விட்டார். எப்படித்தான் இந்த வல்லமை அவருக்கு வந்ததோ?

''தம்பி குலத்துங்கம்'' என்ற பெபரோடு மட்டும் இருந்திருக்கலாம். தம்பி குலத்துங்கத்திற்கு ஆள் அணி அப்படி இப்படி என்று ஒன்றும் இல்லாத காலம். அவரின் தம்பி கதிர்காமருக்கு இவர் மூத்த பிள்ளை. அரசாங்க சிற்றூழியராக இருந்து விலக்கப்பட்டுத் திரும்பிய தம்பி கதிர்காமருக்கு பெருமளவு சொத்துக்கள் இருந்ததில்லை. மருதடிப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்குப் புறமாக ஒரு பத்தேக்கர் வரையில் வயல் காணி.

www.padippakam.com



அதில் பாதிக்குமேல் குத்தகைக்கு விட்டுவிட்டு மிகுதியை தான் அவர் பார்த்து வந்தார். வேறு பக்கப்பாட்டு வருமானங்கள் என்று குறிப்பிடக்கூடியதாக எதுவுமிருக்க வில்லை.

மூத்த மகன் தம்பி குலோத்துங்கத்தைச் சிறிதளவு படிக்க வைக்க வேண்டுமென்பதற்காக படாத பாடெல் லாம் பட்டு எட்டாவது வரை வட்டுக்கோட்டை பாதிரி யாரின் உதவியுடன் எட்டுவரை பாசாக்கி வைத்து விட் டார்.

படிப்பை எட்டுடன் நிறுத்திக்கொண்ட தம்பி குலோத் துங்கம் சாவலடி, தேங்காயடி, வேட்டை, வண்டிச்சவாரி போன்றவற்றில் நேரத்தைக் கழித்து வந்த காலம். அப்போதுதான் அவருக்கு வேலுப்பிள்ளை மணியக் காரருடன் ஏதோ ஒருவிதத்தில் தொடர்பு வந்தது.

மணியக்காரனுக்கு இவரைவிட இருபத்தைந்து வயது அதிகம். ஆயினும், மணியக்காரன் இவரை ஒத்த வயதின ராகவே சகல காரியங்களிலும் கருதி வந்து விட்டார். மணியக்காரனின் ஆட்சி அதிகாரங்களுக்குட்பட்டதான தன்னதிகார தண்டனை நடவடிக்கைகளுக்கு எல்லாம் பாவிக்கப்பட்டவர்களில் குலத்துங்கத்தாரை அவருக்கு நன்றாகப் பிடித்திருந்தது.

கோவில் திருவிழாக்களில், பெரு வைபவங்களில், ஆளடக்குவதிலிருந்து உள்ளூர்ச் சண்டைகளுக்கு விலக்கடி கொடுப்பது வரையில் குலத்துங்கத்தின் திறமையில் மணியக்காரனுக்கு மிகவும் நம்பிக்கை.

வாட்டசாட்டமான உடலமைப்பு, சற்றுச் சுண்டிப் போன சிவப்புமேனி, கழுத்திலிருந்து உடலெங்கும் பரந்த உரோமச் சுருள், சுருக்கங்கள் படிந்த அகன்ற நெற்றி, ஆழப்பதிந்த கண்கள் ஆகிய சாமுத்திரிகா இலட்சணங்கள் பொருந்திய தம்பி குலத்துங்கம், பொக்குளுக்குக் கீழாக சாய வேட்டியை இறுகக்கட்டி, கணுக்கால்களில் தசை

www.padippakam.com



நார் புடைப்புக்களின் விம்மலைக் காட்டும் விதத்தில் வேட்டியை சண்டிக் கட்டாகவும், கழுத்தை இரு தடவைகள் சுற்றிய ஆரணியன் சால்வையின் முகை தலைப்புக்களை நல்லெண்ணை தடவிவரும் முடியைப் படிய வாரிவிட்டு, மினுமினுக்க வைத்தும், நடு நெற்றியில் அகன்ற குங்குமப் பொட்டுடனும் வீதியில் ஏறுநடை போட்டுவரும் காட்சிக்கு மணியக்காரன் மட்டுமல்ல எல்லோருமே வயப்பட்டுவிடுவர்.

நிறத்தில், நடையில், உடலமைப்பில் மட்டுமல்ல படிப்புத் தகுதிக்கு மிஞ்சி அவர் பேசும் ஆங்கிலத்தில் மனதை ஊன்றிச் செலுத்துபவர்களுக்கு அவர் குடும் பத்தில் எப்படியோ ஒருவிதத்தில், இப்போதில்லாவிட் டாலும் எப்போதோ ஒரு உலாந்தாக் கலப்பு இருக்க வேண்டும் என்றுதான் கூறவரும்.

வேலுப்பிள்ளை மணியக்காரனின் சகலத்துக்குமான ஒரு பிரகிருதியாகவே மணியக்காரனின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம் அவரை இனங்கண்டு மதிப் பளித்தது. மணியகாரனிடம் ஏதாவது பெற முயற்சிப் பவர்கள் தம்பி குலத்துங்கத்தை கைக்குள் வைத்துவிட் டார்களானால் அது கைகூடிய மாதிரித்தான். அத்தனை தூரத்திற்கு அவர் மணியக்காரனுக்கு வேண்டியவர் ஆகி விட்டார்.

மாணிப்பாய்க்கு ஒரு விதானை வேண்டும் என்ற அரச ஆணை மணியக்காரனுக்குக் கிடைத்தது. இந்த ஆணை பிரசித்தகாரனுக்கூடாகப் பரப்பப்பட்டு அதற் கான மனுக்களும் கோரப்பட்டு விட்டன.

பலர் பலரைக் கைக்குள் போட்டுக்கொண்டு கரும மாற்றத் தொடங்கி விட்டனர்.

சங்கானை விதானையாராகிய சுப்பையாத் தம்பி யினுடைய மருமகனும் மார்ணிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய வேலும் மயிலும், பண்டைத்தரிப்பு

www.padippakam.com



விதானையார் செட்டியாபிள்ளையின் மைத்துனரும், ஆயிரங் காச்சிப்பிலாவடியில் வசிப்பவருமாகிய நன்னித் தம்பியாருந்தான் மனுக்களனுப்பியவர்களில் முன்வரிசைக் காரர்களாக இடம் பெற்றுவிட்டனர்.

ஒருநாள் வேலுப்பிள்ளை மணியக்காரன் குலத்துங்கத்திடம் ''டேய் தம்பி குலத்துங்கம், நீயும் விதானை வேலைக்கு நில்'' என்று படக்கென்று கூறிவிட்டார். 'நானாவது விதானை வேலைக்குக் கேட்பதாவது' என்றுதான் தம்பி குலத்துங்கம் எண்ணினார். ஆனால், மணியக்காரன் அதை உண்மைப்படுத்தி விட்டார்.

பொதுவில் விதானை வேலைக்காகத் தகுதிகள் பல இருக்க வேண்டும். அதை அவர் மணியக்காரனிடம் வாய் விட்டே சொல்லிவிட்டார்.

பரம்பரையில் யாராவது விதானையாக, அல்லது குறைந்தது ஏதாவது அரச பணியாளனாக இருந்திருக்க வேண்டும்.

பெரும் சொத்துச் சுதந்திரக்காரனாக அல்லது முன்னையோர்கள் சொத்துடையவர்களாக இருந்திருக்க வேண்டும். அல்லது ஆங்கிலம் எழுதத் தெரிந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் பேசவாவது தெரிந்திருக்க வேண்டும்.

சாதியில் பெரியவனாக, அல்லது இரண்டொரு தலைமுறைக்குள் எங்காவது பெரிய கலப்பற்ற சாதிக்குள் சம்பந்தம் வைத்துக்கொண்ட குடும்பத்தை உடையவனாக இருக்க வேண்டும்.

சந்ததியில் கிரிமினல் வழக்குகளில் குற்றம்படாத அல்லது அரச ஊழியர் பதவிகளில் இருந்து குற்றம்படாத குடும்பத்தினராக, அல்லாமலும் மணம் முடித்தவராகவும் இருக்க வேண்டும்.

இவ்வைந்து தகுதிகளும் உள்ளவர்கள்தான் விதானை நியமிப்புக்கு மனுப்பண்ணலாம்.

www.padippakam.com



ஆனாலும், குலத்துங்கத்தின் கையொப்பத்துடன் அபேட்சக மனுப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

தம்பி குலோத்துங்கத்துடன் சேர்ந்து ஐந்து மெம்பர்கள் போட்டியில் இறங்கினர். வேலும் மயிலும் என்ற அபேட்சகருக்காக பெரிய புள்ளிகள் இருவர் வேலை செய்தனர். ஒருவர் வேலக்கை முதலித் தம்பியர், மற்றவர் மிகப் பிரபல்யமான சித்தவைத்தியர் வாணர் இந்த இருவரும் ஒருமுகமாக நிற்பது மட்டுமே வேலும் மயிலரின் வெற்றிக்குப் போதுமானதாகக் கணிக்கப்பட்டது.

நன்னித்தம்பியர் என்ற மற்ற அபேட்சகருக்காக பிரபல வர்த்தகர் செல்லமுத்தரும், மட்டக்களப்பு வைத்தியலிங் கமும் வேலை செய்தனர். அப்போதுதான் வைத்தியலிங் கத்தாருக்கு முதன்முதலாக மோட்டார் கார் ஒன்று வந்து சேர்ந்திருந்தது. இப்பகுதிக்கு மோட்டார் காரைக் கொண்டு வந்த இரண்டாவது மனிதர் வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் அக்காரையே நன்னித்தம்பியருக்காக ஓடவைத்துப் படாதபாடுபட்டுக் கொண்டிருந்தார்.

வைத்தியலிங்கத்தாரின் மோட்டார்கார் நன்னித்தம்பி யரின் வீட்டு வாயிலுக்கு வந்துவிட்டால் ஊரே திரண்டு விடும். அது நன்னித்தம்பியரின் விதானை நியமனத் திற்காக கலகலப்போடு சங்கமமாகிவிடும். இதனால், ''நன்னித்தம்பியர்தான் வெல்லப்போகிறார். வைத்தியலிங் கத்தாரின் கார் கட்டாயம் ஆளை வெல்லவைக்கப் போகிறது'' என்ற நம்பிக்கையும் கார் வருகையுடன் பலரிடம் புகுந்து கொண்டது.

இந்த இருவரின் போட்டா போட்டிக்குள் மற்ற மூவரைப் பற்றிய பேச்சுக்கள் இல்லை.

தம்பி குலத்துங்கத்தைக் கிளப்பிவிட்ட வேலுப் பிள்ளை மணியக்காரனின் மூச்சுக்கூட வெளியே கேட்க வில்லை.

www.padippakam.com



அவர் மணியக்காரன். அவர் யாருக்காகவேணும் சட்டப்படி வேலை செய்யக் கூடாது.

தம்பி குலத்துங்கத்துக்கு ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கை குறைந்து குறைந்து கொண்டே வந்தது.

வேலுப்பிள்ளை மணியக்காரன் ஒருநாள் கேட்டார். ''தம்பி குலம், நீ உடனே ஒரு கலியாணம் கட்டவேணும்'' என்று. குலத்துங்கத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''இந்த நெருக்கடி போட்டிக்குள்ளை கலியாணந்தான் ஒருகுறை'' என்று குலத்துங்கம் பதில் கூறியபோது ''ஓமடா தம்பி, அது ஒரு குறைதான்ரா! நீ உடனை ஒரு கலியாணத்தைக் கட்டு, விதானை வேலைக்கு அந்தத் தகுதியுந் தேவை'' என்று மட்டுந்தான் சொன்னார்.

மறுவாரத்துக்குள், ஒரு பொதுநாளில் குலத்துங்கத்துக்கும், வட்டுக்கோட்டைக் மற்றாஸ் சிறில் செல்லத்துரையரின் ஒன்றுவிட்ட சகோதரிக்கும் கலியாணம் அடக்கமாக நடந்தேறிவிட்டது.

செல்லத்துரையர்தான் அப்பெண்ணுக்குச் சீர் வரிசைகள் சகலதும் செய்திருந்தார். வேலுப்பிள்ளை மணியக்காரன் இருந்த இரையலேயே இதைச் செய்து முடித்துவிட்டார்.

விதானைத் தெரிவுக்கான நாளும் வந்தது. அதிகாலையிலேயே ஊர் களை கட்டிவிட்டது. மங்கையர்க்கரசி சைவ வித்தியாலயத்தில் மாலை பத்து மணிக்கு விதானை நியமித்தல் என்றிருந்தது.

சரியாக ஒன்பதரை மணிக்கு வேலுப்பிள்ளை மணியக்காரனின் வில்லுவண்டி முன்னேவர, அரசாங்க அதிபர் நைல்சின் வெள்ளை இரட்டைக் குதிரை வண்டி வந்து சேர்ந்தது. வண்டியின் இருமருங்கிலுமிருந்து இறங்கிய மெய்க் காவலர்கள் இருவர் துப்பாக்கிகளைத் தயார் நிலையில் நெஞ்சோடு சேர்த்து உயர்த்திப்பிடித்துக்

www.padippakam.com



கட்டியம் கூற, நைல்ஸ் என்ற அந்த யூத இன அரசாங்க அதிபர் வண்டியை விட்டு இறங்கிவர அவருக்கு முன்னால் வேலுப்பிள்ளை மணியக்காரர் வழிவிலத்தி ஆசனம்வரை அழைத்து வந்தார்.

இதுவரை இருந்துவந்த ஆரவாரம் சணத்தில் அடங்கிப் போய்விட்டது.

கம்பளம் போர்த்தப்பட்ட அகன்ற கதிரையில் அரசாங்க அதிபர் வீற்றிருக்க, அவருக்குப் பக்கமாக சற்று சிறிய கதிரை ஒன்றில் மணியக்காரன் இருக்க அரசாங்க அதிபரின் தொலுக்கர் அதிபருக்குப் பின்னால் நிற்க, விதானையார் நியமனத்திற்கான வேலைகள் தொடங்கி விட்டன.

வெளியே நின்றவர்கள் உள்ளே வந்து நிலத்தில் உட்கார்ந்து கொண்டனர். எல்லோரையும் மொத்தத்தில் கணக்குக் கூட்டிப்பார்த்தால் நூறு தேறாது.

அபேட்சகர்கள் எனப்பட்ட ஐவர் பக்கவாட்டில் போடப்பட்டிருந்த வாங்கில் திரைக்கு இருந்தனர்.

ஒவ்வொருவராக அரசாங்க அதிபருக்கு அறிமுகம் செய்யப்பட்டனர்.

தம்பி குலத்துங்கத்தின் பெயர் கடைசியாகக் கூறப் பட்ட போது, எழுந்து நின்ற குலத்துங்கத்தை தலையிலிருந்து கால்வரை அரசாங்க அதிபர் சணத்தில் அளந்து பார்த்துவிட்டார். குலத்துங்கத்தின் வாட்டசாட்டமான உடம்பு, சுண்டிப்போன சிவப்பு நிறம், ஆழக்கண்கள், புருவச்சுருக்கம், அடர்த்தியான உரோமம், உயரம், இவைகளைச் சணத்தில் அவர் அளந்து விட்டிருக்க வேண்டும். அவரின் அறிமுக வார்த்தைகளை அவர் அதிகம் வாங்கிக்கொள்ளவில்லை.

எல்லோர் அறிமுகமும் முடிந்துவிட்டது.

www.padippakam.com


அவர்களின் நன்மை தின்மைகளைப் பற்றிக் கூற விரும்புபவர்கள் கூறலாம் என்ற அறிவித்தலும் வந்தது

யாருக்காகவும், யாரும் எதுவும் பேச முன்வரவில்லை

மண்டபத்தின் பின் கடைசி வரிசையில் கைகட்டிக் கொண்டு நின்ற முதலித்தம்பியர் உட்கார்ந்திருந்தவர் களை வழிவிலத்திக்கொண்டு முன்னே வந்தார். பேசி னார்.

முறைப்படி அரசாங்க அதிபருக்கு வணக்கம் செலுத்திவிட்டு அவர் ஆங்கிலத்திலேயே பேசினார்:

''துரை அவர்களே, இந்தப் போட்டியில் ஐவர் நிற்கின்றனர். இவ் ஐவரில் ஒருவர் மிகவும் சிறப்பானவர். அவர் பெயர்தான் வேலும் மயிலும். விதானையாராக வருவதற்குரிய சகல தகுதிகளும் ஒருங்கே உடையவர் அவரே. இங்கே ஒவ்வொருவர் பற்றிய தகுதியும் கூறப் பட்டதைப் பார்க்குமிடத்து, அவரே இந்த உத்தியோகத் திற்கு மிகவும் தகுதியானவர் என்று தோன்றுகிறது. இவருக்கு இருக்கும் தகுதிகள் புறக்கணிக்கப்படின் மற்றைய நால்வரில் முறையே மூவரில் ஒருவர் தன்னும் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படவேண்டும். அந்த மூவருக்கப்பால் நாலாவது நபருக்கு அதாவது கடைசியில் அறிமுகம் செய்யப்பட்டவருக்கு அறிமுகத்திற்குட்படாத பல புறனடைத் தகுதிகள் உள்ளன. எனவே, அவரைத் தவிர மற்றவர்கள் யாராவது நியமிக்கப்பட்டால் தான் அது இந்தப் பகுதிக்கு நல்லதாக இருக்கும். இதை மட்டுந் தான் நான் மதிப்புக்குரிய துரை அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பகுதி மக்கள் சார்பில் வேண்டுகிறேன்.'' முதலித்தம்பியரின் பேச்சு இரத்தினச் சுருக்கமாக முடிந்தது போட்டிக்கு நிற்கும் இந்த ஐவரில் குலத்துங்கத்தைத் தவிர மற்றவர் களில் யாரையேனும் தெரிவுசெய்யலாம் என்ற கருத்தின் புறப்பாடு பட்டென முதலித் தம்பியரின் பேச்சில் தொனித்தது.

www.padippakam.com



வெற்றிகரமாக துரை அவர்களுக்கு விளக்கிவிட்ட தான திருப்தியுடனும், பெருமையுடனும் முதலித்தம்பி அவர்கள் உட்கார்ந்து கொண்டார்.

கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவருடைய முகங்களை யும் துரையவர்கள் அவதானிப்பது போன்ற தோற்றம் அவர் முகத்தில் தெரிந்தது தம்பி குலத்துங்கம் தலையைத் தொங்க போட்டுக்கொண்டிருந்தமை மிகவும் பரிதாப மாக இருந்தது. முகம் வியர்த்துக்கொள்ள, சொண்டுகள் துடி துடிக்க, நெஞ்சுக்குள் பறை அறைய, வெளியே விடப்படும் மூச்சுக்கள் கூட மத்தள இடங்காரத்தில் உரசுவது போன்ற விதத்தில் செவிப்புலன்களுக்குத் தோன்ற அவர் வெல வெலத்தே போய்விட்டார்.

சற்று வேளை பேச்சுமூச்சு எதுவுமேயில்லை. ஏஜண்டர் துரை படக்கென எழுந்திருக்கவே கூட்டமும் எழுந்து நின்று மரியாதை செய்தது.

வேலுப்பிள்ளை மணியக்காரன் வழிகாட்டிச் செல்ல, ஏஜண்டர் துரை அவரைப் பின்தொடர, மெய்க்காப் பாளர்கள் அவருக்குக் கட்டியம் கூற பாடசாலை அலுவல் அறைக்கு ஏஜண்டர் துரை சென்றுவிட்டார்.

பத்துநிமிட இடைவெளிக்குப் பின்னர் ஏஜண்டர் துரை மறுபடியும் ஆசனத்திற்கு வந்துவிட்டார்.

மறுபடியும் சம்பிரதாய பூர்வமான மரியாதைகள்.

கடைசியில் ஏஜண்டர் துரை அவர்களின் பிரகடனத் தைத் தொலுக்கர் படித்தார்:

''இந்த விதானைத் தெரிவுப் போட்டியில் ஒரு பகிரங்க வாக்கெடுப்பு நடத்த நான் விரும்பவில்லை. பலவித கணக்கெடுப்புக்களுடன் வாக்கெடுப்பும் ஒன்றென் பது சட்டத்தில் ஒரு சரத்து. ஆயினும் நிலைமையை உத்தேசித்து அரசாங்க அதிபருக்கு இதை நீக்கி விடும் சரத்தும் அச்சட்டத்தின் ஒரு பகுதியில் இடம் பெற்றுள்ள

படிப்பகம்

www.padippakam.com



தால் இப்பகுதியின் அமைதியை மனதில் கொண்டு வாக்கெடுப்புப் பிரிவை இந்தப் போட்டியிலிருந்து நீக்கிவிட்டு இதை எனது நியமிப்பாகவே செய்கிறேன். என்னால் இன்று நியமிக்கப்படுபவர் சட்டப்படியான சகல அதிகாரங்களுக்கும் உரித்தானவர். அதை மறுப்பவர்கள் மாட்சிமை தங்கிய மன்னரின் ஆணையை மீறும் ராஜ துரோகக் குற்றத்திற்கு ஆளாவர். எனவே, இப்பகுதிக்கு தம்பிமுத்து. குலத்துங்கத்தை விதானையாக நியமித்து, ஒரு விதானைக்குரிய சகல அதிகாரங்களையும் வழங்குகின்றேன் என இதன் மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.''

தொலுக்கரின் பிரகடனப் படிப்பு முடிந்தது.

யாரும் மூச்சு விடவில்லை.

முதலித்தம்பியர் தன்னந்தனியாக நடந்து தனது வில்லு வண்டிக்குள் ஏறிக்கொண்டார்.

ஏஜண்டர்துரை அவர்களின் ரதம் ராஜகோலத்துடன் புறப்பட்டு விட்டது.

மட்டக்களப்பு வைத்தியலிங்கத்தாரின் கார் புகையைக் கக்கிக்கொண்டு போய்ச் சேர்ந்துவிட்டது.

மணியக்காரன் வேலுப்பிள்ளையின் இரட்டை மாட்டு வில்லுவண்டி சதங்கை நாதத்தைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டு விட்டது.

கடைசியாக......

கடைசியாக...தம்பி குலத்துங்கத்தின் சம்மந்த வழி உரித்தாளனாகச் சமீபத்தில் வந்துசேர்ந்த வட்டுக் கோட்டை மற்றாஸ் சிறில் செல்லத்துரையர் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சென்று தனது வெள்ளை நிற இரட்டைத் திருக்கலில் காலடி வைக்க அவரைத் தொடர்ந்து தம்பி குலத்துங்கம் ஏறிக்குந்த, செல்லத்துரையரின் எடுபிடி ஆட்களின் ஐந்தாறு திருக்கல்கள் பின்தொடர விதானையாரின் ஊர்வலம் புறப்பட்டு விட்டது.

www.padippakam.com



மூத்த நயினார் கோவிலடியைச் சேர்ந்த செல்லத் துரைப் பரியாரியும் அவரின் ஆட்களுமாகப் பத்துப் பேர்கள் வரை முன் நின்று ஐந்து பத்து எறிவெடிகளைத் தீர்த்துக்கட்டினர்.

மாடுகள் வெருண்டன. ஆயினும், அவைகள் திமிறினவே அன்றி வேறெந்தவிதத் தொல்லையும் கொடுக்கவில்லை. இப்படி எத்தனையோ திருவிழாக்களுக்குச் சென்று எத்தனையோ வெடிச் சத்தங்களைக் கேட்டு அவைகளுக்குப் பழக்கமாக இருக்க வேண்டும்.

நவாலி வாணக்காரத்தம்பன் பட்டப்பகலிலேயே நிலவிறிசுகள் பலதை நிறைத்து வைத்து வழி நெடுகிலும் எரித்துக் தீர்த்தான். அந்த இடைவேளையில் சுதுமலைக் காசியனால் வீசி எறியப்பட்ட எறிவெடி ஒன்றிலிருந்து புறப்பட்ட சிறு கல் குண்டொன்று வண்டிக்குள் நேராகச் சென்று குலத்துங்கம் விதானையாரின் நெற்றியில்...

குலத்துங்கம் கையினால் நெற்றியைப் பொத்திக் கொண்டார். இலேசான இரத்தக்கசிவு தெரிந்தது ஆனாலும், அவர் அதைப் பெரிது படுத்தவில்லை. பட்டுச் சால்வையால் அவர் அதைத் துடைத்துக் கொண்டார்.

தம்பி குலத்துங்கம், குலததுங்கம் விதானையாராகி விட்ட போது அபசகுணமாகத்தான் அந்த இரத்தக்கறை ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆயிரங்காச்சிப்பிலாவடிக்கு வண்டிகள் வந்து சேர்ந்த போது அந்த முச்சந்தியில் நட்டுவமேள வாத்தியங்கள் முழங்கின. அதுவும் தவில் காமாட்சி சுந்தரத்தின் கூட்டம்.

அப்பாடா!

விதானையார் வண்டியிலிருந்து இறக்கப்பட்டார்.

வெடிகள் முழங்க,

பன்னீர் தெளிக்கப்பட,

www.padippakam.com



மலர்மாலைகள் அணிவிக்கப்பட,

கட்டாடி கதிர்காமனும் அவன் கூட்டத்தினரும் வெள்ளை வெளேரென்ற நிலபாவாடை விரித்து நிற்க, ஆயிரங்காச்சிப் பிலாவடி முச்சந்திப்பிலிருந்து கால்நடை ஊர்வலம் புறப்பட்டு விட்டது.

இவைகளை யார் ஏற்பாடு செய்தார்கள்?

விதானையாருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

வேலுப்பிள்ளை மணியக்காரனை அவர் நினைத்துப் பார்த்தார். அவர் உடம்பெல்லாம் புல்லரித்தது.

நன்றியறிதல் கண்ணீர் அவர் கண்களில் பனித்தது.

சுதுமலை அம்மன் ஆலயக்கோடிக்கு ஊர்வலம் வந்த போது அங்கே ஒரு பெருங்கூட்டம் நின்றது. அதன் முன் வரிசையில் இருவர் நேருக்கு நேராக இரண்டு தடிகளோடு நின்றனர்.

தொடங்கி விட்டது,

கம்பு விளையாட்டு.

சிலம்படி இரத்தினனும், சீனடி நயினாக்கண்டனும் மோதுகிறார்கள்.

அடி தூக்கி, அடி தூக்கி,

அடிமாறி, அடிமாறி,

அடிமுன்வைத்து, முன்வைத்து, வைத்த முறைப்படி பின்வைத்து, பின்வைத்து,

எம்பித்துள்ளி, எம்பித்துள்ளி,

நுனித் தடிகளையும், அடித்தடிகளையும் முறையே முட்டவைத்து, முட்டவைத்து,

குருவணக்க வடிவங்காட்டி,

நடுத்தடிகளைப் பிடித்துச் சுழற்றிப் பாய்ந்து, பாய்ந்து கிறுதாப்போட்டு,

www.padippakam.com



இப்போது ஆவேசமான போட்டி!

அதுவும் சிலம்படி இரத்தினமும், சீனடி நயினாக் கண்டனும் மோதுகிறார்கள் எண்டால்,

கண்கொள்ளாக்காட்சி அல்ல, கண்கூசும் வீச்சு, மின் வெட்டு வேகம்!

சிலம்படி இரத்தினம் முன்பு பல களங்கள் கண்டவன். வெறும் காடசிக்கல்ல. இதே அம்மன் கோவில் பூங்கா வனத் திருவிழாவின் போது ஏற்பட்ட கலவரத்தில் ஒரு தடியோடு ஐம்பது பேரைத் துரத்தியடித்துப் பெருமையை நிலைநாட்டியவன்.

சீனடி நயினாக்கண்டனோ, வில்லூண்டிப் பிள்ளை யார் கோவிலடிக்கு அருகாமையாக பள்ளிவாசல் ஒன்றை அமைத்தபோது ஏற்பட்ட கலவரத்தில் ஒரு தடியுடன் விண்ணாதி விண்ணர்களான பல சண்டியர்களை அடித்து வீழ்த்தி பள்ளிவாசலைக் காப்பாற்றிய பெருமைக் குரியவன்.

அந்த இரண்டு வீரர்களும் இப்போது காட்சிக்காக மோதுகிறார்கள.

உச்சி வெய்யிலில் பசியுடன்,

ஜனக்கூட்டம் சுற்றி நிற்க,

நேரம் போவதைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் மோதுகிறார்கள்.

இந்தக் களரிக்குப் பத்தடி முன்னால் வேறோர் களரி யில் கள்ளுக்காரப் பண்டாரியின் மகன் இரத்தினன் தகிக்கும் வெய்யிலில் சங்கிலிப் பந்த வீச்சை ஆரம்பித்து தனது சாதியினரின் விசுவாசத்தை புதிய விதானையாருக் குக் காட்டத் தொடங்கி விட்டான். அவனின் வியர்வைத்

கோ—6

www.padippakam.com



துளிகள் நிலத்தை நனைக்கின்றன. உருண்டு திரண்ட அவனின் உடலமைப்பு பார்ப்போர்களுக்கெல்லாம் பெரு விருந்துதான்.

மருதடிப்பிள்ளையாரின் நடுப்பூசை வேளை.

அங்கிருந்து சாமி ஆராத்தி தீப மணிக்கினுக்கல் இலேசாகக் கேட்கிறது.

கவனத்தை அங்கே திருப்புவார் எவருமில்லை.

இங்கே கண்ணொருக்கா இவைகள்!

அங்கே கடவுளுக்காக அவைகள்!

வழியை விலத்திக்கொண்டு கோவில் பண்டாரப் பொடியன் கோவில் பஞ்சாமிர்தப் பிரசாதத்தை விதானையாரின் கரங்களில் தொன்னையால் ஊற்றிவிட, அதை வினயத்துடன் இருகைகளிலும் ஏந்தி அண்ணாக்காக வாயில் விட்டு மிகுதியை தலையில் பூசிக் கொண்டு விதானையார் தலை வணங்க, வேறொருவன் அவருக்குச் சந்தனப் பொட்டினை வைத்து விடுகிறான்.

சிலம்படியும், பந்த வீச்சையும் விட்டு பாதிக் கண்கள் கூட இந்தப் பக்கம் வரவில்லை.

கோவில் வீதியின் மேற்குப்புற ஒழுங்கை முகப்பில் பெண்கள் கூட்டம் நிறைந்திருக்கிறது.

அத்தனை பெண்களும் மேல்சட்டை இன்றிக் குறுக்குக் கட்டுகளுடன் நின்றனர். கிழங்கள், நடுவயதுக்காரிகள், குமர்கள் என்று பல பருவங்களில் நின்றனர்.

பஞ்சாய்ப் பறந்த செம்படைத்தலை,

குறுக்குக் கட்டு,

முன்தானைத் தலைப்பால் மார்பை மறைத்து அதன் தொங்கலை கழுத்தில் இருந்த மஞ்சள் ஊத்தைக் கயிற்றில் செருகிக் கொண்டு,

படிப்பகம்

www.padippakam.com



இப்படியான பல விதங்களில்!

விதானைக்குப் பக்கமாக வந்த மற்றாஸ் சிறில் செல்லத்துரையர் அந்தப் பக்கமாகவே அடிக்கடி நோக்கிக் கொண்டிருந்தார்.

''அவளவை எங்கடை பள்ளியள்!'' என்று விதானை யார் சுருக்கமாக அறிமுகப்படுத்தினார்.

இதைக் காதில் வாங்கிக் கொண்ட செல்லத்துரையர், தனக்குப் பக்கமாக வந்த தனது நண்பனான முருகேசு வைப் பார்த்து, ''பள்ளியளெண்டாலும், நல்ல உடம்பு காணும்'' என்று இலேசானக் குரலில் கூறிவிட்டு அவர் பதிலுக்காகக் காத்திருந்தார்.

''ஓமோங்காணும், எப்பணெண்டாலும் குனிஞ்சு நிமிராத எங்கடை சீதேவியளுக்கு என்ணெண்டுகாணும் உடம்பு வாறது, இவளவை நல்லாப் பாடுபட்டு உடம்பை வருத்திற வளவையெல்லை. எண்டாலும் உம்மடை பிரா மணத்தியின்ரை உடம்பென்ன குறைவே?''

பதிலும் சொல்லி முருகேசர் ஒரு புதிய கேள்வியையும் கேட்டு விட்டார்.

பிராமணத்தியைப் பற்றிய பேச்சு வந்தபோது செல்லத்துரையருக்கு ஒரு மாதிரியாகத் தான் இருந்தது. முருகேசரை அவர் ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண் டார்.

''ஏன்ராப்பா கோவிக்கிறாய், உனக்குப் பிடிக் கேல்லை யெண்டால் விடு; விடு உந்தக் கதையளை!'' என்று சமாளிக்க முற்பட்டார் முருகேசர்.

இவர்களின் பேச்சு அதிகம் நீளவில்லை.

செல்லத்துரையருக்கு முருகேசரின் வாயை அடக்க வேண்டுமென்றுதான் எண்ணம் வந்தது. ஐயரம்மாவின்

www.padippakam.com


விஷயமாக முருகேசு தனக்குக் காட்டி வரும் எதிர்ப்பை அவர் இப்படி அடிக்கடி குத்திக் காட்டுவதை— கிண்டல் பண்ணுவதை—ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டு மென்றுதான் செல்லத்துரையர் விரும்பினார். ஆனாலும், இது இடம் சரியில்லை. விட்டுவிட்டார்.

ஊர்வலம் குலத்துங்கம் விதானையார் வீட்டு வாயிலுக்கு வந்துவிட்டது.

மனைவியானவளும், வேறொருத்தியும் மஞ்சள் தண்ணியால் ஆராத்தி எடுத்தனர்.

பெருமை தாங்காமல் அவர் மனைவி விம்மி, விம்மி அழுது விட்டாள்.

விதானையாருக்கும் அழுகை வந்தது.

வெறும் குலத்துங்கத்திற்கு இத்தனை பெருமைகளையும் தந்து விட்ட வேலுப்பிள்ளை மணியக்காரனை நினைத்துத் தான் அவர் அழுதிருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

இப்போது மனைவியின் கன்னத்தில் அறைந்து விட்ட குலத்துங்கும் விதானையாருக்கு களைப்பு. அவளுக்கு அடிப்பதற்காக தனது பலமெல்லாவற்றையும் ஒருங்கு சேர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தான் அவருக்குக் களைப்பைத் தந்தது.

''ஓ. ஓ. அந்த அழும்மா நாச்சியாற்றை வம்புப் பொடியன்'' என்ற அந்தச் சொல்லின் தாக்கத்தை முன்பெல்லாம் பலரிடமிருந்தும் கேட்டபோது...... இதை விடவும் அதிகமாகக் கேட்டபோது ஏற்படாத தாக்கம் தன்னை ஆளாக்கிய உடையாரின் பேரனைத் தன் மனைவியே இப்படிச் சொன்னபோது அவரால் அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை

www.padippakam.com



''வண்டில்காரச் சின்னட்டிப் பள்ளனுக்குப் பிறந்த பொடி'' என்று பலர் பேசியிருக்கின்றனர்.

சண்முகம்பிள்ளை பூமியில் இறங்குவதற்குமுன் அழகம்மா நாச்சியாரைச் சிறைப்பிடித்த பணியில் காசியனின் மகன் நாகனின் தலையைச் சீவி எறிந்த சின்னட்டியனை மறியல் வீட்டுக்குள் வைத்துத் தீர்த்துக் கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்னர் தான் சண்முகம்பிள்ளையின் பிறப்பு நடந்து முடிந்தது. அதனால் அந்தப் பேச்சு அப்போது இருக்கவில்லை. ஆனால், அவமானம் தாங்கமாட்டாமல் சண்முகம் பிள்ளையின் தந்தை நாட்டைவிட்டு ஓடியபின் தான் சண்முகம்பிள்ளையின் பிறப்புப் பற்றிய வதந்திகள் பல, பல பிறப்புக்கள் எடுத்து வந்தன.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விதானையாரின் மனைவியானவள் இப்படிக் கூற நினைத்ததுமில்லை. ஆனால், இன்றோ?

மனைவியின் முகத்தில் அறைந்து விட்டு வியர்க்க விறுவிறுக்க மறுபடியும் சாய்மனைக்கு வந்துவிட்ட விதானையாரின் கண்களுக்கு முன்னே வெறும் குலத்துங்கம், ஆகிய தான் விதானை குலத்துங்கம் ஆகிய சம்பவம் எல்லாம் தொடர்ச்சியாக வந்து போயின. இடையிடையே இழுப்பும் வந்து போயிற்று.

ஒவ்வொரு முறை இழுப்புக்கும் தொடர்புகள் அறுந்தறுந்து மீண்டும், மீண்டும் ஒட்டிக் கொண்டு, ஒட்டிக் கொண்டே வந்து போயின.

ஊர்வலத்தில் வந்தபோது மற்றாஸ் சிறில் செல்லத்துரைக்கும், முருகேசருக்கும் பள்ளிகள் பற்றியும் ஐயர் அம்மா பற்றியும் நடந்த கீழ்க்குரல் உரையாடல்கள் கூடக் கேட்பது போலிருந்தது. அதன் தொடர்ச்சியில் ஐயரம்மா பற்றிய சம்பவக் கோவைகளும் அந்தச் சம்பவங்களுடன்

www.padippakam.com



சிக்கிக் கொண்ட தன்னை, வேலுப்பிள்ளை மணியக்காரன் தக்க சமயத்தில் கைகொடுத்துதவிய தொடரும் ஒட்டிக் கொண்டு வந்து விட்டது. இடப்பக்க நெற்றியின் கொட்டப்பாக்களவு பள்ளத்தை அவர் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். அந்த ஐயரம்மா பற்றிய சம்பவங்களை இரை மீட்கத் தொடங்கி விட்டாலோ வழமையாக அவர் கரம் அந்தப் பள்ளத்தையே தடவிக்கொள்ளும்.

படிப்பகம்

www.padippakam.com

# 5

வழமைக்கு மாறாக காலைக் கடன் முடிந்த வுடனேயே உறுதிக் கட்டுடன் கோவிந்தனை விட்டுவிட்டுத் தன்னந்தனியாக கப்பல் காரை எடுத்துக்கொண்டு சென்றவர் வீட்டுக்கு வர மணி பத்துக்கு மேலாகிவிட்டது.

அவர் முகத்தில் கடுகடுப்பு ஒட்டிக்கிடந்தது.

''கோவிந்தன் சாப்பிட்டானா?'' என்று மட்டும் தான் அவர் மனைவி சீதேவி அம்மாளைக் கேட்டார். அதற்குப்பின் அவர் பேசவில்லை. அவருக்கு மனம் சரியில்லை.

வெளிநாட்டான் ஒரு புட்டியை எடுத்து வழக் கத்துக்கு மாறாக குடிக்க முற்பட்டபோது பச்சைப் பிழாவையும் பக்குவமாகப் பண்ணாடை யால் மூடப்பட்ட முட்டியையும் மனைவியான வள் எடுத்துவந்தாள் போத்தலை உடைத்தபடி மறுபடியும் கிடைச்சியினால் இறுக்கி மூடிவிட்டு பச்சைப் பிழாவை அவர் எடுத்துக்கொண்டார்.

இரண்டு மிடறுகள்.

www.padippakam.com



அது இலேசாகப் புளித்திருக்க வேண்டும்.

இமையைச் செருகிக்கொண்டு மேலும் சில மிடறுகள் இழுக்க முயன்றார்.

''வயிரவன் இரண்டு பனைக்கள்ளைச் சேர்த்துப் போட்டான்'' என்று சொன்னபோது ''சாச்சாய்! நான் கண்டனான் அவன் ஒரு பனையானைத்தான் அப்பிடியே இறக்கினபடி தந்தவன்'' என்று அம்மாள் வயிரவனுக்காகச் சாட்சி சொன்னாள்.

''சீச்சி! நீர் அசட்டையாயிருந்திப்பீர். அவன் விளையாடிப் போட்டான்'' என்று அசட்டையாகவே சொல்லி விட்டார்.

அவளுக்கு ஒரு மாதிரியாக வந்துவிட்டது. முந்தானையால் முகத்தைப் பொத்திக்கொண்டு அவள் படக்கென்று உள்ளே போய்விட்டாள். அவனுக்கு அப்போதுதான் நிலைமை புரிந்தது. தனது பேச்சு அவருக்குப் படாத இடத்தில் பட்டுவிட்டதாக உணர்ந்தாள்.

இதற்குமுன் கேலியாகத்தன்னும் அவர் இப்படிப் பேசியதில்லை. அவர் பேசினால் அவளும் இதற்குமுன் எப்போதுமே இப்படி நடந்ததுமில்லை.

''என்னப்பா, நான் பகிடிவிட இப்படிக் கோவிக்கிறதே?'' என்று அவர் அவளைச் சமாளிக்கப் பார்த்தார்.

''பகிடிதான், கண்டறியாத பகிடி'' என்று அவள் உள்ளேயிருந்து வைத்த குரல் அவருக்கு இலேசாகக் கேட்டது.

''பின்னையென்ன காணிபூமி எல்லாத்தையும் ஊரவங்கள் ஆட்சிப்படுத்தினாங்கள், விதானை வீட்டிலையிருந்து தான் பட்டு வாற பாட்டிலை என்ரை நிலைமைதெரியாமல் நீர் வயிரவனுக்குப் பரிந்து பேசினா?'' என்று அவர் தனது நிலைமையை விளக்க முயன்றார்.

www.padippakam.com



மறுபடி பேச்சுக்கள் கேட்கவில்லை.

சாய்மனையில் சரிந்தபடி அவர் உறுதிகளைப் புரட்டத் தொடங்கினார்.

தரகன்புல உறுதி, அரும்பளகுளத்தடி உறுதி, மருதடி உறுதி இப்படித் தொடர்ச்சியாகப் புரட்டிக் கொண்டிருந்தார்.

மாவடிப் பக்கத்திலிருந்து கோவிந்தனின் அலுங்கல் சிணுங்கலும் சிறு இருமலும் கேட்டது.

சண்முகம்பிள்ளை திரும்பிப் பார்த்தபோது காவல் காரக்கூலி நன்னியன் பெண்டில் மூன்று குஞ்சு குழுமான் கள் பின் தொடர, அதற்குப் பின்னால் அவளின் கறுத்தப் பெட்டைச்சி பொன்னி நாய் வர முற்றத்திற்கு வந்து விட்டாள்.

அந்தப் பெட்டைச்சியைப் பார்த்துதான் கோவிந்தன் ஆரவாரித்திருக்க வேண்டும்.

''இஞ்சேருமப்பா, நன்னியன் பெண்டிலல்லே வந்திருக் கிறாள். என்னடி நன்னியன் பெண்டில், சீவல்கார வயிர வன் பகுதிக்கு நன்னியனை ஒரு காரியமாய் அனுப்பின னான், வந்திட்டானே?'' என்று கேட்டார்.

''அந்தாள் இன்னும் வரேல்லையாக்கும். மரமேறியின் பகுதியிக்கையும் ஒரு செத்தவீடாம். குமர்ப் பெட்டை ஒண்டு கிணத்துக்குள்ளை ராத்திரி விழுந்து போச்சாம்'' என்று அவள் ஒரு புதினத்தையும் சேர்த்துச் சொன்னாள்.

''என்ன குமரியாமோ? வாயிலை வயித்தலை வந்திட்டு தாக்கும்; பிள்ளைக் கிணத்துக்குள்ளை குதிச்சுச் செத்திருப்பாள். ஆராமெடி அவள்?''

உள்ளேயிருந்து அம்மாளின் குரல் இப்படிக் கேட்டது.

''ஓமாக்கும். அண்டைக்கு என்ரை உந்தாளோடை நிண்டு குளக்கரை வடலியள்ளை ஓலைவெட்டினான்

www.padippakam.com



வைத்தி, அவன்ரை கடைக்குட்டிப் பெட்டையாம். ஆரோ பண்டாரிப் பொடியன் ஒருத்தனோடை கொண்டாட்ட மாயிருந்தாளாம். இவன் வைத்தி அடிச்சிருக்கிறான். அவள் கிணத்துக்கை பாஞ்சிட்டாள்.''

நன்னியன் பெண்டில் கன்னி அந்தக் குமரி செத்துப் போனதான வரலாற்றை சுருக்கமாகச் சொல்லி முடித்து விட்டாள்.

''இந்தக் குமரிக்கென்னடி பண்டாரிப் பொடிய னோடை தொடுப்பு. அவன் வைத்தியன் அடிச்சது சரி, நானெண்டால் அவளைக் கொண்டு போட்டுக் கிணத் துக்கை எறிஞ்சிருப்பன்.''

சண்முகம்பிள்ளை இப்போது வைத்தியனின் பக்கம்.

''இல்லையாக்கும், வயித்தியன் அப்படி செய்திருக் கான் பாவம். கோவத்திலை அடிச்ச அடியிலை அவள்தான் கிணத்துக்கை விழுந்ததாக் கனபேர் பாத்திருக்கினம். தாழக் கிணறு. தூக்கிறதுக்கிடையிலை செத்துப் போனாளாம்.''

நன்னியன் பெண்டில் வைத்தியனின் நல்ல பக்கத்தை நியாயப்படுத்திப் பேசினாள்.

''தேப்பன் ரோசக்காறனெண்டால் மோள் என்ன குறைஞ்சவளே. பாத்தா அவளும் ரோசக்காரிதான். அவளும் ரோசத்திலை பாஞ்சிட்டாள்.''

வெளியே வந்த அம்மாள் அந்த செத்துப்போன ஜீவ னுக்காக பாராட்டுத் தெரிவித்தாள்.

''சும்மா விடுங்கோ கதையை, அவையும் அவை யின்ரை ரோசத்தையும், டாக்குத்தன் வந்து வயித்தைக் கீறிப்பாத்தாத் தெரியும்.

சண்முகம்பிள்ளை முத்தாய்ப்பு வைத்துவிட்டார்.

www.padippakam.com



நன்னியன் மனைவி கண்ணி தொடர்ந்தும் எதற்காகவோ காத்திருந்தாள். உள்ளே சென்ற அம்மாள் குஞ்சுப் பெட்டி நிறைந்த மிளகாயுடனும், சிறியதோர் பெட்டி மல்லிச் சரக்குடனும் வந்து சேர்ந்தாள்.

தாழ்வாரத்தோடு கிடந்த தாச்சிச் சட்டியை சூட்டடுப்பு ஒன்றில் தூக்கி வைத்து கண்ணி சரக்கு வறுக்கத் தொடங்கி விட்டாள். குஞ்சு குழந்தைகள் சூழ இருந்து அடுப்பைப் பற்ற வைத்தன. மேல் திண்ணையில் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டே அம்மாள் இருந்து விட்டாள்.

உள்ளே சண்முகம்பிள்ளை உறுதித் தொடரைத் தொடர்ந்து விட்டார்.

நன்னியன் வீட்டுப் பொன்னிப் பொட்டைச்சி கோவிந்தனையே இமை கொட்டாது பார்த்தபடி சற்று ஒதுக்குபுறமாகக் குந்திக் கொண்டு அலுங்கியது. கோவிந்தனின் அலுங்கல் சிணுங்கலும் மெதுவாகக் கேட்டது. அவனுக்குப் பொன்னிப் பெட்டையின் மேல் காதல் வந்திருக்க வேண்டும் அல்லது பொன்னிப் பெட்டையின் காதலை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதுவுமில்லாவிடில் கண்ணினைக் கண் ஒப்ப இப்படி ஏதோ ஏற்பட்டிருக்க வேண்டும்.

வெய்யில் கொளுத்தியது.

நலமுண்டுத் துண்டினால் முகத்தையும் உடம்பையும் மாறிமாறித் துடைத்துக் கொண்டே நன்னியன் வந்தான்.

அவன் வந்ததும் ''அப்பு, அப்பு'' என்று குரல் வைத்துக்கொண்டே குழந்தை குட்டிகள் ஆரவாரித்தன.

''சு'' என்று எச்சரித்துக் கொண்டாள் அம்மாள்.

ஐயா படிக்கும்போது குழப்பக் கூடாது என்ற எச்சரிக்கை அது.

www.padippakam.com



''என்ன நன்னியன் அவங்களைக் கண்டியே?'' என்று ஐயா குரல் வைத்தார்.

''ஓமாக்கும், வயித்தியன்ரை செத்த வீட்டுப் பக்கம் எல்லாரும் நிக்கிறாங்கள் செத்த வீட்டுக்கு வந்த மாதிரிக் காட்டிக்கொண்டு மெதுவாகக் கதைவிட்டுப் பாத்தன் அவங்கள்......''

''என்ன அவங்கள், என்ன சொன்னவங்கள்? சொல்லடா.''

''அவங்கள் சம்மதப்படாங்கள் போலை கிடக்காக் கும். தோட்டக்காணியளை ஐயா செய்யப் போறார். இந்தக் கோசோடை விட்டிட வேண்டுமெண்டு சொல்லிப் பாத்தன் அவங்கள் சம்மதிக்காங்களாம்.''

''என்ன அப்பிடியோ? சம்மதிக்காங்களாமோ?''

''ஓமாக்கும். தாங்கள் ஐம்பது வருசத்துக்கு மேலை செய்து வாற காணியளை விடேலுமோ எண்டு கேட் கிறாங்கள்; வேணுமெண்டாக் குத்தகைக் காசை இனிமே கட்டிறமென்னிறாங்கள்; ஒத்தபடி சொல்லுறாங்கள்.''

''என்ன அவளவுக்கு வந்திட்டாங்களோ? பரதேசியள்; நன்றிகெட்ட நாயள். இவ்வளவு காலமும் அமானியாய் ஊரவன்ரை காணிய்ளை அனுபவிச்சதுமில்லாமல் இப்ப விடமாட்டாங்களாமோ? ஆமோ? என்னைப் பற்றி அவங்களுக்குச் சரியாத் தெரியேல்லை. எத்தினை சிங்கள வங்களையும், வடக்கத்தையாங்களையும் கட்டி ஆண்டு சிப்பிலியாட்டின எனக்கு உவங்கள் ஒரு சரக்கோ? எழிய வங்களுக்குப் பாடம் படிப்பிச்சுக் காட்டிறன்; பள்ளரை யும், பரம்பரையும் கொண்டு படிப்பிச்சுக் காட்டிறன்.''

''பள்ளரும், பரம்பரும் இப்ப அவங்களோட நல்ல ஒற்றுமையாக்கும். உங்கடை பிள்ளையார் கோயில் பக்கத்து உங்கடை வெட்டைக் காணியிலை கொட்டிலும் கட்டி, சங்கமும் ஒண்டு வைச்சிருக்கிறாங்கள்.''

www.padippakam.com



''ஓகோ! என்ரை காணித் துண்டிலை கொட்டிலும் கட்டிச் சங்கமுமா வைச்சிருக்கிறாங்கள்? விதானையைப் பிடிச்சு நாளைக்குப் பிடுங்கி எறிஞ்சு போடிறன். நன்னியன், ஆரடா எங்கடை அம்பலவாணப்பரியாரி யின்ரை இளைய மோன் தானை விதானை? நன்னியன் கையோடைப் போய் விதானையை நான் ஒருக்காத் தேடுறன் என்று சொல்லிப்போட்டுவா.''

''பரியாரியாற்றை மோன் விதானையாரை பெட்டிசம் போட்டு வேறை இடத்துக்கு மாத்திப் போட்டினமாக்கும். இப்பதன்னை நளப்பரியாரி அப்புத்துரையின்ரை மருமோன் முறையான—அதுதான் சுந்தரச் சட்டப்பியாற்றை மோன்தான் விதானையாக்கும்.''

''என்னடா அது? அப்பிடி மாறிப் போச்சோடா? நன்னியன் நீ உண்மையாத்தான் சொல்லிறியோ?''

''நான் ஏனாக்கும் தங்களுக்கு மறைக்கப் போறன்?''

சண்முகம்பிள்ளை, நன்னியன் ஆகியோரது பேச்சு இதற்கு மேல் நீடிக்கவில்லை.

கண்ணியின் சரக்கு வறுவல் அவரது நாசிக்குள் ஏறி அவரைப் பேசவிடாது தடுத்தது.

''எடி நன்னியன் பெண்டில் புரைக்கேறுதடி, தாச்சிச் சட்டியை அங்காலை கொண்டு போடி'' என்று அவர் சினங்கொண்டு சீறினார்.

www.padippakam.com

# 6

நேரகுசி போட்டு அன்றாட நிகழ்ச்சி களைக் கவனித்து வந்த சண்முகம்பிள்ளைக்கு இப்போதெல்லாம் அப்படிச் செய்து கொள்ள முடிவதில்லை.

ஆங்கிலத்திலான தனிப்பாணிப் பேச்சுக்கள், நடை உடை பாவனைகள் யாவற்றிலும் தலை கீழான மாற்றம்.

ஆட்களிடம் அதிகாரம் செய்யும் தோரணை யிலும் ஒருவித நாசுக்கான போக்கு.

ஆனால், வீட்டுக்குள் மட்டும் மனைவி ஸ்ரீதேவிப்பிள்ளையிடம் அதே மிடுக்கு, அதே கண்டிப்பு, அதே ஆக்ஞை பிறப்பிப்புக்கள்; அதே மௌனகறுப்படிப்பு. அத்துடன் முந்தின தைவிட கடுகடுப்பு அதிகமாகியே வந்தது.

வந்த புதிதில் கிமோனாவை வீட்டில் உடை யாகக் கொண்டிருந்த மனைவியை கிமோனாவை அகற்றிவிட்டு சட்டை போட்டுத் தாவணி கட்ட வைத்துவிட்டார். அதேபோன்று தனது உடை வகைகளிலும் தமிழ் கமழச் செய்துவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



குறுகிய ஒரு வருட காலத்துள் இப்படி ஒரு மாற்றம். ஆனால், உறுதிகளைவிட மற்ற விதங்களில் ஆட்சி அற்றுப் போய்விட்ட காணிபூமிகளை மறுபடியும் ஆதிக்கத்துக்குள் கொண்டு வருவதில் பலப்பல விதமான நடவடிக்கைகளை தொடர்ச்சியாகவே மேற்கொண்டு வந்தார்.

காணிக்கந்தோர், கோடு, கச்சேரி, வழக்கறிஞர் வீடுகள் என்ற இடங்களிலெல்லாம் அவரின் கார் ஓடி அலைந்தது. பல தடவைகள் பழைய விதானையார் குலத்துங்கத்திடமும் கலந்து கலந்து காரியங்களை மேற் கொண்டார். ஆனாலும் உடனடிப் பலன் எதிலும் கிடைக்கவில்லை.

நன்னியன் இப்போது சண்முகம்பிள்ளையின் காவல் காரக் கூலியாக மட்டும் இருக்கவில்லை. படிப்படியாக அந்த மாந்தோப்பு மாளிகையின் சகலத்திலும் பங்கெடுப் பதுவரை உயர்ந்துவிட்டான். ஐயாவுக்கு அவன் இப் போது அத்தியந்த மதிப்புக்குரிய அடிமையே ஆகி விட்டான். அவனுக்கென்று தனியாக வேறு வேலைகள் இருக்கவில்லை.

நன்னியனின் மனைவி கண்ணி, சீதேவி அம்மாளின் உள்வீட்டவள் ஆகிவிட்டாள். அம்மாவின் குளியல் அறைவரை அவளுக்கு ஆதிக்கம் வந்துவிட்டது.

குளியல் அறையில் ஒருநாள் அவள் அம்மாளுக்கு ஊத்தை உருட்டி விட்டுக் கொண்டிருந்தபோது அவள் சொன்னாள்: ''நீங்கள் ஒருநாளைக்கு ஏராக்கள்ளுக் குடிச்சுப் பாருங்கோ'' என்று.

அவள் ஏராக்கள்ளுக் குடிக்கும்படி ஏன் சொன்னாள் என்பதனை உடனடியாக அம்மாவின் மனது வாங்கி கொள்ளவில்லை.

''ஏனெடி கண்ணி, உங்கினைக்கை இருக்கிற நயினாத் தியள் வயிரவனெட்டைக் கள்ளக்கள்ளு வாங்கிக்குடிச்சு இரகசியக் குடிகாரிகளாய் இருக்கிறது போலை என்னை

www.padippakam.com



யும் நினைச்சுக் கொண்டாயோ?'' என்று அம்மாள் சற்று அழுத்தமாக கண்ணியை கேட்டுவிட்டாள்.

கண்ணிக்கு அம்மாவின் கோபம் புரிந்துவிட்டது. தான் சொன்னதின் அர்த்தத்தை அவள் பிழையாக அனுமானித்துவிட்டாள் என்பதும் புரிந்தது. அதற்கு மேல் அவளால் தனது நோக்கத்தை அம்மாளுக்கு விளங்கவைக்க முடியவில்லை.

''ஏனெடி கண்ணி வயிரவன் குட்டியோடை உன்ரை வீட்டுக் கோடியிக்கை வாறதை நான் கன நாள் கண்டனான். உனக்கும் அவன் தாறான்போலே கிடக்கு என்ன?''

அம்மாள் படக்கென்று இப்படிக் கேட்டுவிட்டாள்.

கண்ணி எதுவும் பேசவில்லை.

''என்னெடி கதைக்காயாம்''

''நான் ஏனாக்கும் களவாய் வேண்டப்போறன். அந்தாளுக்கும் தெரியக்கூடியதாய்த்தான் வாங்கிக் குடிக்கிறனான். காசு குடுத்து வேண்டிறனான்''

இப்படிக் கண்ணி பதில் கூறிவிட்டாள்.

''அது உனக்கு வெறிக்கிறேலையேடி?''

அம்மாள் கேள்வியாகக் கேட்டாள்.

''அரைப்போத்தல் கள்ளு ஏன் வெறிக்கப்போகுது. அதுவும் பனங்கள்ளு.''

எந்த ஒளிவு மறைவுமின்றி அவள் இப்படிக்கூறியது, அதுவும் நன்னியனுக்குத் தெரியுமென்று கூறியது அம்மாளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. இடைவெளி விடாமலே ''அது உடம்புக்கு நல்லதேடி, என்ன? அதுதான் வருஷம் ஒண்டு பெத்துத் தள்ளிறாய் ஏன்?'' என்று அம்மாள் அவசர அவசரமாகக் கேட்டாள்.

''நான் பிள்ளைப் பெறத்தான் குடிக்கிறனான் எண்டு அம்மா நினைக்கிறதாக்கும், என்ரை அந்தாளுக்கென்ன

www.padippakam.com



குறைச்சல். அதுதான் ஏராக்கள்ளுக் குடிச்சுப் பார்க்கச் சொன்னனாக்கும். சிலவேளை சரிவந்தாலும் வரும்.''

கண்ணி தன் பேச்சை மொட்டையாகவே நிறுத்திக் கொண்டாள். ஏராக்கள்ளைப் பற்றித் தான் சொல்ல வந்ததைச் சொல்லிவிட்டதாக அவளுக்குத் திருப்தி.

இதற்குமேல் அம்மாளும் ஒரு வார்த்தை பேசவில்லை.

வெளியே கார் இரைந்துவரும் ஓசைகேட்டது.

அம்மாள் குளிப்பை முடித்துக்கொண்டுவிட்டாள்.

ஐயா வந்துவிட்டார்.

கண்ணியும் போய்விட்டாள்.

வெளியே கண்ணியின் வரவுக்காகக் காத்து சுருண்டு படுத்திருந்த பொன்னிப் பொட்டைச்சியும் அவள் பின்னால் சென்றது.

கூட்டுக்குள்ளே இருந்து கோவிந்தனின் ஆரவாரம் கேட்டது.

அன்றைய நாளாந்த நிகழ்ச்சிகள் முடிந்து இரவாகி சண்முகம்பிள்ளை படுக்கைக்குப் போய்விட்டார். படுத்த வுடன் உறங்கியும் போய்விட்டார்.

கொஞ்ச நாட்களாக அவர் அப்படித்தான்.

மதுவருந்தி, உணவருந்தி படுத்ததும் உறங்கிப்போய் விடுகிறார்.

அம்மாளுக்கோ பொல்லாத சோதனை!

சுவர்க்கடிகாரம் பன்னிரெண்டு, ஒன்று, இரண்டு என்று அடிக்கும் வரையில் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

நன்னியன் பெண்டில் கண்ணி, எலும்பும் தோலு மாக பதின்மூன்றாவது பிள்ளை வயிற்றோடு உலாவி



படிப்பகம்

www.padippakam.com



வருவதை அவள் எத்தனை தடவைகள் பார்த்துப் பார்த்து பொச்சரித்திருக்கிறாள்!

தோட்டப் பின்புறம் பரவைக் குளக்கரையோடு கண்ணியின் குஞ்சுகுருமான்கள் கும்மாளமடிப்பதை அவள் பார்க்காத நாட்கள் இல்லை.

மூக்குமுட்டக் குடித்துவிட்டு வந்து நன்னியன் கண்ணியை உதைக்க, குஞ்சுகுருமான்கள் வீரிட்டுக் கத்த, அந்தக் குடிசைக்குள் நடக்கும் தளைப்பிள்ளயை அடிக்கடி அம்மாள் கேட்கிறாள். ஆனாலும், விடிகாலையில் ஒன்றுமே நடக்காதது போல அவளும் அவனும் உலாவி வருவதை பார்த்து ஆச்சரியப்பட்ட நாட்கள் பல.

இந்த உறவுக்கான மூலகாரணத்தை அறிய அவள் நுணுக்கமாக எப்போதும் எண்ணியதில்லை.

''என்னெடி கண்ணி, நன்னியனுக்கு இரவு கண் கெட்ட வெறிபோலை கிடக்கு, உனக்குப் பனங்காய்க் குத்துக்கள் தந்தான்'' என்று நேற்று அம்மாள் கேட்ட போது 'உந்தக் குஞ்சுகுருமான்களை நான் பெத்துவிட எல்லாத்துக்குமாய் கஸ்டப்பட்டுப் போட்டு வந்த மனிசன், நான் பக்கத்திலை இருக்கேல்லை எண்டு அஞ் சாறுதரம் அடிச்சுப் போட்டான் பாவி'' என்று கூச்சம கொஞ்சமுமின்றிப் பதில் சொல்லிவிட்டாள்.

இப்போது அம்மாள் இதை நினைத்துப்பார்த்தாள்.

குளியல் அறையில் இன்று கண்ணி சொன்னவை. களை அவள் நினைத்துப் பார்க்கிறாள்.

ஏராக்கள்ளைப் பற்றிச் சொன்னாள்.

சரிவந்தாலும் வரும் என்றாளே!

ஏராக்கள் என்றால்?

அது அவள் நினைவுக்கு வந்துவிட்டது.

பல ஆண்டுகளுக்கு முன்......

www.padippakam.com



அப்போது அம்மாளுக்கு வயது பதினெட்டு!

அதுவரை அவள் பக்குவப்படவில்லை.

பலர் அவளை இருளி என்றனர். பதினெட்டு வயது வரை எதுவும் தோற்றப்படவில்லை என்றால் அப்படித் தான் அழைப்பார்கள்.

தங்கைமார் இருவர் பக்குவமடைந்து இல்லற சுகத்தை நோக்கி விறுவிறென்று வளர்ந்து விட்டனர்.

இவள் நோஞ்சி!

நிறத்தில் சிவந்திருந்ததால் நோஞ்சித்தனம் பட்டென்று தெரிந்தது.

இவளின் தாயானவள் பல நாட்டு வைத்தியங்களைப் பார்த்துவிட்டாள். பட்டணத்தில் இரண்டொரு ஆங்கில வைத்தியர்களையும் சந்தித்துவிட்டாள்.

பயன் எதுவும் கிடைக்கவில்லை.

அவள் பிறக்கும்போது மருத்துவம் பார்த்தவள் அவளுக்குப் பதினெட்டு வயது வந்தபோது ஏராக் கள்ளுக் குடுத்துப் பார்க்கும்படி சொன்னாள்.

ஏராக்கள்ளுத் தயாரிப்பதென்பது மிகவும் சிரமமான நுணுக்கமான ஒரு வேலை!

கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, இராசாளி எச்சம் இப்படி பல சரக்குகள் சேர்த்து பொட்டளிகட்டி, புதுமுட்டியை வரகு வைக்கோலில் சுட்டெடுத்து, முட்டியி லிட்டு கன்னிப்பெண்பனை முதல் பாளையைச் சேர்வை யாக்கி, பொழுது அஸ்தமனத்திற்குப் பின் சேர்வைகாரன் வாய் பேசாமல் ஏறிக்கட்டி, பொழுது உதயம்வரை ரோசாவிரதம் அநுட்டித்து, உதயத்திற்கு முன்னதாக இதை இறக்கி எடுத்து நோயாளியை குடிக்க வைத்துவிட வேண்டுமாம்!

www.padippakam.com



இதை அப்படியே சாஸ்திரிய விதிப்படி செய்துமுடிக் கக்கூடிய முருகன் என்ற ஒருவனை தாயானவள் தேடிப் பிடித்துவிட்டாள்.

ஒவ்வொரு நாளும் புத்தம் புதிய சரக்குப்பொட்டளி,

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதுமுட்டி,

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கத்தை வரகு வைக் கோல்,

ஒவ்வொரு நாளும் முருகனின் ஏத்து இறக்குக்கூலி.

இப்படி ஒரு மண்டலம், என்ற கணக்குப்படி நாற்பது நாட்கள்!

இது மிகவும் செலவானதுதான்!

ஆனாலும் என்ன செய்வது, கடனைத் தனியைப் பட்டு அவளின் தாயார் இதற்கு ஏற்பாடு செய்து விட்டாள்.

பொழுது உதயத்திற்கு முன் எழுந்திருந்து முருகனுக் காகக் காத்திருந்து அவள் ஏராக்கள்ளை அருந்தினாள். முருகன்மேல் படர்ந்திருந்த மரச்சிணியை மேவிக் கொண்டு ஏராக்கள் கம, கம என்ற வாசனை!

மிகவும் கணிசமான தித்திப்பு!

இந்தத் தித்திப்பும், இந்த வாசனையும் அவளை நடுராத்திரியிலேயே எழுப்பிவிடும்.

பதினைந்து நாட்கள் வந்தபோது மஞ்சளாகிக் கிடந்த அவள் கண்கள் நீலமாகி வந்தன.

இருபது நாட்களுக்குப்பின் அவள் இதழ்கள் சிவந்து அதில் மகரந்த வழுவழுப்புத் தெரிந்தது.

முப்பது நாட்களைத் தாண்டி விட்டபோது அவளின் ஜனனேந்திரிய உறுப்புக்களில் ஒருவிதக் கதகதப்பு—சுணைப்பு!

www.padippakam.com



முப்பத்தைந்தாவது நாள்!

அம்மாள் புத்தி அறிந்துவிட்டாள்!

இவைகளெல்லாவற்றையும் அம்மாள் இப்போது நினைத்துப் பார்க்கிறாள்.

அந்த வாசனை!

அந்தத் தித்திப்பு!

அந்த அதிசய மாற்றம்!

அம்மாளை அது கண்மூட விடவில்லை.

படுக்கை அறை சிவப்பு மஞ்சள் வெளிச்சத்தில் மறு கட்டிலில் படுத்திருக்கும் கணவனின் முகம் நன்றாகத் தெரிந்தது.

அவர் குறட்டை விட்டுத் தூங்குகிறார்.

குறட்டைச் சத்தம் அவளுக்கு அருவருப்பைத் தந்தது.

கால்களை இடாப்பி எறிந்து கொண்டே— அவர் சூனியப்பிரதேச மயற்பரப்பில் பாதி செருகுண்டு கிடக்கும் கட்டையைப் போன்று போர்வைக்குள் ஒரு காலைச் சொருகிக் கொண்டே அடங்கிப் போய்க் கிடக்கிறார்.

ஃ ஃ ஃ

"என்ரை அந்தாளுக்கென்ன குறை!" என்று ஊத்தை உருட்டிவிட்டபோது கண்ணி சொன்னாளே ஒரு சொல்லு! அந்தச் சொல்லுக்குள்ளே சங்கிலிச் சுருளாகக் கிடந்த உள் அர்த்தங்களையெல்லாம் இப்போது அம்மாள் நுணுக்கமாகத் தொட்டு, அணு, அணுவாக ஆராய்ந்து பார்க்கத் தொடங்கி விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



கண்ணியின் அனுபவங்களையெல்லாம் தன்மீது ஏற்றி ஒருவகை இரவல் சுகத்தைத்தான் அம்மாள் காண்கிறாளோ? சற்றுவேளை கண்களை மூடிக் கொண்டாள்.

தனக்குப் புத்தி அறியவைத்த அந்த மரச்சிக்கார முருகனை நினைவுக்குக் கொண்டு வர அவள் முற்பட்டாள்.

அவள் மெளனச் சேற்றுக்குள் புதைந்து கொண்டே சேர்வையாக்கிக் கொடுத்த அந்த புதுமுட்டி, பச்சைப் பிழா ஏராக்கள்ளு!

அதன் மகரந்த வாசனை!

அதன் தித்திப்பு!

முருகன் என்ற அந்த உருவம் அம்மாளின் மனதில் இல்லை.

கன்னியின் வடலியின் முதல் பாளையைத் தட்டி இடுக்கி வாட்டி, வதக்கி, வருத்திச் சேர்வையாக்குவதிலிருந்து அம்மாள் புத்தி அறியும் வரை அவன் பொழுது கருகியதன் மேலும், பொழுது புலர்வதற்கிடையிலுந்தான் வந்து போனான். அந்த உருவத்தை சுவாச நுகாச்சியினால் மட்டுந்தான் அவள் நினைவுக்குக் கொண்டுவர முடிகிறது.

வியர்வையோடு ஒட்டிப்போன மரச்சிணி வாடை!

இருட்டோடு இருட்டான கறுப்பான ஒரு உயர்ந்த தோற்றம்!

அவ்வளவுதான்!

இரண்டு நாட்களுக்கு முன் கணவன் சண்முகம் பிள்ளை சொன்ன ஒரு வார்த்தைத் தொடரும் ஏன் இந்த வேளையில் அம்மாள் மனதுக்குள் வந்து நிறைக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



''நீர் அசட்டையாக இருந்திருப்பீர், வயிரவன் விளையாடிப் போட்டான்.''

அப்பாடா இத்தொடர் பெரும் சுமையாக நெஞ்சுக்கு மேல் நிற்கிறது.

''பலவீனங்கள் நெஞ்சைப் பிழிந்ததனால்தான் கணவன் அப்படி ஒரு தாக்கமான வார்த்தைத் தொடரைப் பகிடி போலச் சொல்லியிருக்க வேண்டும்'' என்ற விதத்தில் அவள் கூச்சத்துடன் ஒருதடவை அந்தச் சொற்றொடரை செவிப் புலனுக்கூடாக உள்ளுழுத்துப் பார்த்திருக்கிறாள்.

சாமக்கோழிகள் அங்குமிங்குமாக ஆண்மையுடன் கூவின.

ஆட்காட்டிக் குருவிகள் எதையோ யாருக்கோ குறி காட்டிச் செல்வதுபோல பரவைக் குளத்திற்கு மேலாக விக்கி விக்கிக் கத்திச் சென்றன.

பகலோடு புழுக்கத்திற்காகத் திறந்து விடப்பட்ட ஜன்னல்களுக்கூடாக மழைக்காற்று ஒறு வைத்து வீசி வந்தது.

மாந்தோப்புக்கூடாக மின்னல் ஒன்று கொடிவிட்டு மறைந்தது.

பிரளயம் ஒன்று வருவது போன்ற முன்னெச்சரிக்கை போன்றதாக அவை இருக்க வேண்டும்.

குளிராக வீசிய அந்த ஊதைக் காற்றின் தாக்குதல் ஐயாவை எதுவுமே செய்து விடவில்லை.

அவரின் மெய்யுறக்கத்தை எதுவுமே கலைக்கவில்லை.

அம்மாள் எழுந்து சென்று ஜன்னல் கதவுகளை அடித்து மூடினாள்.

எந்த ஓசையும் ஐயாவைத் துயில் எழ கலைக்க வில்லை.

படிப்பகம்

www.padippakam.com



வெளியே மழை கொட்டத் தொடங்கியது!

முற்றத்துப்புறமாக கோவிந்தனின் அனுங்கல், முனகல் கேட்டது.

அத்துடன் இன்னோர் நாயின் முனகலும் சேர்ந் திருப்பதாக அம்மாள் கிரகித்தாள்.

அந்தப் புதிய குரலின் ஜீவனைப் பார்த்துவிட அவள் விரும்பினாள்.

ஒருதடவை ஜன்னலைத் திறந்து இருளுக்குள் நோட்ட மிட்டாள்.

ஒரு மண்ணும் தெரியவில்லை.

படிப்பகம்

# 7

நன்றாக விடிந்து விட்ட பின்பு ஐயா கோவிந்தனுடன் பரவைக் குளத்தைத் தாண்டி அப்பால் போனதும் நன்னியன் பெண்டில் கண்ணி மாந்தோப்பு முற்றத்திற்கு வந்துவிட்டாள்.

அம்மாள் இல்லை.

திறந்திருந்த முன்கதவால் நால்சார் முற்றத்திற்கு வந்தாள். அங்கும் அம்மாள் இல்லை.

மாட்டுக் கொட்டகைப் பக்கம் பார்த்தாள்; அங்கும் இல்லை.

கிணற்றடிக்குப் போனாள். அம்மாள் இல்லை.

குளியல் அறைக்குள், அல்லது மலஜல கூடத்துள் என்று நினைத்துக் கொண்டு சற்று வேளை காது கொடுத்துக் கேட்டாள். ஒரு சத்தமும் இல்லை.

இரண்டு தட்வைகள் அவள் அம்மாளுக்காகக் குரல் வைத்தாள். மூச்சுமில்லை; பேச்சுமில்லை.

www.padippakam.com



கண்ணி திரும்பிச் சென்று விட்டாள்.

சற்றுவேளைக்குப் பின் பரவைக் குளத்திற்கு அப்பால் வெடிச் சத்தம் ஒன்று கேட்டது.

ஐயா துவக்கு வேட்டை ஆடுகிறார்.

பொழுது சற்று உயர்ந்து வந்தது.

கோவிந்தன் முன்வர துவக்கைத் தோளில் போட்டுக் கொண்டு ஐயா பரவைக் குளத்தைத் தாண்டி வந்தார்.

''நன்னியன் பெண்டில், நன்னியனெட்டை ஒரு அலுவல் சொன்னனான், விடியப்புறம் போட்டு வரச் சொல்லி. போட்டானே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

''ஓமாக்கும்! விடிய ஏதும் தங்கடை அலுவல் இருந்தா அந்தாளுக்கு இரா நித்திரையும் வராது, விடி வெள்ளி காலிக்க முந்திப் போட்டுதாக்கும்'' என்று கண்ணி பதில் சொன்னாள்.

''அதுதானை கேட்டன்'' என்று சொல்லிக் கொண்டே ஐயா தோப்புக்குள் வந்துவிட்டார்.

'இண்டைக்கும் ஐயாவின்ரை வெடி பண்டாரந்தான். கொஞ்ச நாளாய் பண்டாரந்தான் வைச்சுப்போட்டு வாறார்' என்று கண்ணி மனதுக்குள் சொல்லி சிரித்துக் கொண்டாள்.

பத்துமணிக்கு மேல் ஐயாவின் கார் இரைந்து செல்லும் ஓசை கேட்டது.

அதற்குப் பின் கண்ணி மாந்தோப்பு முற்றத்திற்கு வந்தாள்.

அவளுக்குப் பின்னால் பொன்னிப் பொட்டச்சியும் எட்டாவது குத்தியனும் வர, கடைக்குட்டியை இடுப்பில் வைத்துக்கொண்டே அவள் வந்தாள்.

www.padippakam.com



கோவிந்தனின் உறுமல் கேட்கவில்லை.

கோவிந்தனின் வீடு வெறுமனே கிடந்தது.

ஐயாவுடன் அவனும் போயிருக்க வேண்டும்.

அம்மாள் முந்தானைச் சேலையை மாறித் தோளில் குவித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அவளின் இமைகள் தடித்துச் சிவந்திருந்தன.

முகம் ஊதிப்போயிருந்தது.

இரவெல்லாம் அம்மாள் தூங்கவில்லை என்பதனை ஒரே பார்வையிலேயே கண்ணி அனுமானித்துக் கொண்டாள்.

''கொஞ்ச நாளா ஐயா பண்டாரவெடிதான் வைச்சுக் கொண்டு வாறார். இண்டைக்கும் வேட்டை ஒண்டும் அப்பிடேல்லைப் போலை கிடக்காக்கும்'' என்று அவள் கேட்டாள். அம்மாள் திடுக்கிட்டது போலச் சணவேளை சமைந்து விட்டாள். அவளின் உச்சந்தலையில் ஏதோ ஒன்று குத்தி இருந்தது.

அம்மாளுக்கு இப்படி ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கண்ணி அப்படிப் பேசவில்லை. அம்மாளைச் சிரிக்கவைத்து உற்சாகப்படுத்துவதற்காக மட்டுமே அவள் இப்படிப் பேசினாள். அது இப்படி ஆகிவிட்டது.

''எடி நன்னியன் பெண்டில், வாயைக் கொஞ்சம் அடக்கிப் பேசெடி, தலையிலை ஏறிச் செவியைக் கடிக்கிறாய், கோவிச்சி வேசை.''

என்று அம்மாள் சீறினாள்.

இதைக் கண்ணி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவள் பேசாமல் மரக்கட்டைபோல நின்றாள்.

அவள் இடுப்பிலிருந்த கடைக்குட்டி அவளின் முந்தானையில் சளியைச் சிந்திக் கொண்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com


அம்மாள் படக்கென்று உள்ளே போய்விட்டாள்.

கண்ணி சற்றுநேரம் கல்லாய்ச் சமைந்து போனாள். பின்பு தன்னைச் சுதாரித்துக்கொண்டு அவள் மாந்தோப்பின் எல்லையை விட்டுத் தன் குடிசைக்கு வந்தாள்.

கண்ணி வீட்டுக்கு வந்துவிட்ட போதுதான் அழுகை வந்தது. இதுவரை அவளை வேசை என்று யாரும் பேசியதில்லை. அதிலும் கோவிச்சி வேசை என்று சாதி இழுத்து யாரும் பேசத் துணிந்ததில்லை. இப்போது நயினாத்தி அம்மாள் இப்படி பேசிவிட்டாளே.

சற்றுவேளை மனக்கறுவியத்துக்குப் பின் நிதானத்திற்கு அவள் வந்துவிட்டாள்.

அம்மாளுக்கு ஏன் இப்படி ஆத்திரம் வந்தது? என்று அவள் மனது ஆராயத் தொடங்கிவிட்டது.

நேற்று ஏராக்கள்ளைப் பற்றி......

''என்ரை அந்தாளுக்கு என்ன குறை'' என்று தான் கேட்டதும், ''ஏராக்கள்ளுக்குச் சரிவந்தாலும் வரும்'' என்று கேட்டதின் பின் அம்மாளுக்கு வந்த கோபம்.

இன்று......ஐயாவின் பண்டார வெடி பற்றி...........

''கொஞ்ச நாளாய் ஐயா பண்டாரவெடிதான் வைச்சுக் கொண்டு வாறார்......''

இது ...... இது ......?

கண்ணிக்கு அம்மாளின் நிலை இலேசாக விளங்கியது.

கண்ணி பதிமூன்று பெற்றுவிட்டு பதினான்காவதுக்காக காத்திருக்கிறாள். அனுபவமுதிர்ச்சி பெற்றவள்.

கண் இமைகள் தடித்துச் சிவந்து...... முகம் உப்பி...... இரவெல்லாம் அம்மாள் நித்திரை செய்யவில்லை......

கண்ணியின் அனுபவ முதிர்ச்சி அவளுக்குச் சகலத்தையும் விளங்க வைத்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அம்மாளுக்காக அவள் இப்போது அனுதாபப் பட்டாள்.

பகல் முழுதும் கண்ணி மாந்தோப்பு முற்றத்திற்குப் போகவில்லை.

மாந்தோப்பு மாளிகையின் குத்து, அரைப்பு, இடிப்பு, வறுப்பு போன்ற பிரதானமான வேலைகள் கூட கண்ணி இன்றியே நடந்து முடிந்து விட்டது. கண்ணிமேல் கொண்ட ஆத்திரத்தினால் அம்மாள் பற்களைக் கடித்துக் கொண்டு சமாளித்திருக்க வேண்டும்.

அம்மாள் தானாகக் கூப்பிடும்வரை அந்த முற்றத்திற்குப் போவதில்லை என்று கண்ணி முடிவெடுத்துக் கொண்டாள்.

பொழுது கருகிவிட்ட பின்பு நன்னியன் வந்து சேர்ந்தான். அவன் மாந்தோப்பு முற்றத்திலிருந்துதான் வருகிறான் என்பது கண்ணிக்கு நன்கு தெரிந்தது. மாந்தோப்புக் குள்ளாலேயே அவன் வந்து சேர்ந்தான், கண்டாயக் கடவையால்.

வந்ததும் வராததுமாக "இஞ்சேர், உனக்கு ஏதும் சுகமில்லையாக்குமெண்டு அம்மா சொன்னா. ஏன் என்னடியப்பா சுகமில்லை?" என்று அவன் கேட்டான்.

"ஆர் சொன்னது? அம்மாவோ? அப்படியெண்டு நினைச்சவ வேலியாலை எண்டாலும் ஒருக்கா எட்டிப் பாத்தாளோ?" என்று கண்ணியும் சுணங்காமல் கேட்டு விட்டாள்.

"ஏன்றியப்பா அவவைக் கோவிக்கிறாய்? அவவுக்கும் எப்பன் சுகமில்லையாம், இண்டு முழுக்க படுத்த படுக்கைதான் இப்பதான் எப்பன் ஒழும்பியிருக்கிறா! அம்மா விஷயம் தெரியாமைக் கோவிக்கிறதேடி? உனக்கென்னடியப்பா சுகமில்லை" என்று நன்னியன் உரிமையோடு கண்டித்தும் பரிவோடும் கேட்டான்.

www.padippakam.com



''சும்மா உதலை இருந்தெழும்பினாப்போலை நாரியிக்கை புடிச்சுக் கொண்டுதப்பா, இப்ப கொஞ்சம் சுகமாய்க் கிடக்கு!'' என்று அவள் பொய்யொன்றுக்கு இயல்பான உண்மை உருவம் கொடுத்தாள்.

இரவு பெய்துவிட்ட பெருமழைக்கு பொருக்காயிருந்த பரவைக்குளம் நனைந்து நெச்சிப்போய் விட்டமையால் சேற்று மணத்தை காற்று அள்ளி வந்து கொட்டிக் கொண்டிருந்தது.

''நீயும் ஐயா வீடு, ஐயாவின்ரை வேலை எண்டு விடிஞ்சாப் பொழுதுபட்டா ஓடித்திரியிறதுதான். இஞ்சை படுத்தெழும்ப இடமில்லை. ராத்திரிப் பெஞ்ச மழைக்கு ஒழுக்கு விழுந்து வீடு வெள்ளமாப் போச்சு. இதுவும் ஒரு அறுந்த சீவியந்தான்'' என்று கண்ணி பேச்சை வேறு பக்கத்திற்குத் திருப்ப முயன்றாள்.

'இனித் துவங்கியிட்டாள்! நான் என்னெடி செய்யிறது? உந்த நரகாலியள் உழைக்கிறதெல்லாத்தையும் தின்டு தள்ளுதுகள்! ஐயாவெட்டை மேலதிகமாய் நெடுகக் காசு களைஞ்சு வேண்டிறது மரியாதையேடி? நான் கேக்கிறன்.''

நன்னியனின் இந்தக் கேள்வியுடன் பேச்சு வேறு பக்கம் திரும்பியே விட்டது.

''என்ன நரகாலியளோ? பதினொரு மாசத்துக் கொண்டு வெக்கமில்லாமல் பந்தையம் பிடிச்சுப் பெத்து வைச்சுக் கொண்டு இப்ப நரகாலியளோ? நீயுமொரு மனிசனெண்டு! தூ!'' அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

'என்னெடி நானோடி பெத்தனான்? சும்மா கிடக்க மாட்டாமைப பெத்துத் தள்ளிப் போட்டு இப்ப என்னைச் சாட்டிறாள இவள்!'' என்று மெதுவான பகிடியுடன் பேச்சை மழுப்ப முயன்றான் நன்னியன்.

''கிழட்டுப்பிள்ளை பெத்துப் பெத்துப் போட்டு கதையைப் பார்!'' என்று கண்ணியும் நசித்துக் கூறினாள்.

www.padippakam.com



''எடி பகிடி கூடிப் பேச்சு. எனக்குக் கோபம் வருங் கண்டியோ!''

இதற்கு மேல் கண்ணி பேசவில்லை. விட்டு விட்டாள்! காலை அம்மாளுக்கு விட்ட பகிடி அவளுக்குப் பாடமாக இருந்தது. அதனால் விட்டு விட்டாள்.

மாந்தோப்பு முற்றத்தில் கார்கள் இரண்டு, மூன்று வந்து நின்று கதவடிக்கும் ஓசை கேட்டது.

''என்ன ஐயா வீட்டை ரெண்டு, மூன்டு கார் வந்திருக்குப் போலை கிடக்கு!'' என்று கண்ணி குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டாள்.

''அவை அம்மன் கோயில் காரர் எல்லோரும் ஏதோ சேர்ந்து கதைக்கப் போகினமாம். அவையைத்தான் வரச் சொல்லி காலமை என்னைப் போக்காட்டினவர்.''

''என்னத்துக்காமப்பா?''

''அம்மன் கோயில் கொடியேத்தத்திவண்டு நளம், பள்ளுகள் உள்ளுக்குப் போகப் போறாங்களாம், அதுக்காகத்தான் இருக்கும். நானும் சும்மாயொருக்காப் போய் அறிஞ்சு கொண்டு வாறன்!'' என்று கூறிக்கொண்டே நன்னியன் எழுந்து மாந்தோப்புக்குள் போய்விட்டான்,

நன்னியன் அங்கே போனபோது நடு மண்டபத்துக்குள் பலர் கூடியிருந்தனர். நன்னியனைக் கண்டதும் எல்லோரும் அவனை ஏற இறங்கப் பார்த்தனர்.

''அது எங்கடை நன்னியன். அவன்ரை ஆக்களும எங்களோடை தான் நிப்பாங்கள். அவங்கள் எங்கடை பிள்ளையள். நீங்கள் விஷயத்தைப் பேசுங்கோ பயப்பிடாமை.''

என்று சண்முகம்பிள்ளை சமாளித்தார்.

பேச்சுக்கள் தொடங்கி விட்டன.

''ஐயர் என்னவாம்?''

www.padippakam.com



''அவர் பயப்பிடுகிறார், கோயிலுக்கை போறவங்களை தடுக்கப் படாதெண்டு சட்டமிருக்கேக்கை விடத்தான் வேணும். இல்லாட்டா கோடு, கச்சேரிக்குப் போக வேணுமெண்டு சொல்லுறார் கிளாக்கர்.''

''கோயில் வெளி மண்டபத்தைச் சுத்தி கிறாதி ஒண்டு போட்டாலென்ன?''

''மரக்கிறாதி போட்டா அவங்கள் தள்ளி விழுத்திப் போட்டு உள்ளுக்குப் போவாங்கள், போட்டா இரும்புக் கிறாதி போடவேணும், மாஸ்ரர்.''

''அதுக்கு நாளும் பத்தாது, இன்னும் ரெண்டு மாதந்தான் இருக்குக் கொடியேற''

''கங்கிறீற்றுக் கட்டையளை சுத்தி நட்டுப் போட்டு முள்ளுக்கம்பி அடிச்சு விட்டால் நல்லதெண்டு நினைக்கிறன்.''

''ஓ, அப்பிடித்தான் செய்யிறது நல்லது. சிலவுகள் குறைவு, கெதியாயும் முடிஞ்சு போடும், றிப்போட்டர் ஐயா சொன்ன மாதிரித்தான் செய்வம்.''

''அவங்கள் கம்பியை வெட்டிப் போட்டு உள்ளுக்குப் போனா என்ன செய்வியள்? றிப்போட்டர்.''

''அவன் சின்னப் பொடியன் எண்டாலும் அவன் சொல்லுறது சரி, சிலவைப்பாத்தா ஒண்டும் செய்யேலாது, உவன் கொல்லச் செல்லத்துரையனெட்டைக் கொன்றாக் குடுத்தா, ராப்பகலாய் செய்து முடிச்சுப் போடுவான்.''

''அவர் சொல்லுறதுஞ் சரிதான். எண்டாலும் கொஞ்சம் பிழை இருக்குமாப்போலை கிடக்கு. கிறாதியால் போட்டு அடைச்சுப் போட்டா எங்கடை ஆக்களும் வெளியிலைதான் நிக்கிறதோ? எங்கடை பெண் புரசுகளும் வெளியிலை நிக்கிறதோ? சாமியையும் வெளியாலை கொண்டராமல் உள்ளுக்கு வைச்சிருக்கிறதோ?''

www.padippakam.com



''ஆகப்பயந்தா ஒண்டும் செய்யேலாது தம்பியவை! முள்ளுக் கம்பி வேலியைத் தான் போடுவம், ஒரு படலையும் விடுவம். நளம், பள், பறைக்குப் பயந்து ஆக நடுங்கிறியள். முள்ளுக்கம்பிப் படலையைச் சுத்தி எங்கடை கோவியப் பொடியளை நிப்பாட்டுவம், உள்ளுக்கு விடுகிற ஆக்களைப் பாத்து விடுவம், அப்பிடி வேலியையும் வெட்டிப் போட்டு கோவியப் பொடியளையும் சரிச்சுப் போட்டு அவங்கள் உள்ளுக்குப் போவாங்களெண்டே நீங்கள் நினைக்கிறியள்? பொலிசுக்காறர் வந்து நிண்டா அவையின்ரை அலுவல் பாக்க ஆளிருக்கு! அதுக்குப் பயப்பிடத் தேவையில்லை. உங்கையிருந்த விதானை— அவன் தான் அந்த நளப்பொடியன், அவனுக்கு நாளைக்கு இன்ரடீக்சன் நோட்டீஸ் வரும். எங்கடை அம்பலவாணப் பரியாரியின்ரை பொடியன் தான் நாளையிண்டைக்கு திரும்பியும் விதானையா வாறான்! சும்மா நிழலைக் கண்டு பயப்பிடாதையுங்கோ!''

எல்லாப் பேச்சுக்களினதும் இறுதியில் சண்முகம் பிள்ளையின் பேச்சும், முடிவும்தான் சரியானதாக அனுமதிக்கப்பட்டது.

பேச்சுக்கள் முடிந்தபோது, அந்தந்தக் காரியங்களைக் கவனித்துக் கொள்ள ஒவ்வொருவர் பொறுப்பும், பொறுப்புள்ளவர்களைக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

''எங்கடை கோவியப்பொடியளின்ரை பொறுப்பை நன்னியனிலை விடுவம், அவனையும் கொமிற்றிலை போடுங்கோ'' என்று சண்முகம்பிள்ளை இறுதியாக ஒன்றைச் சொன்னபோது எல்லோரும் அவர் முகத்தையே பார்த்தனர்.

''நீங்கள் ஏன் பாக்கிறியள் எண்டு எனக்கு விளங்குது. நான் வெளிவெளியாய்ச் சொல்லுறன், அவனை எப்படி

கோ—8

www.padippakam.com



எங்கடை சபையிலை போடுறதெண்டு நீங்கள் யோசிக்கிறியள். இனிமேல் எங்களுக்கை உதுகள் பாக்கேலாது! நான் சொல்லுறன் அவனைப் போடுங்கோ!''

சண்முகம்பிள்ளையே பேசி முடித்ததும் எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டும், ஒரு புறத்தே நின்ற நன்னியனைப் பார்த்துக் கொண்டும் சரியென்று தலையசைத்தனர்.

''நானும் ஒரு விஷயம் சொல்லப் போறன். உள்ளதுகளை நாங்கள் மறைக்கப்படாது, எங்கடை ஆக்களுக்கையும் சில பொடியள் அவங்கடை பக்கத்துக்கு நிக்கிறாங்கள் எண்டு கேள்வி, தனித்தனிய ஆக்களின்ரை பேர்களைச் சொல்ல நான் விரும்பேல்லை. அதையும் நாங்கள் கணக்கெடுத்துக் கொள்ள வேணும்'' என்று வயதில் சற்று இளையதான ஒருவன் சொன்னான்.

''தம்பி சொல்லுறதும் கேக்குது! மலிஞ்சாச் சந்தைக்கு வருந்தானே தம்பி. அதைவிடும்; வரேக்கை பாம்பம்! ஏன் கனக்க, போனகிழமை கிணத்துக்கை குதிச்சுச் செத்த வயித்தியன்ரை பெட்டையோடை பண்டாரப் பொடியன் கொண்டாட்டமாயிருக்கேல்லையே? உதெல்லாம் ஒரு வயதுச் சேட்டை தம்பி, நாளடைவிலை சரிவந்திடும் விட்டிடுவம்!''

சண்முகம்பிள்ளையின் கடைசிப் பேச்சுடன் கூட்டம் கலைந்து போகத் தொடங்கியபோது, ''கிளாக்கர், நாளைக்குக் கச்சேரிக்குப் போட்டு வந்தாப் போலை என்னை ஒருக்கா சந்தியும், மாஸ்ரர்! நாளைக்கு அரை நேரப் பள்ளியெல்லே, ஒருக்கா மூண்டு மணிபோலை வந்திட்டுப்போம். சொன்னாப்போலை மறந்து போனன், சங்கக்கடை மனேஜர் தன்னையும் கூப்பிடச் சொல்லிச் சொன்னவர், தம்பி நீர்தான் எல்லோருக்கும் இளையனீர். காலைமை ஒருக்கா மனேஜரட்டைப் போய் சங்கக்கடைக்குப் போறதுக்கிடையிலை ஒருக்கா என்னைச்

www.padippakam.com



சந்திச்சுக் கொண்டு போகச் சொல்லும்'' என்று பலபேருக்கும் பல ஆக்ஞைகளையும் பிறப்பித்தார் சண்முகம் பிள்ளை.

கார்கள் புறப்பட்டு விட்டன.

''எட, இஞ்சைபார் தீர மறந்து போனன், நன்னியன், நீ ஒருக்கா இப்ப போய், பிராமணியை ஒருக்கா நான் கூட்டியரட்டாமென்று கூட்டிக் கொண்டு வா, ஓடு'' என்று நன்னியனுக்கும் ஒரு வேலையைக் கொடுத்தார்.

படிப்பகம்

www.padippakam.com

# 8

இரவு ஒண்டு பாதிக்கு மேல்தான் நன்னியன் வீட்டுக்கு வந்தான். வரும்போது அவனுக்கு அளவான வெறி. வழமைக்கு மாறாக கள்ளு மணத்திற்குப் பதில் அவனில் சாராய வாசனையோ அல்லது வேறேதோ ஒரு வாசனையோ வீசியது. முழிப்பிருந்த கண்ணிக்கு இது பட்டென்று புரிந்தது.

"அமாவாசை இருட்டுக்குள்ளை ஒண்டு பாதி மட்டும் என்னப்பா செய்தனீ" என்று கண்ணி கேட்டாள்.

ஐயா வீட்டில் கூட்டம் முடிந்து ஐயர் வீடு வரை சென்று ஐயரை அழைத்து வந்து ஐயா வீட்டில் விட்டுவிட்டு வருவது வரை சொல்லிவிட்டு, "இஞ்சை எழும்பு, வயித்துக்கை விறாண்டுது. ஐயரைக் கொண்டு போய் விடவும் வேணும்" என்று கூறிக்கொண்டு சிமிலி விளக்கைத் தூண்டி விட்டு அடுக்களைப் பகுதிக்குப் போனான்.

கண்ணி பானைக்குள் அகப்பையை வைத்த போது அகப்பை சோற்றுக்குள் புசுக்கெனப் புகுந்தது.

படிப்பகம்

www.padippakam.com



"சோறுவேத்துப் போச்சப்பா. தண்ணியூத்திப் பிளி யட்டே?" என்று அவள் கேட்டாள்.

தண்ணியூற்றிப் பிழிந்த சோற்றைக் கிழங்குச் சட்டியில் போட்டு நண்டுக் குழம்பையும் ஊற்றிக் குழைத்துத் தின்றபோது அது அவனுக்கு மிகவும் இதமாக இருந்தது.

"என்னவாமப்பா? வயிரவன்ரை ஆக்களை கோயிலுக் கைவிட எல்லாரும் சம்மதிச்சுப் போட்டினமே? சண்டை கிண்டை இல்லாமை அவளவையும் கோயிலுக்கை போய்க் கும்பிட்டா நல்லது தானெயப்பா!" என்று கண்ணி தனது விருப்பத்தை முன்கூட்டியே சொல்லிக் கொண்டாள்

"என்ன, கோயிலுக்குள்ளை விடுகிறதோ? அவங் களையோ? நாளைக்குச் சம்மந்த ஓம்மந்தமுமெல்லோ கேப்பாங்கள்!" என்று தன் சார்பில் நன்னியனும் பேசி விட்டான்.

"ஓ. ஓ, ஊருக்கை சம்மந்த, ஓம்மந்தங்கள் இரகசியம், இரகசியமாய் மாறி நடக்கு. அதுகள் எனக்கெல்லோ தெரியும். ஏன் கனக்க, கொட்டப்பட்டிச் செல்லப்பற்றை இளைய பொடியனையும் கள்ளுக்காது வயிரவனையும் கிட்டக்கிட்ட விட்டிட்டுப் பார் ஒருக்காப் பாப்பம்! ஏன் போயிலைத் தோட்டச் சின்னப்பன்ரை பேத்தி புருஷன் செத்தாப் பிறகு கள்ளப்பிள்ளை பெறேல்லையே, அந்தப் பொடிச்சியையும் தம்பையாச் சட்டம்பியாரையும் ஒத்துப் பாத்துப் பார் ஒரு நாளைக்கு!" என்று கண்ணி சற்றுப் பலமாகப் பேசினாள்.

"எடி அதுக்கு ஏன்றி கத்திறாய்? உனக்கொரு புதினம் சொல்ல மறந்திட்டனடி, 'கோயில் திருவிழா நடத்திற சபையிலை என்னையுமெல்லே சேத்திருக்கினம். இப்ப நான் வெள்ளாளனாக்கும்!'' என்று வாய் நிறையக் குரல் கொடுத்தான் நன்னியன்.

www.padippakam.com



''ஓமோம், இப்ப விளங்குவது. உன்னை ஏன் சபையிலை போட்டிருக்கினமெண்டு! உனக்கு அது விளங்கேல்லையேப்பா? இவ்வளவு காலமும் எங்கடை ஆக்களைச் சபையிலை சேத்துக் கொள்ளாதவைக்கு, இப்ப அவங்கள் கோயிலைக் கைபோக வெளிக்கிட்டதுக்குப் பிறகு தானை உந்த எண்ணம் வந்திருக்கு? நயினாரவைக்கு நல்ல யோசனை வந்திருக்கு, தாங்கள் ஏன் வீணாய்த் தொல்லையுக்கை போவானெண்டிட்டு இப்ப எங்கடை ஆக்களையும் அவங்களையும் மோதிவிடப் பாக்கினம், நீயும் உதைப் பேத்தனமாய் ஒத்துக் கொண்டு வந்திட்டு இப்ப கணக்கில் கதைக்கிறாய் என்ன? ஏனப்பா பேசறாயில்லை? இத்தனை வரையிலை அவங்களுக்கும் எங்களுக்கும் ஒரு தொல்லையும் வரேல்லை இனி வரப் போகுது! நயினாரவை உண்டாக்கப்பாக்கினம்!'' இப்படிக் கண்ணி தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள்.

''எடி, எடி, சும்மா விசர்க்கதை கதைக்கிறாய் நீ! இப்ப அவை முந்தியைப் போலையெண்டு நீ நினைச்சுக் கொண்டிருக்கிறாய்! சுண்ணாகத்திலை, சங்கானையிலை இப்பிடிக் கன இடங்களை எங்கடை ஆக்களுக்கை சம்மந்தம் வைச்சிருக்கினம் தெரியுமேயெடி உனக்கு? அவை இப்ப கனக்க மாறிப் போச்சினம்! ஏன் கனக்க, நீ இருந்து பார் வாற பாளிமேந்துத் தெரிவுக்கு. எங்கடை ஆக்களையும் அவை துண்டு போட்டு அனுப்பாட்டி! காலம் கனக்க மாறிப் போச்செடி!''

''ஓ, ஓ, கனக்க மாறிப் போச்சுதான், ஏன் கனக்கச் சொல்லுவான், எங்கடை ஆக்களைக் கொண்டு சவந் தூக்கு விக்கிறதை விட்டிட்டினமே? காலம் மாறிப் போச்செண்டால் அவங்களையும் கோயிலுக்கை விட்டு விடட்டுக்கள், அதுக்கேன் மாட்டினமாம்! நான் சொல்லிப் போட்டன், உதுகள்ள பெரிய வில்லங்கம் எல்லாம் வரும், அவன்களும் கோயிலுக்கை போகாமல் விடமாட்டாங்கள் கத்தியளோடை புளங்கிறவாதி!''

www.padippakam.com



''நீ என்னைப் பயப்புறுத்தி நிப்பாட்டப் பாக்கிறாய் என்ன? நல்ல நன்னியனை நீ பயப்புறுத்திறாய்! பேசாமல் இரெடி நீ!''

தண்ணியையும் குடித்துக் கையையும் கழுவிவிட்டு நன்னியன் வெளியே வந்தான்.

ஐயரைக் கூட்டிப்போக அவன் போகவேண்டும்.

ஃ ஃ ஃ

சண்முகம்பிள்ளை ஐயருடன் பேசிக்கொண்டிருந்தார்.

இருவரும் பல விஷயங்களைப் பேசினர்.

''ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ ஐயா, எல்லாத்துக்கும் நாங்கள் இருக்கிறம்'' என்று சண்முகம் பிள்ளை ஐயரைத் திடப்படுத்தியபோது முடிவில் ஐயர், சமீபத்தில் செத்துப்போன வயித்தியனின் பெட்டையுடன் தொடர்பு வைத்துக்கொண்ட பண்டாரிப் பொடியனை இனிமேல் கோவில் தொண்டு துரவு செய்ய விடக்கூடாதென்று ஊரில் உள்ளவர்கள் தன்னிடம் கூறிவருவதையும், அதனால் தான் படும் சங்கடத்தையும் எடுத்துக் கூறிய போது சண்முகம் பிள்ளைக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்துவிட்டது.

''நான் கிட்டடியிலை தான் சுதுமலைக்கு வந்தனான் எனக்கு ஊரிலை நடந்த ஒண்டுந் தெரியாதெண்டு எல்லாரும் நினைக்கினம். ஐயா, உங்கை ஊருகளுக்குள்ளை எத்தினை நடக்குதெண்டு நீங்கள் நினைக்கிறியள்? உடம்புச் சூட்டுக்காக வளவுகளுக்குள்ளை சீவிறவங்க ளெட்டை கள்ளக் கள்ளு வாங்கிக் குடிக்கிறவை, இருட்டினாப் போலை என்ன செய்யிவமெண்டு நினைக்கிறியள்? அதுகளை ஏன் கனக்க, நான் கேக்கிறன் அந்தப் பண்டாரப் பொடியன் 'அப்பிடி என்ன செய்து போட்டான்? கண்ட சேத்துக்கையும் உளக்கிற வயது! ஐயா, நான் சொல்லுதன் அப்பிடி அவனை நிப்பாட்டப்

www.padippakam.com



படாது! ஆரும் கேக்கிறவைக்கு நான் மங்களம் குடுக்கிறன். என்னட்டை அனுப்பிவிடுங்கோ,'' என்று சண்முகம்பிள்ளை குரல் உயர்த்திப் பேசிவிட்டார்.

உள்ளே படுக்கையில் கிடந்த அம்மாளுக்கு இந்தப் பேச்சுத் தெளிவாகக் கேட்டது.

இன்று வேளையோடு மழைவரும் போல் இருந்தது. குளிர்க் காற்று வீச, மின்னல் ஒன்று பளிச்சிட்டது.

''நன்னியன் மழை வருமாப் போலை கிடக்கு, ஐயாவை ஒருக்கா கூட்டிக்கொண்டு போய் விட்டிட்டு வா!'' என்று நன்னி॥னைப் பார்த்தார்.

ஐயரும், நன்னியரும் வெளியே போய்விட்டனர்.

அவர்களுடன் கேற்றுவரை சேர்ந்து சென்று வழியனுப்பி கேற்றையும் பூட்டிவிட்டு கோவிந்தனைச் சிறை மீட்கச் சென்ற அவர் கோவிந்தனிடமும் பேசினார். சிறை மீட்டார்; வீட்டுக்குள் வந்துவிட்டார்.

அதற்குமேல் நன்னியனுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியாகக் கிடந்த சீல் சாராயத்தில் அரைக்கிளாஸ்வரை போட்டுக் கொண்டார்.

அம்மாள் தான் உறங்கிப் போகவில்லை என்பதனைக் காட்ட அசைந்து படுத்துக் கொண்டாள். அம்மாளிடம் சென்ற அவர் அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்து விட்டு, ''தலையிடி எப்பிடி?'' என்று கேட்டார்.

அம்மாவிடமிருந்து பதில் வரவில்லை.

ஐயா தனது படுக்கைக்கு வந்துவிட்டார்.

மாட்டுக் கொட்டகைக்குள் கறவைப்பசு கனைத்தது.

சற்று வேளைக்குப் பின் அதன் கனைப்பு குரலாக மாறியது,

www.padippakam.com



மீண்டும் மீண்டும் அப்படி!

அந்தக் கறவைப் பசுவின் ஒவ்வொரு மூச்சைப் பற்றியும் அவருக்கு நன்கு பரிச்சயம்!

இன்று அமாவாசை என்பதும் அவர் நினைவுக்கு வந்தது.

''நாளைக்கு நன்னியனை திருநெல்வேலிப் பாமுக்கு அனுப்பி ஊசி போடுபவனைக் கூட்டிவரச் செய்ய வேணும்'' என்று அவர் மனதுக்குள் முடிவுசெய்து கொண்டு கண்களை மூடிவிட்டார்.

கறவைப்பசு மீண்டும், மீண்டும் கனைத்து, மீண்டும் மீண்டும் குரல்வைத்துக் கொண்டிருந்தது.

சற்று வேளைக்குப்பின் அடிவானம் இடித்தது.

மழை திடீரெனக் கொட்டத் தொடங்கிவிட்டது.

அம்மாள் எழுந்துவந்து ஜன்னல் கதவுகளைப் படார் படாரென அடித்துச் சாத்தினாள்.

ஐயா நன்றாகத் தூங்கிவிட்டார்.

ஃ ஃ ஃ

கறவைப் பசுவின் கனைப்பும், அழைப்புக் குரலும் இரவிரவாகக் கேட்டது.

சினைப்படுவதற்கான அதன் தவிப்பு நன்னியன் வீடு வரையிலும் கேட்டுக் கொண்டிருந்தது.

காலை தூக்கிய துவக்குடனும் கோவிந்தனுடனும் பரவைக் குளத்தைத் தாண்டுவதற்காக வந்த ஐயா, குடிசைக்குப் பக்கமாக நின்று நன்னியனை அழைத்தார்.

அவன் அதிகாலையோடு எங்கோ போய்விட்டான்.

''நன்னியன் பெண்டில், நன்னியன் வந்தோடனை ஒருக்கா தின்னவேலிப்பாமுக்குப் போய் மாட்டுக்கு ஊசி

படிப்பகம்

www.padippakam.com



போடிறவங்களைக் கூட்டிவரச் சொல்லு. மாடு சினைப் படக் கத்துது!'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

'மாடு சினைப்படத்தான் கத்துதெண்டு ஐயா பெரிய கெட்டித்தனமாய்க் கண்டுபிடிச்சுப் போட்டார்' என்று அவள் மனத்துக்குள் சொல்லிக்கொண்டாள்.

சற்று வேளைக்குப் பின்பு பரவைக் கடலுக்கப்பால் அடுத்தடுத்து இரண்டு வெடிச்சத்தங்கள் கேட்டன.

''உதுகளும் பண்டாரந்தானோ தெரியேல்லை' ' என்று அவள் மனதுக்குள் சொல்லாமல் வெளியாகவே சொல்லிக் கொண்டாள்.

அம்மாள் மேலிருந்த கோபமெல்லாம் கண்ணிக்கு மறைந்துபோய் விட்டது. அவளுக்கு அம்மாள் மேல் அனுதாபமே பிறந்தது. அதனால் அவள் மாந்தோப்பு முற்றத்திற்கு வந்துவிட்டாள்.

அவளைக் கண்டதும் அம்மாளுக்கு மனசு குழுகுழுத் தது.

அவள் எதுவும் பேசாமல் கண்ணியை உள்ளே அழைத்துச் சென்று கைபிடி உடைந்த பெரிய அவளுக் கான குண்டுக் கோப்பைக்குள் கோப்பியை நிறைய ஊற்றிக் கொடுத்தாள்.

கண்ணியின் நெஞ்சுக்குள்ளே பரிவுணர்ச்சி மேலும், மேலும் நெளிந்து சுருண்டது.

''ஐயா சொல்லிப்போட்டுப் போறார் மாடு சினைப் படக் கத்துதாம், உந்தாளை அனுப்பி ஊசி போடிறவ னைக் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி.........'' என்று கண்ணி இழுத்துக் கொண்டே பேசியபோது—

''கண்ணி, உனக்குப் புண்ணியங் கிடைக்கும். அதுக்கு ஊசி வேண்டாம். எங்கையாலும் கொண்டுபோய் மாட்டுக்கு விட்டுக்கொண்டு வரச்சொல்லி நன்னிய

www.padippakam.com



னெட்டைச் சொல்லி விடு'' என்று அழாக்குறையாக அவள் கண்ணியைக் கெஞ்சினாள்.

''ஐயந்து ஐயா துள்ளமாட்டாரே, ஊசி போடச் சொன்னவர்...''

கண்ணி மறுபடியும் இழுத்தபோது...

''அவர் கிடந்தார், அவருக்கென்ன தெரியும், அவரும் ஒரு மனிசனெண்டு!''

என்று படக்கெண்டு அம்மாள் பேசிவிட்டாள்.

பேசக்கூடாத வார்த்தை!

அப்பாடா அதன் பாரத்தை கண்ணியாலேயே மனதுக்குள் வாங்கிக்கொள்ள முடியவில்லை.

அம்மாள் சொல்லிவிட்டாள்.

''அவரும் ஒரு மனிசனெண்டு...!''

கண்ணியிடம் சொல்லக்கூடாததைச் சொல்லி விட்டதை உணர்ந்தாளோ என்னவோ, சற்று வேளை நட்டமரம் போல் நின்றுவிட்டு, 'அம்மா சொன்னவ வெண்டு நன்னியனெட்டைச் சொல்லு, மாட்டை வந்து அவிட்டுக் கொண்டுபோகச் சொல்லு!'' என்று அவள் தனது அதிகாரத்தையே நிதானமாகப் பிரயோகித்த போது முதலில் அம்மாள் சொன்ன வார்த்தையின் கனம் குறைவாகத் தெரிந்தது.

கண்ணி வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது, ''கண்ணி, முந்தாநாள் போட்ட பச்சை அரிசி ஊறிச் சிதைஞ்சு போச்சு, இடிக்கோணும். போட்டுக் கெதியா வா!'' என்று அம்மாள் ஆணையும் போட்டாள்.

ஃ ஃ ஃ

www.padippakam.com



பழைய விதானையார் குலத்துங்கம் இரவு ஏழு மணி யளவில் ஒரு தடவை வந்துவிட்டுப் போகும்படியும், முக்கியமான ஒரு விஷயம் இருப்பதாகவும், தனக்குச் சுக மில்லை வந்து சந்திக்க முடியவில்லை என்றும் ஆள் சொல்லி அனுப்பியிருந்தார் இதன்படிக்கு இரவு ஏழு மணிக்கு மேல் சண்முகம்பிள்ளை விதானையார் வீட்டுக் குப் போயிருந்தார்.

அவர் அங்கே போனபோது விறாந்தையில் போடப் பட்டிருந்த வாங்கொன்றில் நான்கைந்து பேர் இருக்க விதானையார் ஈச்சாரில் சரிந்து கொண்டே ஏதோ பேசிக் கொண்டிருந்தார். சண்முகம்பிள்ளை உள்ளே வந்ததும் வாங்கிலிருந்த அவர்கள் எழுந்து நின்று மரியாதை செய்ய வும் விதானையார், ''தம்பி சண்முகம் வாருங்கோ'' என்று வரவேற்கவும் சரியாக இருந்தது.

வாங்குக்கு நேராகச் சற்றுத் தள்ளி ஏற்கெனவே சண்முகம் பிள்ளையின் வரவுக்காகக் காத்திருந்த சற்றுச் சாய்வான கதிரையைக் காட்டி உட்காரும்படி விதானை யார் கூறினார்.

வந்திருந்த எல்லோரையும் ஒருதடவை மேல் கீழாகப் பார்த்து நோட்டம் விட்டுக் கொண்டே சருகைக் கரைச் சால்வையை ஒருதடவை நீக்கி, தோள் மூட்டுக் களை மூடிக்கொண்டே சண்முகம்பிள்ளை உட்கார்ந்து கொண்டார்.

''இவங்கள் தான் தம்பி நான் சொன்ன பொடியள்! அவங்களுக்கு விஷயங்கள் எல்லாத்தையும் விளங்கப் படுத்திப்போட்டன், பொடியள் நீங்கள் இருங்கோ மோனை, இனிமேல் உதுகளைப் பாக்கேலாது, தமிழ னுக்கை இனி உந்த வித்தியாசங்களை வைக்கப்படா தெண்டது தான் சண்முகம் தம்பியின்ரை விருப்பம். நீங்கள் ஏன் பொடியள் கூச்சப்படுகிறியள். இருங்கோ

www.padippakam.com



மோனை'' என்று விதானையார் கையமர்த்தினார். எல்லோரும் அமர்ந்து கொண்டனர்.

''நாங்களெல்லாரும் தமிழரடாப்பா, இனியெண்டாலும் நாங்கள் நாய்க்கடி, பூனைகடி எண்டிருக்காமல் எல்லாரும் சமாதானமாகச் சீவிக்க வேணும். சிங்களவர் எல்லாரையுஞ் சேத்துத் திண்டுகொண்டு வரேக்கை நாங்கள் ஏன் புடுங்குப்படுவான்? எங்கடை ஒற்றுமையைக் காட்டவேணும். நானும் முப்பது, நாப்பது வரிசமா எல்லா இடமும் அடிச்சுப் போட்டு வந்தனான் இஞ்சை வந்தால் போலதான் எங்களுக்கை இன்னமும் உந்த வித்தியாசங்கள் இருச்கிறதைப் பாத்துத் திடுக்கிட்டுப் போனன்.''

இப்படிச் சண்முகம்பிள்ளை பேசி முடித்தார்.

இதற்குப்பின் சற்றுவேளை பேச்சுக்கள் எதுவுமில்லை. பின்பு விதானையார் அவர்களை ஒவ்வொருவராக சண்முகம் பிள்ளைக்கு அறிமுகப்படுத்தினார்.

''இஞ்சர் தம்பி, அந்தப் பொடியன் வேலுவின்ரை மோன் கந்தசாமி, போனமுறை எங்கடை கிராமச் சங்கத்தில் மெம்பராக தெரியப்பட்டு கிராமச்சங்கத்திலை இருந்தவன். படிப்புக் கொஞ்சம் குறைவெண்டாலும் நல்லா உலகம் படிச்சவன். மற்றப் பொடியன் வயிரமுத்தன்ரை பேரப் பொடியன். வயிரமுத்தனெண்டால் அந்தக் காலத்திலை உம்மடை பேரன் மணியக்காரனையாவின்ரை வலதுகை! அவன் அப்ப விரலை ஆட்டினானெண்டால் ஊர் ஒருக்கா ஆடிப்போட்டுத்தான் விடும். மற்றப் பொடியன் ஆள் கறுப்புத்தான். பேரென்ன மோனை? ஓ, ராசன், ஆள் கறுப்பெண்டாலும் மனம் சுத்த வெள்ளை, ஒண்டையும் ஒளிச்சுமறைச்சுப் பேசமாட்டான். கடைசியிலை இருக்கிற பொடியனை இண்டைக்குத்தான் எனக்குத் தெரியும். பேர் தாமோதரம், வட்டுக்கோட்டைக் கொட்டைக் காட்டுக்கை இருந்து ரெண்டு, மூண்டு வரிசத்துக்கு முந்தி இஞ்சை வந்து திலகன்ரை பேத்தி

www.padippakam.com



யைக் கட்டியிருக்கிறான். உந்தப் பொடியன்ரை தேப் பன்ரை தேப்பனைத்தான் தம்பி முதல் முதல்லை இந்த யாழ்ப்பாணத்துச் சீமையிலை முதல் முதல்லை கட்டை அடுக்கிச் சுட வைச்சனாங்கள். எட ராசா, அந்தக் காலத் திலை முதல் முதல்லை சுடலைக்கை அவன்ரை பிரேதத் தைப் பாடையிலில் வெச்சுக் கொண்டுபோய் சுடவைக்கிற துக்கு, உம்மடை பேரன் மணியக்காரனும், வட்டுக் கோட்டை செல்லந்துரையரும் நானும் பட்டபாடு கொஞ்சமே? ஊரிலை இருந்த நயினார்மாரெல்லாம் திரண்டு வந்து பள்ளிக்குடத்தெடிச் சந்தியிலை மறிச்சுத் தான் பாத்தவை நாங்கள் விட்டமை? மணியக்காரன் சொல்லிப் போட்டார் முத்தன்ரை பிரேதத்தைச் சட்டுப் போட்டுத்தான் வீட்டை போறதெண்டு. அது பெரிய கதை தம்பி...'' என்று உசாராகப் பேசிமுடித்து விட்டார் விதானையார்.

''நானும் ஒருக்காக் கெதியாப் போகவேணும் விதானையார். அங்கை அம்மன் கோயிலுக்கை அங்கத் தைப் பொடியள் போகப் போறாங்களெண்டு கதை வந்ததினாலை எங்கடை பொடியள் ஆத்திரப்பட்டுக் கொண்டு நிக்கிறாங்கள். கொடியேத்தத்துக்கிடையிலை அதைச் சமாதானமாகத் தீர்க்க வேணுமெண்டு நான் தலையாலை நடக்கிறன். ஏதும் வில்லங்கமாய் நடந்து போம்...நான் கெதியாய் போக வேணும் விதானையார்'' என்று சண்முகம்பிள்ளை சற்று அவசரப்படுத்தினார்.

''தம்பி சண்முகம், பொடியள் எல்லாத்துக்கும் மறுப்புச் சொல்லேல்லைத் தம்பி, உங்களுக்கும் மனசாட்சி இருக்கு, அவங்களும் தரகம் புலம் அமானியாக் கவனிக்க ஆலில்லாமக் கிடந்ததாலை தனித்தனியா அடைச்சுக் கொண்டு வீடுவாசல்களையும் கட்டிப் போட்டாங்கள். வரிசமும் நாப்பதாப் போச்சு, மத்திச்சமாப் போவம் என்ன சொல்லுறீர்?''என்று விதானையார் மத்திச்சத் திற்கு வந்துவிட்டார்.

www.padippakam.com



''நானும் ஞாயத்திற்கு மாறில்லை. விதானையார், இவ்வளவு வருஷமா இருந்திட்டாங்கள், இனி நான் குத்தகைக் காசைக் கேக்கிறது நல்லாயில்லை! நான் வழக்குக் கணக்குக்குப் போகல்லை. ஆறுமாதத் தவணை யிலை அவை அவை வேறை இடங்களைப் பாத்துக் கொண்டு போகட்டுக்கு, வேணுமெண்டா திருநாவுக்கரசுப் பிரக்கிராசியாரிட்டை யோசிச்சுப் போட்டு ஒரு ஒப்பந் தத்தை எழுதிக்கொள்ளுவம். அந்தாள் இரண்டு பக்கத் துக்கும் பிழைவிடாது; நல்ல மனிசன்!''

சண்முகம்பிள்ளை சொல்லி முடித்துவிட்டார்.

''ஏன் பொடியள்? என்ன யோசிக்கிறியள்? நாற்பது வரிசக் குத்தகைக் காசெண்டால் உங்களாலை கட்டேலுமே? தம்பி சண்முகம் எல்லாஞ்சரி, ஆறுமாசம் போதாது தம்பி, அதை ஒரு வரிசமாக்கும்; பாவம் அவங்க ளும் நம்மடை பொடியள்!''

என்று விதானையார் சொல்லி முடிக்கு முன்,

''ஐயா, அது சரிவாரதது போலை கிடக்கு!'' என்று மெம்பர் கந்தசாமி சொல்லிவிட்டான்.

''கந்தசாமி, ஏன் மோனை குளம்பிறாய்? உன்ரை நாயத்தையும் சொல்லன்!'' என்றார் விதானையார்.

''அதேனெண்டாப் பாருங்கோ அந்தத் தரகம் புலத்துக்குள்ளை பதினெட்டு குடி இருக்கு, பெரிசா யில்லையெண்டாலும் சில வீடுகள் கல்லாலை அத்திவாரம் போட்டு மேலுக்கு மண்வீடு கட்டியிருக்கினம், அவை அதுகளை விட்டிட்டு எங்கே போறது? அவைக்கு வேறை ஒரு குளிக்காணியுமில்லை. இதிலை நாப்பது வருஷத்துக்கு மேலை ஆட்சி செய்து வருகினம். சிலபேர் நூறு வருஷமா யிருக்கினம், மணியக்காரன் காலத்திலையிருந்து இருக் கினம், அவை எழும்ப ஓமாமோ? போறதுக்கு ஒரு இடம் வேணுமே!''

www.padippakam.com



என்று கந்தசாமிக்காகச் சின்னத்துரை பதில் சொன்னான்.

''ம்...பொடியள் சொல்லுறதைப் பார்த்தாச் சரி தான், தம்பி சண்முகம் நான் ஒண்டு சொல்லட்டே? அவங்களும் நம்மடை பிள்ளையள்! நீர் அவைக்கு ஒரு வரிசத் தவணை குடும். முந்தின குத்தகைக் காசையும் விட்டிடும், தோட்டக் காட்டிலை நீர் எத்தனை பேருக்குப் புண்ணியம் செய்திருக்கிறீர் எண்டு கேள்வி! பதினெட்டுக் குடியிருக்காம். நீர் குடிக்கு ஆயிரம் வீதம் பதினெட்டாயிரம் குடுத்திடும். பக்கத்து நாகலிங்கன் இருக்கிற கொய்யாவளவு பரப்பு ஆயிரப்படி விக்கக் கிடக்காம். நான் பொடியளுக்கு ஒருவருத்தருக்கும் ஆயிரத்துக்கொரு பரப்பா காணி வாங்கிக்குடுக்கிறன்! என்ன சொல்லுறீர்?'' என்ற விதானையாரின் கேள்விக்குச் சண்முகம்பிள்ளை பதில் சொல்வதற்கிடையில் ''நாங்கள் உதைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்க வேணும். பிறகொரு நாளைக்குக் கதைப்பம்'' என்று கந்தசாமி கூறிக்கொண்டு எழுந்தான். எல்லோரும் எழுந்திருந்தனர். எதுவும் பேசாமலே வெளியே வந்துவிட்டனர்

படலைத் தலைவாயில் பக்கத்தில் சார்த்தி வைக்கப் பட்டிருந்த சைக்கிள்கள் கிலுங்கி ஆரவாரித்தன.

அவர்கள் போய்விட்டார்கள்.

''இரண்டு பேரும் சேந்து காதுகுத்தப்பாக்கினம்'' என்று ஒருவன் பேசிய குரல் லேசாகக் கேட்டது.

''என்ன விதானையார் சரிவராங்கள் போலை கிடக்கு?''

அவர் குரல் கேவியது.

''என்ன தம்பி அவசரப்படுகிறீர்? சாம, தான, பேத, தண்டம் எண்டு நாலெல்லே இருக்கு. இப்ப ரெண்டையும் விட்டுப்பாத்தம். சரிவராட்டி மற்ற ரெண்டையும்

www.padippakam.com



விடாமல் விடுகிறதே? அவசரப்பட்டா ஒண்டும் செய்யே லாது. அவன் மெம்பர் கந்தசாமியனை விழுத்திப் போட்டா மற்றவங்களைச் சரிக்கட்டிப் போடலாம், பாப்பம். அவன்ரை கவுன்சில் சேமனை ஒருக்காப் பிடிச்சுப் பாப்பம்'' என்று விதானையார் பேசி முடித்த போது, ''நீங்களும், என்ரை பேரனும் அந்த நாளையி லையே உவங்களுக்காகப் பாடுபட்டு முத்தன்ரை சவத்தை ஊருக்கு மாறாக் கட்டையிலை சுடவும் வைச்சியள். அந்த நன்றிகூட உவங்களுக்கு வரேல்லைப் பாத்தியளே?'' என்று சண்முகம்பிள்ளை சொன்னார்.

''அது வேறை விஷயம் தம்பி. நான் ஆறுதலாச் சொல்லுறன். நீர் கவனமாய்ப் போட்டுவாரும். அதுசரி சுதுமலையாங்களைக் கோயிலுக்கை விட ஏதோ செய்யிற தாகச் சொன்னீர். உண்மைதானை தம்பி'' என்று கேட் டார் விதானையார்.

''சங்கக்கடை மனேஜரைப் பிடிச்சு ஒரு தூண்டில் போட்டிருக்கிறன் பாப்பம். சரிவாறவரையிலை ஒரு மாதிரிச் சமாளிச்சுப் பாப்பம். சரி சரி நான் வாறேன், விதானையார். வீட்டிலை மனேஜர் காத்துக்கொண்டு நிக்கப் போறார்'' என்று கூறிவிட்டுச் சண்முகம்பிள்ளை புறப்பட்டுவிட்டார்.

அவரின் கார் இரைந்து சென்றது.



படிப்பகம்

# 9

சண்முகம்பிள்ளை வீட்டுக்கு வந்தபோது சங்கக்கடை மானேஜர் அவருக்காக வீட்டில் காத்திருந்தார்.

"இஞ்சரப்பா, மனேஜருக்கு ஏதெண்டாலும் குடிக்கக் குடுத்தீரே?" என்று கேட்டுக்கொண்டே அவர் வந்தார்.

"ஓமோம், பால் வந்து குடிச்சிட்டுத்தான் இருக்கிறன்" மனேஜர் வைத்திலிங்கம் பதில் சொல்லிவிட்டு, "இண்டைக்கு கோயில் மண்டபத்துக்கும் நீங்கள் வரேல்லை. அங்கை கனபேர் காத்துக் கொண்டிருந்தவை. நீங்கள் துலைக்கே போன நீங்கள்?" என்ற கேள்வியையும் கேட்டார்.

"நான் ஒருக்காப் பழைய விதானையார் வீடு வரையிலை போட்டு வாறன். சரி மனேஜர், அவங்களைக் கண்டீரோ, ஏதெண்டாலும் நல்ல விஷயம் இருந்தாச் சொல்லும். நான் போன விஷயமும் அவ்வளவு வாய்க்கேல்லை"

"நல்ல விஷயம் உடனே வருமே பாருங்கோ, அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்னன்றி எடுத்த கருமங்கள் ஆகா" எண்டு பாட்டுமிருக்

www.padippakam.com



குது. ஒருமாதிரிச் சரிக்கட்டிப் போடலாம். இந்த நேரத் திலை பாத்துத்தான் நீங்களும் அவங்களைக் கோயிலுக்கே போகவிடுறேல்லை, எண்டு ஆள் சேர்க்கிறியள். அதுதான் கொஞ்சம் வில்லங்கமாயிருக்கு...''

''அப்பிடியெண்டால் அந்தப் பரதேசியளைச் சாமிக்குப் பக்கத்திலை போகவிட்டுத்தான் தோட்டக் காணியளை நான் எடுக்க வேணுமெண்டு சொல்லு றீரோ?''

''சாமிக்குக் கிட்ட விடவேணுமெண்டு ஆர் சொன் னது? முன் மண்டபத்துக்குள்ளை விட்டா என்னெண்டு நான் யோசிக்கிறன். அடுத்தடுத்த வரிசத்திலை மற்ற மண்டபத்துக்குள்ளை விடலாமெண்டு பேசிப்பாத்தா என்ன? அப்பிடி யெண்டால் ஒரு மாதிரிச் சமாளித்து தோட்டக்காணியளுக்கு வாரக்குத்தகை எண்டாலும் வேண்டாம் போலை கிடக்கு.''

''ஏன் இப்பிடி நீர் கதைக்கிறீர் எண்டு எனக்கு விளங்குது. உம்மடை நடுவிலுமோனுமெல்லே அவங்கடை பக்கத்துக்கு நிக்கிறான் எண்டு கேள்வி. இஞ்சேரும் மனேஜர், நீர் வேணுமெண்டா அவங்கடை குமரி ஒண்டுக்கு மோனைக் கட்டிக்குடும். சண்முகம்பிள்ளைக்கு அப்பிடி ஏலாது. எங்கடை மானம் மரியாதையைக் காணி பூமிக்காக விக்கேலாது.''

''நீங்கள் ஏனப்பா சும்மா கத்திறியள்? வைத்திலிங்கம் சொல்லுறமாதிரி, கொஞ்சம் பொறுத்து நறுத்தெல்லோ காரியத்தை வெல்லுறது. அவர் நாயத்தை சொல்ல வந்தா, நளக் குமரியளைக் கலியாணம் கட்டிற கதை யெல்லே கதைக்கிறீகள். யோசிச்சுக் கதைக்கிறேல் லையே?''

என்ற அம்மாளின் குரல் கதவுக்கு அப்பால் இருந்து கேட்டது.

''இஞ்சேரும், நீர் எப்பன் பேசாமலிரும். எனக்கு நீரும் புத்திசொல்ல வந்திட்டீர் என்ன? இந்த சண்முகம்

www.padippakam.com



எண்டைக்கெண்டாலும் ஆருக்கும் தலைவணங்கியனே?''

என்று மனைவியின் கேள்விக்கு பதில் சொல்லி அவளை அவர் அடக்கிவிட்டார்.

பின்பு அவள் பேசவில்லை.

வெளியே கோவிந்தனின் அனுகல், முனகல் கேட்டது.

''என்னப்பா கோவிந்தன் ஆரவாரப்படுகுது. என்னெண்டு பாரும்'' என்று அவர் கூறியபோது அம்மாள் டோர்ஜ் லையிற்றை எடுத்து வந்து கோவிந்தனின் கூடு வரை ஒளிப்பொட்டை ஊரவிட்டாள்.

நன்னியன் வீட்டு பொன்னிப் பெட்டைச்சி கோவிந்தனின் கூட்டுக்கு வெளியே நின்றதை அவள் கண்கள் கண்டன. ஆனாலும், ''இஞ்சை அப்பிடி ஒண்டையும் காணேல்லை, அவனுக்கு வெளியிலை போறநேரம் வந்திட்டுது. அதுதான் ஆரவாரம் செய்யிறானாக்கும்'' என்று ஒரு பொய்யைச் சொன்னாள்.

பொன்னிப் பெட்டை கோவிந்தனுடன் சல்லாபம் புரிய அது காத்திருக்கின்றது என்று அனுமானித்துக் கொண்டுதான் அதை ஐயாவிற்குக் காதில் போடாமல் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டாள்.

''அப்ப என்ன செய்யலாமெண்டு யோசிக்கிறியள்? நேத்தை நேரத்துக்கு மழைவரும்போலை கிடக்கு'' என்று மனேஜர் அவசரப்படுத்தினார்.

''அவள் பாவியும் ஏதோ சொல்லுறாள். சரி, எல்லாத்துக்கும் அவங்கள்ளை வயசாளியளாப்பார்த்து ஒரு ஐஞ்சாறு பேரை நானும் சந்திச்சுப் பாப்பம், ம்...... பாப்பம். முன் மண்டபத்துக்குள்ளை அவங்களை விடுகிறது நீர் சொல்லுறது போலை அவ்வளவு பிழையானதெண்டு நானும் நினைக்கேல்லை. சரி ஒருக்காக் கதைச்சுப் பாப்பம்.''

www.padippakam.com



''நீங்கள் கதைக்கப்போனா அவங்களோடை சண்டை தான் பிடிப்பியள். வைத்திலிங்கம் கதைக்கட்டுக்கு, அவர் எல்லாம் வடிவாக் கதைச்சு முடிப்பார்.''

மனைவியானவள் தருணம் பார்த்து அவரை வழி நடத்த முற்பட்டு விட்டாள்.

''ஓமோம் பாருங்கோ, நான் எல்லாம் சரிக்கட்டித் தாறன். என்ரை நடுவிலான் அவங்களோடை திரியிறான் எண்டது உண்மைதான். அதை நான் மறைக்கேல்லை. இந்த நாளைப் பொடியங்களைக் கட்டுப்படுத்தேலுமே? எண்டாலும் அவன் நீங்க சொல்லுற மாதிரிப் பிழை ஒண்டும் லேசிலை விடமாட்டான்''

வைத்திலிங்கத்தார் மகனுக்காகவும் ஞாயம் பேசினார்.

''பண்டாரிப் பொடியன் பிளைவிடுவான் எண்டு ஆரும் நினைச்சவையே? அதுவும் கோயிலுக்குத் தொண்டு துரவு செய்து சாமியிலையும் தொடுகிற பண்டாரி, அந்தப் பரதேசியாலை மானம் போனது ஒரு பக்கத்திலை அவள் ஒரு குமரி செத்தெல்லா போனாள். அப்பிடி உம்மடை மோனாலை ஆரும் குமரி சாகவேண்டி வந்திட்டா, அவளைச் சாகவிட்டிடாதையும், வீட்டை கூட்டிக் கொண்டுவந்து சேர்த்துப்போடும்...''

சண்முகம் பிள்ளையின் பகிடி மனேஜருக்கு நன்கு விளங்கியது. ஆனாலும், அவருக்குக் கோபம் வரவில்லை. சிரித்துச் சமாளித்துக்கொண்டு, ''அப்ப நான் போட்டு நாளைக்கு இல்லாட்டி அடுத்த நாளையிண்டைக்குச் சந்திக்கிறன்'' என்று எழுந்தார்.

''ஏன் மனேஜர், அவசரப்படுகிறீர், என்ரை மனிசியாலை இண்டைக்கு நீர் என்னை வெண்டுகொண்டு போறீர். ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர். இருமன் போகலாம். இண்டைக்கு காட்ஸ் போடவும் ஆக்கள் வரேல்லை'' என்று சண்முகம்பிள்ளை மனைவிடம் பணிந்து போய்விட்டதையும் நினைவுபடுத்திவிட்டார்.

www.padippakam.com



''வீட்டிலை என்ரை மனிசிக்கு இதுதான் பெறு மாதம், கண்டியளோ. அதுதான் போனா நல்லதெண்டு பாக்கிறன்'' என்று மானேஜர் சற்று வெட்கப்பட்டார்.

''நீரும் பிழையில்லை உமக்கும் வயது ஐம்பதுக்குக் கிட்டவரும்'' என்று அவர் அர்த்தபுஷ்டியுடன் பேசிய போது, கதவருகில் நின்ற அம்மாள் படக்கென உள்ளே போய்விட்டாள். ஐயாவின் பகிடி அவளுக்குப் பிடிக்காமல் இருந்திருக்க வேண்டும்.

''சரி, சரி என்ரை அவள் பாவிக்கும் வெக்கம் வந் திட்டுது அதுதான் கோவிச்சுக்கொண்டு போறமாதிரிப் போறாள். சரி மனேஜர் நீர் போட்டு வாரும்.''

என்று கூறவும் மனேஜர் தாழ்வாரத்தோடு சார்த்தி யிருந்த சயிக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார்.

கேற்றுவரை சென்று வழியனுப்பிவிட்டு ஐயா உள்ளே வந்தார். மேசையில் இராப்போசனம் தயாராக இருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை.

அவர் மது அருந்த மாட்டார்.

''கோவிந்தன்ரை சாப்பாடு வேலை முடிஞ்சதா?'' என்று அவர் கேட்டார்.

''உங்களைக் காணேல்லை. நான் வைச்சிட்டன், சாப் பிடுங்கோ. அதைத் திறந்து விட்டிட்டு வாறன்'' என்று கூறிக் கொண்டே டோர்ஜ் லையிற்றுடன் வெளியே போனாள்.

கோவிந்தன் கூட்டுக்கு முன்னால் பொன்னிப் பெட்டை அவனுக்காக காத்துக் கிடந்து விட்டு அம்மாளைக் கண்டதும் ஓடிவிட்டது.

''நல்லகாலம் ஐயா வந்து கண்டிருந்தால், இஞ்சை இருந்தபாடில்லை'' என்று மனதுக்குள் கூறியவாறே கோவிந்தனை அவள் திறந்து விட்டாள்.

www.padippakam.com



ஒருதடவை அம்மா மேல் கால் உயர்த்தி அம்மாவின் முன்தானைச் சேலையைப் பிடித்திழுத்துவிட்டு பொன்னிப் பெட்டைச்சி போன பக்கமாக அவன் ஓடிவிட்டான்.

அதை அதட்டிக் கூப்பிட அம்மாளுக்கு முடியவில்லை. அதட்டும் குரல் ஐயா காதில் விழுந்துவிட்டால் அவர் ஆயிரம் கேள்விகள் கேட்பாரே!

சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஐயா படுக்கைக்குப் போய்விட்டார்.

இன்று வெள்ளிக்கிழமை!

ஆனாலும் அம்மாள் ஐயாவின் படுக்கையில் இருந்தாள்.

''ஏராக்கள்ளுக் குடிச்சு வந்தால் எனக்கு நல்லதெண்டு நன்னியன் பெண்டில் சொல்லுறாள்.''

''அவள் விசரி, அது பக்குவப்படாத பெட்டையளெல்லோ குடிக்கிறது.''

''இல்லை அது எனக்கும் நல்லதாம்!''

''ஏன்டீ நீர் இன்னும் புத்தி சரியேல்லையே!''

''நாப்பது நாளைக்கு அதைக் குடிச்சுவந்தா மாதவிலக்கு நிக்குமாம்.''

''ஓ, கிட்டத்தட்ட உமக்கும் வயது நாப்பத்தைஞ்சாச்சு, இனி அது தானாக நிண்டுபோம், நான் அண்டைக்கு மொரு வெள்ளைக்காறன்ரை புத்தகத்திலை படிச்சனான், அதுக்கேன் இனி ஏராக்கள்ளை?''

''உங்களுக்கு ஒண்டுந்தெரியேல்லை, பிள்ளை சனிக்குமெண்டு சொல்லுறாள்.''

''எட அதே? உமக்கும் அந்த ஆசை இன்னும் போகேல்லை. நான் நினைக்கேல்லை இனிச் சரிவருமெண்டு, எத்தினை டாக்குத்தர்மார் பாத்து முடிச்சுப் போட்டினம், சரி உம்மடை விருப்பத்தை ஏன் கெடுப்பான்'

விருப்பமெண்டால் நீர் குடிச்சுப்பாரும், என்ரை மனிசி பிள்ளை பெற ஏராக்கள்ளு இறக்குவிச்சுக் குடுக்கிறன் எண்டு நான் சொல்லேலாது; எனக்கு வெக்கமாக்கிடக்கு. நீர் வேணுமெண்டா நன்னியன் பெண்டிலெட்டைச் சொல்லி சீவல்காறன் ஆரையும் பிடிச்சு இறக்குவிச்சுக் குடியும். அது சாத்திர முறைப்படி செய்ய வேணுமாம்!''

அம்மாளுக்கு மனசு நிறைந்துவிட்டது.

இன்று வெள்ளிக் கிழமை!

இருந்தாலும் அம்மாள் சிவப்பு, மஞ்சள் ஒளிகளையே அணைத்து விட்டாள்.

www.padippakam.com

# 10

காலை பத்து மணிபோல் கண்ணி வந்தாள்.

ஐயாவின் கார் மண்டபத்துக்குள் நின்றது. ஐயா இன்னும் வெளியில் போகவில்லை என்று அவள் நினைத்தாள். ஆனால் ஐயா நடந்தே போய்விட்டார். அவளுக்குப்பின்னால் பொன்னிப் பெட்டைச்சி வந்தது.

கோவிந்தனின் அனுங்கல் சிணுங்கல் கேட்டு அம்மாள் வெளியே வந்து விட்டாள். கண்ணி வந்து விட்டாள் என்பதை அது ஊர்சிதப்படுத்தியது.

அம்மாள் கண்ணியையும் அழைத்துக்கொண்டு நேராகக் கிணற்றடிக்கு போனாள்.

கிணற்றடித் தொட்டிக்குள் பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சொல்லிக் கொள்ளாமலே கண்ணி பாத்திரங்களைச் சுரண்டிக் கழுவத் தொடங்கிவிட்டாள்.

www.padippakam.com



உள்ளே சென்ற அம்மாள் சிறிது வேளைக்குள் கண்ணி யின் பிடிகழன்ற தகரப் போணிக்குள் பால் கோப்பியை நிறைத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

''கண்ணி ஏராக்கள்ளுச் சீவுறவங்கள் ஆரும் இருக்கி றாங்களே?'' என்று அம்மாள் மெதுவாகக் கதையைத் தொடங்கினாள்.

''அந்தக் கதையை நான் இனிக்கதைக்கன், தெரியாம கதைச்சுப் போட்டு நான் பட்டபாடு!''

''இல்லையடி கண்ணி, நான் முந்தாநாள் தெரியாமல் கதைச்சுப் போட்டன். இன்னும் நீ அதை மறக்கேல்லை என்ன?''

''தெரியாமக் கதைச்சுப் போட்டியளோ? வேசை எண்டெல்லே பேசின நீங்கள்?''

''அதை விடெடி, பிழையாக் கதைச்சுப் போட்டன் எண்டெல்லே சொல்லிப் போட்டன்!''

இதற்குப் பின் சற்றுவேளை இருவருமே பேசவில்லை.

கண்ணி பாத்திரங்கள் தேய்ப்பதிலேயே கவனமாக இருந்தாள். அம்மாள் வக்கின் குந்தில் சாய்ந்திருந்தாள்.

''கண்ணி, ஏராக்கள்ளுச் சீவிறவன் ஆரெண்டாலும் இருக்கிறாங்களே எண்டு கேக்கிறன்!' '

'இங்கினையிக்கை ஒருத்தருமில்லை, இரண்டொருத் தர் இருக்கிறாங்கள், அவ்வளவு துப்புரவில்லை. சரியாயும் ஏராக்கள்ளுச் சேர்வையாக்குவாங்களெண்டு நான் நினைக்கேல்லை. அங்காலை கொத்தி மூலக் காளிகோவில டியிலை அவள் இத்தினியன்ரை மோளை ஒரு இந்தியாக் காரன் கட்டியிருக்கிறான். உதிலை வலு கெட்டிக்கார னாம். என்ரை அந்தாளிட்டை எண்டு ஒரு நாள் ரெண்டு நாள் வந்திட்டுப் போனவன். நீங்களும் சிலவேளை கண்டி ருப்பியள். எங்கடை ஆம்பிளையள் எட்டித்தொடோ

www.padippakam.com



ணும், வலு உயரமானவன், வலு சுவத்தவன். அவன்ரை கால்கையின்ரை நீளத்தைப் பாத்தாப் பயம் வரும், கிட்டத் தட்ட எங்கடை கோவிந்தன் மாதிரி பெரிய நீளமான ஆள்... அவனுக்கும் கோவிந்தன் எண்டுதான் பேரெண்டு அந்தாள் சொன்னது. உங்கடை நாயின்ரை ஊர்தானாம், அவன்ரை பிறந்த ஊர் எண்டு அந்தாள் சொன்னது. ஏராக்கள்ளுச் சீவிறத்திலை வலு கெட்டிக்காறனாம். அந்தாளை ஒருக்கா வடிவாய் விசாரிச்சுச் செல்லுறன்'' என்று கண்ணி பேசிக் கொண்டே போனபோது அம்மாள் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டே இருந்தாள். கண்ணி பேச்சை நிறுத்திக் கொண்டு சற்று நேரம் ஆகிவிட்டது. அம்மாள் பேசவில்லை.

''நீங்கள் ஏராக்கள்ளுக் குடிக்க வேணுமெண்டால் இதென்ன இரகசியமாய் வயிரவனெட்டை உங்கினைப் பெண்டுகள் இரகசியமாய் வேண்டிக் குடிக்கிறது போலை செய்யலாமை! இதுக்கெண்டு அது செய்விக்க வேணும், ஐயாவுக்குத் தெரியாமல் செய்யேலுமே! ஐயாவின்ரை குணத்தை தெரிஞ்சா அவன் கிட்ட வருவானை?''

''ஐயாவும் ஓமெண்டிட்டார் கண்ணி!'' என்று அம்மாள் சட்டென்று பதில் சொன்னாள்.

கண்ணிக்கு நம்பிக்கை வரவில்லை.

''நான் நம்பேல்லை!''

''கண்ணி நான் பொய்யே சொல்லுறன்? ஐயாவிட்டைக் கேட்டுச் சம்மதிக்கச் செய்து போட்டன். தான் இதிலை தலையிடத் தனக்கு வெக்கமாயிருக்கெண்டும், உன்னெட்டைச் சொல்லிவிச்சு ஆரெண்டாலும் சாததிர முறை தவறாமல் ஏராக்கள்ளுச் சீவிறவனைக் கொண்டு செய்விச்சுக் குடிக்கச் சொல்லிப்போட்டார். காசு சிலவு வருமெண்டு யோசிக்காதை, நன்னியனெட்டைச் சொல்லி ஒழுங்கு பண்ணெடி!''

www.padippakam.com



கண்ணி எதுவும் பேசாமல் பாத்திரங்களைத் தேய்த்து முடித்து விட்டாள்.

உள்ளே போன அம்மாள் வரச் சற்று நேரமாகி விட்டது. அதற்குப் பின்பு அவள் ஒரு குஞ்சுப் பெட்டியில் அரிசியும், காய்பிஞ்சுமாக கொண்டு வந்தாள்.

கண்ணி நன்றி அறிதலுடன் அதைப் பெற்றுக் கொண்டாள்.

நான்கு நாட்களுக்குப் பின் ஒரு நாள் மாலை ஐந்து மணி போல ஒருவனையும் அழைத்துக் கொண்டு நன்னியன் வந்தான். அப்போது கண்ணி முற்றத்தில் உரல் வைத்து மாவிடிக்க அம்மாள் கதிரை ஒன்றில் இருந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்

நன்னியனும் மற்றவனும் கேற்றைத் திறந்து கொண்டு வருவதைக் கண்டுவிட்ட கண்ணி. ''ஏராக்கள்ளுக்கார னையும் கொண்டுதான் ஆள் வருகுது!'' என்று கண்ணி சொன்னபோது படிப்பை நிறுத்திக்கொண்டு அம்மாள் தலை நிமிர்ந்து பார்த்தாள். கண்ணி முதலில் சொன்னது சரியாகத்தான் இருந்தது.

நன்னியன் பக்கத்தே வர, அவன் தலை வருபவனின் மார்பளவில் தான் இருந்தது.

நன்னியன் கறுவலல்ல. அவனைவிட மற்றவன் சிவப்பாக இருந்தான்.

நன்னியனின் கைகால்கள் கட்டையல்ல, அவனைவிட மற்றவனின் கை, கால்கள் நீண்டிருந்தன.

நன்னியன் நிறைந்த நெஞ்சு ரோமக்காரன். அவனைவிட மற்றவனுக்கு நெஞ்சு ரோமங்கள் சுருண்டு குவிந்திருந்தன.

நன்னியனின் கண்கள் ஆழமானவைதான். அவனை விட மற்றவனின் கண்கள் ஆழத்திலிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



அம்மா தன்னாலேயே எழுந்து நின்றாள்.

''இவன் தானம்மா நான் சொன்ன கோவிந்தன்.''

என்று நன்னியன் அவனை அறிமுகப்படுத்தினான்.

''கும்பிடுறனுங்க.''

என்று அவன் கைகுவித்தான்.

அம்மாளுக்குப் பதில் கும்பிடு போடவரவில்லை.

கண்ணி உரலில் உலக்கையைப் புதைய வைத்துக் கொண்டே நின்றபடியே நின்றாள்.

''சரி, வாப்பா, கண்ணி மரத்தைப் பாத்திட்டு வருவம்'' என்று அவனையும் அழைத்துக்கொண்டே நன்னியன் மாமரங்களுக்கூடாக அடிவளவை நோக்கிப் போனான். போகும்போது கோவிந்தன் உறுமவே வந்தவன் கூட்டுப் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினான்.

''என்னாங்க சாமி, நம்ம ஊரில் நாயல்லே இது? நல்லாயிருக்கு சாமி'' என்றான் அவன்.

''ஓமப்பா, உன்னைப்போலை அதுகும் நீண்டதாய் வளர்ந்திருக்கு'' என்று நன்னியன் மொட்டையாகப் பதில் சொன்னான்.

''நாம் பதினைஞ்சு வரிசத்துக்கு மிந்தி சிலோனுக்கு வந்திட்டஞ்சாமி, யாரிட்டையும் நம்ம ஊர் நாயைப் பாக்கேல்லைச்சாமி, இஞ்சைதான் பாக்கிறன்'' என்று சொல்லிக் கொண்டே அவன் நன்னியனுக்குப் பின்னால் நடந்தான்.

கொல்லைப்புறத்தில் அவர்கள் சமீபத்தில் தான் கங்கு நிமிர்ந்து போயிருந்த வடலிப் பக்கமாக நின்றனர்.

சேர்வைக்காரன் கோவிந்தன் அதைச் சுற்றி வந்து வட்டின் சுற்றைக் கவனித்தான்.

படிப்பகம்

www.padippakam.com



அங்கே ஒரு புறத்தே ஒரு கன்னிப்பனை பாளை தலைநீட்டி நின்றது.

''ஆமா இருக்குச்சாமி, வம்புப்பாளை ஒண்ணு இப்ப தான் வந்திட்டிருக்குச் சாமி, பத்து நாட்களுக்கிடையிலே சேர்வையாக்கிவிடணும் சாமி'' என்று உற்சாகத்தோடு கூறினான்.

''கங்கும் மட்டையுமா இருக்கப்பா, ஏறுறத்துக்குச் சரிவருமா?'' என்று நன்னியன் கேட்டபோது,

''அதெல்லாம் கோவிந்தன் சரிப்பார்த்திடுவான் சாமி'' என்று கோவிந்தன் கூறிவிட்டான்.

கன்னிப்பனைத் தெரிவு முடிந்துவிட்டது.

இருவரும் மாந்தோப்பு முற்றத்திற்கு வந்தபோது, கண்ணி ஒரு ஐம்பது ரூபா நோட்டை நன்னியனிடம் கொடுத்து அதை கோவிந்தனுக்குக் கொடுக்கச் சொன்னாள்.

''சாசுக்கு இப்பென்ன அவசரம் வந்திருச்சி, வைச்சிருங்க. பின்னாடி எடுத்துக்கலாம்'' என்று அவன் பிகு பண்ணினான்.

''சும்மா வவியளமா வைச்சுக்கொள்ளப்பா, இண்டைக்குச் சனிக்கிழமை, நல்ல நாள்'' என்று நன்னியன் அவனை வற்புறுத்தினான்.

''காசென்ன சாமி நாய் தின்னாக்காசு, மனிசன் தானுங்களே பெரிசு''

இதற்குமேல் அவனைப் பேச நன்னியன் விடவில்லை. அவனின் மடிக்குள் நோட்டைச் செருகிவிட்டான்.

நன்னியனும் கோவிந்தனும் கேற்றுக்கு வெளியே வந்த போது கட்டாடி கந்தையன் கக்கத்துக்குள் சிறு பொட்டணி ஒன்றுடன் உள்ளே வந்தான்.

''எப்பிடிக் கந்தையா கண நாளாக் காணேல்லை. உன்ரை மோன்ரை சங்கதி கேள்விப்பட்டனான்,

www.padippakam.com



காலத்தை அறிஞ்சுதான் கால்நீட்டப் பழகவேணும். சும்மா எழுந்த மானத்திலை செய்தா எல்லாம் உப்பிடித் தான் முடியும். பேய்ப் பொடியன் '' என்று நன்னியன் கந்தையனின் மகனுக்காக அனுதாபப்பட்டான்.

''ஓம் நன்னியர், நானும் உந்த எடுப்பு வேண்டா மெண்டு எத்தினை அவனுக்குச் சொல்லியிருக்கிறன். அவன் அறுந்தவன் கேட்டானே? அவன்ரை கிரகமும் சரி யில்லையெண்டு, செகிட்டு ஐயன்ரை மோனும் சொன்ன வர். எல்லாம் நடக்கிற காலத்துக்கு நடந்துட்டுது'' என்று கந்தையன் பதில் சொல்லிக்கொண்டே உள்ளே வந்து விட்டான்.

நன்னியனும் கோவிந்தனும் போய்விட்டனர். போகும் போது ''என்னண்ணாச்சி ஒண்ணும் விளங்கேல்லை? என்ன நடந்திச்சு?'' என்று நன்னியனைக் கோவிந்தன் கேட்டான்.

''உவன்ரை மோன் பட்டணத்துக்கை எங்கையோ லோன்றிக் கடையிலை நிண்டு போட்டு இஞ்சை வந்து மருதெடிக்கு முன்னாலை ஒரு லோன்றிக்கடையைப் போட்டான்......''

நன்னியன் கந்தையனின் மகனின் கதையைச் சொல் லத் தொடங்கிவிட்டான்

கட்டாடி கந்தையனின் மகன் தட்டுத்தடுமாறி எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு வீட்டோடு இருந்த போது கந்தையன் இல்லாத ஒருநாள் ஊருக்குள் ஒரு சாவீடு நடந்தது. சாவீட்டுக்குத் தொண்டு துரவு செய்வ தற்காகச் சாவீட்டார் தகப்பனுக்காக அவனை வரச் சொல்லித் தெண்டித்தனர். அவன் பிடிவாதமாக மறுக் கவே அவன் வீட்டிலேயே வைத்து அவனை நையப் புடைத்துவிட்டனர். அன்றே ஊரைவிட்டுப் புறப்பட்ட அவன், எங்கெல்லாமோ தேசாந்திரியாகத் திரிந்துவிட்டு பட்டணத்தில் ஒரு லோன்றியில் வேலை செய்தான்.

www.padippakam.com



பின்பு அவனுக்கு ஊரில் ஒரு லோன்றி போட வேண்டு மென்ற விருப்பம் வந்தது. மருதெடிக்கு முன்னால் ஒரு கடையை எடுத்து லோன்றியைப் போட்டு விட்டான்.

கிராமத்திற்கு முதல் முதலாக வந்த லோன்றி அது.

படித்த சிலருக்கு லோன்றி வந்ததில் நல்ல மகிழ்ச்சி. ஓகோ என்று லோன்றி நடந்தது. இரண்டு வாரத்திற்கு முன் ஒருநாள் சங்கக்கடை வைத்தியலிங்கத்தாரின் நடுவில் மகனுடன் நான்கு பேர் சேர்ந்து வந்து லோன்றியில் உடுப்புப் போட்டனர். வந்தது தொல்லை.

''கந்தையன்ரை மோன், உப்ப உடுப்புக்கொண்டு வந்து போட்டவன்கள் ஆரெண்டு உனக்குத் தெரியுமோ?''

இப்பிடி ஒருத்தன் கேட்டான்.

''ஆரெண்டால் எனக்கென்ன! எனக்கு வேண்டியது காசு.''

இப்படி இவனும் பதில் சொல்லிவிட்டான்.

''ஓகோ வண்ணாரப்பிள்ளை நல்லாத்தான் கதைக்கி றார், நீ எங்கடை கட்டாடி, குடிமோன். நீ எப்பிடி கண்ட சாதியளின்ரை துணியையும் எடுப்பாய்?''

''நான் ஆற்றை மோனுமில்லை, கந்தையாவின்ரை மோன்.''

இதற்குமேல் வந்தவன் பார்த்துக்கொண்டு நிற்க வில்லை. அவனைக் காலால் உதைத்துவிட்டான். அவனும் பதிலுக்கு ஒரு தரந்தான் கையோங்கினான். அப்புறம்...... அப்புறம் பல கால்கள், கைகள் அவனைப் பதம் பார்த்தன.

மயங்கிப் போகும் வரை அவன் அடிக்கப்பட்டான் வெளியே இழுத்தெறியப்பட்டான்.

ஒருவன் விறாக்கிகள் மேல் அடுக்கி வைக்கப்பட்டி ருந்த துணிகள் மேல் நெருப்பைப் பற்றவைத்தான்.

லோன்றியின் மேல் தகரங்கள் சுருண்டு போயின.

தகரங்களைவிட எல்லாமே சாம்பல்.

www.padippakam.com



ஒரு மைல் தூரத்திலிருந்த யாவில் குளத்தில் தொழில் செய்து கொண்டிருந்த கந்தையனுக்குத் தகவல் கிடைத்து அவன் அங்கு போய் சேர்வதற்குள் மயக்கம் போட்டுக் கிடந்த மகனை பக்கத்துத் தன்னை அப்பத்துரைப் பரியாரி யாரின் ஆட்கள் விதானை வேலையிலிருந்து தற்காலிக மாக நிறுத்தப்பட்டிருந்த தச்சுச் சட்டம்பி ஐயாத்துரை யின் மகன் வழிநடத்த அவனை முன்னே இருந்த வைத்திய விடுதியில் சேர்த்து விட்டனர்.

கந்தையாவின் மகன் இன்னும் வைத்திய விடுதியில் தான் இருக்கிறான்.

பொலிசார் அவனிடம் வாய்முறைப்பாடு எடுத்துச் சென்றனர். நீண்ட காலத்திற்குப் பின்பு அவன் ஊருக்குள் வந்தமையால் சரியான பெயர்வளிகளை அவனால் நிதானப்படுத்திக் கூறமுடியவில்லை. முதலில் அவனுடன் கொழுவியவனை அவன் சரியாகவே சொன்னான். அவனின் தகப்பனின் பெயர் அவனுக்குத் தெரியவில்லை.

அவனுக்குச் சகல விஷயத்திலும் ஒத்தாசையாக இருந்த தன்னை அப்புத்துரை வைத்தியர் ஒரு காந்தி பக்தர். அவர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் பொய் யாக எதையும் சொல்லக் கூடாதென்று.

விதானைப் பொடியன் சந்திரனுக்கு அப்புத்துரையின் மேல் கோபம் கோபகாக வந்தது. வேலை இடைநிறுத்தம் செய்த காலத்திற்கும் அவன் உத்தியோகம் பார்த்த காலத் திற்கும் இடையிலான நான்கு வருடங்களின் அனுபவத் தைக் கொண்டு ''அப்புத்துரை மாமாவுக்கு விசர்; அதுவும் வெறும் விசர் இல்லை காந்தி விசர்'' என்று சொல்லித் தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டான்.

இந்தச் சம்பவங்களில் தனக்குத் தெரிந்த அளவு சுருக் கத்தை நன்னியன் கோவிந்தனுக்குச் சொன்னபோது கோவிந்தன் மௌனியாகக் கேட்டுக்கொண்டே போனான்.

கோ—10

படிப்பகம்

# 11

வழமையாக மூன்று நாட்களுக்கொரு தடவை வந்து போகும் கணவதியன் இன்று நான்கு நாட்களுக்குப் பின்புதான் ஐயாவிடம் வருகிறான் ஐயா கோபப்பட்டு கையைக் காலை நீட்டிடுவாரோ என்ற பயம்!

முற்றத்து மாமரத்தின் கீழ் கணவதியன் ஐயாவின் முகங்காணும் வரை காத்திருக்கிறான்.

அப்போது தான் வந்து உள்ளே சென்ற கண்ணி கணவதியன் காத்துக் கொண்டிருப்பதை அம்மாளின் காதில் போட்டாள். இனி அத் தகவலை அம்மாள் ஐயாவின் காதில் போட வேண்டும்.

''இஞ்சேருங்கோ பரியாரி எல்லே வந்திருக் கிறார்'' என்று கேட்ட அம்மாவின் குரலுக்குப் பதிலாக,

''பரியாரி கணவதியனோ? வந்து நிக்கி றானோ? நிக்கட்டுக்கு வாறன், நான் அவன்ரை வீட்டை போய்த்தான் தாடி இறக்கவேணும் போலை கிடக்கு, என்ரை மனிசி என்ன வாயி

www.padippakam.com



லும் வயத்திலும் எண்டு நினைச்சான் போலை கிடக்கு, நிக்கட்டுக்கு வாறன்'' என்ற குரல் கேட்டது.

''ஐயாவுக்கும் பிள்ளைப்பெற வேணுமெங்கிற ஆசை இருக்குமாப் போலைதான் கிடக்கு'' என்று மனதுக்குள் கூறியவாறே மனக்கிலேசத்துடன் மாமரத்தின் கிழ் அவன் காத்திருந்தான்.

ஐயாவின் கிண்டலான பேச்சு அம்மாளைச் சோதிப்பதாக இருந்திருக்க வேண்டும். அவள் வாய் திறக்கவில்லை.

உள்ளே கண்ணி திருகையில் குரக்கன் அரைக்கும் ஓசை மெதுவாகக் கேட்டது.

கூட்டுக்குள் நின்ற கோவிந்தனைக் கணவதியன் பார்த்துக்கொண்டே நின்றான்.

''என்னா கணவதியன், என்ரை தாடி நெஞ்சிலை முட்டினாப்பிறகு வராதையன், இந்த நாளையிலை பெண்டில் பிள்ளைத் தாச்சியாக இருந்தாக்கூட ஆருந் தாடிவிட மாட்டாங்கள். இப்ப பெத்த மலடனான என்னைத் தாடிவிட வேணுமெண்டு நினைச்சிட்டாய் என்ன? இப்ப நீங்கள் முந்தின மாதிரி இல்லையெண்டு எனக்கு விளங்குதெடா'' என்று சொல்லிக்கொண்டே அவர் கையில் தூக்கி வந்த புட்டுவத்தைப் போட்டுவிட்டு சவரம் செய்விக்கத் தயாராகி விட்டார்.

அவருக்குப் பின்னால் அம்மாள் கையிலே துவாயும், சவுக்காரக் கேசும் கிண்ணமும், வட்டப் பிறசுமாக வந்து சேர்ந்தாள்.

''டிட்டோல் போத்திலும் கொண்டு வந்தநீரோ?''

என்று ஐயா கேட்டபோது ''மறந்து போனன்' என்று கூறிக்கொண்டே அம்மாள் உள்ளே போனாள்.

எல்லாக் காரியங்களிலும் ஐயா மிகக் கவனம்!

www.padippakam.com



சருமத்தொற்று நோய்களைப் பற்றி நன்கு படித்தவர். அதனால் சவரம் செய்வதில் தனக்கெனவே பிரத்தியேக மாக எல்லாவற்றையும் வைத்துக் கொள்வார். கத்தியை மட்டும் பரியாரி கொண்டுவந்து, அதை டிட்டோலில் கழுவி எடுத்து சவரம் செய்ய வேண்டும்!

அம்மாள் கொண்டுவந்த டிட்டோலால் கத்தியைக் துடைத்தெடுத்து விட்டு கணவதியன் சவரம் செய்யத் தொடங்கிவிட்டான்.

"என்னடா கணவதியன் உங்கடை பகுதியிக்கை ஏதும் புதினமே?"

"அப்பிடி ஒண்டுமில்லையாக்கும், எங்கடை பொடியளும் ஐயா அயின்ரை நயினார்ப் பொடியளும் சேர்ந்து ஒரு சங்கம் வைச்சவை"

"என்னடாப்பா சங்கமோ? நல்ல காரியம்! ஆரடாப்பா தலைவர்?"

"எங்கடை சங்கக்கடை மனேச்சற்றை நடுவிலுத் தம்பி தான தலைவர். என்ரை அண்ணன்ரை மோன் தான் காரியதரிசி!"

"என்னடா உன்ரை அண்ணன்ரை மோனோ? சின்னத்துரையன் எண்ணிறது என்ன?"

"ஓமாக்கும். அவன்தான் ஊருப்பட்ட புத்தகமெல் லாம் படிச்சிக்கொண்டு திரியான்; ஏனெண்டு கேட்டா ஏதோ எல்லாம் சொல்லுறான், எங்களுக்கு விளங்கேலா மைக் கிடக்கு."

"அவன் எதையெண்டாலும் படிக்கட்டுக்கு, விசரன் வேறை ஒண்டும் செய்யிறானாம் தெரியுமே உனக்கு?"

"உந்த மூத்தனார் கோயிலடிச் சாண்டாரப் பொடியளுக்குச் சவரமும் செய்யிறான் எண்டு கதைக்கினம்! மறைக்காமச் சொல்லு கணவதி?"

படிப்பகம்

www.padippakam.com



கணவதி ஒன்றும் பேசவில்லை.

"ஏன்ரா பேசிறாயில்லை; உதெல்லாம் எனக்கென்னெண்டு தெரியுமெண்டு யோசிக்கிறாய் என்ன? நீங்கள் குசு விட்டாலும் எனக்குத் தெரிஞ்சுபோங் கண்டியோ?"

கணவதியன் மீண்டும் பேசவில்லை.

"கணவதி, நான் சொல்லிப் போட்டன், உன்ரை ஆக்களெல்லாம் எங்கடை குடிமக்கள், விசரங்களின்ரை சொல்லுகளைக் கேட்டுக்கொண்டு வில்லங்கங்களை உண்டாக்கிப் போடப்படாது. உவன் கட்டாடிக் கந்தையன்ரை மோன் லோன்றி வைச்சுப் பட்டபாடு தெரியுமெல்லே? அவன் கண்ட சாதியருக்கு வழிக்கிறான் என்று கேள்விப்பட்டோண்ணை எங்கடை ஆக்களெல்லாம் கொதிச்செழும்பினவங்கள். நான்தான் 'அவங்கள் எங்கடை குடிமக்கள், அடிக்கக் கிடிக்கப்படாது. சாந்திய வழியிலை திருத்தப்பார்க்க வேணுமெண்டு சொல்லி ஒரு மாதிரி அமத்தி வைச்சிருக்கிறன், கணவதியன்! கொண்ணனும் செத்துப் போனான், நீதான் அவனிட்டை விசர் வேலை பாக்க வேண்டாமெண்டு சொல்லவேணும்."

"அவனை நாங்கள் திருத்திப் போடுவமாக்கும், அவன் முருகேசன்ரை மோன ரெத்தின மெல்லே அவனுக்கு உசார் குடுக்கிறான், அவன் பறை, பள், நளம், துரும்பு எண்ட வித்தியாசம் பாக்காமை எல்லாரோடையும் சண்டித்தனச் சினேகிதம் வைச்சிருக்கிறான். இவனுக்கும் அவன் உசார் எடுத்துக் கொண்டெல்லேயாக்கும் நிக்கிறான்."

"ஆரடா அது ரெத்தினம்? சோட் மீசை முருகேசன்ரை மோனா? அவன் கடைக்குட்டியனோ? அவர் கொஞ்சம் சண்டியன் எண்டுதான் கேள்வி. அவர் இன்னும் சரியான களரியிலை வேண்டிப் பழகேல்லை. போன மாசத்திலையும் ஒருநாள் கூளாவடி நடுவிலான்ரை கடையிலை வைச்சு கோவியப் பொடியள் ரெண்டு

www.padippakam.com



பேருக்கு அடிச்சவவெண்டு கேள்வி. அடிவேண்டின கோவியப் பொடியன் ஆரெண்டு தெரியுமே கணவதி? கோவியக் கண்ணாடியன்ரை மருமக்களாம். கண்ணாடியன் எங்கை எங்கை எண்டு பார்த்துக்கொண்டு திரியிறானாம். எக்கணம் இவன் சாகப்போறான் கண்டியோ? முருகேசன்ரை மோனை நம்பி உவன் கொண்ணன்ரை மோனும் சாகத்தான் போறான் போலை கிடக்கு தமிழுக் காகச்செத்தான் எண்டாலும் ஒரு ஐம்பது நூறுபேர் வந்து போவான்கள். பள், நளம், பறையனுக்காகச் செத்தானெண்டா ஒரு குஞ்சு வருமே? சரி சாகிறவன் சாகட்டுக்கு. அவனவன்ரை விதி அப்பிடி இருந்தா நான் தடுக்கேலுமே? ஏதோ மனசு கேட்கையில்லை, நம்ம குடிமக்கள். சொன்னன்! கேட்டாக் கேக்கட்டும் இல்லாட்டிச் சாகட்டும். அதோடை சண்டியன் ரெத்தினனையும் விடுவாங்களே? வீடு வாசல்களைக் கொழுத்தியெல்லே கலைப்பாங்கள்! தலையையும், மொட்டையடிப்பாங்களெல்லே!''

கணவதி பேச்சுக்களுக்கூடாக சவரத்தை மிகவும் கச்சிதமாகச் செய்து முடித்துவிட்டான்.

''கணவதி இந்தக் கன்னத்தையும், ஒருக்கா ஒதுக்கிவிடு, காதுக்கை முட்டுது'' என்று ஐயா தலையையும் சரித்துக் கொண்டார்.

''ஐயாவுக்கும் சரியாய் நரை தட்டிப்போட்டுது போலை கிடக்கு, போன கோசு வெட்டேக்கை அங்கினைக்கே ஒண்டு ரெண்டு நரை மயிரைத்தான் கண்டன். இப்ப எல்லா இடமும் நரைச்சுப் போச்சுப் போலை கிடக்கு'' என்று கணவதியன் இழுத்தபோது,

''கணவதி உந்தக் கருகல் பாஷைதான் எனக்கு எப்பனும் பிடிக்காது கண்டியோ, எல்லா இடமும் நரைச்சுப் போச்செண்டு கருகல் விடுகிறீர் என்ன? இண்டைய வரையிலை என்ரை மனிசி கேட்காத கேள்வி''

www.padippakam.com



என்று வெடுக்கெனப் பேசினார்.

கணவதியன் இதற்கு மேல் பேசவில்லை.

"என்ன கணவதியனிலை பாயிறியள்?" என்று கேட்டுக் கொண்டே அம்மாள் வந்தாள்.

"அவன்ரை கதையைக் கேட்டீரே? எனக்கு எல்லா இடமும் நரைச்சுப் போச்செண்டு கருகல் விடுகிறான். இவன் கண்டவனே?" என்று ஐயா சொல்லியபோது "பிள்ளையாராணை நான் அப்பிடி க கலாக் கதைக் கேல்லையாக்கும்!" என்று அம்மாவின் முகத்தைப் பார்த்து கணவதியன் பரிதாபமாகக் கூறியபோது அம்மாளுக்கு அவன்மேல் அனுதாபமாக வந்தது.

"அவன் தலையிலை கிடக்கிற இரண்டொரு நரை மயிரைப் பாத்துச் சொல்லியிருப்பான். நீங்கள்...... காகைக்குக் கனவிலையும் பீதின்னிற எண்ணந்தான்" என்று அம்மாள் ஐயாவையே குற்றஞ்சாட்டினாள்.

கணவதியன் கன்னத்து மயிரை ஒதுக்கத் தொடங்கி விட்டான். மூக்கு மயிர், கமக்கட்டு மயிரும் எடுத்தாய் விட்டது. வேலையும் முடிந்துவிட்டது.

"இஞ்சேரும் கணவதியனுக்கு ஏதும் குடுத்துவிடும்" என்று கூறிக்கொண்டே ஐயா எழுந்து புட்டுவத்தையும் தூக்கிக்கொண்டு உள்ளே போய்விட்டார்.

"எட கணவதி, உனக்கும் கதைக்கிற கதை எதெண்டு தெரியாமல் ஐயாவோடை கதைச்சுப் போட்டாய். என்னவோ உன்ரை நல்ல காலம் ஐயா உனக்கு அடிக்காமல் விட்டிட்டார். இன்னும் ஐயாவின்ரை குணம் தெரியேல்லையே" என்று கேட்டுக் கொண்டே அம்மாள் கணவதியனுக்கு இரண்டு ரூபாய் சில்லரையைக் கொடுத்து அனுப்பினாள்.

இரண்டு நாட்கள் கழித்து இரவு ஏழு மணிக்கு மேல் சண்முகம்பிள்ளை கூளாவடி நடுவிலான் கடைக்கு

www.padippakam.com



முன்னால் காரை விட்டுவிட்டு உள்ளே போய்த் திரும்பி வரும்போது முருகேசனின் மகன் இரத்தினம் காரடியில் ஐயாவுக்காகக் காத்திருந்தான்.

அவனுக்குப் பக்கத்தே அவனின் நண்பர்களில் ஒருவனான தியாகனும் நின்றான்.

''என்ன ஐயா, அம்பட்டற்றை வீடுகளுக்கு நெருப்பு வைச்சு தலையும் மொட்டை அடிப்பன் எண்டு சொன்னீராம், உம்மாலை அது ஏலுமோ?'' என்று இரத்தினன் ஐயாவுக்குக் கிட்டவாக்க வந்து பேசினான்.

இரத்தினனின் உயரத்தை பார்க்கவும், அவனின் கனத்த குரலைக் கேட்கவும் ஐயாவுக்குச் சற்றுப் பயமாக இருந்தது. முன்பு அவர் இரத்தினனைக் கண்டதில்லை.

சண்முகம்பிள்ளை வாய் திறக்கவில்லை.

சற்றுத் தொலைவில் நின்ற சிலர்,

நடுவே வந்து ''சீ, இரத்தினம் ஐயாவெல்லே, அது எங்கடை சண்முகம்பிள்ளை ஐயாவெடாப்பா'' என்று ஐயாவைத் தெரியாமல்தான் இரத்தினம் ஏதோ கருவு கிறான் என்று நினைத்து அறிமுகம் செய்தனர்.

''ஓ, எனக்குத் தெரிஞ்சுதான் கதைக்கிறன், இவர் அம்பட்டற்றை வீடெல்லாம் கொழுத்துவிப்பன் எண்டு சொன்னவராம், அதுதான் கேக்கிறன். நீங்கள் அங்காலை போங்கோ?'' என்று அவன் உரக்கக் குரல் வைத்தான்.

பலர் வந்து சேர்ந்துவிட்டனர்.

''ஐயா, நீங்கள் போங்கோ, அவனுக்கு மெல்லிய தண்ணி, நீங்கள் போங்கோ ஐயா'' என்று சிலர் கதவைத் திறந்து ஐயாவைக் காரில் ஏற்ற, இரத்தினத்தையும் சிலர் நகர்த்திச் சென்றனர்.

ஐயாவின் கார் பறந்துவிட்டது.

ஐயா வீட்டுக்கு வந்துவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



அவருக்கு இருக்கை கொள்ளவில்லை.

ஏதோ ஒன்று நடந்துவிட்டது என்று அம்மாள் எண்ணினாள்.

''நன்னியன் வந்திட்டுப் போட்டானோ?'' என்று ஐயா கேட்டார்.

''மத்தியானத்துக்குப் பிறகு அவன் வரேல்லை'' என்று அம்மாள் பதில் சொன்னாள்.

''காரை கராஜ்சுக்குள்ளே விடேல்லை'' என்று அம்மாள் பின்பும் கேட்டாள்.

''அது எனக்குத் தெரியும், நீர் உம்மடை அலுவலைப் பாரும்'' என்று ஐயா பதில் சொல்லிவிட்டு டோர்ஜ் லையிற்றை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறமாகச் சென்று ''நன்னியன்; நன்னியன்'' என்று அழைத்தார்.

''அந்தாள் இன்னும் வரேல்லையாக்கும்'' என்று கண்ணி பதில் சொன்னாள்.

''வந்தோண்ணை உடனை வரக்காட்டிவிடு'' என்று சொல்லிவிட்டு ஐயா திரும்பிவிட்டார்.

இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்டது.

நன்னியன் அப்போதுதான் ஐயாவிடம் வந்தான்.

ஐயா இன்னும் உணவருந்தவில்லை.

''நன்னியன், உடனை போய் உங்கடை கண்ணாடி யைக் கூட்டிக் கொண்டுவா, ஐயா வரட்டாமெண்டு.''

என்று மட்டும் சொன்னார்.

நன்னியன் மறுபேச்சின்றிப் போய்விட்டான்.

ஃ ஃ ஃ

www.padippakam.com



சாவற்காட்டுச் சந்தையிலிருந்து கொத்திமுல்லைக்குப் போகும் ஒழுங்கை முடக்கில் இரத்தினம் செத்துப் போய்க் கிடப்பதாக மறுநாள் இரவு ஏழுமணியளவில் செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது.

இரத்தினனின் கழுத்துக்குள்ளும், முதுகுப்புறத்திலும், பழுவிலும், இடக்கை விரல் இடுக்கிலுமாக நான்கு குத்துக்கள் இருந்தன.

அன்று பகலெல்லாம் கண்ணாடியனும், வேறு சிலரும் அவனுடன் சேர்ந்து குடித்துத் திரிந்ததாகப் பலர் கூறினர்.

நிச்சயமாக கண்ணாடியன்தான் அவனைக் கொன்றிருக்க வேண்டுமென்று பலரும் பேசினர்.

www.padippakam.com

# 12

நன்னியன் இரண்டு மூன்று நாட்களாக வீட்டுக்குள்ளேயே அடங்கிப் போய்க் கிடந்தான்.

அவனுக்கு உடம்புக்கு ஏதும் வந்துவிட்டதாக கண்ணி உணரவில்லை. கண்ணிக்கு ஆச்சரியமாக இருந்தது. என்றும் அவன் அப்படியே வீட்டுக்குள் அடங்கிப் போய்க் கிடந்ததில்லை.

இப்போது நயினார் வீட்டுக்குக்கூட அவன் போகவில்லை. நயினாரும் அவனைத் தேடியதாக இல்லை:

அன்றும் ஐயா அவனை விட்டு கண்ணாடியனை அழைத்ததும், மறுநாள் இரவு வரை கண்ணாடியனும் ஐயாவும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டுவிட்டு ஐயாவும் கண்ணாடியனும் ஏதோ பிழை செய்யப் போகினம்; அதுதான் யோசிக்கினம் என்று அவன் கண்ணியிடம் சொன்னதும் இப்போது நன்னியன் வீட்டுக்குள்ளேயே கிடப்பதைக் கண்டுவிட்டு, இரத்தினத்தின் கொலைக்கும் அவனுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோன்ற ஒரு எண்ணந்தான் கண்ணிக்கு

படிப்பகம்

www.padippakam.com



வந்தது. ஆனாலும் அவள் நன்னியனை எதுவும் வற்புறுத்திக் கேட்கவில்லை.

பொலிஸ், கண்ணாடியனை ஊரெல்லாம் வலைவிரித்துத் தேடியது. கண்ணாடியன் அகப்படவில்லை. ஒரு நாள், இரண்டு நாள், கண்ணாடியன் ஐயா வீட்டுக்கு வந்து போயிருக்க வேண்டும் என்று கண்ணியின் அனுமானத்துக்குள் பட்டது.

கடந்த இரண்டு நாட்களும் நன்னியனுக்கு நித்திரை வரவில்லை. கண்ணிக்கு இது நன்கு தெரியும். இந்தப் பாப காரியத்தில் அவனும் கலந்திருப்பானோ என்று அவள் சந்தேகப்பட்டாள்.

''என்னப்பா, உனக்கு ஏதும் சுகமில்லையே?'' மனம் பொறுக்க மாட்டாமல் கண்ணி கேட்டாள். அவளின் கேள்விக்கு அவன் ஒன்று ஒன்றும் பேசவில்லை. முகம் குப்புறப் படுத்துக்கொண்டு விட்டான்.

நான்கு நாட்கள் இப்படி.

அதற்குப் பின் எல்லாம் சரியாகி விட்டது.

நன்னியன் வெளியே போகத் தொடங்கி விட்டான்.

சரியாக ஒன்பதாவது நாள் கண்ணாடியனை யாரோ குத்திச் சரித்து விட்டார்கள் என்றும், அதன் பின்பு அவன் செத்துப் போய் விட்டதாகவும் செய்தி பரவி விட்டது.

ஊரில் நடக்கக் கூடாதது நடந்து விட்டது,

கண்ணாடியனின் அடிப்படலையிலேயே அவன் கொலை செய்யப்பட்டு விட்டான்.

இரத்தினனின் அண்ணன் ஒருவன், வேறு ஜாதிக்காரர்கள் மூவர் என்று கதை வந்தது.

சண்முகம்பிள்ளை திடுக்குற்றுப் போய் விட்டார்.

www.padippakam.com



எழிய ஜாதிக்காரர் இப்படித் துணிந்து விட்டதும், அவர்களுக்கு உதவியாக தனது ஜாதிக்காரர்களே இருந்ததும் அவரை வலவலக்க வைத்துவிட்டது.

பல காரியங்களில் பல ஜாதிக்காரர்களும் ஜக்கியப் பட்டு நடந்து கொள்ளும் அந்த நிலையை அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இந்த ஐக்கியத்துக்குப் பின்னால் பெரும் பண இறைப்பு இருந்திருப்பதாக அவரால் கருதமுடியவில்லை.

அப்படியானால்......?

அப்படியானால்......?

இந்தக் கேள்விக்கு அவரால் விடை கண்டு கொள்ள முடியவில்லை.

இரத்தினனின் மரணத்தை— கொலையை தனது பார்வைக்குள் ஞாயப்படுத்திக்கொண்ட அவரால் கண்ணாடியனின் மரணத்தை நியாயப்படுத்த முடியவில்லை.

இரத்தினன் செத்துப்போய் சரியாக முற்பத்தி ஒராவது நாள் கூளாவடிக் கடைக்கு அருகாமையில் ஒரு பஸ் தரிப்பு நிலையத்தை இரத்தினத்தின் உறவினர்கள் கட்டி முடித்தனர். பிரயாணிகள் தங்குவதற்கான அந்த இடமும் பாவனைக்குட் படுத்தப்பட்டது. ஆனால், அதில் எல்லா இடங்களிலும் இருப்பது போன்று யாரின் நினைவாக என்று எழுதப்படவில்லை.

இரத்தினனின் அப்பன் ''என்ரை பிள்ளையைக் கொண்டவன் ஒருத்தன் இன்னும் உயிரோடு இருக்கிறான், அவனையும் முடித்துவிட்டுத்தான் இதற்குப் பெயர் வைக்கலாம்'' என்று ஒரே ஒரு நியாயத்தை பகிரங்கமாக சொல்கிறான்.

இதைக் கேள்வியுற்ற போது சண்முகம்பிள்ளைக்கு மேலும் ஆச்சரியமும் திகைப்பும் வந்தது.

ஃ ஃ ஃ

www.padippakam.com



பரம்பரைக் காணிகளை மீட்டெடுப்பதில் சண்முகம் பிள்ளை பல இடங்களிலும் கால்களை ஊன்றிப் பார்த்தும் ஒரு காரியமும் கைகூடவில்லை.

செகிட்டு ஐயர் வீட்டுக்கு அப்பால் இருந்த தென்னந் தோட்ட வளவில் குடியிருந்தவர்கள் சண்முகம்பிள்ளை யின் இரத்த உருத்தினர் இல்லாவிட்டாலும் ஒரே சாதி யினர் தான். முதலில் தாங்கள் தாங்கள் இருப்பவைகளுக் குக் குத்தகைப் பணம் மாதா மாதம் தவறாமல் தர ஒப்புக் கொண்டு, குத்தகை உறுதிகளை முறைப்படி எழுத ஒப்புக் கொண்டவர்கள் இப்போது, ''பாப்பம், பாப்பம், ஆறுத லாய்ப் பாப்பம்'' என்று தவணை போடத் தொடங்கி விட்டனர்.

சாவற்காட்டுச் சந்தைப் பக்கமாக குடியிருந்து, தவணை முறையில் பணம் தந்து காணிகளைக் கொள் முதல் செய்ய ஒப்புக் கொண்டிருந்தவர்கள் சொன்னபடி செய்ய முன்வரவில்லை.

தாவடிச் சுடலையைச் சுற்றிவர புகையிலைத் தோட்டம் செய்து வந்தவர்கள், ''கோவிலு மண்டபத்திற் குள் விடுவது'' என்று கூறி உறுதியளித்த போதும் தோட் டக் காணி விஷயங்களிலும் ஒரு அடிகூடப் பின்வாங்க மறுத்து விட்டனர்.

இப்படிப் பலவழிகளிலும் அவருக்கு திருப்தியானவை கள் நடந்து விடவில்லை. எல்லாச் சாதியினரும் தங்களுக் குள் ஒரு ஐக்கியத்தை வலிந்து ஏற்படுத்திக் கொள்ள வில்லை. ஆயினும், ஒரே விதத் தொனியிலேயே கதைக்க முற்பட்டு விட்டமை சண்முகம்பிள்ளையின் நெஞ்சைப் படாதபாடு படுத்தி விட்டது.

நன்னியன்கூட இப்போது தனக்கு விசுவாசமாக இருக் கிறனா என்பது சந்தேகத்திற்குரியதாகிவிட்டது.

அவன் முன்போல் இப்போது ஐயாவிடம் குழை வதில்லை.

www.padippakam.com



அவன் 'கலகலப்பில்லாதவன் ஆகிவிட்டான். ஏதோ வருகிறான்; ஐயா சொல்பவைகளைச் செய்கிறான்; போய் விடுகிறான்.

இப்போது புதிய புதிய மனிதர்கள் பலர் சண்முகம் பிள்ளையிடம் வருகின்றனர்; போகின்றனர்; விருந் துண்ணுகின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் காக்கிச்சட்டைக்காரர்களும், கோடு கச்சேரி அதிகாரிகளு மாகவே இருந்தனர்.

சித்திரைத் திங்களில் கோவில் கொடியேற்றம்.

அதற்கு இன்னும் பதினைந்து நாட்களே இருக் கின்றன.

இத்தனை தொல்லைகளுக்கிடையிலும் இரண்டொரு தடவை முன்னே தெரிவு செய்யப்பட்ட திருவிழா நடத்துச் சபையினர் மந்தோப்பு வீட்டில் கூடினர். அந்த வேளை களில் நன்னியனும் வந்தான். ஆனால் அவன் முன்போல உற்சாகமாக இருக்கவில்லை. பேருக்குக் கலந்து கொண் டான்; அவ்வளவுதான்.

''எனக் கெண்டால் நன்னியனை நம்பமுடியல்லை; அவன்ரை ஆக்கள் உதவி செய்வாங்களெண்டு நம்பி யிருக்க ஏலாது போல் இருக்கு?'' என்ற பொருள் படப் பலர் தனித்தனியாக ஐயாவிடம் கூறினர்.

''கண்ணாடியன் செத்துப்போனதாலை அவன் கொஞ்சம் கெலிச்சுப் போனான் போலை கிடக்கு, அதெல் லாம் சரிவரும், நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்கத் தேவை யில்லை என்று எல்லோருக்கும் ஒரேவிதமாக ஐயா பதில் சொன்னார்.

நிலமைகளை நன்கு ஆற அமர யோசித்து அவருக்கு நிதானமான வழிவகைகளைக் கூற ஆட்கள் அருந்தலாகி வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



ஐயருக்கு நாட்கள் நெருங்க, நெருங்கப் பயந்தான் மேலோங்கி வந்தது.

சங்கக்கடை மனேஜர் வைத்திலிங்கத்தார் கோயில் முன் மண்டபத்திற்குள் விடுவதாகத் தரகுநின்று பேசிய பேச்சுக்கள் தோல்வியில் முடியவே ஐயாவின் கண்ணில் காணாமல் நழுவத் தொடங்கிவிட்டார். போதாக் குறைக்கு—

''வீணாய் தேவையில்லாத காரியத்திலை நிண்டு வில் லங்கப்படாதையுங்கோ, நடுவிலானும் கோயிலுக்கை போறவங்களோடை சேந்து நிக்கேக்கை, அவன் மூத்த வனும் கொழும்பிலை நிண்டு ஐயாவை உந்த விஷயங் களுக்கை வீணாத் தலைநீட்டிப்போட்டு வில்லங்கப்படா மல், வேணுமெண்டா அவன் தம்பியின்ரை பக்கத்துக்கு நிக்கட்டுக்கு எண்டு காயிதமும் எழுதினாப் பிறகு உங்களுக்கு ஏன் விசர் வேலை. சண்முகத்தார் என்ன எங்களுக்குச் சோறே அனுப்பிறவர்? இதுக்கு முந்தி இருந்த மனேச்சரவை எத்தனை காணியள் வாங்கி எத்தனை வீடு கள் கட்டினவை. நீங்கள் நேர்மை, நேர்மையெண்டு சாகி றியள்! ரெண்டு வருசத்துக்கு முந்தி சண்முகத்தாரெட்டை வைச்ச ஈடு இன்னும் மீண்ட பாடில்லை. நான் சொல்லிப் போட்டன், உதுகள்ளை நீங்கள் இறங்கப்படாது'' என்று துடக்கு வீட்டுக்குள் இருந்து பிறந்து பத்து நாளாகாத கடைக்குட்டியன் மேல் சத்தியம் வைத்துச் சொல்லி விட்டாளே மனைவியானவள்!

''கிராமத்தின் அமைதியை அழித்து அரசியல் இலாபந் தேட கலகக்காரர்கள் தூண்டுதலே ஆலயப்பிரவேசிக்கு தல்'' என்ற முறைகளில் விதம் விதமான தலையங்கங்கள் தீட்டி செய்திகள் என்று அனுப்பிய நிருபர் அருளம்பலப் பிள்ளையே இப்போது ''கடவுள் வழிபாடு எல்லா மக்களினதும் பிறப்புரிமை'' என்று நேற்றுத் தலையங்கம் போட்டு ஒரு செய்தியை வெளிவரச் செய்துவிட்டார்.

www.padippakam.com



இச்செய்தியைப் படித்ததும் ''குந்தியிருக்க ஆன வீடில்லாத பரதேசிக்கு இப்பிடிக் காட்டிக்குடுக்கிற எண்ணந்தான் வரும்'' என்று சண்முகம்பிள்ளை சீறிவிட்டார்.

இத்தனைக்குப் பின்பு அவருக்கு சரியான நிதானமான ஆலோசனைகளைக் கூறக்கூடியவர் பழைய விதானையார் குலத்துங்கம் மட்டுந்தான்.

இரவு ஏழுமணிபோல் சண்முகம்பிள்ளை விதானையார் வீட்டுக்குப் போனார்.

''தம்பி வாரும்'' என்று அவரை வரவேற்றுவிட்டு, ''இப்பான் தம்பி கரையாம் பொடியள் இரண்டு மூண்டு பேரைக் கூப்பிட்டுக் கதைச்சனான்; அவங்கள் போன கையோடை நீரும் வாறீர், உங்கடை காணி வடக்குப் பக்க எல்லையள்ளையெல்லாம் அவங்கடை காணிதான், இந்தக் காணியளை உறுதியோடை உங்களுக்கு வாங்கித்தாறன், மலிஞ்சவிலைக்கு வாங்கித்தாறன் நீங்கள் வேண்டுங்கோ எண்டு எவ்வளோ சொல்லிப்பாத்தன். ''அவங்களும் எங்களைப்போல் தொழிலாளியள்; அவங்களுக்கு மாறா நாங்கள் வரம்'' எண்டும், அதிலை ஒரு குத்தியன் தங்கள் முற்போக்கான காரியமெண்டால் செய்வம், இது மோசமான பிற்போக்கு யோசினை'' எண்டு முகத்திலை அடிச்ச மாதிரிச் சொல்லிப் போட்டுப் போறான்'' என்று விதானையார் அழாக்குறையாகச் சொன்னார்.

''என் முற்போக்கான காரியங்களாமோ? உங்களுக்குச் சொன்னவனோ? ஓ, ஓ! உங்களுக்கு அவன் இதைச் சொல்லத்தான் வேணும். ஐம்பது வருசத்துக்கு முந்தி உவங்கள் பிறக்கக்கு முந்தி நீங்களும், என்ரை பேரன் மணியக்காரனும் கிறிஸ் செல்லத் துரையரும் சேந்து வட்டுக்கோட்டை முத்தனைச் சுடலையுக்கை கட்டைஅடுக்குவிச்சு சுடுவிச்சனீங்களெல்லே. அந்த முத்தன்ரை ஆக்களுக்காகவோ நண்டி கெட்டவங்களுக்காகவோ! இந்த நால்



படிப்பகம்

www.padippakam.com



தின்னிக் கரையார் முற்போக்குப் பேசிறாங்கள். உங்களுக்கு அவங்கள் உதைச் சொல்லத்தான் வேணும்'' என்று கிண்டலாகவும், ஆத்திரமாகவும் சண்முகம்பிள்ளை பேசினார்.

விதானையார் பேசாமல் இருந்தார்.

''அண்டைக்குச் சொன்னியள் முத்தனைக் கட்டையிலை வைச்சுக் கொளுத்திய கதையைப் பிறகு சொல்லுறன் எண்டு, எங்கை இப்ப ஒருக்காச் சொல்லுங்கோ பாப்பம்!'' என்று சண்முகம்பிள்ளை கேட்டபோது விதானையார் விக்கிப் போய்விட்டார்.

அது சண்முகம்பிள்ளைக்கு மனம் திறந்து சொல்லக் கூடிய ஒன்றா?

ஃ ஃ ஃ

அப்போதுதான் தம்பி குலத்துங்கம், விதானை குலத்துங்கமாக வந்த அன்னிய காலம். இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கிய காலம்.

வேலுப்பிள்ளை மணியக்காரனின் பணிப்பின் பேரில் பெண் எடுத்துக் கொடுத்தவரான மற்றாஸ் கிறில் செல்லத்துரையரின் கொடி வட்டுக்கோட்டையில் பறந்து கொண்டிருந்த காலம்,

மற்றாஸ்வரை சென்று, படித்துவிட்டும், கழுத்து மட்டத்திற்கு வளர விட்டு அதை நூல் அடித்தது போல நறுக்கிக் கொண்டும் முதல் முதலில் நாடு திரும்பிய பெருமைக்குரியவர் செல்லத்துரை ஒருவரே தான்.

மற்றாஸ் கிறில் செல்லத்துரையென்றால் குடாநாட்டில் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

அவர் தகப்பன் பெரும் நிலமுதலை!

இவருக்கு உத்தியோகம் என்ற ஒன்று வேண்டியிருக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



நிலபுலம், வீடுவாசல், ஆள், அணி, நிறைவான அழகு இத்தனையும் சேர்ந்துவிட்டால் வேலையே இல்லை என்ற குறைவுக்குப் பதில் வேலைப்பளு என்ற சுமைதான்!

சின்ன வயதில் தாய் இல்லை.

மற்றாசிலிருந்து வந்ததை அடுத்துத் தந்தையுமில்லை.

அவரே எல்லாம்.

அவரின் ஆளுமைக்குட்பட்ட நிலப்பரப்புள் ஒரு கோவில். அந்தக் கோயிலின் நிரந்தரக்குடியிருப்பான ஐயர் குடும்பத்திற்கான வாழ்வின் ஓசுவனம் முற்றுக்கும் பரம்பரை பரம்பரையாக இவர் குடும்பமே பொறுப்பு!

அந்த ஐயர் இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது, அங்கிருந்து தனது சகோதரியையும் அழைத்துவந்து விட்டார்.

மற்றாஸ் கிறிலையும் மற்றாஸ் படிப்பையும் சுமந்து கொண்டு வந்து சேர்ந்த பெருமைக்குச் செல்லத்துரையர் முன்னுரிமையானவர் போல, முதல் முதலில் இங்குள்ள பெரிய இடத்துப் பெண்களுக்குச் சங்கீதம் புகட்டுவதற்கான தகுதியைத் தன்னுள் கொண்டுவந்து சேர்த்த முன்னுரிமைக்கு இந்தப் பொண்ணும் உரிமையானவள்.

அவள் வந்து சேர்ந்து சில மாதங்கள் கூட ஆகவில்லை. பல பெரிய இடத்துப் பெண்கள் வீடுகளுக்கு ஐயர் மரபை மீறிச்சென்று அவள் சங்கீதம் சொல்லித் தந்தருளும் பெருமையைத் தேடிக்கொண்டாள்.

கிறில் செல்லத்துரையர் அவளை விரும்பிவிட்டார். அந்தப் பெண்ணுக்கும் அவர்மேல் காதல் வந்துவிட்டது.

ஊருக்கெல்லாம் இது தெரிந்து விட்டது.

என்ன இருந்தாலும் செல்லத்துரையர் சூத்திரன்! பிராமண குடும்பத்துடன் ஏற்படக்கூடிய உறவை ஊரவர்கள் பெரும் பாபகாரியமாகத்தான் கருதினர்.

www.padippakam.com



செல்லத்துரையரின் குடும்ப அந்தஸ்தெல்லாவற்றை யும் தூக்கி எறிந்துவிட்டுத்தான் சகலரும் பேசினர்.

செல்லத்துரையரின் வலது கையான முருகேசரும் கூட இந்த விடயத்தில் செல்லத்துரையருக்கு மாறாகவே இருந்தார். ஆனாலும் மாற்று நடவடிக்கையில் அவரால் ஈடுபட முடியவில்லை. அதனால்தான் குலத்துங்கம் விதானையாருக்கு விதானை நியமனம் கிடைத்த அன்று நடந்த கோரிக்கை ஊர்வலத்தில் செல்லத்துரையருக்கு அவர் 'கருகல்' விட்டார்.

விதானையாரின் கொண்டாட்டங்கள் முடிய மாலை யாகிவிட்டது. அவைகள் முடிந்து செல்லத்துரையரின் திருக்கல் வண்டி துணைவி வெளியைத் தாண்டிக்கொண்டி ருந்தபோது, ''முருகேசு ஏன் காணும் அப்போதை கருகல் விட்டனீர்? இடஞ்சரியில்லாமல் போச்சு, இந்த இடத் திலை ஏன் வீண் சண்டை எண்டத்துக்காகத்தான் நான் பேசாமல் விட்டனான். நீர் கருகல் விட்டாப்போலை நான் என்ன பிராமணப் பொட்டையை விட்டிடுவன் எண்டு நினைக்கிறீர் போலை கிடக்கு?'' என்று செல்லத் துரையரே கதையைத் தொடங்கிவிட்டார்.

''இல்லையெடாப்பா, அம்மா வழக்கமில்லாத வழக்கம்! குருக்கள் வீடுகளுக்குள்ளை உப்பிடி ஆரும் முந்தி வைச்சிருந்திருக்கினமே? சும்மா ஒரு கதைக்குச் சொல்லுவம், இவன் வண்டில் விடுகிற முத்தன் பகுதி யிலை ஒருத்தன் எங்கடை பகுதிப் பெட்டை ஒண்டோடை தொடுப்பு வைச்சிருக்கிறான் எண்டு வைச்சுக் கொள்ளு வம், அதை நீ விடுவியோ? ஏன் முத்தன் நீ சொல்லடா, அப்பிடிச் செய்யிறவனை, உங்கட பொடியளை நீங்கள் ஆடாக்கட்டித் தோலாயுரிக்க மாட்டியளே? முத்தன் சொல்லடா?'' என்று முருகேசர் வண்டியை நடத்திவந்த முத்தனைக் கேட்டார்.

முத்தன், ''ஓமாக்கும், கமக்காறன் சொல்லுறது சரி யாக்கும்! அவனை ஆடாக்கட்டித் தோலா உரிக்கிறதோ,

www.padippakam.com



வெட்டித் தாட்டெல்லே போடுவம்!'' என்று பட்டென்று பதில் சொன்னான்.

''முத்தன், என்ன வெட்டித்தாட்டுப் போடுவியள் என்ன? எட முத்தன் தாங்கடை வயலுகளுக்கை நாத்துப் புடுங்க வாற உங்கடை குமரியளோடை செல்லக் கதை கதைச்சுச் சேட்டையள் விடுகிற—அதுவும் வயது வித்தியாசம் பாராமல் தருகிற எங்கடை நயினார் மாருக்கு என்னடா செய்வியள்?'' அதையுஞ் சொல்லன் முத்தன்'' என்று சொல்லிக் கொண்டே கையைச் சற்று நீட்டி விரலால் முத்தனின் இடுப்பில் குத்தினார் செல்லத்துரையர்.

இது முருகேசருக்கு விட்ட 'கருகல்' என்று முத்தனுக்கு விளங்கி விட்டது. முருகேசருக்கு விளங்கிவிட்டது.

''அது...இ......இலையும், பழுப்பும் எங்கும் உள்ளது தானுக்கும்'' என்று முத்தன் இழுத்தபடி கூறிவிட்டான்.

''ஓ, ஓ, அப்ப நயினார்மாரைப் போலை நளவரும் பள்ளரும் எங்களை ஆக்களுக்கை செய்யிறாங்கள் எண்டு சொல்லுறாய் என்ன? நீ கெட்டிக்காறன்! ஏன் காணும் முருகேசு, முத்தன்ரை கதை கேக்குதெல்லே?'' என்று செல்லத்துரையர் மேலும் முன்னேறினார்.

இதற்குப் பின்பு முருகேசரோ முத்தனோ எதுவும் பேசவில்லை.

வண்டி வட்டுக்கோட்டைச் சந்திப்புக்கு வந்து விட்டது.

இருட்டும் வந்தது.

செல்லத்துரையரின் வண்டி வீட்டுக்கு வருவதற்கிடையில் முருகேசர் இடையில் இறங்கிவிட்டார்.

''முருகேசு, செக்கலும் சரிஞ்ச போச்சு, உமக்கும் அலுவலுக்குப் போக நேரம் வந்திட்டுது. இறங்கும்

www.padippakam.com



இறங்கும்'' என்று செல்லத்துரையர் முருகேசரை நக்கலாக வழியனுப்பிவிட்டு வந்து சேர்ந்தார்.

வீட்டுக்குள் வந்தபோது செல்லத்துரையரின் உதவியான அவரின் பேத்தியான கிழவி, அவசர அவசரமாக வந்து ஒரு புதினத்தை அவசர, அவசரமாகச் சொன்னாள்.

''ஐயர் பொடிச்சிக்கு முதுகெல்லாம் கம்படித் தளும்புகளுடன் வந்துவிட்டாள்'' என்பதுதான்.

செல்லத்துரையர் விழுந்தடித்துக் கொண்டு கூடத்திற்குப் போனார்.

அங்கே ஐயர் அம்மாள் போர்த்து மூடிக்கொண்டு குந்தியிருந்தாள்.

அவளின் போர்வைத் துணியில் இரத்தக் குறிகள் தெரிந்தன.

அவள் விம்மி, விம்மி அழுதாள்.

அவளின் அண்ணன் அவளைக் கட்டிவைத்து அடித்து நொறுக்கிவிட்டான்.

செல்லத்துரையருக்கு உடம்பெல்லாம் கொதித்தது.

''நீர் இனி ஐயனெட்டைப் போகவேண்டாம். எல்லாம் நான் பார்க்கிறன்.''

என்று மட்டும் அவர் சொன்னார்.

நான்கு நாட்கள் கழிந்துவிட்டன.

ஐயர் அம்மாள் செல்லத்துரையர் வீட்டிலேயே தங்கிவிட்டாள்.

சூத்திரருடன் தங்கை போய்விட்டாள்.

ஐயரால் தாங்க முடியவில்லை.

தனது நான்கு பிள்ளைகளுடனும், மனைவியுடனும் அவர் மாதகலில் உள்ள தன் அண்ணன் வீட்டுக்குப்போக மூட்டை முடிச்சுக்களைக் கட்டிவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



பலர் செல்லத்துரையரிடம் தூதுவந்து ஐயர் அம்மாவை விட்டு விடும்படியும் ஐயர் நாளைக்காலை அவளையும் கூட்டிக் கொண்டு போய்விடப் போவதாகவும் ஐயருக்காகவும் அவரின் பிராமணிய தர்மத்திற்காகவும் பரிந்து பேசினர். செல்லத்துரையர் மறுத்துவிட்டார்.

ஐயர் ஊரைவிட்டுப் போகப் போகிறார் என்ற மற்றவர்களின் பேச்சை நம்பாத செல்லத்துரையர் மாலையாகும் வேளை கோவிலடிப்பக்கமாகப் போனார்.

உள்ளே பித்தளைப் பாத்திரங்களின் கலகலப்பு ஓசைகள் கேட்டன.

ஐயர் போகத்தான் போகிறார் என்பது தெளிவாயிற்று.

தோட்டம் விட்டு முடிந்ததும், செல்லத்துரையர் திரும்பியபோது பின்னால் ஐயர் வந்தார்.

அவருக்கிருந்த ஆத்திரத்தில்......!

கோயில் படியில் கிடந்த துடப்பக் கட்டையினால்......

பின் விளைவுகள் எதையும் ஐயர் யோசிக்கவில்லை.

ஐயர் துடப்பக்கட்டையினால் செல்லத்துரையரின் மூஞ்சில் அடித்துவிட்டார்.

செல்லத்துரையரின் சந்ததியில் யாருமே இப்படி துடப்பக்கட்டை ஆராத்திக்கு உட்பட்டதில்லை.

செல்லத்துரையர் போய்விட்டார்.

அன்று......

நடுஜாமவேளைக்கு மேல் கோவில் முன் மண்டபத்தைத் தாண்டி பக்கவாட்டில் நடந்து ஐயரின் உட்புற வீட்டுக்குள் ஐந்தாறுபேர் புகுந்துவிட்டனர்.

அதற்குப் பின்......

அதற்குப் பின்......

www.padippakam.com



உள்ளே வந்தவர்களில் ஒரே ஒருவனின் ''ஐயோ'' என்ற அடக்கமான கமரல் மட்டும் கேட்டது.

சற்று வேளைக்குப் பின் ஐயர் வீட்டுக் கதவை இழுத்துப் பெரியதொரு ஆமைப் பூட்டினால் பூட்டிவிட்டுவிட்டு எல்லோரும் வெளியே வந்தனர். அவர்கள் வரும்போது ஒருவனைக் கைத்தாங்கலாகக் கொண்டு வந்தனர்.

அவன் முத்தன்!

''ஐயர் முத்தனுக்குப் படாத இடத்தில் பட அடிச்சுப் போட்டார். முத்தனுக்குப் பேச்சு மூச்சில்லை.''

என்ற இரகசியக் குரலுக்கு,

''அவனை விட்டிட்டுப் போகப்படாது, தூக்கிக் கொண்டு வாருங்கோடா, வீட்டைப் போய்ப் பாப்பம்'' என்ற இன்னொரு குரல்தான் பதிலாகக் கேட்டது.

விடிந்தபோது......

முத்தன் இரவு நயினார் வீட்டில் இலுப்பையின் கீழ் ஓலை கிழித்துக் கொண்டிருந்தபோது இலுப்பையிலிருந்து தவறிவிழுந்த நாகப் பாம்பொன்று கடித்துவிட்டு ஓடி, இலுப்பையின் மேல் பொந்துக்குள் விழுந்துவிட்டதென்றும், தகவல் முத்தனின் வீட்டுக்கு வந்தது.

முத்தன் செத்துப் போனான்.

நாகப்பாம்பு தீண்டி இறந்து போனான்.

ஃ ஃ ஃ

அப்போதுதான் முதல் முதலாக நாட்டில் ஒரு சட்டம் அமுலுக்கு வந்திருந்தது.

இச்சட்டத்தின்படிக்கு திடீரெனச் செத்துப்போனால் அந்தப் பிரேதம் கீறிக் கிழிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



விடிவதற்கு முன்னாலேயே யாரோ ஒருவன் செல்லத் துரையரின் வண்டியை ஓட்டிச் செல்ல செல்லத்துரையர் வேலுப்பிள்ளை மணியக்காரனையும் மாணிப்பாய் புதிய விதானையார் குலத்துங்கம் பிள்ளையையும் சந்தித்துத் திரும்பிவிட்டார்.

முத்தனின் உறவினர்களிடம் அவனின் உடல் ஒப்படைக்கப்பட்டது.

செல்லத்துரையைச் சந்தேகிக்கும் எந்த மூச்சும் எங்கிருந்தும் எழவில்லை.

பெரும்புள்ளிகள் எவரும் கீழ்ப்பட்டவர்களின் மரண வீட்டுக்கு வருவதில்லை.

ஆனால் வழமைக்கு மாறாக—

செல்லத்துரையர், மணியக்காரன் வேலுப்பிள்ளை, குலத்துங்கம் விதானையார் ஆகிய மூவரும் மத்தியானம் போல வந்துவிட்டனர்.

''முத்தன் என்ரை சினேகிதன், அவன்ரை பிரேதத்தை நான் கட்டையிலை வைச்சுச் சுட யோசிக்கிறன்.''

என்று செல்லத்துரையர் சொன்னபோது முத்தனின் ஆட்களுக்கு நடுக்கம் வந்துவிட்டது.

வழக்கமில்லா வழக்கம்.

''நீங்கள் ஏன்ரா பொடியள் யோசிக்கிறியள், நான் இருக்கிறன், செல்லத்துரை சொல்லுறமாதிரித்தான் செய்யுங்கோ. சுடலையுக்கை எரிச்சா சவம் வேகுதோ இல்லையோ எண்டு பாப்பம். என்னை மிஞ்சி இஞ்சை ஆர் சண்டைக்கு வரப்போறான், நீங்கள் மனிசர் இல்லாமல் மிருகங்களோ?'' என்று ஒரு கேள்வியையும் வேலுப் பிள்ளை மணியக்காரன் கேட்டுவிட்டார்.

மரண வீட்டில் அழுகுரல்கள் கேட்கவில்லை.

பயத்தினால் சனங்கள் அடங்கியிருக்கவேண்டும்.

இந்தக் கதை ஊரெல்லாம் புகைவிட்டது.

www.padippakam.com



''முத்தனைக் கட்டையிலை வைச்சு எரிக்கப்போறாங் களாம். நாங்கள் பேசாமல் இருக்கிறதோ?'' என்ற கேள்வி.

மணியக்காரனும், குலத்துங்கரும் வெளியே வந்த போது வட்டுக்கோட்டை விதானையார் நடராசா தலை மையில் பத்துப் பதினைந்துபேர் மணியக்காரனைச் சந்தித்துப் பேசினர்.

''இஞ்சாரும் நடராசா விதானையார், சுடலேக்கை அவங்களைச் சுடக்கூடாதெண்டு சட்டமில்லை. நான் சொல்லிப் போட்டன் ஆரெண்டாலும் ஏதெண்டாலும் மாறா நிண்டியளோ உம்மடை விதானை வேலையும் போச்சு, மற்றவங்களின்ரை காசு கலைஞ்சும் போச்சு. பிறகு எவ்வளவு சிலவளிச்சாலும் நீங்கள் வெல்லமாட்டியள். இப்ப இருக்கிற ஏஜண்டரை உங்களுக்குத் தெரியாது. சட்டமெண்டா அவரெட்டைச் சட்டந்தான். அவன் யூதன். பேந்து நானும் ஒண்டும் செய்யேலாது.''

என்று மணியக்காரன் சொல்லி முடித்துவிட்டார்.

செல்லத்துரையரின் செலவில் முத்தனின் கட்டை சுடலைவரை சென்று கட்டையில் எரிந்துவிட்டது.

''முத்தனின் பிரதேம் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட, ஐந்தோ பத்தோ நாட்களுக்குப் பின்பு உண்மை தெரியவர, பின்பு முத்தனின் பிரேதம் கிளறி எடுக்கப்பட்டுச் சோதனை செய்யப்பட, சோதனையின்மேல்......

சோதனையின் மேல்......

ஐயர்வீட்டு சம்பவங்களோடு இதுவும் சேர்க்கப்பட்டு சேர்க்கப்பட்டு......

ஒன்றுக்குமே இடமில்லாது முத்தனின் உடல் எரிக்கப் பட்டுவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



''முதல் முதலில் கட்டையில் கிடந்து எரிந்த 'பஞ்சமன்' என்ற பெருமை முத்தனுக்குச் சேர்ந்துவிட்டது என்னவோ உண்மைதான்!

ஃ ஃ ஃ

நான்கு நாட்களாக ஐயரின் வீடு ஆமைப்பூட்டுப் போட்டுப் பூட்டிப்பட்டிருந்தது.

தங்கை சூத்திரனுடன் ஓடிவிட்ட அவமானத்தைத் தாங்கமாட்டாமல் அவர் குடும்பத்துடன் போய்விட்ட தாகவே பலரும் எண்ணினர். ஆனால்......

நான்காவது நாள் ஐயர் வீட்டுக்கு எண்ணெய் கொடுப்பவன் வந்தான்.

வீடு பூட்டித்தான் கிடந்தது.

எங்கிருந்தோ துர் நாற்றம் வந்தது.

வீட்டுக்குள்ளிருந்து மணி இலையான்களின் இரைச்சல் ஓசை கேட்டது.

எறும்புக்கூட்டம் பல நிரைகளைக் கூட்டிக் கொண்டு பூட்டிய கதவின் கீழாகப் போய் வந்தன.

எண்ணெய்க்காரன் ஊருக்குள் சென்று இந்தத் தகவலைக் கூறிவிட்டான்.

ஊர் திரண்டு வந்து கதவை உடைத்துப் பார்த்த போது...

உள்ளே ஐயர், மனைவி, நன்கு பிள்ளைகள் எல்லாரும் வெட்டுண்டு, அழுகிப் போன பிணங்களாக...

ஃ ஃ ஃ

முத்தனைக் கட்டையில் வைத்துக் கொழுத்திய தான் அந்த முற்போக்குச் சம்பவத்தோடு பின்னிப் பிணைந்தி

www.padippakam.com



ருந்த இந்தச் சம்பவங்களையெல்லாம் விதானையார் எப்படித்தான் சண்முகம்பிள்ளையிடம் கூறிவிட முடியும்? அவர் மௌனமாகவே இருந்தார். அந்தச் சம்பவம் பற்றி ஒரு சொல்கூட அவர் உதடுகளிலிருந்து பிறக்கவில்லை. இதற்கு மேல் அவரிடமிருந்து இந்தச் சம்பவத்தைக் கேட்டறிவதில் என்ன பயன் கிடைக்கப் போகிறது? சண்முகம் பிள்ளை விட்டுவிட்டார்.

இதற்குப் பின்பு ஊரில் சமீபத்தில் நடந்து முடிந்து விட்ட சம்பவங்களைப் பற்றித் தொட்டம் தொட்டமாக இருவரும் பேசிக் கொண்டனர்.

விதானையாரிடமிருந்து உருப்படியான ஆலோசனைகள் எதுவும் சண்முகம்பிள்ளைக்குக் கிடைக்கவில்லை. மன நிறைவின்றி அவர் திரும்பி விட்டார்.

கார் ஓடிக்கொண்டிருந்தபோது சண்முகம்பிள்ளையின் மனதில் பலவிதமான யோசனைகள் வந்து போய்க் கொண்டிருந்தன.

தனது நடவடிக்கைகளால் ஊரில் உள்ள குறைந்த சாதிப் பயல்கள் மட்டுமல்ல, வேற்றுச் சாதியினரும் படிப் படியாகத் தனது பிடியிலிருந்து விலகி, விலகிப் போவதையும், சொல்லிக் கொள்ளாமலே அவர்கள் எல்லோரும் ஒரு முகப்பட்டு வருவதையும் அவர் உணர்ந்தார். அப்படிப் பட்டவர்களையெல்லாம் தனித்தனியாக எடுத்துப் பார்த்த போது, கோவிய நன்னியனுடைய சகோதரி மகன் முக்கியக் கந்தையன், சாயக்காரத் துரைராசாவின் மைத்துனன், சாண்டார வீரசிங்கன், கரையார இயக்கரசன், தச்சக் கந்தசாமியனின் இரண்டு மக்கள், சங்கக்கடை மனேச்சர் வைத்திலிங்கத்தின் நடுவிலான், கணேசர் சுருட்டுக் கொட்டிலின் பாதிப் பேர், செகிட்டையரின் பேரப் பொடியன், வண்ணாரக் கந்தையனின் மகன், அம்பட்ட முருகேசன்ரை இளையவன், துரும்ப மிக்கேல், ஆகியோர் அவர் கண்முன்னே அணிவகுத்து வந்தனர்.

www.padippakam.com



அவர்கள் எல்லோரும் பெரும்பான்மையாக ஓலைக் குடிசைக்காரர்களும் சிறு சிறு தொழில் செய்வோர்களும், ஒட்டுக் குடியிருப்பவர்களும், நிலத்தைக் கிண்டுபவர்களாக வுமே இருந்தது. இவர்களுக்கும் மற்றச் சின்னச் சாதி யளுக்கும் ஏற்பட்டு வரும் உடன்பாடுகளைப் போல, தனது அந்தஸ்துடன் ஒட்டக் கூடியவர்களாகக் கணக் கெடுத்து அவர்களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுப் பதில் தான் தவறி விட்டதாகவே அவருக்குப் பட்டது. அப்படிப்பட்டவர்களை அவர் மனம் கணக்கெடுத்தது.

தன்னைப் போல பல ஆண்டுகளாக ஊரின் தொடர் புகள் விடுபட்டுப் போய் பெரும் காணி பூமிகளின் ஆதிக் கங்களைப் பறி கொடுத்து நிற்பவர்களாக ஒருவருமே அவர் மனதுக்குத் தட்டுப்படவில்லை. ஊரோடு தொடர்ச் சியாக வாழ்ந்து கொண்டிருந்தமையால் பல விஷயங்களில் அவர்களுக்கெல்லாம் பல விதங்களில் பலரின் தேவைகளுக் காகவும், தங்கள் தேவைகளுக்காகவும் கண்டும் காணா மலும் எதையும் சமாளித்து வாழ்பவர்களாகத்தான் அவர் கண்டார்.

அவர்கள் எல்லோருக்கும் மேலாகத் தனது கொடியை உயர்த்திப் பிடிப்பதில் அவர்கள் வலிந்து வந்து தன்னு டைய ஆணைக் குட்பட்டோ, அன்றி தன்னோடு சரிந்து வருவதோ முடியாத ஒரு நிலை வலுத்து விட்டதை அவர் மனதால் கணக்கிட்டுக் கொண்டார். அம்மன் கோவில் விவகாரத்தில் தன்னுடன் நிற்பவர்கள் அலங்காமல், நலங் காமல் தன்னை முதன்மைப்படுத்தி தன் மூலமாகக்காரியத் தைச் சாதித்துக் கொண்டு தங்கள் சக்தியின் மதிப்பைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றவரை தான் நிற்பது போலவும், கண்ணாடியனின் அகால மரணத்தின் மேல் தங்களுக்கும் இப்படி ஆகிவிடாமல் தங்களைப் பத்திரப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதுபோல வுமே அவரின் கணிப்புக்குட்பட்டனர்.

www.padippakam.com



பல்வேறு சிந்தனைகளுடன் மாந்தோப்பு வாயிலுக்கு அவர் வந்தபோது காரின் வெளிச்ச வீச்சில் நன்னியன் வீட்டுப் பொன்னிப் பொட்டைச்சியும், கோவிந்தனும் ஓடிக்குதித்து விளையாடுவதை அவர் கண்கள் கண்டு விட்டன.

காரின் வெளிச்சத்தை அணைக்காமலே காரை விட்டு கைப்பிரம்பைச் சீற்றிலிருந்து எடுத்துக் கொண்டே இறங்கிய அவரை நோக்கிக் கோவிந்தன் வாலைத் தொங்கப் போட்டுக் கொண்டு விசுவாச உணர்ச்சியோடு பொன்னிப் பொட்டைச்சியை நின்ற இடத்திலேயே விட்டுவிட்டு எஜமானின் பக்கத்துக்கே வந்து விட்டது. மறுகணம் ஐயாவின் ஓங்கிய கைப்பிரம்பு கோவிந்தனின் முதுகிலே ஓய்வு கண்டது.

கோவென்ற பெருங்குரல் ஒன்றை வைத்துவிட்டு அந்தச் சீவன் ஐயாவின் காலடியிலேயே விழுந்து உருண்டு, அனுங்கிச் சிணுங்கித் தனது விசுவாசத்தை மீண்டும் தெரிவித்துக் கொண்டு புரண்டு நெளிந்தது. ஆனாலும் அவர் அதைப் பல தடவைகள் தாக்கினார். கோவிந்தனோ பெருங் குரல் எதையும் கிளப்பவில்லை.

கோவிந்தனின் கழுத்துப் பட்டியைப் பிடித்து நிமிர்த்தி அதை வலிந்து இழுத்துக் கொண்டு கூடுமட்டும் சென்ற அவர் கூட்டின் கதவைத் திறந்து அதை உள்ளே தள்ளி விட்டு கதவைப் பூட்டிக் கொளுவி விட்டார்.

பொன்னி காற்றாகப் பறந்து விட்டது.

இந்த ஆரவாரத்திற்கு அம்மாள் டோர்ஜ் லையிற்றைப் பிடித்துக் கொண்டே வெளியே வந்தாள். கார் வெளிச்சத்தில் ஐயா ஆத்திரத்துடன் கூட்டிலிருந்து திரும்பியது நன்றாகத் தெரிந்தது.

அவள் விஷயத்தை அனுமானித்துக் கொண்டாள்.

அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

www.padippakam.com



''உம்மடை செல்லம் என்ன செய்யிதெண்டு தெரியுமே?''

என்று அவர் அம்மாவைப் பார்த்துக் கேட்டார்.

''என்ரை செல்லமோ? அவனோடை செல்லம் கொஞ்சுவியள் இப்ப என்ரை செல்லமெண்ணிறியள். இப்ப என்ன நடந்தது?'' என்று அம்மாள் கேட்டாள்.

''எனக்கு விசர் வருகுது கண்டீரோ? அவனுக்குப் பெட்டை ஆசை வந்திட்டுது, அவளும் நன்னியன்ரை பொன்னிப் பொட்டைச்சியிலை ஆசை வந்திட்டுது!''

என்று கூறிக் கொண்டே ஐயா காரை வழி நடத்தி மண்டபத்துக்குள் இட்டுச் சென்றார்.

அதற்குப் பின் ஐயாவும், அம்மாவும் உள்ளே சென்று விட்டனர்.

இராப் போஜனம் அருந்திவிட்டு ஐயா படுக்கைக்குப் போய்விட்டார்.

ஐயா கண்ணயர்ந்து பேசுவதற்கிடையில், ''கோவிந்தனைத் திறக்கேட்டையுங்கோ?'' பாவம் அது வாயில்லாப் பிராணி'' என்று கேட்கவேண்டும் போல அம்மாளுக்குப் பலமுறை எண்ணம் வந்தது. ஆனாலும், அவள் அப்படிக் கேட்கவில்லை.

ஐயா உறங்கிப் போய் விட்டார்.

வழமையாகச் சாத்திர விதியின்படி பொழுது கருகிய பின் வந்துபோகும் சேர்வைக்காரக் கோவிந்தன் ஒரு மணி நேரங்கழித்து எட்டு மணிபோலத்தான் வந்து ஏராக் கள்ளுப் புது முட்டி கட்டிவிட்டுப் போனான். அதற்குப் பின்தான் அம்மாள் கோவிந்தனைக் கூட்டிலிருந்து வெளியே விட்டாள். ஒன்பது மணிவரை ஐயா வந்தார் இடையேயுள்ள ஒரு மணி நேரந்தான் கோவிந்தன் கூட்டுக்கு வெளியே நின்றான். அதற்கிடையில் ஐயா அவனை மறுபடியும் சிறைக்குள் அடைத்துவிட்டார்.

www.padippakam.com



சிறைப்பட்ட கோவிந்தனுக்காக அம்மாள் மனதால் வருந்தினாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

சுவர்க் கடிகாரம் இரண்டடித்தது.

தூங்கி மறுபடியும் காலை சூரிய ஒளிக்காக கருக் கூட்டல் பிறப்பதற்கு முன் அவன் எழுந்திருக்க வேண்டும்!

ஏராக்கள்ளுக் கோவிந்தன் வழமைப்படியும், சாஸ்திர விதிப்படியும் பொழுது முகம் காணுவதற்கிடையில் ஏராக் கள்ளை வாய்பேசாது இறக்கி உடனடியாகவே பச்சைப் பிளாக் கோலி அம்மாளுக்குத் தர வந்துவிடுவான். இதற் காக துயின்று மறுபடியும் ஐந்து மணி அடிக்கும்போது அம்மாள் சமீபகால வழக்கப்படி எழுந்துவிட வேண்டும்.

ஃ ஃ ஃ

நன்றாக விடிந்ததும் ஐயா காலைக் கடன்களுக்காக, துப்பாக்கியைத் தோளில் போட்டுக் கொண்டு பரவைக் குளத்தைக் கடந்தபோது கண்ணி ஐயாவைக் கண்டாள்.

கோவிந்தனை இன்று காணவில்லை.

இது அவளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது!

''கண்ணி, நன்னியன் சிறிய தாயின்ரை செத்தவீட் டாலை வந்திட்டானே?'' என்று கண்ணியைக் கேட்டு விட்டு ''கண்ணி, உன்ரை பொன்னிப் பொட்டைச்சியை கட்டி வைச்சு வளக்கோணுங்கண்டியோ! பிடிச்சுக் கட்டிவை!'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

கோவிந்தன் இன்று ஐயாவுடன் வராததையும், ஐயா சொன்னதையும் சேர்த்துக் கண்ணி யோசித்தாள். ஓரள வுக்கு அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

நாலைந்து நாட்களாக கோவிந்தனும், பொன்னிப் பொட்டைச்சியும் அலைந்து விளையாடியதை மங்கல் நிலவொளியில் கண்ணி கண்டிருக்கிறாள்!

கண்ணிக்கு மனதுக்குள் சிரிப்பு வந்தது.

www.padippakam.com



பரவைக் குளத்தைத் தாண்டி ஐயா போய் வெகுநேர மாகிவிட்டது. வெடிச்சத்தம் எதுவும் கேட்கவில்லை.

''கொஞ்ச நாட்களாக ஐயா பண்டாரவெடி கூட வைக்கிறேல்லை, வைச்சா விளக்கூடிய விதத்திலை வைக்க வேணும், இல்லாட்டித் துவக்கை நிமித்திறேல்லை என்று ஐயா நினைச்சுப்போட்டார் போலை கிடக்கு'' என்று கண்ணி எண்ணிக் கொண்டாள்.

கண்ணி மாந்தோப்பு முற்றத்திற்குப் போனாள். அம்மாள் இன்னும் வெளியே வரவில்லை. ''அம்மா, அம்மா,'' என்று இரண்டு மூன்று தடவைகள் அழைத் தாள்.

அம்மாள் வெளியே வரவில்லை.

அம்மாள் நன்றாக அசந்து தூங்குகிறாள்!

அவள் திரும்பி வரும்போது பொன்னிப் பொட்டைச்சி கோவிந்தனின் கூட்டுக்கு முன்னால் கால்களை முன்நீட்டி, உடம்பைக்கிடத்தி தலைமாத்திரம் உயர்த்திக்கொண்டு உல்லாசமாகக் கிடந்தது.

கோவிந்தன் செவிகளை உயர்த்தியும், தாழ்த்தியும் கூட்டுக்குள் நீட்டிய கால்களுக்கு மேல் தலையைச் சாய்த் துக் கொண்டு வைத்த கண் வாங்காமல் பொன்னியையே பார்த்துக் கொண்டிருந்தது.

குனிந்து ஒரு கல்லை எடுத்து பொன்னியை நோக்கி வீசினாள் கண்ணி.

பொன்னிப் பொட்டைச்சி அசையவில்லை.

''உனக்குப் பெரிய இடத்து மாப்பிள்ளையோ வேணும்'' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே கண்ணி ஒரு தடியை எடுத்து அதன் முதுகில் ஒன்று வைத்தாள்.



படிப்பகம்

www.padippakam.com



அடக்கமாகக் கத்திக்கொண்டே பொன்னி அவளுக்கு முன்னால் ஓடியது.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஐயா திரும்பி விட்டார்.

வந்தவர் கோவிந்தனின் கூட்டுப்பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

கோவிந்தனைக் குளிப்பாட்டுதல் உணவூட்டுதல் என்பவற்றைத் தவிர மற்றைய நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு ஐயா புறப்பட்டு விட்டார்.

இன்று கோவிந்தன் காரில் இல்லை.

கோவிந்தனுடன் அவருக்குக் கோபம்!

கோவிந்தனுக்கான உணவை அம்மாள் எடுத்து வந்து கூட்டுக்குள் வைத்தாள்.

ஒரு தடவை அதை முகர்ந்து பார்த்துவிட்ட கோவிந்தன் அதற்குமேல் உணவைத் தொட்டுப் பார்க்க வில்லை. ஒரு மூலைக்குள் படுத்துக்கொண்டது.

''கோவிந்தன், ஐயாவுக்குக் கோவம் வந்திட்டுது! எக் கணம் அடிச்சு முறிச்சுப் போடுவார், ராசாவெல்லே; தின்னன்'' என்று அம்மாள் கெஞ்சினாள்.

செவி ஒன்றைத் தாழ்த்தி அவள் பேச்சை அவதானித்த கோவிந்தன், அம்மாளைத தலைநிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் தலையைத் தாழ்த்திக்கொண்டு படுத்து விட்டது.

ஐயாவுக்குக் கோபம் வந்தால் கோவிந்தனுக்கு மட்டும் ஏன் வரக்கூடாது?

அப்போது கடைக்குட்டியனை இடுப்பில் வைத்து இன்றோ நாளையோ குதிக்கப்போகும் மற்றக் கடைக் குட்டியனைப் பொறுமையுடன் தாங்கி நிற்கும் வயிற்றைத் தள்ளிக் கொண்டே கண்ணி வந்தாள்.

www.padippakam.com



"என்ரை பொன்னிப் பொட்டையைக் கட்டி வளக்கச் சொல்லிப் போட்டு ஐயா போறாராக்கும்! என்ரை பொன்னி கட்டுக்கை நிக்குமே? சங்கிலி அதிலி பட்டுக்கூட இருக்காதாக்கும்.''

என்று பேசிக் கொண்டே கண்ணி வந்தாள்.

"இஞ்சை பார் கண்ணி, உன்ரை பொன்னியாளால் கோவிந்தன் அடிவாங்கிக் கொண்டு கிடக்கிறதை? ஐயா ஒருக்கா ரெண்டுதரம் அடிச்சாப்போலை இவருக்கும் கோவம் வந்திட்டுது. தின்னிறாரில்லை.''

பொன்னிப் பெட்டை தொலைவில் வந்து கொண் டிருந்தாள்.

"அங்கைபாரடி உன்ரை பொன்னி மாப்பிளையைத் தேடி வாறதை? கண்ணி, உது வீண் வில்லங்கத்திலை தான் வந்து முடியப்போகுது, சங்கிலி தாறன் பொன்னி யைக் கட்டிவை'' என்று கூறிக் கொண்டு அம்மாள் உள்ளே போக கண்ணி பின் தொடர்ந்தாள்.

"அப்போதை ஒருக்கா வந்தனான், அம்மா நித்திரை யாலை எழும்பேல்லைப்போலை!''

"ஒழும்பியிட்டன் கண்ணி, நீ கூப்பிட்டதும் கேட்டது. உடம்பை ஆட்டக் கீட்ட முடியல்லை. நீ பேந்து வரட் டுக்கு மெண்டு கிடந்தனான்.''

அம்மாள் உள்ளே போய் நனைய வைத்திருந்த உழுந்தை எடுத்து வந்து ஆட்டாமா கல்லுக்கு முன்னால் வைத்துவிட்டு "அரை கண்ணி வாறன்'' என்று கூறிக் கொண்டே உள்ளே போய்விட்டாள்.

கடைக்குட்டியனை நிலத்தில் போட்டுவிட்டு கண்ணி, கால்களை அகல நீட்டி பிள்ளைவயிறு கல்லுடன் கொஞ்சி நிற்க மா அரைக்கத் தொடங்கிவிட்டாள்.

பக்கத்தே இருந்த திருகைக்கல்லில் ஏறிக் குந்திக் கொண்டே கடைக்குட்டியன் சிரித்துக் கொண்டிருந்தான்.

www.padippakam.com



அம்மாள் வந்தாள்.

ஒரு அலுமினியச் சட்டியுடன் வந்த அவள் அதை கண்ணிக்கு முன்னே வைத்துவிட்டு, ''கண்ணி நான் எப்பன் சரியப்போறன். தலைக்கனமாக்கிடக்கு. என்னை அருட்டிப் போடாதை, குசினியுக்கை எல்லாம் அடுக்காய்க் கிடக்கு. மாவை அரைச்சுப்போட்டு இதைத் தின், திண்டு போட்டு உலையை மூட்டு'' என்று கூறிவிட்டு அம்மாள் அறைக்குள் போய்விட்டாள்.

இன்று கண்ணிக்கு அதிக வேலை தரப்பட்டது.

சமையல் காரியத்தில் தொட்டாட்டு வேலை மட்டும் செய்யும் அவளுக்கு இன்று சமையல் வேலையே பொறுப்பாகக் கிடைத்துவிட்டது.

கண்ணி எதையும் யோசிக்கவில்லை.

www.padippakam.com

# 13

பெரிய மனது பண்ணி ஐயா கோவிந்தனை மன்னித்து விட்டார்.

பாவம் கோவிந்தன்!

ஐயா மனது சமாதானம் அடைந்து விட்டதைக் கண்டு தானும் சமாதானம் அடைந்து விட்டது.

ஒரு நாள் முற்றும் பட்டினி கிடந்து கோவிந்தன் சற்று இளைத்துப் போய்விட்டதாகவும், அதன் மதம் அடங்கிப் போய் விட்டதாகவும் ஐயா எண்ணி விட்டார். ஆனாலும், முன்போல அதனுடன் செல்லப் பேச்சு பேசுவதற்கு மட்டும் ஐயாவுக்கு மனது ஒத்துப் போகவில்லை.

அம்மாவிடமிருந்து பெற்று வந்த சங்கிலியில் தந்திரமாக பொன்னியின் கழுத்தில் மாட்டிவிட்ட கணணி, அதனை முற்றத்து முருங்கை மரத்தில் இணைத்து விட்டாள்.

பொன்னிக்கு இது புதிய அனுபவம்!

www.padippakam.com



இது காலவரை என்றுமே அதன் மீது சங்கிலி பட்டது மில்லை, அது கட்டுண்டு கிடந்ததுமில்லை.

மத்தியானம் கட்டின நேரத்திலிருந்து திமிறிக்குதித்து, சங்கிலியை முறுக்கி, கடித்துக் கடித்து, பெருங்குரலில் கத்திக் கத்தி அது பட்டபாட்டைக் கண்ணி பார்த்து வருத்தப்பட்டாள். ஆனாலும், என்ன செய்வது?

இரவு வந்தபோது பொன்னியின் கூச்சலும் குமுறலும் சற்று ஓய்ந்து போயிற்று.

அசந்து தூங்கிக் கொண்டிருந்த கண்ணி நடுராத்திரியில் கண் விழித்த போது பொன்னியின் குரல் முற்றாகவே அடங்கி விட்டது. ஆனாலும், ஒருவித அனுங்கல்.

அவள் வெளியே வந்து பார்த்தாள்.

முற்றத்து முருங்கை மரத்தின் கீழ்...

கோவிந்தனின் உடம்போடு பொன்னி ஒட்டிப் போய்...

நாடி நரம்பு, தசைநார்கள் எல்லாம் கிறங்கி...

மெதுவான அனுங்கல், சிணுங்கல்!

இடையிடையே சிறு கூப்பாடு!

பொன்னிப் பொட்டைச்சிக்கு இதுதான் முதல் அனுபவம் என்பது கண்ணிக்குத் தெரியும்.

நிலவு ஒளியில் அந்த இரண்டு ஜீவன்களும் இரண்டு உடல்களும் ஒன்றாகி...

கண்ணி திரும்பவும் படுக்கைக்கு வந்து விட்டாள்.

அவள் மனது ஒரு மாதிரியாக இருந்தது.

தங்களை மறந்து தூங்கிக் கொண்டிருந்த குஞ்சு குருமான்களைச் சீர்ப்படுத்திவிட்டு அவள் மறுபடியும் உறங்கிப்போய் விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



விடிந்தபோது நன்னியன் வந்தான்.

இரண்டு நாட்களுக்கு முன் செத்துப்போன சிறிய தாய்க்காரியின் மரண வீட்டிற்காகப் பண்டத்தரிப்புக்குப் போனவன் இப்போதுதான் வருகிறான்.

முற்றத்து முருங்கை மரத்தில் பொன்னி பொட்டைச்சி கட்டி வைக்கப்பட்டிருப்பதை பொன்னி பொட்டைச்சியே பாய்ந்து குரல் வைத்தே தெரிவித்துக் கொண்டது.

''என்னடியப்பா இது புதினம், பொன்னிக்குச் சங்கிலி போட்டுக் கட்டிவைச்சிருக்கு!'' என்று அவன் கண்ணியைக் கேட்டான்.

''அது... அது ஊரில் கடுவன்களோடை திரியத் துவங்கியிட்டுது. அதுதான் கட்டி வைச்சிருக்கேன்'' என்று அவள் பதில் சொன்னாள்.

''அது கடுவன்களோடை திரிஞ்சா உனக்கு நோகுது போலை கிடக்கு! நீயும் இப்ப நயினார் வீட்டுப் பழக்கம் பழகியிட்டாய் என்ன? அவிட்டுவிடடி அதை!'' என்று அவன் அதட்டினான்.

''அதில்லையப்பா, ஐயாதான் சொன்னவர் கட்டி வைக்கச் சொல்லி, அதுதான் கட்டி வைச்சிருக்கு!'' என்று கண்ணி மெதுவாகச் சொன்னாள்.

''ஐயா சொல்லிப்போட்டார் என்ன? ஊரவையை அவனிவனைத் தன்ரை சொல்லுக்கை கட்டுவைச்சிருக்கிறதைப்போலை உன்னைக் கொண்டுவிச்சு பொன்னியையும் கட்டி வைச்சிட்டார். நாளைக்கு என்னையும் பிடிச்சுக் கட்டி வைக்கச் சொல்லுவார் நீ செய்வாய் என்ன?'' என்ற நன்னியன் பேச்சுக்கு ''இதென்ன நாசமறுந்த கதை!'' என்று கண்ணி பட்டெனச் சொன்னாள்.

''ஓ, ஓ, ஊரை நாசமறுக்கத்தான் அவர் வெளிக்கிட்டிருக்கிறார். எக்கணம் பாரன் ஐயா படப் போற

படிப்பகம்

www.padippakam.com



பாட்டை'' என்று அவன் பேசியபோது கண்ணி திடுக்கிட்டு விட்டாள். அவன் இப்படிப் பேசுவான் என்று அவள் சற்றும் எதிர் பார்க்கவில்லை. உள்ளுக்குள் அவனின் பேச்சு அவளுக்கு விருப்பமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இப்படிப்பட்ட அவனின் வெளியான பேச்சு அவளை ஏங்கவும் வைத்து விட்டது.

கணவனின் இந்த மனமாற்றத்தை அவள் உடனடியாக எதிர்பார்க்கவில்லை.

கோவிந்தன் முன்னேவர, துவக்கையும் தோளில் போட்டுக்கொண்டு பரவைக் குளத்தைக் கடக்க ஐயா வந்தார்.

''எடை நன்னியன், செத்த வீடெண்டுட்டுப் போனனீ பண்டைத்தரப்பாங்களின்ரை சோத்துக்குத் தூங்கிப் போட்டு இப்பான் வந்த நீபோலை கிடக்கு; அது சரியடா, இவள் நிறைமாதப் பிள்ளைத்தாச்சியை விட்டிட்டு கொஞ்சமும் யோசினை இல்லாமை நிண்டிட்டு வாறாய் என்ன? சரி. சரி வேலை கனக்கக் கிடக்கு, ராவைக்கு கோயில் மண்டபத்துக்கு முன்னாலை கம்பிக் கட்டையள் நடவேணும், ராத்திரிப் போட வேணுமெண்டு எங்கடை பொடியள் வெளிக்கிட்டவங்கள். நான்தான் நீயில்லாமை அது செய்யக்கூடாதெண்டு சொல்லிப் போட்டன். நான் இஞ்சாலை போட்டு வாறன். கெதியாய் வெளிக்கிடு, மாணிப்பாய் மரக்காலையிலை ஐம்பது கம்பிக் கட்டைக்குச் சொல்லியிருக்கிறன், போய் ஏத்திக் கொண்டு வா!'' என்று கூறிவிட்டு அவனின் பதிலுக்குக் காத்திராமலே ஐயா பரவைக் குளத்தைத் தாண்டிப் போய் விட்டார்.

''இப்ப கொஞ்சம் முந்திக் கனக்கக் கதைச்சாயப்பா, இப்ப நயினார் சொல்லிப் போட்டுப் போறார், கம்பிக் கட்டை போடவரச் சொல்லி, நீ ஒண்டும் பேசாமல் நிக்கிறாய்?'' என்று கண்ணி நன்னியனைக் கேட்டாள்.

www.padippakam.com



நன்னியனுக்கு மனைவியின் பேச்சுக்குப் பதில் கூற முடியவில்லை.

வெடிச்சத்தம் ஒன்றும் கேட்கவில்லை.

இன்னும் ஐயா துவக்குத் தூக்கவில்லை.

சற்று வேளைக்குப் பின் ஐயா திரும்பிவிட்டார்.

முருங்க மரத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த பொன்னியை அவர் கண்டார்.

''கண்ணி, நீயும் வலுசிங்கிதான்! உன்ரை பொட்டைச் சியைக் கட்டிவைச்சுத்தான் போட்டாய் என்ன? எங்கை நன்னியன்ரை சிலமனைக் காணேல்லை; மரக்காலைக்குப் போட்டான் போலைகிடக்கு?'' என்று ஐயா கேட்டார்.

''இல்லையாக்கும், இண்டைக்குதான் பண்டைத் தரிப்பார் எட்டுச் சிலவு வைக்கினமாம், காடு மாத்திப் போட்டுச் சிலவோடு சிலவாய் அதையும் வைக்கினமாம், அது தான் அந்தாள் போட்டுதாக்கும்!''

கண்ணியின் இந்தப் பதில் ஐயாவின் நெஞ்சின் அடி வரை சென்று உதைத்தது.

''என்னெடி, நான் சொன்னதையும் கேக்காமல் போட்டானோடி? எல்லாம் நாந்தந்த இடம்! அந்தந்தச் சாதியை அந்தந்த இடத்திலை தானெடி வைக்க வேணும். பத்தை தயிக்கை கிடக்கிறதுகளை மெத்தையிலை வைக்கேலா தெண்ணிறது சரியாத்தான் போச்சு!'' என்று கூறிக்கொண்டே ஐயா மாந்தோப்புக்கு போய்விட்டார்.

ஃ ஃ ஃ

வழமைபோல பத்துமணிவரை கண்ணி மாந்தோப்பு முற்றத்திற்கு வந்தாள்.

பச்சை நிறப் போர்வையால் உடம்பைப் போர்த்திக்கொண்டு அம்மாள் வாயிலுக்கு வந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவள் முகமெல்லாம் சிவப்பேறி இருந்தது.

கண்ணியை உள்ளே அழைத்துப் போவதற்கிடையில் அம்மாள் இரண்டு மூன்று தடவைகள் உமிழ்நீரை வெளியே துப்பிவிட்டாள்.

கண்ணி அம்மாளின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அம்மாளின் இதழ்களில் மகரந்த வழுவழுப்புத் தெரிந்தது, கழுத்துச் சதைவரை நீல நரம்புக் கோடுகள்!

ஒரு தடவை அம்மாள் அருக்குளித்துத் துப்பியதையும் கண்ணி கவனித்து விட்டாள்.

கண்ணியின் உள்மனதுக்குள் எதுவோ தெரிந்தது.

கலைந்து வழிந்த கூந்தலைத் திரட்டிய அம்மாள் அதை முகர்ந்து கொண்டாள்.

''என்னம்மா ஒரு மாதிரி இருக்கிறியள்?''

''ஒண்டுமில்லையெடி. ஐஞ்சாறு நாளாய் வாய் ஊறி, ஊறி வயித்தைப் பிரட்டுது! தலையையும் சுத்துது!''

''அம்மா, முந்தியும் இப்பிடி.........''

''.......''

''அம்மா, ஏராக்கள்ளின்ரை...''

''.......''

''கோவிந்தன்ரை ஏராக்கள்ளு வலுதிறம் எண்டுதான் முந்திச் சொல்லேக்கை நீங்கள் நம்பியிருக்க மாட்டியள் இனி நம்புங்கோ!''...

''எடி கண்ணி, பேய்க்கதை கதையாதையடி! உனக் கொண்டுந் தெரியாதெடி; வந்தா வந்த வேலையைச் செய்து போட்டுப் போறதுக்குப் பேய்க்கதை கதைக்கிறாய் என்ன!''

என்று கேட்டுக் கொண்டே அம்மாள் உள்ளே போனாள். கண்ணியும் தயங்கித் தயங்கிப் பின்னே சென்றாள்.

படிப்பகம்

www.padippakam.com



கண்ணியைக் குசினிக்குள் விட்டுட்டு அம்மாள் அறைக்குள் போய்க் கதவை அடைத்துக் கொண்டாள்.

நான்கைந்து நாட்களாக அவள் அப்பிடித்தான்.

கண்ணியே சகலதும்!

சமையல் செய்து கொண்டிருக்கும்போது கண்ணிக்கு எத்தனையோ யோசனைகள் வந்தன.

அம்மாளின் உடல் நிலையை அவதானித்து அம்மாள் வாயிலும் வயிற்றிலும் என்பதை கண்ணி தீர்மானித்து விட்டாள்.

ஆனால்...?

பிள்ளைப் பேற்றுக்காக அம்மாள் துடித்த துடிப்புக்கும், இப்போது அவள் அருவருத்துக் கொள்ளும் பாவனைக்கும் காரணங்களைத்தான் அவளின் சின்ன மூளையால் அனுமானிக்க முடியவில்லை.

இரண்டொரு தடவை அம்மாள் ஓங்காளிக்கும் ஓசை அமுங்கலாகக் கேட்டது.

கண்ணி சமையல் வேலைகளை முடித்துக் கொண்டு புறப்படும்வரை அம்மாள் வெளியே வரவில்லை.

''அம்மா கண்ணி போறாளாக்கும்!'' என்று கண்ணி குரல் வைத்தாள்.

''கண்ணி நில்லெடி வாறன்!'' எண்டு சொன்னபோது கண்ணி அம்மாளுக்காகக் காத்து நின்றாள்.

அம்மாள் வெளியே வந்தாள்.

அவள் போர்வையை நீக்கிவிட்டு கண்ணாடி போன்ற உள் யக்கற்றுக்கு மேலாக ஒரு துணியை மட்டும் அரைமட்டத்தில் சுற்றிக்கொண்டு வந்தாள்.

அவள் மேனியெல்லாம் சிவப்போடு சிவப்பாக துமிகள் தெரிந்தன.

மயிரை அள்ளிக் கத்தையாக உச்சிவரை சுற்றி முடிந்திருந்தாள்.

www.padippakam.com



தோள் மூட்டிலிருந்து நிர்வாணமாகத் தொங்கிய கைகள் மேல் மூட்டிலிருந்து முடிவுவரை மதாளிப்பாக இருந்தது—மினுமினுப்பாக இருந்தது.

கண்ணி முன்பு பல தடவைகள் குளியல் அறையில் அம்மாளைப் பிறந்த மேனியுடன் கண்டிருக்கிறாள். கண்டதென்ன கண்டது? ஊத்தை விளக்குவதற்காக அழைத்துமிருக்கிறாள். அந்த வேளைகளில் சற்று முதுமை கண்டுவிட்ட அவளின் தசைக் கோளங்கள் இப்போது கெம்பீரமாக— எடுப்பாக—கவர்ச்சியாக இருந்தன.

அம்மாளின் கழுத்துவரை கோடுகள் தடிப்பாக ஊதி இருந்தன.

கண்ணி அம்மாளை அளந்து தனது முடிவை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

கண்ணியை தன் மேனிமேல் கண்டபடி கண்களால் அலையவிடாத தோறணையில் அம்மாள் படக்கெனக் குசினிக்குள் சென்று இரண்டு சிறு சட்டிகளில் பழையது களை எடுத்து வந்து கண்ணியிடம் கொடுத்தாள்.

ஒன்று நேற்றைய பண்டி வத்தல் கறி, மற்றது வெட்டி வைக்கப்பட்டமையால் சற்றுக் காய்ந்துவிட்ட பாண் துண்டுகள்.

கண்ணிக்கு முன்னால் சட்டிகளை வைத்துவிட்டு அம்மாள் மறுபடியும் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டாள். எதுவும் பேசவில்லை

கண்ணி வந்துவிட்டாள்.

ஃ ஃ ஃ

மத்தியானத்திற்குப் பின் வீட்டை விட்டுப் போன சண்முகம்பிள்ளை இரவு பதினொரு மணிக்கு மேல்தான் வீட்டுக்கு வந்தார்.

அவரும் வரும்வரை காத்திருந்து அம்மாள் ஐயாவுக்கு உணவு பரிமாறினாள்.

படிப்பகம்

www.padippakam.com



அப்போது ஒரு தடவை அம்மாள் வெளியே வந்து பின் கதவோரம் ஓங்காளித்தது ஐயாவுக்குக் கேட்டது.

''என்னப்பா அது?''

என்று ஐயா குரல் வைத்தார்.

அம்மாவுக்கு நெஞ்சில் இடி ஒன்று விழுந்தது.

அவள் உடலெல்லாம்—உள்ளமெல்லாம் நடுக்கம் எடுத்தது.

''பண்டி வத்தல் கறியை கனக்கத் திண்டிட்டீர் போலை கிடக்கு, செமியாக்குணமாக்கும்!'' என்று ஐயா அப்பாவித்தனமாகச் சொன்னார்.

அம்மாளுக்கு இந்தக் கேள்வி நெஞ்சில் நடுக்கத்தைக் குறைத்துவிட்டது.

வாந்திப்பு நின்று அம்மாள் வெளியே இருந்து வருவதற்கிடையில் ஐயா உணவருந்தி முடித்துவிட்டார்.

''கோவிந்தன்ரை அலுவல் முடிஞ்சுதோ, அவனை வெளியிலை விட்டிட்டீரோ?'' இது ஐயாவின் இன்னொரு கேள்வி.

அம்மாளுக்கு இது மறு பேரிடி!

அவளுக்கு மயக்கமே வந்துவிடும் போல இருந்தது.

''என்னப்பா நான் கேக்கிறன் நீர் பேசிறீர் இல்லை. கூட்டுக்காலை கோவிந்தனைத் திறந்துவிட்டிட்டீரோ?'' என்று அவர் மறுபடியும் கேட்டார்.

''இப்பதான் திறந்துவிட்டனான்'' என்று அம்மாள் ஒரு விதமாகப் பதில் சொல்லிவிட்டாள்.

இதற்குப் பின் ஐயாவோ, அம்மாளோ பேசவில்லை.

ஐயா படுக்கையில் சரிந்துவிட்டார்.

படுக்கை அறை மஞ்சள் சிவப்பு வெளிச்சம் அணைக்கப்பட்டது.

www.padippakam.com



அம்மாளின் மூச்சுக்களின் சூடு ஐயாவுக்குப் பட்டுக்கொண்டே இருந்தது.

இல்லறசுகத்தை நோக்கி ஐயாவை நகர்த்திவிட அவள் முற்படுகிறாளா?

ஐயா அயர்ந்து போய்விட்டார்.

அம்மாள் தோற்றுப் போய்விட்டாள்.

அவளுக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் போய்விட்டது.

மறுபடியும் பெருநடுக்கம், 'பேரதிர்ச்சி.'

இரவு ஒன்று பாதிக்குப் பின் ஐயா கண்விழித்தார்.

அம்மாளைப் பார்க்க அவர் வெட்கப்பட்டார்.

தலைமாட்டில் கட்டிலின் அருகோடு இருந்த சுவிச்சை அமுக்கி வெளிச்சத்தை வருவித்தார்.

அம்மாள் இப்போது பக்கத்தே இல்லை.

அவள் தன் கட்டிலில் போய் உறங்கியிருக்க வேண்டும்.

மாவடிப் பக்கமாக ஏதோ கலகலத்துக் கேட்டது.

டோர்ஜ் லையிற்றையும், கைப்பிரம்பையும் எடுத்துக்கொண்டு ஐயா வெளியே வந்து அதன் ஒளியை அங்குமிங்கு ஊரவிட்டார். அந்த ஒளியில்......

கோவிந்தனும், பொன்னிப் பொட்டைச்சியுமாக......

ஐயாவுக்குச் சினம் சீறிக்கொண்டு வந்தது. அந்தச் சினவேகத்தில் அவர் ஸ்தலத்துக்கு வந்துவிட்டார்.

கோவிந்தனை எட்டி உதைத்தார். கைத்தடியினால் தாக்கினார்.

பொன்னிப்பொட்டைச்சி சிணுங்கி அழுது பின் தொங்கக் கோவிந்தன் சற்று அப்பால் ஓடியது. அப்புறம்....., அப்புறம்,

www.padippakam.com



பொன்னிப் பொட்டைச்சி கற்றாகப் பறந்தது. அதன் கழுத்துச் சங்கிலி நிலத்தோடு உரசி எழுப்பிய ஓசை மட்டும் தொலைவுவரை கேட்டது.

கோவிந்தன் விசுவாசத்துடன் நிலத்தில் வெள்ளை பிரட்டி நெளிந்தது. தாறுமாறாகக் கைப்பிரம்பால் அதை நெகிட்டினார்.

கோவிந்தனோ பணிந்து தனது விசுவாசத்தை அனுகல், முனகல்களால் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

ஐயாவுக் கெக்க வந்துவிட்டது. கழுத்துப்பட்டையில் பிடித்து அதை இழுத்து வந்து கூட்டுக்குள் தள்ளிவிட்டார்.

படுக்கையிலிருந்த அம்மாளுக்கு இந்த ஆரவாரங்கள் கேட்காமல் இல்லை.

சன்னலுக்கூடாக நிலவு வெளிச்சத்தில் இந்தச் சம்பவம் அவள் கண்களுக்குத் தெரிந்தன.

பயப் பீதி அவளைத் தின்றது.

ஐயா திரும்பி வருவதற்கிடையில் அவள் தன் படுக்கைக்கு வந்து சுருண்டு விட்டாள்.

படக்கெனக் கதவை அடித்துச் சாத்திக்கொண்டே அவர் படுக்கையில் சரிந்தார். பின்பு எழுந்தார். உணவுக்கு முன் அருந்திய போத்தலை எடுத்து, அண்ணாக்காகவே எஞ்சியதைக் குடித்து முடித்துவிட்டார்.

பாதி மூடப்பட்ட இமைகளுக்கூடாக அம்மாள் இதைக் கண்டாள்.

இப்படி—இந்த வேளை என்றுமே அவர் இப்படிக் குடித்ததில்லை.

அம்மாளுக்குப் பாதி உயிர் போனதுபோல இருந்தது.

வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது.

ஐந்து மணிக்கெல்லாம் ஏராக்கள்ளுகோவிந்தன் வந்து விடுவான். ஆனால், அம்மாள் எழுந்திருக்கவில்லை.

www.padippakam.com



வெளியே கோவிந்தன் வந்த—சேர்வைக்காக ஏறிய—இறங்கிய—ஏராக்கள்ளைத் தருவதற்காக கிணற்றடிப் பக்கம் உலாவிய ஓசைகள் செவிப்புலன்களுக்கு எட்டின.

ஃ ஃ ஃ

விடிந்தபின் ஐயா கோவிந்தனை வெளியே எடுத்து சங்கிலியில் அதை கட்டி அடித்துக் கொண்டிருந்தபோது நான்கு ஐந்து பேர்கள் கேற்றுக்கு வெளியே வந்தனர்.

கோவிந்தனை அடித்தது அடித்தபடியே விட்டுவிட்டு அவர்களிடம் வந்தார்.

இரவு தாங்கள் கோவில் மண்டபத்தைச் சுற்றிக் கங்கிறீற்றிட்டுப் போட்ட கம்பிக் கட்டைகளை நடுச்சாமத்தில் யாரோ பிடுங்கி கோவில் குளத்தில் வீசிவிட்டதாக அவர்கள் தகவல் சொன்னார்கள்.

ஐயா சற்று வேளை நிலைகுத்தி நின்றார்.

''நீங்கள் போங்கோ எல்லாத்துக்கும் நான் அங்கை வாறன்'' என்று மொட்டையாகச் சொல்லி அனுப்பிவிட்டு ஐயா உள்ளே வந்துவிட்டார்.

வந்தவர் கோவிந்தனை அவிழ்த்துக் கூட்டுக்குள் தள்ளிவிட்டு நேராக வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

பின்பு உள்ளே ஒரு மூச்சும் கேட்கவில்லை.

இன்று ஐயா வழமைபோலப் பரவைக் குளத்தைக் கடந்து காலைக் கடன்களுக்குப் போகவில்லை.

வழமையான நேரத்திற்குக் கண்ணி வரத் தவறவில்லை. இரவு மாந்தோப்பு முற்றத்தில் நடந்தவைகள் கண்ணிக்குத் தெரியாது. வழமைபோல கதவோரம் நின்று அவள் அம்மாவை அழைத்தாள்.

''ஆர் நன்னியன் பெண்டிலோ?'' என்று கேட்டுக் கொண்டே ஐயா வந்தார்.

www.padippakam.com



அவர் கையில் துப்பாக்கி இருந்தது.

கண்ணி திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

''எடி நானெல்லையடி சொன்னனான் உன்ரை பொன்னியைக் கட்டி வைக்கச் சொல்லி'' என்று ஐயா பலமாகக் கேட்டார்.

''கட்டித்தானாக்கும் வைச்சனான். அது ராவு சங்கிலியை அறுத்துப் போட்டுதாக்கும்.''

கண்ணி பயந்து கொண்டே பதில் சொன்னாள்.

''பொன்னியை இண்டைக்குச் சுடுவன்.''

இதற்குமேல் ஐயா பேசவில்லை. உள்ளே போய் விட்டார்.

கண்ணி தன் வீட்டுக்கு வந்து பொன்னியைப் பெருங் குரல் வைத்து அழைத்தாள்.

பொன்னி வரவில்லை.

குளக்கரைப்பக்கம் போனாள்.

அங்கே பொன்னி குளக்கரைக் குளிர்மையில் கால் களை முன்நீட்டி தலையைத் தாழ்த்திக் கொண்டே படுத் திருந்தது.

கண்ணி பொன்னிக்குக் கிட்ட வந்தாள்.

பொன்னி சற்று விலகி ஓடி, ஒருதரம் கொங்கிக் குதித்துச் செல்லங்காட்டி மறுபடியும் கால்களை முன் நீட்டிப் படுத்துக் கொண்டது.

கண்ணி மறுபடியும் முயற்சித்தாள்.

முடியவில்லை.

பொன்னி தூரத்தூர ஓடி விளையாட்டுக் காட்டியது.

கோபத்துடன் ஈரமண்ணை அள்ளி அதன்மேல் விட்டெறிந்தாள் கண்ணி.



படிப்பகம்

www.padippakam.com



பொன்னி மாந்தோப்பில் இறங்கி அதன் கரையோடு சென்று மறைந்தது.

சற்று வேளைக்குப் பின் மாந்தோப்பு முற்றத்தில் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது.

விழுந்தடித்து, பிள்ளை வயிறு குலுங்க கண்ணி மாந் தோப்பு முற்றத்திற்கு வந்துவிட்டாள். அங்கே கோவிந்தன் கூட்டருகே... ஐயா வைத்த வெடி பண்டார மல்ல! குறிதவறாத வெடி; காதுக் குறிஞ்சிக்குள்...

பொன்னிப்பெட்டை இரத்தத்தில் தோய்ந்தபடி பிண மாகக் கிடந்தது.

ஐயா துவக்கைச் சாய்த்து வைத்துக்கொண்டே அதைக் காட்டி, கோவிந்தனை எச்சரிக்கை செய்துகொண் டிருந்தார்.

கொஞ்ச வேளை கண்ணி மலைந்து நின்றாள். கண்ணி யின் குஞ்சு குருமான்கள் வந்து சேர்ந்துவிட்டன.

கண்ணி எதை நினைத்துக் கொண்டாளோ? பொன்னி யின் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றி வாயில் பக்கம் நின்ற அம்மாளுக்கு முன்னால் போட்டுவிட்டு குஞ்சு குருமான்கள் புடைசூழ கால்களைப் பிடித்துப் பொன்னியை இழுத்துச் சென்றாள்.

பொன்னியின் வாலை உடம்பு சோர்ந்து துவண்டு போய் நிலத்தோடு உரசி மாஞ்சருகுகளையும் குப்பை கூளங்களையும் வாரிச்சென்றது.

கோவிந்தன் தலையைச் சரித்து நிமிர்த்தி அந்தப் பக்க மாகவே பார்த்துக்கொண்டான்.

சற்று வேளைக்குப் பின் ஐயா புறப்பட்டுப் போய் விட்டார்.

காலை உணவை விட்டுவிட்டார்.

www.padippakam.com



தனிப்பனையானை இறக்க வயிரவன்கூட வர வில்லை. அதனால் அதுகூட இல்லை.

ஐயா போனபின்பு தான் அம்மாள் உலாவினாள்.

கிணற்றடிப்பக்கம் அவள் போனாள்.

கிணற்றுத் தொட்டிப் பக்கவாட்டில் குவிந்த மணலில் புத்தம் புதிய ஏராக்கள்ளுமுட்டி கொலுவிருந்தது. அதன் மேல் பச்சைப்பிழா வைக்கப்பட்டிருந்தது.

அம்மாள் அதைத் தொடவில்லை.

பார்க்கக் கூடக் கூசினாள்.

ஃ ஃ ஃ

ஐயா கோவிலடிக்குச் சென்றபோது அங்கே கூட்டம் ஒன்று நின்றது.

கோயில் குளத்துப் பக்கம் கண்களை வீசினார்.

கம்பிக்கட்டைகள் பிணக் கோலத்துடன் மிதந்து கிடந்தன.

கூட்டத்துடன் குருக்களும் நின்றார்.

''என்ன ஐயர், உதுகள் நடக்கேக்கை உமக்குத் தெரி யாதோ?''

என்ற சண்முகம்பிள்ளை கேட்ட கேள்விக்கு ஐயரால் உடனே பதில் கூற முடியவில்லை.

''ஐயர் சத்தத்துக்கு எழும்பியிட்டாராம், ஆக்களை யும் கண்டவராம்.''

என்று ஐயருக்காக ஒருவன் பேசினான்.

''என்ன ஆக்களைத் தெரியுமோ? அப்பிடியெண்டால் இன்னும் ஏன்ராப்பா பொலிசுக்குப் போகாமல் நிக்கிறி யள்'' என்று ஐயா கேட்டார்.

www.padippakam.com



"ஐயர், பொலிசுக்குப் போகப் பயப்படுகிறார் வந்தவங்கள் முப்பது நாப்பது பேருக்கு மேலை இருக்குமாம், அவங்கள்ளீல ஒரு நாலைஞ்சு பேரைத்தான் தெரியுமெண்ணுறார் எல்லாத்துக்கும் நீங்கள் வரட்டுக்குமெண்டுதான் பாத்துக் கொண்டு நிக்கிறம்."

"சரி, சரி, இஞ்சாலை மண்டபத்துக்குள்ளை வாருங்கோ" என்று சண்முகம் பிள்ளை எல்லோர் முகங்களையும் நோட்டம் விட்டார்.

வித்தியாசமாக அதற்குள் யாரும் இல்லை.

"எங்கை மனேச்சர் வைத்திலிங்கத்தைக் காணேல்லை" என்று ஐயா கேட்டார்.

"அவர் ஏன் வாறார், அவற்றை நடுவிலானும் அவன்ரை கூட்டாளியளும் வந்தவங்களாம், உவன் கள்ளுக்காற வைத்தியன்ரை ஆக்கள் ஐஞ்சாறு பேர், நாலைஞ்சு பரம்பப் பொடியள், ஆயிரங்காச்சிப்பிலா வெடியில் சுருட்டுக் கொட்டில் பெடியள், கட்டாடி கந்தையன்ரை மோனும், அவன்தான் அந்த லோன்றி வைச்சவனோடையும் அவன்ரை ஆக்கள் ஐஞ்சாறு பேராம், செத்த அம்பட்டப் பொடியன் ரெத்தினத் தின்ரை தம்பியும், சொந்தக்காரன் சின்னத்துரையனும் வந்தவனாம்."

"உங்கடை நன்னியன்ரை மருமக்கள் பொடியள் ஐஞ்சாறு பேருமாம்."

ஒருவனின் இந்தப் பேச்சை ஐயா தலை அசைத்து ஆமோதித்துக் கொண்டார்.

"ஐயாவின்ரை கணக்குப்படி பார்த்தா எட்டுப் பத்துச் சாதியள் சேந்திட்டுது போலை கிடக்கு, ஐம்பது பேருக்கு மேலை இருக்கும் போலையும் கிடக்கு!"

தனது மன ஏக்கத்தை ஒரு பெஞ்சனியர் வெளிப் படுத்திக் கொண்டார்.

www.padippakam.com



''சரி, சரி. ஐயா நீங்கள் வெளிக்கிட்டு வாங்கோ பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போட்டுவருவம்!''

சண்முகம்பிள்ளை ஐயாவின் கேள்விக்கு குருக்கள் உற்சாகப்படவில்லை. பதிலுக்கு மெதுவாகத் தயங்கினார்.

''வெளிக்கிட்டு வாருங்கோ ஐயா, பயப்பிடாமல் வாருங்கோ ஐயா, எல்லாம் நான் பாக்கிறன் வாருங்கோ ஐயா, தணியப்புக்கையைத் திண்டு திண்டு உங்களுக்கு ரோசம் கெட்டுப்போச்சு!''

சண்முகம்பிள்ளையின் இந்த இறுதி வார்த்தைகள் குருக்களின் அடி நெஞ்சைத் தட்டி ரோசத்தைக் கிளப்பி விட்டது.

படக்கென்று உள்ளே சென்ற குருக்கள் சற்றுவேளைக் குப்பின் பச்சைவடம் சால்வையை அள்ளிப் போர்த்திக் கொண்டு காரில் ஏறிவிட்டார்.

''பென்சனியர், நீங்களும் வாருங்கோ, மற்றவை நில்லுங்கோ வந்திடுறம்'' என்று கூறிக்கொண்டே சண்முகம்பிள்ளை காரைக் கிளப்பினார்.

பென்சனியர் தயங்கித் தயங்கி காரில் ஏறிக் கொண்டார்.

கார் பறந்துவிட்டது.

ஃ ஃ ஃ

பொலிஸ்ஸ்ரேசன் அலுவல், அது சம்பந்தமான உப அலுவல்கள் முடித்துவிட்டு,

காண வேண்டியவர்களை ஆங்காங்கே கண்டு கண்டு பேசிவிட்டு, ஐயா மாந்தோப்புக்கு வந்தபோது மணி இரண்டுக்கு மேலாகிவிட்டது.

நாளை பௌர்ணமி; கொடியேற்றம்.

www.padippakam.com



இடையே இருப்பதுவோ இந்த ஒரே ஒரு பொழுது தான்.

அதிலும் பாதிக்குமேல் போய்விட்டது.

அம்மாள் சாப்பாட்டை மேசையில் பரப்பி வைத்து விட்டுக் காத்திருந்தாள்.

காலையிலும் ஐயா சாப்பிடவில்லை. உண்ணா விரதம்!

காலையிலிருந்து கோவிந்தனுக்கும் ஒன்றுமில்லை.

அம்மாளுக்குக் கோவிந்தனைப் பார்க்கப் பாபமாக இருந்தது.

இருதடவைகள் அம்மா கோவிந்தனுக்கு உணவு வைத்தாள்.

கதவைத் திறந்து அம்மாளால் வைத்த உணவை முகர்ந்து கூடப் பார்க்காமல் அம்மாளின் முகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கோவிந்தனின் பார்வையை ஒரு தடவைக்கு மேல் சந்திக்க அம்மாளின் கட்புலனுக்கு முடியவில்லை.

''கோவிந்தன் சாப்பிட்டானா?''

ஐயா கேட்டார்.

''அவன் சாப்பிடமாட்டானாம்''

அம்மாள் பதில் சொன்னாள்.

''என்ன சாப்பிட மாட்டானாமோ? சாப்பிடச் செய்து காட்டிறன்'' என்று கூறவும் அம்மாள் சாப்பாட்டுத் தட்டினை எடுத்துவந்து ஐயாவிடம் கொடுத்தாள்.

ஒரு கையில் சாப்பாட்டுத் தட்டையும், மறு கையில் துப்பாக்கியையும் தாங்கிக்கொண்டு ஐயா போனார்.

அம்மாவின் நெஞ்சு ஏன்தான் இப்படி இடிக்கிறதோ?

www.padippakam.com



வெளியே ''ஐயா'' என்ற குரல் கேட்டது.

ஐயா திரும்பிப் பார்த்தார்.

ஒருவன் சைக்கிளோடு நின்றான்.

அவன் கோவில் தொட்டாட்டு வேலைக்காரப் பண்டாரிப் பொடியன்.

''ஐஞ்சாறு பேர் வந்திருக்கினமாம், குருக்கள் உங்களைக் கூட்டிக்கொண்டு வரட்டாம்!''

''ஏனாம்?''

''நாளைக்குக் கொடியேத்தத்தை நிப்பாட்டுற விஷயமாக ஏதோ கதைக்கப் போகினமாக்கும்!''

''அந்தக் கரையல் புக்கை தின்னிப் பிராமணியெட்டைப் போய்ச் சொல்லு, ஊர் அழிஞ்சாலும் நாளைக்குக் கொடியேற்றத்தை நிப்பாட்டேலாதெண்டு'' என்று உரக்கக் கூறிவிட்டு ஐயா கோவிந்தன் கூட்டருகே வந்துவிட்டார்.

பண்டாரிப் பொடியன் போய்விட்டான்.

''நீர் சாப்பிடமாட்டீர் என்ன? உம்மைச் சாப்பிட வைச்சுக் காட்டிறன்!'' என்று கூறிக்கொண்டு, துவக்கை கூட்டின் பக்கவாட்டில் சார்த்தி விட்டு ஐயா கதவைத் திறந்தார்.

முன்னங்கால்களை நீட்டி — தலையைத் தாழ்த்தி — கண்களை அகல விரித்து செவியைத் தாள உயர்த்தித் தாழ்த்தி — உடம்பை நீட்டி நிமிர்த்தி......

கோவிந்தன் விஸ்வரூபம் எடுத்து விட்டான்.

ஐயா கதவைத் திறந்தார்,

அவர் நிமிர்ந்தபோது......

கோவிந்தனின் குறியும் தவறவில்லை.

www.padippakam.com



ஆனைப் பிளிறல் போன்ற ஒரு பயங்கரமான ஓசை! சாத்தியிருந்த துப்பாக்கியைத் தொடக்கூடச் சணவேளை கிடைக்கவில்லை.

அவலக்குரல் கேட்டு அம்மாள் ஓடிவந்தாள்.

அதற்குள்......

அதற்குள் ஐயாவின் தொண்டைக்குரல்வளை பிடுங்கப்பட்டு விட்டது.

ஒரு இழுவை!

ஒரு குதறல்!

அவ்வளவு தான்!

கூட்டுக்குள் பாய்ந்தேறிய கோவிந்தன் தனது விசுவ ரூபத்தைச் சுருக்கிக்கொண்டு நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டது.

''ஐயோ'' என்று குரல் வைத்துக்கொண்டே இரத்த வெள்ளத்தில் கிடந்து துடித்த சண்முகம்பிள்ளையின் மேல் விழுந்து புரண்டாள் அம்மாள்.

அம்மாளின் உடை இரத்த நிறமாகிவிட்டது.

அடிவயிற்றுச் சுமையோடு அம்மாள் விழுந்து புரண்டு நெளிந்து கதறி அழுதாள்.

□ □

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை அந்த உயிரினங்களில் உயர்ந்ததான மனித இனத்தோடு சேர்ந்தாப் போல வளர்ச்சி அடைந்து வந்த ஒன்றே ஒன்று காதல் மட்டுந்தான். அதனால் ''காதல் இல்லாத இலக்கியங்கள் — முதன்மைப்படுத்தாத படைப்புகள் — மனித நாகரீகத்தை வளப்படுத்தத் தகுதியற்ற முண்டங்கள்'' என்ற விதத்தில் இந்தக் காதலுக்கு தெய்வீக அந்தஸ்துக் கொடுப்பது மரபாகிவிட்டது. இந்த நாவலில் இந்த மரபு மீறப்படுகிறது. இந்தக் காதல் என்ற 'இது' மனிதனின் வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்ப நீண்டும், நெளிந்தும், வளைந்தும், கூனியும், குறுகியும் வரக்கூடிய ஒன்றே அன்றி, அதற்கு மேல் அந்த 'இது'வுக்கு எந்தவித தனி அந்தஸ்தும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை என்பதனை இந்த நாவலைப் படிக்கும் போது தங்களைச் சூழ உள்ள இயல்பான நடைமுறைகளோடு வாசகர்கள் இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒப்புக் கொள்வர்.

கே. டானியல்

படிப்பகம்